
Koviloor Digital Library

பன்னிரு திருமுறைகள்

A. No. 17677
Q: 23

3



பன்னிரண்டாம் திருமுறை

பெரிய புராணம்

மூலமும் உரையும்

தமிழ் நிலையம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-5

உ

சிவ மயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் பெருமான் அருளிய

திருத்தொண்டர் புராணம்

என்னும்

பெரிய புராணம்

மூலமும் தெளிவுரையும்

மூன்றாம் தொகுதி

(1695-2341)

உரையாசிரியர் :

புலவர் அ. மாணிக்கனார் M.A.

தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)

அமா. ஜெயின் கல்லூரி, சென்னை - 114

தமிழ் நிலையம்

ஏ ஆர் ஆர் காம்ப்ளெக்ஸ்

141, உஸ்மான் சாலை,

தியாகராயநகர், சென்னை - 600 017

Koviloor Digital Library

இரண்டாம் பதிப்பு : 1995
உரிமை பதிப்பகத்திற்கே.

ஆறு தொகுதிகள் விலை ரூ. 400.00

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17677

அச்சிட்டோர் :
சங்கர் பிரிண்டர்ஸ், சென்னை - 42

Koviloor Digital Library

பதிப்புரை

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தின் மூன்றாம் தொகுதி இது. இதில் முதல் காண்டம் முடிந்து இரண்டாம் காண்டம் தொடங்குகிறது. காண்டம் என்ற அமைப்பின் நோக்கம் என்ன எனத் தெரியவில்லை. இந்தப் பாகுபாடு எப்போது யாரால் அமைக்கப்பட்டது என்பதும் விளங்கவில்லை. பிற காப்பியங்களில் காணும் காண்டங்களுக்குப்பெயர் இருக்கும். பெரிய புராணத்தின் இந்த அமைப்புக்குக் காரணம் தெரியவில்லை. இரண்டு காண்டங்களாக மட்டுமே இது, வகுக்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்த நாயனார் வரலாறு இந்த மூன்றாம் தொகுதியில் தொடங்கி நான்கைக் கடந்து ஐந்தில் முடிகிறது. பெரிய புராணத்தின் பெரும்பகுதி இவரைப் பற்றியதுதான். ஆயினும் காப்பியத்தின் தலைவராகச் சுந்தரரையே கொள்வர், சிலர். எனினும் 'பிள்ளை பாதி புராணம் பாதி' என்னும் கூற்றுச் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

இத் தெளிவுரை நூலின் உரைப் போக்கில் ஒரு சிறப்பைக் காணலாம். தேவாரப் பாடல்கள் எங்கெங்கே எந்தெந்தச் சூழலில் பாடப்பட்டன என்பதை எடுத்துக்காட்டியுள்ளார், பேராசிரியர். இத்தெளிவுரையில் தேவாரத் தொடக்கக் குறிப்புகள் கற்றார்க்கு இனிமை பயக்கும்; நினைவில் நிற்கும்; சிறப்பு விளங்கும்.

திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் தமிழ் நாட்டில் பக்தி வெள்ளம் பெருகச் செய்யும் பாங்கினை இப் பகுதியில் காணலாம்.

—பதிப்பகத்தார்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

திருத்தொண்டர் புராணம்

(கதைச்சுருக்கம்)

28. குலச்சிறை நாயனார்

'மணமேற்குடி என்பது பாண்டிய நாட்டில் உள்ள ஊராகும். அந்தவூரில் தான் குலச்சிறை நாயனார் தோன்றினார். அவர் கூன்பாண்டியனின் அமைச்சர். அவர் சிவனடியார்களிடம் அன்பு பூண்டவர். பாண்டிய மன்னனின் மனைவியாரான மங்கையர்க்கரசியாரின் சிவத்தொண்டுக்கு உறுதுணையாய் நின்றவர். கீழ்மையான பொய்ச் சமயமான சமண சமயத்தை ஒழித்துச் சைவம் வளர்ந்தோங்கக் காரணமானவர். திருஞான சம்பந்தரின் திருவடிகளை வணங்கியவர். வாதத்தில் தோற்ற சமண சமயத்தினரைக் கழுவில் ஏற்றியவர். சுந்தரர் இவரைப் 'பெருநம்பி' என்று சிறப்பித்துப் பாராட்டியுள்ளார்.

29. பெருமிழலைக் குறும்ப நாயனார்

'மிழலல' என்ற நாட்டில் 'பெரு மிழலை' என்ற ஊரில் குறும்பர் மரபில் ஓர் அடியார் தோன்றினார். அவரே பெருமிழலைக் குறும்ப நாயனார்.

அவர் சிவனடியார்களை உபசரிக்கும் பண்புடையவராய் விளங்கினார். சுந்தரரின் பண்பு நலனை அணிந்து அவரை உடலாலும் உள்ளத்தாலும் வழிபட்டார். அதனால் அட்ட மாசித்திகள் அவர்க்குக் கைகூடின. சுந்தரர் கயிலாயத்துக்கு செல்லும் நாளை அவர் அறிந்தார். 'அவரைப் பிரிந்து நான் வாழேன். அவர் கயிலாயம் செல்வதற்கு முன்னம் நான்

Koviloor Digital Library

இறப்பேன்' என்று தம் யோக வல்மையால் உயிர் வளியைச் சந்திர மண்டலத்தில் செலுத்திப் பிரணவத்தால் கபாலத்தைத் திறந்து சுந்தரர் கயிலாயம் அடைவதற்குமுன் கயிலாயத்தை அடைந்தார்.

30. காரைக்காலம்மையார்

காரைக்கால் என்ற பட்டினத்தில் வாழ்ந்த 'தனதத்தன்' என்பவனின் மகள் 'புனிதவதியார்'. நாகப்பட்டினத்தில் வாழ்ந்த நிதிபதியின் மகன் பரமதத்தன் என்பவனுக்குப் புனிதவதியார் மணம் முடித்து வைக்கப்பட்டார்.

பரமதத்தனும் புனிதவதியாரும் அன்புடன் இல்லற வாழ்வை நடத்தினர். புனிதவதியார் சிவபெருமானிடத்தில் அன்பு கொண்டு ஒழுகினார். இல்லறத்துக்குரிய நறபண்புகள் அவரிடம் மிளிர்ந்தன. சிவனடியார்களை உபசரிப்பது அவர்க்கு வழக்கமாக இருந்தது. பரமதத்தனைப் பார்க்க வந்தவர் இரண்டு மாங்கனிகளை அவனுக்குத் தந்தனர். அவன் அவற்றைத் தன் வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

ஒரு சிவனடியார் அன்று புனிதவதியார் இல்லறத்துக்குச் சென்றார். அவரை உபசரித்து உணவு படைத்த அம்மையார் கறி அப்போது சமைக்காது இருந்தார். கறியமுதாக மாங்கனியைப் படைத்தார்.

அதன்பின் பரம தத்தன் தன் வீட்டுக்கு உணவுகொள்ள வந்தான். அவனுக்கு அந்த அம்மையார் ஒரு மாங்கனியை அளித்தார். அது மிக சுவையாய் இருந்ததால் ''மற்றொரு மாங்கனியையும் கொண்டு வா!'' என்றான். அம்மையார் இன்னது செய்வது எனத் தெரியாது கலங்கி இறைவரை வணங்கினார். அவரது அருளால் அவர்க்கு இன்சுவைக் கனி கையில் வந்தது. அதை அவர் அளிக்க, அவன் உண்டான். ''இது முந்தைய கனியை விடச்சுவையுடையதாய் உள்ளது.

Koviloor Digital Library

உனக்கு இது ஏது?'' என்று பரமதத்தன் வினவினான். கலக்கம் கொண்ட அவர் உண்மையைக் கணவனிடம் மறைக்கலாகாது என்பதால் உண்மையை உரைத்தார். அதைக் கேட்ட பரமதத்தன் ''அப்படியாயின் இன்னொரு மாங்கனியைத் தருவித்துத் தா!'' என்றான். அம்மையார் இறைவனிடம் மீண்டும் ஒரு கனியை வேண்டினார். இறைவர் அதை அளிக்கப் புனிதவதியார் தம் கணவனுக்கு அளித்தார். அதனை அவன் பெற்றவுடன் மறைந்து விட்டது. எனவே வியப்படைந்த அவன், ''இவள் பெண் அல்லள்; தெய்வம். எனவே இவளை விட்டு நீங்கிட வேண்டும்'' என முடிவு செய்தான். வேற்று நாட்டுக்குச் சென்று வாணிகம் செய்யப் போவதாகச் சொல்லிச் சென்றான். அங்குச்சிறந்த முறையில் வாணிகத்தை நடத்திப் பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பட்டினத்தை அடைந்தான். அவ்வூரில் இருந்த வணிகன் ஒருவனின் மகளை மணந்து வாழ்ந்தான். இல்வாழ்க்கை நடத்தியதன் பயனாய் அவனுக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. தன் மனைவியைத் தெய்வமாக நினைத்தவன் ஆதலால் அதற்குப் புனிதவதி என்ற பெயரைச் சூட்டினான்.

அவன் வேறொரு பெண்ணுடன் வாழ்வு நடத்துவதைப் புனிதவதியாரின் சுற்றத்தார் அறிந்து அதனை அவர்க்குத் கூறினர். அவர் மிகவும் வருந்தினார். சுற்றத்தார் அவரைப் பரமதத்தனிடம் கொண்டு விடுவதே முறை என்று அவனிடம் அழைத்துச் சென்றனர்,

பரமதத்தன் அச்சம் கொண்டான். தன் மனைவியைக் கண்ட பரமதத்தன் அவளது அடிகளில் விழுந்து வணங்கி ''நான் உன்னைத் தெய்வமாக மதிக்கின்றேன். அதனால் என் குழந்தைக்கு உன் பெயரையே சூட்டியுள்ளேன்'' என்றான். கணவன் தன்னடியை வணங்கியதால் புனிதவதி கலக்கம் கொண்டாள். அவளுடைய சுற்றத்தார் ''நீ உன் மனைவியை வணங்குவது ஏன்?'' என வினவினர். ''இவர்

Koviloor Digital Library

மனிதப் பிறவியினர் அல்லர். தெய்வம்; ஆதலால் இவரை நீங்களும் வணங்குங்கள்!'' என்றான் பரமதத்தன். உறவினர் வியப்பு அடைந்தனர்.

புனிதவதியார் கணவனின் நிலையை உணர்ந்தார். இறைவரிடம் ''பேய் வடிவை எனக்குத் தருதல் வேண்டும்'' என்று வேண்டினார். அப்போது அவர் வேண்டிய பேய் வடிவைப் பெற்றார். தேவர் மலர் மழை பொழிந்தனர்.

இறைவரின் அருளால் ஞானம் கைவரப் பெற்ற அவர் 'அற்புதத் திருவந்தாதி', 'திருவிரட்டை மணிமாலை' என்ற ஒப்பற்ற இரண்டு நூல்களை இயற்றினார். பின் கயிலாயத்துக்குச் சென்றார். 'அம்மலையில் காலால் நடக்கக் கூடாது' என எண்ணித் தலையினால் நடந்து சென்றார். அப்போது உமையம்மையார் தலைமீது எலும்புக் கூடு நடந்து வருகின்றது. இதன் அன்புதான் என்னே!'' என்றார்.

''இவர் நம்மைப் போற்றும் தாய். இவர் இவ்வடிவத்தை நம்மை வேண்டிப் பெற்றார்'' என்றார். பின் தபமை நாடிவரும் அந்த அம்மையாரைப் பார்த்துச் சிவபெருமான். ''அம்மையே!'' என்றார். காரைக்கால் அம்மையார் ''அப்பா!'' என்று கூறி அவரது அடிகளில் விழுந்தார், ''என்னிடம் வேண்டுவது யாது?'' என்று வினவினார் இறைவர். புனிதவதியார் ''நான் இனி பிறவாதிருக்க வேண்டும். பிறவி உளதாயின் உம்மை மறவாதிருக்க வேண்டும். மேலும் நான் வேண்டுவது நீவிர் ஆடும்போது மகிழ்வுடன் உம் அடியில் இருக்கும்பேறு எனக்கு வேண்டும்!'' என்று கூறினார்.

''திருவாலங்காட்டில் ஆடும் திருநடனத்தைக் கண்டு பாடிய வண்ணம் இரு!'' என அருள் செய்தார். இறைவர் பணித்த வண்ணமே திருவாலங்காட்டை தலையால் நடந்து போயடைந்து, இறைவர் நடனத்தைக் கண்டு 'கொங்கை திரங்கி' என்ற மூத்த திருப்பதிகத்தையும் பாடினார். இறைவரின் திருவடிக்கீழ் அவர் என்றும் இருக்கலானார்.

Koviloor Digital Library

31. அப்பூதியடிகள் நாயனார்

'திங்களூர்' என்பது சோழநாட்டில் உள்ளதாகும். அந்த வூரில் அந்தணர் மரபில் 'அப்பூதி அடிகளார்' என்பவர் தோன்றினார். அவர் திருநாவுக்கரசு நாயனாரிடம் பேரன்பு பூண்டவர். ஆதலால் தம் மைந்தர், வீட்டில் உள்ள பொருள்கள், பசுக்கள், தண்ணீர்ப் பந்தல், மடம் முதலியவற்றிற்குத் 'திருநாவுக்கரசு' என்ற பெயரை வைத்திருந்தார்.

திருநாவுக்கரசர் திருப்பழனத்தை வணங்கி மற்றப் பதிகளையும் வணங்கிடத் திங்களூர் வழியாய் வந்தார். வழியில் தண்ணீர்ப் பந்தல். அது 'திருநாவுக்கரசு பந்தல்' என்ற பெயரில் விளங்கியது. அதைப் பார்த்த நாவரசர் அங்கிருந்தவர்களை நோக்கி, "இப்பந்தலுக்குத் 'திரு நாவுக்கரசு' எனப் பெயரிட்டவர் யார்?" என்றார். அதற்கு அவர்கள் "அவர் அப்பூதியடிகள்" என்றனர். நாவரசர் "அவர் இப்போது எங்கே?" என்றனர். "அவர் தம் வீட்டுக்கு இப்போதுதான் சென்றார்" என்று அவர்கள் விடையிறுத்தனர்.

சிவனடியார் தம்மை நாடி வந்துள்ளதாக அறிந்து அப்பூதியடிகள் அவரை வணங்கினார். "நீங்கள் வைத்துள்ள தண்ணீர்ப் பந்தலைப் பார்த்தோம். அதற்கு உம் பெயரை வைக்காமல் வேறொருவரின் பெயர் வைத்திருக்கக் காரணம் யாது?" என்றார் சொல்லரசர். "நீங்கள் நல்ல சொல்லைச் சொல்லவில்லை. சமணருடன் சேர்ந்த மன்னனின் சூழ்ச்சியைத் தம் தொண்டினால் வென்றவர் பெயர்! அதுவா வேறொருவர் பெயர்? நீவிர் யார்"' என்று சினந்தார். "சமணப் படுகுழியிலிருந்து ஏறச் சூலை நோய் தந்து இறைவர் ஆட்கொண்ட தெளிந்த உணர்வில்லாத சிறியேன் யான்!" என்றார், நாவுக்கரசர்.

Koviloor Digital Library

உடனே இரு கைகளும் தலைமேல் குவியக் கண்கள் நீரைப் பொழிய, உடல் புளகாங்கிதம் அடைந்து, நிலத்தில் விழுந்து நாவரசரின் திருவடிகளைத் தம் முடியில் சூடிக் கொண்டார். நாவுக்கரசரும் அவரை வணங்கித் தழுவிக் கொண்டார். உள்ளே ஓடி மனைவி மக்கள் சுற்றத்தார் முதலியவரை அழைத்து வந்து நாவரசரை வணங்கச் செய்தார். பின்பு ''தம் இல்லத்தில் உணவு உண்டருள வேண்டும்'' என வேண்டிக் கொண்டார். நாவுக்கரசர் அதற்கு இசைந்தரர்.

நல்ல உணவு சமைக்கப் பெற்றது. தம் மூத்த மகனை அழைத்து வாழைக் குருத்தை அறுத்து வருப்படி ஏவினார். திருநாவுக்கரசான மூத்த மகன் வாழை இலைக்குருத்தை அறுக்கும்போது கையில் பாம்பு சுற்றிக்கொண்டு கடித்தது. அவன் பாம்பை உதறிவிட்டு வாழை யிலையைக் கொண்டு சென்று கொடுத்துவிட்டு நிகழ்ந்ததைக் கூறிவிட்டு உயிர் விட்டான். அவன் இறந்து விட்டதைப் பெற்றோர் மறைத்துவிட்டு, நாவரசரை உணவு உண்ண அழைத்தனர். நாவுக்கரசர் மூத்த மகனையும் அழைக்கும்படி யுரைத்தார். 'அவன் இப்போது இங்கு உதவான்!' என்றார் அப்பூதியார். ஐயம் கொண்ட நாவுக்கரசர் உண்மையை யுரைக்குமாறு வினவினார். நிகழ்ந்ததை மறைக்கச் சிவனடியார்க்கு ஏலுமோ! உண்மையை யுரைத்தார் அப்பூதியார். . நாவரசர் இறந்து கிடந்த மகனைப் பார்த்தார். ''நீவிர் செய்தது நன்றாக உள்ளது!'' என்று சொல்லி, அம் மகனின் உடலைக் கோயிலுக்குள் கொணரச் செய்து, 'ஒன்று கொலாம்' என்ற பதிகம் பாடினார். பாம்பின் நஞ்சு நீங்கி உறக்கத்தினின்று எழுபவனைப் போல் எழுந்தான் மூத்த திருநாவுக்கரசு. நாவரசர் விபூதிச் செல்வத்தை அளித்தார். நாவரசர் உணவு உண்ணக் காலம் தாழ்த்ததே என்று பெற்றோர் வருந்தினர்.

அனைவரும் உணவு உண்டருளினர். நாவுக்கரசர் பாடிய பதிகத்தில் அப்பூதியாரின் தொண்டைச் சிறப்பித்துப்

Koviloor Digital Library

புரடிச் சென்றார். அப்பூதியார் அருட்செல்வம் பெற்று வாழ்ந்து மன்றுள் ஆடும் மாமணியைச் சேர்ந்து மகிழ்ந்தார்.

32. திருநீலநக்க நாயனார்

காவிரி ஆற்றின் தென்கரையில் உள்ளது 'சாத்த மங்கை' என்ற ஊர். அவ்வூரில் அந்தணர் அதிகமாக வாழ்ந்தனர். அந்தணர் வாழ்ந்த வூரில்தான் திருநீலநக்கர் தோன்றினார். ''வேதத்தின் உட்பொருளாவது சிவ பெருமானை வணங்குவதும் அவருடைய அடியாரை வணங்குவதுமே!'' என அவர் அறிந்தார். எனவே சிவ பெருமானுக்குப் பூசை செய்வதும் அடியாரை உபசரிப்பதும் ஆகிய இரண்டையும் அவர் மேற்கொண்டிருந்தார்.

அந்த வூரில் 'அயவந்தி' என்ற கோயில் ஒன்று இருந்தது. அங்குப் பூசை செய்ய அவர் தம் மனைவியாருடன் சென்றார். பூசை செய்தார். எனினும் அவரது மனம் நிறைவு பெறவில்லை. கோயிலை வலமாக வந்து ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதியபடி இருந்தார். ஒரு சிலந்திப் பூச்சி சிவலிங்கத்தின் மேல் விழுந்தது. அதனை அவருடைய மனைவியார் பார்த்தார். குழந்தை மீது விழுந்த சிலந்தி யைத் துரத்தும் தாய்போல் விரைந்து சென்று சிலந்தியை வாயால் ஊதித் துமிந்தார். (துமிதல் — காற்று வாய் நீருடன் செல்லுமாறு ஊதுதல்) நாயனார் அச்செயலைக் கண்டார். மனம் துடித்தார். ''அறிவற்றவளே! நீ இவ்வாறு ஏன் செய்தாய்?'' என்று சினந்தார். அந்த அம்மையார் ''இறைவர் மேனிமீது சிலந்தி விழுந்தது. அதனால் இவ்வாறு துமிந்தேன்'' என்றார். நீலநக்கர் அவரது செயலைத் தவறாக எடுத்துக்கொண்டு 'உன்னுடன் வாழேன்;' என்றார். மனவருத்தத்துடன் அவர் தாம் மட்டும் வீட்டுக்குச் சென்றார். நாயனாரின் மனைவியார் கோயிலிலேயே படுத்துறங்கினார்.

Koviloor Digital Library

அந்த இரவு நாயனாரின் கனவில் இறைவர் தோன்றிச் ''சிலந்தி விழுந்த பக்கத்தில் உன் மனைவியார் ஊதித் துரத்தினார். அந்தப் பக்கம் தவிர மற்றப் பக்கங்களில் எல்லாம் கொப்புளங்கள் உண்டாகியுள்ளன. பார்!'' என்றார். அதனால் தம் மனைவியாரின் செயல் தவறானதாக இல்லாததை யுணர்ந்தார். மகிழ்ந்தார்.

ஞானசம்பந்தரைப்பற்றி அவர் அறிந்தார். அவரைக் காண வேண்டும் என்ற அவா எழுந்தது. ஒருகால் ஞானசம்பந்தர் அந்த வூருக்கு வந்தார். பெரிதும் மகிழ்ந்து ஞானசம்பந்தரை வரவேற்றார். அவருடன் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடைய மனைவியாரும் வந்தனர். அவர்களையும் தம் இல்லத்திலேயே வேதிகை பக்கத்தில் தங்கியிருக்கச் செய்தார். ஞானசம்பந்தரைத் தம் வீட்டில் விருந்தருத்தி உபசரித்தார். பின் அவருடன் செல்ல விரும்பினார். ஆயினும் ஞானசம்பந்தர் அதற்கு இசையவில்லை. ஆதலால் தம் ஊரிலேயே இருந்தார்.

ஞானசம்பந்தருக்குத் திருமணம் நிகழ்ந்த போது அம் மணத்துக்குச் சென்று ஞானசம்பந்தருடன் பிறவா நிலையை எய்தினர்.

33. நமிநந்தியடிகள் நாயனார்

திருவாரூர்க்கு அருகில் உள்ளது 'ஏமப் பேறூர்'. அந்த ஊரில் அந்தணர் குலத்தில் 'நமிநந்தியடிகள்' தோன்றினார். 'திருநீறே உண்மைப் பொருள்' என்ற கொள்கையை உடையவராய் விளங்கினார்.

அவர் ஏமப் பேறூரிலிருந்து திருவாரூர் சென்று ஒரு நாள், வன்மீக நாதரை வணங்கித் திருமுன்றிலை அடைந்தார். அங்குப் பக்கத்தில் உள்ள 'அரன்நெறி' கோயிலுக்குச் சென்றார். அப்போது மாலை நேரம். அங்கு நிறைய விளக்குகள் ஏற்ற வேண்டும் என்று அவர் எண்ணினார். வீட்டுக்குச்

Koviloor Digital Library

சென்று நெய்யைக் கொணர நேரம் இல்லை. அங்குள்ள ஒரு சமணர் வீட்டுக்குச் சென்று விளக்குக்கு நெய் வேண்டினார். "கையில் கனல் உடைய சிவபெருமானுக்கு விளக்கு எதற்கு? தண்ணீர் விட்டு விளக்கை எரியச் செய்யும்" என்றனர். அதனால் வருந்தி நேரே கோயிலுக்குச் சென்று விழுந்தார். அப்போது அசரீரி, "அன்ப! வருந்தாதே! இக்கோயிலின் பக்கத்தில் உள்ள குளத்தினின்று நீரை எடுத்து விளக்கை ஏற்று" என்றது. அவர் திகைத்தார். எனினும் இறைவரின் ஆணைப்படி செய்தார். விளக்குச் சுடர் விட்டு எரிந்தது! பின்பு கோயில் முழுதும் பல விளக்குகளை ஏற்றினார். அதன்பின் சமணர்களுக்கு எதிரில் தண்ணீர் விட்டுப் பல விளக்குகளை எரித்தார்.

இங்ஙனமே அவர் பகலில் தொண்டும், மாலையில் விளக்கும் எரித்தார். இரவில் வீட்டுக்குச் செல்வார்.

ஒருநாள் திருவாரூர்த் தியாகேசர் திருமணலிக்கு எழுந்தருளினார். எல்லாச் சாதியினரும் அப்பெருமானைக் கண்டு வணங்கியதால் தீட்டாயிற்று என எண்ணினார். தம் வீட்டுக்கு உள்ளே செல்லாது வெளியில் படுத்துறங்கினார். அவருடைய மனைவியார் அவரை வந்து அழைத்த போது தம் எண்ணத்தை உரைத்தார். தாம் நீராடிய பின் பூசை முதலியவை செய்ய வேண்டும் என்றும் அதனால் நீர் கொணரும்படியும் உரைத்தார். அம்மையார் நீர் கொணரச் சென்றார். சற்று நேரத்தில் அவருக்கு உறக்கம் உண்டாயிற்று. கனவில் அவருக்குத் தியாகேசர் எழுந்தருளித், "திருவாரூரில் பிறந்தவர் அனைவரும் சிவகணங்கள். அவ்வுண்மையை நாம் காட்ட நீ நாளை காண்பாய்!" என்றார். மறுநாள் அவர் திருவாரூர்க்கு விரைந்தார். அப்போது அவ்வூரவர் அனைவரும் சிவபெருமானாகக் (சிவ சாரூபத்தினாராய்க்) காட்சியளித்தனர். அதனால் அவர் 'தம் பிழையைப் பொறுத்தருள வேண்டும்' என இறைவனிடம் வேண்டினர். தம் ஏமப்பேறூரை விட்டுத் திருவாரூரிலேயே

Koviloor Digital Library

குடியிருந்து பின் இறைவனின் திருவடி நிழலை அடைந்தார். அவர் தொண்டர்களுக்கு 'ஆணிப் பொன்' என்று நாவுக்கரசரால் தேவாரத்தில் பாடப்பட்டுள்ளார்.

34. திருஞானசம்பந்த நாயனார்

சோழநாட்டில் சீகாழி என்றபதி. அதற்குப் 'பிரமபுரம்' 'வேணு புரம்' முதலான பன்னிரண்டு பெயர்கள் உண்டு. அந்தத் தலத்தில் அந்தணர் குலத்தில் கௌணியர் கோத்திரத்தில் 'சிவபாத இருதயர்' என்பவர் தோன்றியிருந்தார். அவருடைய மனைவியார் பெயர் பகவதியார். அவ்விருவரும் சிவநெறியினர். அவரது காலத்தில் சமணசமயமும் பௌத்த சமயமும் ஓங்கியிருந்தன. அதனால் அவர் துன்பம் கொண்டார். அவ்விரண்டையும் அழித்துச் சைவத்தை வளர்க்கும் ஆண்மகன் தமக்கு வேண்டும் என்று அவர் விரும்பித் தவம் கிடந்தார். அவருடைய மனைவியாரும் திருத்தோணியப்பரை வணங்கி வந்தார்.

சைவம் தழைக்க அவ்விருவருக்கும் திருவாதிரையில் ஞானசம்பந்தப் பெருமான் தோன்றியருளினார்.

ஒருநாள் தம் தந்தையார் சிவபாத இருதயர், தோணியப்பரை வணங்குதற்குச் சென்றார். அப்போது ஞானசம்பந்தரும் உடன் வரவேண்டும் என அழுதார். வேறு வழியின்றித் தந்தையார் அவரை அழைத்துக் கொண்டு சென்றார். அவரைக் கரையில் இருக்கச் செய்து விட்டு சிவபாத இருதயர் நீருக்குள் முழுகினார். 'தம் தந்தையைக் காணவில்லையே' என்றுஅழலானார். 'அம்மே, அப்பா!' எனவிளித்தார். அப்போது தோணியப்பர் சம்பந்தரின் அழுகையைப் பொறுக்க மாட்டாதவராய் தையல்பாகராக எழுந்தருளினார். உமையம்மையாரை நோக்கி ''உன் பாலைப் பொன் கிண்ணத்தில் கொண்டு இவனுக்கு ஊட்டு'' என்றார். அம்மையார் அவ்வண்ணமே ஊட்டினார். (அவர் இறைவரால்

Koviloor Digital Library

ஆளப்பட்ட பிள்ளையானதால் 'ஆளுடைய பிள்ளை" எனவும் முனிவர்க்கும் எட்டாத சிவஞானத் தொடர்பு பெற்றதால் 'ஞானசம்பந்தர்' எனவும் அழைக்கப் பெற்றார்)

நீராடிய சிவபாத இருதயர் மேலே வந்தார். அங்குத் தம் மகன் பாலை அருந்தியிருப்பதைப் பார்த்தார். 'நீ யார் கொடுத்த பாலையுண்டாய்? காட்டு!'' என்று ஒரு கோலை எடுத்து ஓச்சினார். ஞானசம்பந்தப் பெருமான் உச்சி மீது கொண்ட கையின் விரலால் சுட்டி, வானில் உமைபாகராய் நின்றருளிய சிவபெருமானைக் காட்டினார். 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். தமக்குப் பால் அருந்தச் செய்தவர் சிவபெருமான் என்பதை அப்பாட்டினால் விளக்கினார்.

அங்ஙனம் இறைவர், ஞானசம்பந்தருக்குக் காட்சி தந்ததைச் சிவபாத இருதயர் உணர்ந்தார். அவருக்கு அக்காட்சி கிட்டப் பெறவில்லை. தோணியப்பரான சிவபெருமான் ஞானசம்பந்தருக்குக் காட்சி தந்து விட்டுத் தம் கோயிலுக்குள் சென்றார். அப்போது ஞானசம்பந்தரும் கோயிலுக்குச் சென்றார். அவரைத் தொடர்ந்து சிவபாத இருதயரும் சென்றார். பின்பு அப்பிள்ளையாரைத் தோளில் சுமந்து தம் இல்லத்தை அடைந்தார். அந்நிகழ்ச்சியை அறிந்தவர் அனைவரும் வியந்தனர். அப்பிள்ளையாரை வழிபட்டனர்'

பின் ஆளுடைய பிள்ளையார் சிவ பெருமான் வீற்றிருக்கும் 'திருக் கோலக்கா' என்ற பதிக்குச் செல்லப் புறப்பட்டார். தந்தையார் அவரைத் தோளில் சுமந்து சென்றார். கோலக் காவில் கோவிலுக்குள் சென்று 'மடையில் வாளை' என்ற பதிகத்தைப் பாடினார். அப்போது சிவபெருமானின் நாமமான ஐந்தெழுத்து பொறித்த செம்பொன் தாளங்கள் அவர் கையில் வந்தன. இறைவன் திருவருளை வியந்து பதிகத்தைப் பாடினார். பின் சீகாழிக்குத் திரும்பினார். அந்தப் பதியில் வாழ் அந்தணர்கள் அவரை வணங்கித் துதித்தனர்.

Koviloor Digital Library

'திருநனிபள்ளி' என்ற தலம் ஞான சம்பந்தரைப் பெற்ற தாயார் பிறந்தவூர். அந் தவூரில் உள்ள அந்தணர், தம் ஊருக்கு ஞானசம்பந்தர் எழுந்தருள வேண்டும் என்று வேண்டினர். ஞான சம்பந்தரும் அதற்கு இசைந்து புறப் பட்டார். அந்தத் தலத்தில் இறைவனை வணங்கித் தங்கி யிருந்தார். பின் அங்கிருந்து நீங்கித் தலைச் சங்காடு, திருவலம்புரம், பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திரு வெண்காடு, திருமுல்லை வாயில் முதலான தலங்களுக்குப் போய் இறைவனை வழிபட்டார். பின் தம் பதிக்குத் திரும்பினார்.

அப்போது திருநீலகண்டயாழ்ப்பாணர் அவரைக் கண்டு வணங்க வந்தார். ஞான சம்பந்தர் அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் போய் யாழ் வாசிக்கும்படி யுரைத்தார். அதன்பின் ஞான சம்பந்தர் அவரைத் தம் இருப் பிடத்தில் தங்கும்படிச் செய்தார். ஞானசம்பந்தரின் பதிகங்களைக் கேட்டு மகிழ்ந்தார். "தங்கள் பாக்களை யாழில் இட்டு வாசிக்க எனக்கு அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினார். திருஞான சம்பந்தரும் அதற்கு இசைந்தார். அன்றிலிருந்து சம்பந்தரின் பதிகங் களை யாழில் இட்டு இசைக்கும் வாய்ப்பைப் பெற்று அவருடன் பிரியாமல் இருந்து வந்தார். தில்லையில் வீற்றிருக்கும் கூத்தப் பெருமானை வணங்க வேண்டும் என்ற எண்ணம் ஞானசம்பந்தருக்கு ஏற்பட்டது. அதனால் தம் தந்தையுடனும் திருநீலகண்ட யாழ்ப்பாணருடனும் தில்லைக்குச் சென்றார். இறைவனை வழிபட்டுக் 'கற்றாங்கு எரி' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி னார். பின் திருவேட்களம் சென்று இறைவரை வணங்கி அங்குத் தங்கியிருந்தார். அங்கிருந்து திருக்கழிப் பாலைக்குச் சென்று இறைவனை வணங்கிப் பதிகம் பாடினார்.

ஒருநாள் அவர் தில்லைக்குச் சென்றபோது தில்லை வாழ் அந்தணர் மூவாயிரவரும் சிவகண நாதர்களாகக் காட்சி தருவதை உணர்ந்தார். பாணருக்கும் அதைக்

Koviloor Digital Library

காட்டினார். பின்னர்க் கோயிலுக்குள் சென்று 'ஆடினாய் நறு நெய்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அதில் தில்லை வாழ் அந்தணரைத் தாம் கண்டபடி விவரித்துள்ளார்.

நீலகண்ட யாழ்ப்பாணர் தம் பிறந்த ஊரான திருவெருக்கத்தம் புலியூர் முதலிய தலங்களுக்கு எழுந்தருள வேண்டும் என வேண்டிக் கொண்டார். அதற்குச் சம்மதித்து அந்சப் பதிக்கும் திருமுது குன்றம் முதலான பதிகளுக்கும் சென்று மாறன்பாடி என்ற பதியை அடைந்தார். அப்போது அவர் நடந்தே சென்றார்.

திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற இறைவர் ஞான சம்பந்தருக்கு முத்துச் சிவிகையும், முத்துக் குடையும் முத்துச் சின்னங்களும் அளிக்க எண்ணி, அந்தலூர் அந்தணரின் கனவில் தோன்றி "ஞான சம்பந்தன் நம்மிடத்துக்கு வருகின்றான். அவனுக்கு நம்மிடத்திலிருந்து முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னங்கள் என்பனவற்றைக் கொண்டு சென்று கொடுங்கள்" என்று அருள் செய்தார். காலையில் அவர்கள் கோயிலைத் திறந்து பார்த்தனர். அங்கு இறைவரால் அருளப்பட்ட முத்துச் சிவிகை முதலியன இருந்தன. அவற்றை அவர்கள் எடுத்துச் சென்று ஞானசம்பந்தருக்குத் தந்தனர். இச்செய்தியை இறைவர் ஞானசம்பந்தருக்கும் கனவில் உரைத்திருந்தார். திருவரத் துறை இறைவரின் திருவருளை வியந்து 'எந்தை யீசன்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். திருவைந்தெழுத்தை ஓதி அந்த முத்துச் சிவிகையை வலம் வந்து வணங்கி ஏறியருளினார். அப்போது பேராரவாரம் எழுந்தது! 'ஞானசம்பந்தர் வந்தார்' எனக் கட்டியம் கூறத் திருவரத்துறைக்குச் சென்றார். இறைவர் மீது பதிகம் பாடினார். அங்குத் தங்கியிருந்தார். சில நாட்கள் சென்றன. ஞான சம்பந்தர் தம் சீகாழிக்குத் திரும்ப எண்ணினார். திருப்பழுவூர், திருவிசய மங்கை, திருவைகா, திருப்புறம்பயம் என்ற தலங்களை வணங்கிக் கொண்டு திருசேய்ஞலூர்

Koviloor Digital Library

சென்று இறைவரை வணங்கிப் 'பீரடைந்த' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடித் துதித்தார். பின்னர்த் திருப்பனந்தாள், திருப்பந்தணை நல்லூர், திருவோமாம் புலியூர், திருவாளொளி புற்றூர், திருக்கடம்பூர், திருநாறையூர், திருக்கருப்பறியலூர் ஆகிய பதிகளை வணங்கியபடி சீகாழிக்கு வந்தார். அப்போது அந்தண நங்கையர் கூடித் தூபதீபம் முதலானவை ஏந்தி வரத், தாயார் பகவதியார் வந்து வணங்கத் தம் இல்லத்தை அவர் அடைந்தார்.

அவருக்குப் பூணூல் அணியும் பருவம் வர அந்தணர் கூடி அந்தச் சடங்கை நிறைவேற்றினர். அப்போது அந்தணர்களுக்கு வேதங்களில் உண்டான ஐயப்பாட்டை அவர் போக்கியருளினார். அந்தணர் அவருடைய வேத ஞானத்தைக் கண்டு வியப்புக் கொண்டனர்,

நாள்தோறும் தோணியப்பரை வணங்கிப் பதிகம் பாடிய வண்ணம் ஞானசம்பந்தர் சீகாழியில் தங்கியிருந்தார். அக்காலையில் திருநாவுக்கரசர், ஞானசம்பந்தரைக் காண வேண்டும் என்னும் விருப்பம் கொண்டு அவரைக் காண்பதற்காகச் சீகாழிக்கு வந்தார். சம்பந்தர் அவரை எதிர் கொள்ளச் சென்றார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கிக் கொண்டனர். அவரைத் தம் மாளிகையில் தங்குமாறு செய்தார். பின்னர்த் திருநாவுக்கரசர் மற்றப் பதிகளை வணங்குவதற்காக ஞானசம்பந்தரைப் பிரிந்து சென்றார்.

நாட்கள் சில சென்றன. தமிழகத்தில் உள்ள தலங்கள் பலவற்றையும் சென்று வணங்க எண்ணம் கொண்டவர் ஞானசப்பந்தர். தந்தையாரும் அவரைப் பிரிந்திருக்க மாட்டாமல் உடன் சென்றார். தந்தையாரும் திருநீலகண்ட யாழ்ப் பாணரும் உடன் வர அவர் புறப்பட்டார். காவிரிக்கு வடக்கில் மேற்றிசை நோக்கிச் சென்று, திருப்புள்ளிருக்கு வேளூர், திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருமண்ணிப் படிக்கரை, திருக் குறுக்கை, திருவன்னியூர், திருப்

Koviloor Digital Library

பந்தணை நல்லூர், திருக்கோடிகா, கஞ்சனூர் திருமங்கலக் குடி, திருவியலூர் முதலான பதிகளுக்குப் போய் இறைவரை வணங்கினார்.

பின்பு மழ நாட்டில் காவிரியின் வடகரையே போய்த் திருப்பாலாச்சிரமத்தை அடையலானார். அங்குக் கொல்லி மழவன் மகள் 'முயலகன்' என்ற நோயினால் வருந்த அவளைக் கோயிலில் இட்டு வைத்தான். அவன் ஞான சம்பந்தர் அங்கு வருவதை அறிந்து தன் மகளை நீங்கி நகரை அலங்கரித்து அவரை வரவேற்று, அவரது அடியில் விழுந்தான். பின் அவருடன் கோயிலுக்குள் சென்றான். சம்பந்தர் அங்குக் கிடக்கும் கொல்லி மழவனின் மகளைப் பார்த்து 'இது என்ன?' என்றார். அவன் நிகழ்ந்ததைக் கூறினான். அவர் வருந்தி அப்பெண்ணின் நோயை நீக்கும் பொருட்டு 'மணிவளர்' என்ற பதிகத்தைப் பாடினார். அப் பெண் நோய் நீங்கி எழுந்தாள். மழவன் மகிழ்ந்தான்.

சிலநாட்கள் அங்குத் தங்கியிருந்தார். பின் கொங்கு நாட்டுக்குச் சென்று கொடி மாடச் செங்குன்றூரில் தங்கி யிருந்தார். அப்போது அங்கு அவருடன் இருந்த பரிவாரம் சுர நோயினால் வாட்டம் அடைந்தது. அதை அறிந்த சம்பந்தர் 'அவ்வினைக்கு இவ்வினை' என்ற திருநீல கண்டப் பதிகத்தைப் பாடினார். அப்போது அவருடைய பரிவாரம் மட்டுமன்று; அந்நாடு முழுவதும் பசிப்பிணி நீங்கியது. பின்பு அங்குள்ள பல தலங்களை வணங்கிய வண்ணம் கொங்கு நாட்டைக் கடந்து சோழ நாட்டை அடைந்தார்.

சோழநாட்டில் திருப்பராய்த்துறை, திருக்கற்குடிமலை, திருமூக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி முதலான தலங்களை வணங்கித் திருவலஞ்சுழியை அடைந்தார். அங்கு இருக்கும் போது முதுவேனிற்காலம் வந்தது. அங்கிருந்து திருப்பட்டீசரத்துக்குப் போகப் புறப்பட்டார். அப்போது சிவ பூதம் பிள்ளையாரின் தலைக்கு மேலே முத்துப் பந்தரு

Koviloor Digital Library

அமைத்துப் 'பட்டீசர் எம்மை விடுத்தார்!' எனக் கூறிற்று. அந்தச் சொல்லும் முத்துப் பந்தரும் வானத்தில் தோன்றின. அம்முத்துப் பந்தர் நிழல் செய்யப், பட்டீசரத்தை அடைந்து இறைவரை வணங்கினார். பின் அங்கிருந்து நீங்கித் திரு வாறை வடதளி முதலான பதிகளை வணங்கித் திருவாடு துறையை அடைந்தார்.

சிவபாத இருதயர் வேள்வி செய்ய வேண்டும் என எண்ணினார். ஆதலால், அவர் வேள்விக்குப் பொருள் வேண்டும் என்று வேண்டினார். ஞானசம்பந்தர் இறை வனிடம் போய்ப், பொருளை விரும்பிக் கேட்டவர்க்குக் கொடுக்க என்னிடம் பொருள் இல்லை. உங்கள் திருவடியே அல்லாது எனக்கு ஆதரவு இல்லை'' என்றார். உடனே ஒரு பூதம் பொன் முடிப்பைக் கொணர்ந்து பலி பீடத்தில் இட்டது. 'அப்பூதம் இம்முடிப்பில் ஆயிரம் பொன் உள்ளது. எடுக்க எடுக்கக் குறையாது. சிவபெருமான் உமக்குக் கொடுத்தது' என்று கூறியது. அதைத் தந்தையார்க்குத் தந்து வேள்வியை இயற்றும்படி செய்தார்.

★ ★ ★

Koviloor Digital Library

பெரிய புராணம்

என்னும்

திருத்தொண்டர் புராணம்

மூன்றாம் தொகுதி

Koviloor Digital Library

28. குலச்சிறை நாயனார் புராணம்

1695 பன்னுதொல்புகழ்ப் பாண்டிநன் னாட்டிடைச்
செந்நெ லார்வயல் தீங்கரும் பின்னயல்
துன்னுபூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னார்மண மேற்குடி.

1696 அப்ப திக்கு முதல்வர்வன் றொண்டர்தாம்
ஒப்ப ரும்பெரு நம்பிஎன் றோதிய
செப்ப ருஞ்சீர்க் குலச்சிறை யார் திண்மை
வைப்பி னால்திருத் தொண்டில் வழாதவர்.

1697 கார ணங்கண் ணுதற்கன்பர் என்னவே
வார மாகி மகிழ்ந்தவர் தாள்மிசை
யாரும் அன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்து
ஈர நன்மொழி எய்த இசைத்துளார்.

1698 குறியின் நான்கு குலத்தின ராயினும்
நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்பர் எனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார்.

1699 உலகர் கொள்ளும் நலத்தின ராயினும்
அலகில் தீமைய ராயினும் அம்புலி
இலகு செஞ்சடை யார்க்கடி யாரெனில்
தலமு றப்பணிந் தேத்தும் தகைமையார்.

Koviloor Digital Library

28. குலச்சிறை நாயனார் புராணம்

1695. புகழ்ந்து பேசப்படும் பழைமையான புகழை யடைய நன்மையுடைய பாண்டிய நாட்டில், செந்நெல் நிரம்பிய வயல்களும், கரும்புப் பயிர்களின் பக்கத்தில் செறிவான பாக்கு மரங்களும் கொண்ட புற இடங்களும் கொண்ட நிலைபெற்ற வளமை வாய்ந்த நகரமானது 'மணமேற்குடி' என்பதாகும்.

(புறம்பணை — நகரத்தைச் சூழ்ந்த வெளியிடம்)

1696. அந்தப் பதிக்கு முதல்வர் வன்றொண்டப் பெருந்தகையார் (சுந்தரர்), ஒப்பில்லாத 'பெருநம்பி' என்று போற்றிய சொல்வதற்கரிய சிறப்பையுடையர் குலச் சிறையார் ஆவார். அவர் திண்ணிய தன்மையால் திருத் தொண்டின் திறத்தினின்று தவறாதவர் ஆவார்.

1697. அக்குலச்சிறையார், சிவபெருமானுக்கு அன்பர் களே அவன் அருள் பெறுதற்குக் காரணமாவர் என்று துணிந்ததால், அன்பு நிறைந்து மகிழப்பெற்று அவருடைய திருவடிகளில் மிக்க அன்புடன் விழுந்து கைகள் குவித்துத் தொழுது அன்புடன் கலந்த நல்ல சொற்களைச் சொல் பவராய் விளங்கினார்.

1698. குலச்சிறையார். குறிக் கொண்ட நான்கு குலத்தவராய் இருப்பினும், நெறிப்படி அந்தந்தக் குலங்களி னின்றும் நீங்கியவர் ஆயினும், சிவபெருமானிடத்தில் தம் அறிவு நிலைபெற்ற அன்பர் என்று அறியப்பட்டால், மனம் செறியும்படி கூடிப் பணிந்து துதிக்கும் செயலை உடையார் ஆவர்.

1699. உலகநெறியில் மக்கள் 'ஆம்' என்று கொள்ளும் நன்மையுடையவராயினும், அங்ஙனம் உலகர் 'அன்று' என்று தீமைகள் அளவின்றி உடையவர்களாயினும், பிறைச் சந்திரன் விளங்கும் சிவந்த சடையையுடைய சிவ பெருமானது அடியார்கள் ஆயினால், நிலம் பொருந்த வீழ்ந்து வணங்கிப் போற்றும் தன்மையை அக்குலச்சிறையார் உடையவராய் இருந்து வந்தார்.

Koviloor Digital Library

1700 பண்பு மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண்பெ ருக்கிய அன்பால எதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டும் நலத்தினார்.

1701 பூதி கோவணங் சாதனத் தாற்பொலிந்
தாதி தேவர்தன் அஞ்செழுத் தாமவை
ஓது நாவணக் கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினார்.

1702 இன்ன நல்லொழுக் கத்தினார் ஈறில்சீர்த்
தென்ன வன்நெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியார்
ஒன்ன லர்செற்று உறுதிக்கண் நின்றுளார்.

1703 ஆய செய்கைய ராயவர் ஆறணி
நாய னார்திருப் பாதம் நவின்றுளார்
பாய சீர்புனை பாண்டிமா தேவியார்
மேய தொண்டுக்கு மெய்த்தொண்ட ராயினார்.

1704 புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவும்
தென்னர் நாடு திருநீறு போற்றவும்
மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி
சென்னி சேர்த்தி மகிழ்ந்த சிறப்பினார்.

1705 வாதில் தோற்ற அமணரை வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன் மேலினி ஏத்துகேள்
வேத நீதி மிழலைக் குறும்பர் தாள்.

குலச்சிறை நாயனார் புராணம் முற்றிற்று.

Koviloor Digital Library

1700. அவர், பண்பால் மிக்கவர், பெருங்கூட்டத்தவர் ஆக வந்தாலும், உண்பனவற்றை விரும்பி ஒருவராய் வந்தாலும், எண்ணுதலில் மிகுதிப்பட்ட அன்பின் திறம் காரணமாக, எதிர்கொண்டு அழைத்து வந்து, அன்பு மிக்குத் திருவமுது ஊட்டும் இயல்பை மேற்கொண்டிருந் தார்.

1701. அக்குலச்சிறையார் திருநீறும் கோவணமும் உருத்திராக்கமும் ஆன சிவ சின்னங்களாலே பொலிவு பொருந்தி ஆதிதேவரான சிவபெருமானின் திருவைந் தெழுந்தான அவற்றை ஓதுகின்ற நாவின் வணக்கத்தினால் சொல்பவரின் திருவடிகளை ஒவ்வொரு நாளும் துதிக்கும் இயல்பை உடையவர்.

1702. இத்தகைய நல்ல ஒழுக்கத்தில் நின்ற அவர் முடிவற்ற சிறப்பையுடைய பாண்டியரான நின்ற சீர் நெடுமாறர்க்குச் சிறப்புச் செய்து விளங்கிய அமைச்சர்களுள் மேம்பட்டு நிற்பவர். பகைவர்களை அழித்து உறுதி பயக்கும் துறையிலே நிலை நின்றவர்.

1703. அவர் அத்தகைய செயலை உடையவராய்க் கங்கையைத் தலையில் சூடிய தலைவரான சிவபெருமானின் திருவடிகளையே இடைவிடாமல் சொல்லும் தன்மை கொண்டவர். எங்கும் பரவிய புகழையுடைய மங்கையர்க் கரசி அம்மையாரின் பொருந்திய திருத்தொண்டுக்கு உண்மைத் தொண்டராக விளங்கினார்.

1704. நன்மையால் குறைவுடைய சமணர்களின் பொய்ம்மையை நீக்கவும், பாண்டியநாடு திருநீற்று நெறி யைப் போற்றவும் பொருந்திய சீகாழியின் வள்ளலான ஞான சம்பந்தரின் பொன்னார்ந்த திருவடிகளைத் தலையில் சூட்டி மகிழ்ந்த சிறப்புக் கொண்டவர்.

1705. வாதத்தில் தோற்ற சமணர்களை வன்மை யான கழு மரத்திலே தீமை நீங்குமாறு ஏற்றுவித்த குலச்சிறையாரின் இயல்புகளை இதுகாறும் எந்த அளவில் போற்றினேன்? (ஒன்றையும் போற்றவில்லை!) இனி, வேத நீதி விளங்கும் 'பெருமிழலைக் குறும்ப நாயனாரின்' திருவடி களைப் போற்றப் புகுகின்றேன்.

(குறும்பர்—சிற்றரசர்)

குலச்சிறை நாயனார் புராணம் முற்றிற்று.

Koviloor Digital Library

29. பெருமிழலைக்குறும்ப நாயனார் புராணம்

1706 சூதநெருங்கு குலைத்தெங்கு பலவு பூகஞ்
சூழ்புடைத்தாய்
வீதி தோறும் நீற்றினொளி விரிய மேவி
விளங்குபதி
நீதி வழுவா நெறியினராய் நிலவுங் குடியால்
நெடுநிலத்து
மீது விளங்கும் தொன்மையது மிழலை
நாட்டுப் பெருமிழலை.

1707 அன்ன தொன்மைத் திருப்பதிக்கண் அதிபர்
மிழலைக் குறும்பனார்
சென்னி மதியம் வைத்தவர்தம் அடியார்க்கான
செய்பணிகள்
இன்ன வண்ணம் என்றவர்தாம் உரையா முன்னம்
எதிரேற்று
முன்னம் உணர்ந்து செய்வாராய் முதிரும் அறிவின்
பயன்கொள்வார்.

1708 தொண்டர் பலரும் வந்திண்டி உண்ணத்
தொலையா அமுதூட்டிக்
கொண்டு செல்ல இருநிதியம் முகந்து கொடுத்துக்
குறைந்தடைவார்
வண்டு மருவுங் குழலுமை யாள் கேள்வன் செய்ய
தாளென்னும்
புண்டரீசம் அக மலரில் வைத்துப் போற்றும்
பொற்பினார்.

Koviloor Digital Library

29. பெருமிழலைக்குறும்ப நாயனார் புராணம்

1706 'மிழலை' நாட்டில் 'பெருமிழலை' என்னும் ஊர், மாமரமும், நெருங்கிய குலைகளையுடைய தென்னையும், பலாவும், கமுகுகளும் சூழும், சுற்றுப்புறப் பனைகளையுடையதாகி வீதிதோறும் திருநீற்றின் ஒளி பெருகப் பொருந்தி விளங்கும்பதியாகும். வேத நீதியினின்று வழுவாத நல்லொழுக்கத்தில் நின்ற குடிகளின் பெருமையால், பெரியவுலகில் விளங்கும் பழைமையுடையது.

'1707. அத்தகைய பழைமையுடைய நகரத்தில் குறுநில மன்னரான மிழலைக் குறும்பர், தலையில் பிறையைச் சூடிய இறைவரின் அடியார்களுக்கு ஆன பணிவிடைகளையெல்லாம் இன்னின்னவை என்றும் இன்னின்னவாறு என்றும் அவர்கள் தாம் எடுத்துச் சொல்லாத முன்னமே எதிர்கொண்டு விருந்தாக ஏற்று அவர்களின் குறிப்பையுணர்ந்து செய்பவராய் முதிர்ந்த அறிவுபெற்ற பயனை அடைவாராய்.

'1708. சிவத்தொண்டர்கள் பலரும் வந்து கூடி உண்ண உண்ணத் தொலையாதபடி உணவை உண்பித்தும், எடுத்துக்கொண்டு செல்லுமாறு செல்வங்களை அள்ளிக் கொடுத்தும், தம்மைச் சிறியவராய் வைத்து நடந்து கொள்வார். வண்டுகள் மொய்த்த கூந்தலையுடைய உமையம்மையாருக்குக் கணவரின் சிவந்த திருவடித் தாமரைகளைத் தம் நெஞ்சத் தாமரையில் வைத்துப் போற்றும் இயல்பு உடையவர்.

Koviloor Digital Library

1709 இத்தன் மையராய் நிகழுநாள் எல்லை இல்லாத்
திருத் தொண்டின்
மெய்த்தன் மையினை உலகறிய விதியால் வணங்கி
மெய்யடியார்
சித்தம் நிலவுந் திருத்தொண்டத் தொகைப்பா
டியருளிப் பணிந்து
நித்தன் அருள்பெற் றவர்பாதம் நினைக்கும்
நியமத் தலைநின்றார்.

1710 மையார் தடங்கட் பரவையார் மணவா ளன்தன்
மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி மனத்தால்
நினைக்கும் கடப்பாட்டில்
செய்யாள் கோனும் நான் முகனும் அறியாச்
செம்பொற் றாளிணைக்கீழ்
உய்வான் சேர உற்றநெறி இதுவே என்று அன்
பினில்உய்த்தார்.

1711 நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி சித்தி யான
அணைந்ததற்பின்
மூளும் காத லுடன்பெருக முதல்வர் நாமத்
தஞ்செழுத்தும்
கேளும்பொருளும் உணர்வுமாம் பரிசுவாய்ப்பக்
கெழுமினார்.

1712 இன்ன வாறே இவரொழுக ஏறு கொடிமேல்
உயர்த்தவர்தம்
பொன்னங் கழல்கள் மண்ணின்மேல் பொருந்த
வந்து வழக்குரைத்து
மன்னும் ஓலை அவைமுன்பு காட்டி ஆண்ட
வன்றொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி கொடுங்கோ
ளூரைச் சேர்வுற்றார்

Koviloor Digital Library

'1709. இத்தன்மை உடையவராய் விளங்கும் நாளில், அளவுபடாத அவரது திருத்தொண்டின் திறத்தை உலகம் அறியும் பொருட்டு, உண்மை அடியாரது உள்ளத்துள் நீங்காமல் நின்று விளங்கும் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தை விதிப்படி வணக்கம் செய்து, அதனைப் பாடிய சுந்தரரை வணங்கி, நித்தரான சிவபெருமானின் அருள் கூடியதால், அவருடைய திருவடிகளை நியமமாக நினைக்கின்ற நிலையில் சிறந்து விளங்கினார்.

1710. மை பூசப்பெற்ற பெரிய கண்களையுடைய பரவையாரின் கணவரான சுந்தரரின் மலரடிகளைக் கையால் வணங்கி வாயினால் துதித்து மனத்தால் சிந்திக்கும் கடமைப்பாட்டில் நின்று "திருமகள் கணவனான திருமாலும் நான்முகனும் அறியாத சிவந்த பொன் போன்ற திருவடிகளின் கீழ் உய்யுமாறு சேர்வதற்குப் பொருந்திய நெறிதான் இதுவாகும்" என்று எண்ணி அன்பால் செலுத்தி வருவாரானார்.

1711. நாள்தோறும் சுந்தரரின் திருநாமங்களைக் கூறிய அந்நலம் காரணமாக, தாம் கைக்கொண்டு ஏவல் கொள்ளும் தன்மையால் அணிமா முதலான எட்டுவகைச் சித்திகளும் கை வரப்பெற்று, அதன்பின், மூள்கின்ற அன்பு மேன்மேல் பெருகுதலால், முழுமுதற் பொருளான சிவ பெருமானின் திருவைந்தெழுத்துமே, சுற்றமும் பொருவும் உணர்வுமாகும் என்ற தன்மை கைகூடப் பெற்ற தன்மையை அடைந்தார்.

'1712. இங்ஙனமாக இவர் ஒழுகிவர, காளைக் கொடியை உயர்த்திய சிவபெருமான் தம் பொன் போன்ற இனிய அடிகள் மண்ணில் பொருந்துமாறு நடந்து வந்து வழக்காடி, நிலைபெற்ற மூல ஓலையை அவைமுன் காட்டித் தடுத்தாட் கொள்ளப்பட்ட வன்றொண்டர், உச்சியின் மீது நிலவு தோயும்படி உயர்ந்த மாடங்கள் நிறைந்த கொடுங்கோளூரைச் சேர்ந்தார்.

Koviloor Digital Library

1713 அஞ்சைக் களத்து நஞ்சுண்ட அமுதைப் பரவி அணைவுறுவார்
செஞ்சொல் தமிழ்மா லைகள்மொழியத் தேவர் பெருமான் அருளாலே
மஞ்சில் திகழும் வடகயிலைப் பொருப்பில் எய்த வரும்வாழ்வு
நெஞ்சில் தெளிய இங்குணர்ந்தார் நீடு மிழலைக் குறும்பனார்.

1714 மண்ணில் திகழும் திருநாவலூரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை எய்த நான் பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன் என்று
எண்ணிச் சிவன் தாள் இன்றேசென் றடைவன் யோகத்தால் என்பார்.

1715 நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற் கொண்டு
காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை முன்னடைந்தார்.

1716 பயிலைச் செறிந்த யோகத்தால் பரவை கேள்வன் பாத முறக்
கயிலைப் பொருப்பர் அடியடைந்த மிழலைக் குறும்பர் கழல்வணங்கி
மயிலைப் புறங்கொள் மென் சாயல் மகளிர் கிளவி யாழினொடும்
குயிலைப் பொருவும் காரைக்கால் அம்மை பெருமை கூறுவாம்.

பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம் முற்றிற்று.

Koviloor Digital Library

1713. 'திருவஞ்சைக் களம்' என்ற தலத்தில் நஞ்சை உண்ட இறைவரைத் துதித்து வருபவர் செஞ்சொல் தமிழ் மாலையான தேவாரத் திருப்பதிகம் பாடியருள, சிவ பெருமானின் அருளால் மேகங்களால் விளங்கும் வட கயிலாய மலையில் சேரும் வாழ்வை உள்ளத்தில் தெளிந்து கொண்டவராக, அதனை இங்கிருந்தே மிழலைக் குறும்பர் உணர்ந்தார்.

1714. விளங்கும் திருநாவலூரில் இம்மண் உலகில் அவதரித்த சுந்தரர் மற்றவரால் அடைவதற்கரிய திருக் கயிலையை நாளைச் சென்றடையவும், கண்ணின் கருமணி நீங்கிய பின்னும் வாழ்பவர்களைப் போல் "நான் பிரிந்து வாழேன்!" என்று மனத்தில் எண்ணி அதனால் யோக நெறியின் மூலம் சிவனடியை இன்றே அடைவேன் எனத் துணிந்தாராகி,

1715. மனம் முதலிய கரணங்களுள் நான்கும் ஒன்றாக நல்ல அறிவை மேற்கொண்டு உணர்ச்சியானது சுழுமுனை வழியே பிராண வாயுவைச் செலுத்தக், கபால நடுவில் பொருந்தும்படி முன்னே தாம் பயின்ற நெறியால் எடுத்த பிரணவ மந்திரமானது பிரமரந்திர வாயிலைத் திறக்க, அந்த வழியின் மூலம் சிவபெருமானின் திருவடிகளை அடைபவராய்த் திருக்கயிலை மலையை, நம்பி ஆரூரர் வந்து சேர்வதற்கு முன்பே சேர்ந்தார்.

1716. பயிலும் தொழிலை மிகச் செறிவுறச் செய்து வந்த முயற்சியின் துணையால் பரவையம்மையாரின் கணவரான சுந்தரரின் திருவடிகளைப் பிரியாது பொருந்து தற்குக் கயிலை மலைக்கு இறைவரான சிவபெருமானின் திருவடியை அடைந்த பெருமிழலைக் குறும்பரின் திருவடி களை வணங்கி, அவற்றின் துணையால் மயிலின் சாயலைப் புறம் கண்ட மகளிரான, யாழுடன் குயிலின் இசையையும் ஒத்துச் சொற்கள் ஒலிக்கும் தன்மையுடைய 'காரைக் காலம்மையாரின்' பெருமையை இனிச் சொல்வேன்.

பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம் முற்றிற்று.

Koviloor Digital Library

30. காரைக்காலம்மையார் புராணம்

1717 மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்
கால்.

1718 வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் என
வந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார் பிறந்தார்.

1719 வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளிய
பின்
அணிகிளர்மெல் அடிதளர்வுற் றசையுநடைப்
பருவத்தே
பணிஅணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்கு
பெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததுப்பவரும் மொழி
பயின்றார்.

1720 பல்பெருநற் கிளைஉவப்பப் பயில்பருவச் சிறப்
பெல்லாம்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்
புரிய
மல்குபெரும் பாராட்டின் வளர்கின்றார்
விடையவர் பால்
அல்கியஅன் புடன்அழகின் கொழுந்தெழுவ தென
வளர்வார்.

Koviloor Digital Library

30. காரைக்காலம்மையார் புராணம்

1717. வளைந்த சங்குகளைக் கடல் அலைகள் சுமந்து எடுத்துக் கொண்டு மேல் ஏறி, அடுத்து நிறைந்த கழிக் கானல்களில் உலவும் வளம் பெருக உள்ள 'திருக்காரைக் கால்' என்ற ஊர் மானம் மிக்க தருமநெறியில் நடந்து வாய்மையினின்றும் தவறாத சிறப்புடைய பெருவணிகர் குடிகள் நெருங்கி விளங்கும் பதியாகும்.

1718. மரக் கலங்கள் மிக்க கடற்கரையில் உள்ள காரைக்கால் நகரில் வாழும் வணிகர் குலத் தலைவரான 'தனதத்தனார்' என்பவரின் தவத்தால் அங்கு அவரிடத்தில் பராசக்தி அவதரித்தாள் என்னுமாறு புனிதவதியார் வந்து பிறந்தார்.

1719. வணிகர்களின் பெருங்குலம் விளங்குமாறு இம்மண்ணுலகில் அக்குலத்தில் வந்து தோன்றிய பின்னர், அணி பெருகும் மென்மையான திருவடிகள் தளர்நடை கற்கும் பருவத்தில், பாம்புகளை அணியும் சிவபெருமான் திருவடிகளில் அடிமைத்தொழில் பழகி வரும் பான்மை பெறுவதற்கு அடங்காத உள்ளத்து ஆசை மேலோங்க வரும் சொற்களைப் பயின்றார்.

1720. பெருமையுடைய பல நல்ல உறவினர் மகிழ்ச்சி யடையுமாறு, மேலே சொன்ன வண்ணம் வரும் பருவங்கள் தோறும், சிறப்புக்கள் எல்லாவற்றையும், திருப் பெருகும் சடங்குகளான செயல்களை எல்லாம் செல்வம் மிகுந்த தந்தையார் தனதத்தனார் செய்தார். அங்ஙனம் செய்ய, பொருந்திய நிறைந்த பெரும் பாராட்டுகளுடன் வளர்கின்ற வரான புனிதவதியம்மையார் காளை யூர்தியையுடைய சிவபெருமானிடத்தில் மிக்க அன்புடனே கூடிய அழகுடன் கொழுந்து எழுந்து வளர்த்தாற் போல வளர்வார் ஆனார்.

Koviloor Digital Library

1721 வண்டல் பயில் வனஎல்லாம் வளர்மதியம் புனைந்த சடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணையவரு வன பயின்று
தொண்டர்வரில் தொழுதுதா தியர்போற்றத் துணை முலைகள்
கொண்டநுசுப் பொதுங்குபதக் கொள்கையினிற் குறுகினார்.

1722 நல்லவென உறுப்புநூ லவர்உரைக்கும் நலம் நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில் இவர்கள்மர பினுக் கேற்கும்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்.

1723 நீடியசீர்க் கடல்நாகை நிதிபதிஎன் றுலகின்கண்
பாடுபெறு புகழ்வணிகன் பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவருந் திருமரபில் சேயிழையை மகட்பேச
மாடமலி காரைக்கால் வளநகரில் வரவிட்டார்.

1724 வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த மனைபுகுந்து
தந்தையாம் தனதத்தன் தனைநேர்ந்து நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கும் முறையைமணம் புரி கென்றார்.

1725 மற்றவனும் முறைமையினால் மணம்இசைந்து செல விடச் சென்று
உற்றவர்கள் உரைகேட்ட நிதிபதியும் உயர்சிறப்புப்
பெற்றனள்போல் உவந்துதனிப் பெருமகட்குத் திருமலியுஞ்
சுற்றமுடன் களிகூர்ந்து வதுவை வினைத் தொழில் பூண்டான்.

Koviloor Digital Library

1721. மற்றச் சிறுமியருடன் வண்டல் விளையாட்டயரும் மகளிர் விளையாட்டுகளில் எல்லாம் பிறைச் சந்திரனை அணிந்த சடையையுடைய தேவ தேவரின் திருவார்த்தைகள் பொருந்த வருவனவாகப் பயின்றும், சிவன் அடியார்கள் வரின் அவர்களை வணங்கியும், இப்படி, வளர்ப்புத் தாயர் பாதுகாத்திட, இரண்டு முலைகளைக் கொண்டு இடை துவளும் பருவம் கொண்ட வயதின் பருவத்தை அடைந்தார்,

1722. உடல் கூற்று வல்லுநர் இவை இவை நல்லவை என்று எடுத்துக் கூறும் நலங்கள் எல்லாம் நிரம்பப் பெற்ற, பொருந்திய பேரழகு மேலும் மேலும் மிகுதியாய் வளர்கின்ற பண்பினாலே வீட்டினின்று வெளியே செல்லக் கூடாத பருவம் வர, இவர்களது மரபுக்குப் பொருந்தும் பழங் குடியில் வந்த வாணிகர் மணம் செய்து கொள்ளப் பெண் பேசத் தொடங்கினர்.

1723. சிறப்பு மிக்க கடற்கரையில் உள்ள பட்டினமான நாகைப் பட்டினத்தில் 'நிதிபதி' என்ற பெயருடன் உலகில் பெருமை பெறும் புகழ் பொருந்திய வணிகன் பெற்ற குலமகனுக்கு, ஒத்த மரபில் தேட வருகின்ற குலத்தில் வந்த இந்த அம்மையாரைப் பெண் பேசும் பொருட்டு, மாடங்கள் நிறைந்த காரைக்கால் என்னும் நகரில் அறிவுடைய பெரியோர்கள் அனுப்பப்பட்டு வந்தனர்.

1724. அங்ஙனம் அனுப்பப்பட்டு வந்த முதிய அறிவினர் மணம் பேசப் பெண் குறித்த மனையில் புகுந்து, பெண்ணின் தந்தையான தனதத்தனை அடைந்து, 'நீ பெற்ற பெண்ணை நிதிபதியின் மகனுக்கு முந்தையோர் மரபினுக்குப் பொருந்துகின்ற முறையாலே மணம் செய்க'' எனக் கூறினர்.

1725. அங்ஙனம் மணம் பேச வந்தவர் சொல்லக் கேட்ட அந்தத் தனதத்தனும் அவர்கள் சொன்னபடி மணம் இசைவது எவ்வகையாலும் முறைமையுடைய காரணத்தால் மணம் செய்வதற்கு சம்மதித்துத் தன் இசைவை அறிவித்து அவர்களைப் போகச் செய்ய, அங்ஙனமே சென்று சேர்ந்தவர்கள் கூறியதைக் கேட்ட நிதிபதியும், உயர்ந்த பெருஞ்சிறப்பைப் பெற்றவனைப் போல் மகிழ்ந்து தன் தனிப் பெரும் மகனுக்குச் செல்வம் மிக்க சுற்றத்தாருடன் கூடி மணத்துக்குரிய செயலைச் செய்யலானான்.

Koviloor Digital Library

1726 மணமிசைந்த நாளோலை செலவிட்டு மங்கலநாள்
அணையவது வைத்தொழில் களானவெலாம்
அமைவித்தே
இணரலங்கல் மைந்தனையும் மணவணியின்
எழில்விளக்கிப்
பணை முரசம் எழுந்தார்ப்பக் காரைக்கால்
பதிபுகுந்தார்.

1727 அளிமிடைந்தார்த் தனதத்தன் அணிமாடத்
துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை
செய்தமைத்துத்
தளிரடி மென்நகைமயிலைத் தாதவிழ்
தார்க்காளைக்கு
களிமகிழ்சுற் றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள்.

1728 மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின்
வைகுநாள்
தங்கள்குடிக் கரும்புதல்வி ஆதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே
கணவனுடன்
அங்கண்அமர்ந் தினிதிருக்க அணிமாடம்
மருங்கமைத்தான்.

1729 மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில் தனங்
கொடுத்ததற்பின்
நிகர்ப்பரியபெருஞ்சிறப்பில் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால் தங்குமனை
வளம்பெருக்கி
மிகப்புரியம் கொள்கையினில் மேம்படுதல்
மேவினான்.

Koviloor Digital Library

1726. மகளைப் பெற்றவர் மணத்துக்குச் சம்மதித்த தால் மணநாள் குறித்து மண ஓலையை அனுப்பி, மணத்தைச் செய்யும் நாள் வந்து சேர, மணச் சடங்குக் குரிய செயல்கள் எல்லாவற்றையும் பொருந்துமாறு அமைத்து வைத்துக், கொத்தாகப் பொருந்திய மலர் மாலை யையுடைய மணமகனையும் மணக்கோலம் புனையும் அணி களால் அழகுபடுத்திக், கூட்டமான மணமுரசு முதலான வாத்தியங்கள் ஒலிக்க, மண எழுச்சி எழுந்து காரைக்கால் நகரத்தில் நிதிபதியும் அவனுடைய சுற்றத்தாரும் புகுந் தனர்.

(நாள் ஓலை— மண நாள் குறித்து எழுதும் ஓலை.)

1727. அங்ஙனம் காரைக்கால் என்ற நகரத்துக்கு வந்தவர், வண்டுகள் மொய்க்கும் மாலையைச் சூடிய தனதத்தனின் அழகு பொருந்திய மாளிகையுள் சேர்ந்து தெளிவைத் தரும் அறநூல்களின் விதிப்படியே மணத்துக்கு முன்பு செய்யத் தக்க சடங்குகளை எல்லாம் செய்து முடித்து, தளிர் போன்ற திருவடிகளையும் மயிலின் சாயலையும் உடைய புனிதவதியம்மையாரை மாலை சூடிய காளை போன்ற பரமதத்தனுக்குக் களி மகிழ் சுற்றத்தவர் திருமணம் செய்தனர்.

1728. மங்கலமான திருமணச் சடங்குகளையும் அவை பற்றிய மற்றச் செயல்களையும் முடித்து இல் வாழ்க்கையின் இயல்பில் வாழும் நாளில், தனதத்தன் தங்கள் குடிக்குப் புனிதவதியார் ஒரே மகள் ஆதலால், தம்மைப் பிரிந்து பொங்கும் ஒலியுடைய கடற்கரையில் உள்ள நாகப்பட்டினத்துக்குச் செல்லாது, அவர், கணவரு டனே அந்தக் காரைக்கால் நகரத்திலேயே தங்கி இனிதாய் இல்வாழ்வு வாழ்ந்திருக்கப் பக்கத்தில் அழகிய மாளிகையை அமைத்தான்.

1729. மகளைத் திருமணம் செய்து தந்த அதனால் மிகவும் மகிழ்ச்சி பெருகுவதற்குக் காரணமான அளவற்ற செல்வங்களையெல்லாம் தனதத்தன் தந்தான். பின், ஒப்பில்லாத சிறப்பையுடைய நிதிபதியின் மகனான பரமதத்தனும் அடங்காத பெரு விருப்பத்தால் மனையில் தங்கி இல்வாழ்வில் வரும் எல்லா வகை வளங்களையும் தன் மரபுக்கு ஏற்ற முயற்சிகளால் பெருக்கி மிகுதியாக்கும் வணிகச் செயலால் மேன்மையான நிலையை அடைந்தான்.

Koviloor Digital Library

1730 ஆங்கவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர் தாமும் பொருவிடையார் திரு வடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரும் மனை அறத்தின் பண்புவழா மையில் பயில்வார்.

1731 நம்பர்அடி யார்அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான
தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகுநாள்.

1732 பாங்குடைய நெறியின்கட் பயில்பரம தத்தனுக்கு
மாங் கனிகள் ஓரிரண்டு வந்தணைந்தார் சிலர்கொடுப்ப
ஆங்க வைதான் முன்வாங்கி அவர்வேண்டுங் குறையளித்தே
ஈங்கிவற்றை இல்லத்துக் கொடுக்க என இயம்பினான்.

1733 கணவன்தான் வரவிடுத்த கனி இரண்டுங் கைக்கொண்டு
மணமலியும் மலர்க்கூந்தல் மாதரார் வைத்ததற்பின்
பணஅரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால் ஒருவர்மனை யுட்புகுந்தார்.

Koviloor Digital Library

1730. அந்த இல்லத்தில் அவனுடைய இல்வாழ்க்கைத் துணைவியாய் அமர்ந்து பூங்குழலையுடைய புனிதவதியாரும் போர் செய்கின்ற காளையூர்தியையுடைய சிவபெருமானின் திருவடிகளின் கீழ் மிக்க அன்பு பொருந்திய காதல் இடையறாது மேன்மேலும் பெருகும்படி நல்ல பான்மையுடன் வரும் இல்லறத்தின் பண்பு பிறழாது ஒழுகி வந்தார்.

1731. புனிதவதியார் இறைவரின் அடியார் தம் இல்லத்தை நாடி வந்தால் நல்ல உணவை அளித்தும் செம்பொன்னும் நவமணிகளும் செழுமையான ஆடைகளும் என்ற இவை முதலானவற்றைத் தந்தும் தேவ தேவரான சிவபெருமான் திருவடியின் கீழ் வைத்த உணர்வு மேன்மேல் பெருகும்படி ஒழுகி வந்தார். அந்நாளில்,

1732. தம் ஒழுக்க நெறியில் ஒழுகும் பரமதத்தனிடம் வந்து சேர்ந்த சிலர் அவனுக்கு ஓர் இரண்டு மாம்பழங்கள் கொடுக்க, அங்கு அவற்றைத் தான் வாங்கிக் கொண்டு, அவன அவர்கள் வேண்டிய செயல்களை முடித்துக்கொடுத்து "இங்கு இப்பழங்களை வீட்டில் கொண்டு போய்க் கொடுக்க!" எனத் தன் பணிமக்களிடம் கூறினான்,

1733. அங்ஙனம் தன் கணவன் அனுப்பிய இரண்டு பழங்களையும் கைகளில் பெற்றுக் கொண்டு மணம் கமழும் கூந்தலையுடைய புனிதவதி அம்மையார் தம் இல்லத்தில் வைத்தார். பின்பு, படத்தையுடைய பாம்புகளை அணிகின்ற சிவபெருமானின் தொண்டர் ஒருவர் மிக்க விருப்புடன் அந்த இல்லத்துக்கு வந்தார்.

Koviloor Digital Library

1734 வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலை கண்டு
நாதன்தன் அடியாரைப் பசிதீர்ப்பேன் என நண்ணிப்
பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம் வைத்து
ஏதந்தீர் நல்விருந்தா இன்அடிசில் ஊட்டுவார்.

1735 கறியமுதங் குதவாதே திருஅமுது கைகூட
வெறிமலர்மேல் திருவனையார் விடையவன்தன் அடியாரே
பெறலரிய விருந்தானால் பேறிதன்மேல் இல்லையெனும்
அறிவினராய் அவர்அமுது செய்வதனுக் காதரிப்பார்.

1736 இல்லாளன் வைக்க எனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்ஒன் றைக்கொண்டு
வல்விரைந்துவந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார் தமைஅமுது செய்வித்தார்.

1737 மூப்புறும்அத் தளர்வாலும் முதிர்ந்துமுடு கியவேட்கைத்
தீப்பசியின் நிலையாலும் அயர்ந்தணைந்த திருத்தொண்டர்
வாய்ப்புறுமென் சுவைஅடிசில் மாங்கனியோ டினிதருந்திப்
பூப்பயில்மென் குழல்மடவார் செயல் உவந்து போயினார்

Koviloor Digital Library

1734. நான்கு வேதங்களையும் அருளிய சிவபெருமானின் மெய்த் தொண்டர் மிகவும் பசித்த நிலையைக் கண்டு, ''சிவனடியாரை விரைவாகப் பசி தீர்க்க உணவு அளிப்பேன்'' என்று போய், முதலில் பாதம் தூய்மை செய்தற்பொருட்டு நீரை அளித்து உண்ணும் வாழை இலையைத் திருத்தி இட்டு, குற்றம் நீங்கும் நல்ல விருந்தாகக் கொண்டு இனிய அடிசிலை உண்பிக்க,

1735. மணம் கமழும் தாமரை மலர்மீது வீற்றிருக்கும் திருமகளைப் போன்ற புனிதவதியார் அப்போது கறியமுது உதவாமல் திருவமுது மட்டும் கைக் கூடப் பெற்ற நிலையில் இருக்க (கறிகள் சமைக்கப் பெறாமல் சாதம் மட்டும் சமைத்த நிலையில் இருக்க), 'சிவபெருமானின் அடியாரே தேடிப் பெறுவதற்கு அரிய விருந்தாய் இங்கு வந்து கிட்டுவாரானால், இதன் மேலும் பேறுபெறத்தக்க இல்லை!'' என்னும் துணிவுடையவராய், அவர் உணவு உண்பதற்குரிய செயலை அன்புடன் செய்பவராய்,

1736. தம் கணவன் 'இவற்றை வைக்க!' என்று அனுப்பிடத் தம்மிடத்தில் முன்னர் இருந்த நல்ல இனிய பழங்கள் இரண்டில் ஒன்றைக் கொண்டு, மிகவும் விரைந்து வந்து சேர்ந்து, இலையில் பரிமாறி, உள்ள மகிழ்ச்சியுடனும் துன்பம் துடைக்கும் இறைவரின் அடியாரை உணவு உண்ணச் செய்தார்.

1737. முதுமையால் வரும் அந்தத் தளர்ச்சியாலும், முதிர்ந்து பெருகிய உணவு பெறும்விருப்பத்தை எழுவிக்கும் வயிற்றுத் தீயின் செயலால் உண்டான பசியின்நிலையாலும், தளர்ச்சி கொண்டு அங்கு வந்து சேர்ந்த திருத்தொண்டர் வாய்ப்பான மென்மையான சுவையுடையதாய்ப் பெற்ற அந்த உணவை, அத்தன்மையான பழத்துடனும் இனிதாய் உண்டு, மலர்கள் பொருந்திய மென்மையான கூந்தலையுடைய அம்மையாரின் அன்புமிக்க செயலுக்கு மகிழ்ந்து சென்றார்.

Koviloor Digital Library

1738 மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா
கியவணிகன்
உற்றபெரும் பகலின்கண் 'ஓங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் நீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாரும் கடப்பாட்டில் ஊட்டுவார்.

1739 இன்னடிசில் கறிகளுடன் எய்துமுறை இட்டதற்பின்
மன்னியசீர்க் கணவன்தான் மனையிடைமுன்
வைப்பித்த
நல்மதுர மாங்கனியல் இருந்ததனை நறுங்கூந்தல்
அன்னமனை யார்தாமுங் கொடுவந்து கலத்தளித்
தார்.

1740 மனைவியார் தாம்படைத்த மதுரமிக வாய்த்தகனி
தனை நுகர்ந்த இனியசுவை ஆராமைத் தார்
வணிகன்
இனையதொரு பழம்இன்னும் உளததனை இடுக
என
அனையது தாங்கொண்டுவர அணைவார் போல்
அங்கசன்றார்.

1741 அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக்கங் கென்
செய்வார்
மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும்
விடையவர்தாள்
தம்மனங்கொண் டுணர்தலுமே அவர் அருளால்
தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்தது அதிமதுரக் கனியொன்று.

1742 பற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலும் அயின்ற
தனில்
உற்றசுவை அமுதினுமேற் படவுளதா யிட இது
தான்
முற்றருமாங் கனியன்று மூவுலகில் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்கென்று பெய்வளையார் தமைக்
கேட்டான்.

Koviloor Digital Library

1738. அந்த அடியார் போன பின்பு அந்த இல்லத் தலைவனான பரமதத்தன் நண்பகலில் மிகப் பெரிய அந்த வீட்டில் வந்து சேர்ந்து அழகு பொருந்தக் குளித்து உட் புகுந்து உணவை விரும்பி உண்ண எண்ணினானாக. கற்புடைய புனிதவதியாரும் தம் மனைக் கடமை முறைப்படி தம் கணவனை உண்ணச் செய்ய எண்ணினார்.

1739. இனிய திருவமுதைக் கறிவகைகளுடன் பொருந்தும் முறையில் பரிமாறிய பின்பு நிலைபெற்ற சிறப் பினையுடைய கணவனான பரமதத்தன் தான் முன்பு இல்லத்திடை வைக்கும்படி அனுப்பிவைத்தபடி நல்ல சுவை பொருந்திய மாங்கனிகளில் எஞ்சி நின்ற ஒன்றை நறுமணம் கமழும் கூந்தலையுடைய அம்மையாரும் கொணர்ந்து இலையில் இட்டார்.

1740. மனைவியார் தாம் கொண்டு வந்து கலத்தில் இட்ட மிக்க இனிமையுடைய அந்த மாங்கனியை சுவைத்த தன் சுவையினால், ஆசை நிரம்பாததால், மாலை சூடிய வாணிகனான பரமதத்தன் "இது போன்று இன்னொரு பழம் உள்ளது! அதையும்இடுக!" என்றுசொல்ல, அதனைத் தாம் கொண்டு வரச் செல்பவர் போல் அங்கிருந்து நீங்கி னார்.

1741. அந்தப் பக்கத்தில் நின்று மனத்தளர்ச்சி அடை வார்; பின் அரிய கனி பெறும் வழிதான் வேறு என்ன செய்வார்? தம்மையும் மறந்து நினைந்து, துன்பம் அடையும் இடத்தில் வந்து உதவும் காளையை ஊர்தியாக உடைய சிவபெருமான் திருவடிகளைத தம் மனத்தில் முற்றும் பொருந்த வைத்து உணர்வில் பொருந்த வைத்தவுடனே அப்பெருமானின் திருவருளால் நாழும் கூந்தலையுடைய அம்மையாரின் கையில் மிக்க இனிய கனி ஒன்று வந்து பொருந்தியது.

1742. அவ்வாறு தம் கையில் வந்த பழத்தைக் கொண்டு வந்து மகிழ்வுடன் பரம தத்தனின் இலையில் இடவும், அதனை உண்டு அதில் பொருந்திய சுவையானது அமுதத்தைவிட மேலானதாக விளங்கவே, "இது முன்பு தந்த மாங்கனியன்று. மூன்று உலகங்களிலும் பெறுவதற்கு அரியது. இதைப் பெற்றது வேறு எங்கு?" எனப் பரமதத்தன் அம்மையாரைக் கேட்டனன்.

Koviloor Digital Library

1743 அவ்வுறைகேட் டலும்மடவார் அருளுடையார் அளித்தருளுஞ்
செவ்வியபேர் அருள்விளம்புந் திறமன் றென்றுரை செய்யார்
கைவருகற் புடைநெறியால் கணவன் உரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்.

1744 செய்தபடி சொல்லுவதே கடன் என்னுஞ் சீலத்தார்
மைதழையுங் கண்டர்சே வடிகள்மனத் துற வணங்கி
எய்தவருங் கனியளித்தார் யார் என்னுங் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார் புகுந்தபடி தனை மொழிந்தார்.

1745 ஈசனருள் எனக்கேட்ட இல்இறைவன் அது தெளியான்
வாசமலர்த் திருஅனையார் தமைநோக்கி மற்றிது தான்
தேசுடைய சடைப்பெருமான் திருவருளேல் இன்னமும்ஓர்
ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய் என மொழிந்தான்.

1746 பாங்ககன்று மனைவியார் பணியணிவார் தமைப் பரவி
ஈங்கிதளித் தருளீரேல் என்னுரை பொய்யாம் என்ன
மாங்கனியொன் றருளால்வந் தெய்துதலும் மற்றதனை
ஆங்கவன் கைக் கொடுத்தலுமே அதிசயித்து வாங்கினான்.

Koviloor Digital Library

1743. தாம் சிறிதும் எதிர்பாராத அந்த வினாவைக் கேட்கவும், அம்மையார், தம்மிடம் அருள் உடைய இறைவர் தமக்கு அருளிய அருளிப்பாடு மற்றவரிடம் சொல்லத் தக்க தன்று என்ற நிலைமையால் அதனை அவர் கூறவும் மாட்டாமல், கற்பு நெறியினால் கணவன் சொல்லைச் சோர்வுபடாது காவாது விடுதல் மெய்ந்நெறி அன்று என்ற நிலைமையினால் அதனைச் சொல்லுதலை விடவுமாட்டார், இவையிரண்டுக்கும் இடைப்பட்ட நடுக்கம் உடையவராகி,

1744. எங்ஙனமாயினும் நிகழ்ந்தவாறே சொல்லுவதே கடமையாம் என்னும் சீலத்தைத் துணிந்ததால், பெருமை யுடைய கழுத்தையுடைய சிவபெருமானின் திருவடிகளை மனத்துள் வைத்துக் கொண்டு 'சுவை பொருந்துமாறு கொணர்ந்த அந்தக் கனியை அளித்தவர் யாவர்?' என வினவிய தம் கணவனுக்குப் பூங்குழலையுடைய அம்மையார் அக்கனி வந்த வரலாற்றை உள்ளவாறே எடுத்துக் கூறினார்.

1745. 'கனியளித்தது ஈசன் அருளே' என்பதைக் கேட்ட இல்லத்துக்குரிய அவ்வாணிகன், அந்த உண்மையில் மனம் தெளியானாய் மணம் கமழும் மலரில் எழுந்தருளிய இலக்குமியைப் போன்ற அம்மையாரை நோக்கி, 'இந்தக் கனி ஒளியுடைய சடையுடைய சிவபெருமானின் திருவரு ளால் பெறப்பட்டது என்பது உண்மையாய் இருக்குமானால் இன்னமும் குற்றமற்ற இதைப் போன்ற கனி ஒன்றை அவர் அருளால் பெற்றுத் தருவாயாக!'' எனக் கூறினான்.

1746. அம்மையார் அங்கிருந்து அகன்று சென்று பாம்புகளை அணியும் சிவபெருமானைத் துதித்து, ''இப்போது இதை அளிக்காது போனால் நான் முன்னம் சொன்ன சொல் பொய்யாகும்!'' என்று வேண்டி னார். இறைவர் திருவருளால் ஒரு மாம்பழம் வந்து அவர் கையில் பொருந்தியது. பொருந்தவும் அவர் அக்கனியை அவ்விடத்தில் அந்த வாணிகன் கையிலே தரவும், அவன் வியந்து அதனை வாங்கினான்.

Koviloor Digital Library

1747 வணிகனும் தன்கைப் புக்க மாங்கனி பின்னைக் காணா
தனிவரும் பயமேற் கொள்ள உள்ளமுந் தடுமா றெய்தி
அணிகுழ லவரை வேறோர் அணங்கெனக் கருதி நீங்கும்
துணிவுகொண் டெவர்க்குஞ் சொல்லாள் தொடர் வின்றி ஒழுகு நாளில்.

1748 விடுவதே எண்ணமாக மேவிய முயற்சி செய்வான்
படிதிரைப் பரவைமீது படர் கலங்கொண்டு போகி
நெடுநிதி கொணர்வேன் என்ன நிரந்தபல் கிளைஞராகும்
வடுவில்சீர் வணிகர் மாக்கள் மரக்கலஞ் சமைப்பித் தார்கள்.

1749 கலஞ்சமைத் ததற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலையாம் நாய்கன் தானும்
நலந்தரு நாளில் ஏறி நளிதிரைக் கடல்மேற் போனான்.

1750 கடல்மிசை வங்கம் ஓட்டிக் கருதிய தேயந் தன்னில்
அடைவுறச்சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாட்கள் நீங்க மீண்டும்அக் கலத்தில் ஏறிப்
படர்புனற் கன்னி நாட்டோர் பட்டினம் மருங்கு சேர்ந்தான்.

Koviloor Digital Library

1747. அக்கனியை வாங்கிய அவ்வணிகனும் தன் கையில் புகுந்த மாங்கனியைப் பின் காணாதவன் ஆனான். தணியாத அச்சம் ஏற்படவே உள்ளம் தடுமாறி அழகிய கூந்தலையுடைய அம்மையாரை மனிதர் அல்லாத வேறு ஒரு தெய்வம் எனக் கருதி, அவரை விட்டு நீங்கிட வேண்டும் எனத் துணிவு கொண்டு, அதனை எவர்க்கும் சொல்லாதவனாய் அம்மையாரிடம் தொடர்பு இன்றி ஒழுகி வந்தான். அந்நாளில்,

1748. அம்மையாரை விட்டு நீங்குவதையே எண்ணமாகக் கொண்டு அதற்கு ஏற்ற முயற்சியைச் செய்வானாய் ''அலைகளையுடைய கடலின் மேல் செல்லும் கப்பலைக் கொண்டு சென்று பெருஞ்செல்வம் திரட்டிக் கொணர்வேன்!'' எனக் கூறவே, நெருங்கிய பல சுற்றத்தவரான குற்றம் அற்ற சிறப்புடைய வாணிக மாக்கள் அதன் பொருட்டு மரக்கலத்தைச் செய்வித்தனர்.

1749. மரக்கலத்தைச் செய்து முடித்துக் கொண்டு கப்பல் செலுத்துவதற்குரிய மீகாமன் முதலான தொழில் வல்லாளருடனே, சென்று வாணிகம் செய்யும் கடல் கடந்த நாடுகளில் விரும்பும் பண்டங்களுக்குப் பொருந்துவனவற்றை நிறைய ஏற்றிக் கொண்டு, கடல் தெய்வத்தை வழிபட்டு, அவ்வாணிகத் தலைவனான வணிகனும் நல்ல நாளில் பயணம் கொண்டு கலத்தில் ஏறிக் குளிர்ந்த அலைகளையுடைய கடலின் மீது பயணம் புறப்பட்டுப் போனான்.

1750. கடலின் மீது மரக்கலத்தைச் செலுத்தித் தான் எண்ணிய நாட்டில் சேரும்படி செலுத்திப் போய்ச் சேர்ந்து, ஆங்கு அளவில்லாத பலவளங்களையும் நிறைத்துக்கொண்டு, இவ்வாறு இடையில் சில நாட்கள் செல்ல மீண்டும் அந்த மரக்கலத்தில் ஏறிக் கொண்டு, படரும் புனையையுடைய பாண்டிய நாட்டில் ஒரு கடற்கரைப் பட்டினத்தின் பக்கத்தில் சார்ந்தான்.

Koviloor Digital Library

1751 அப்பதி தன்னில் ஏறி அலகில்பல் பொருள்கள ஆக்கும்
ஒப்பில்மா நிதியம் எல்லாம் ஒருவழிப் பெருக உய்த்து
மெய்ப்புகழ் விளங்கும் அவ்வூர் விரும்பவோர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத் திருமலி வதுவை செய்தான்.

1752 பெறலருந் திருவினாளைப் பெருமணம் புணர்ந்து முன்னை
அறலியல் நறுமென் கூந்தல் அணங்கனார் திறத்தில் அற்றம்
புறமொரு வெளியுறாமற் பொதிந்தசிந் தனையினோடு
முறைமையின் வாழாமை வைகி முகமலர்ந் தொழுகு நாளில்

1753 முருகலர் சோலை மூதூ ரதன் முதல் வணிகரோடும்
இருநிதிக் கிழவன் என்ன எய்திய திருவின் மிக்குப்
பொருகடற் கலங்கள் போக்கும் புகழினான் மனைவி தன்பால்
பெருகொளி விளக்குப்போலோர் பெண்கொடி அரிதிற் பெற்றான்.

1754 மடமகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான் முன்பு
உடனுறைவு அஞ்சி நீந்த ஒரு பெரு மனைவியாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுலம் என்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமங் காதல்செய் மகவை இட்டான்.

Koviloor Digital Library

1751. அந்த நகரத்தில் ஏறிச் சென்று தான் கொணர்ந்த அளவில்லாத பலவகைப் பொருள்களால் ஆன ஒப்பற்ற பெருஞ்செல்வங்களை யெல்லாம் ஒரு வழியாகச் சேர்த்து மேலும் மேலும் சேமித்து மெய் யான புகழையுடைய அந்த ஊரார் விருப்பும்படி ஒரு வணிகன் பெற்ற சொல்வதற்கரிய கன்னியைச் செல்வம் பெருக மணம் செய்து கொண்டான்.

1752. பெறுவதற்கரிய இலக்குமியைப் போன்ற அப் பெண்ணைப் பெருவிழாவுடன் திருமணம் செய்து, முன் மணம் செய்து கொண்ட கரிய மணலின் ஒழுங்கு போன்ற நறுமணம் கொண்ட மென்மையான கூந்தலையுடைய தெய்வம் போன்ற புனிதவதி அம்மையாரிடம் தான் செய்த வஞ்சனையைப் புறத்தில் சற்றும் வெளிப்படாதபடி மறைத்து வைத்துள்ள மனத்துடன், மற்ற எல்லாவற்றிலும் முறைமை வழுவாது வாழ்ந்து முகமலர்ச்சியுடன் இருந்து வரும் நாளில்,

1753. மணம் வீசுகின்ற பூஞ்சோலைகளை உடைய பழமையான அந்த ஊரில் முதன்மையுடைய வணிகர் களுடன் கூடிக் குபேரனைப் போல் பொருந்திய செல்வத் தால் மிகுந்து, அலைகள் பொருகின்ற கடலில் கப்பலைச் செலுத்தி, வாணிகம் செய்யும் புகழ் கொண்ட அவ்வணிகன் தன் மனைவியிடம் ஒளி பெருகும் விளக்கினைப் போல் ஒரு பெண் மகவை அரிதாகப் பெற்றான்.

1754. அவன், பெண் குழந்தையைப் பெற்று அதற்குப் பெயரிடும் மங்கலச் சடங்கு முதலியவற்றைச் செய்ய நினைத்து, தான் முன் உடன் வாழ்தலை அஞ்சி நீத்துவிட்டு வந்த ஒப்பற்ற பெருமனைவியாரை இல்லறத் தொடர்பு அற நினைந்து தெய்வத் தன்மை கொண்ட தொழுவதற்குரிய பொருளாவார் என்றே துணிந்து, உரிய சடங்குகளைச் செய்து, அவரது புனிதவதியார் என்ற பெயரைத் தன் பெண் குழந்தைக்கும் சூட்டினான்.

Koviloor Digital Library

'1755 இந்நிலை இவன்இங் கெய்தி இருந்தனன் இப்பால் நீடுங்
கன்னிமா மதில்சூழ் மாடக் காரைக்கால் வணிக னான
தன்னிகர் கடந்த செல்வத் தனதத்தன் மகளார் தாமும்
மன்னிய கற்பி னோடு மனையறம் புரிந்து வைக.

1756 விளைவளம் பெருக்க வங்க மீதுயோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர் மாநகர் தன்னில் மன்னி
அளவில்மா நிதியம்ஆக்கி அமர்ந்தினி திருந்தான் என்று
கிளரொளி மணிக்கொம் பன்னார் கிளைஞர்தாங் கேட்டா ரன்றே.

1757 அம்மொழி கேட்ட போதே அணங்கனார் சுற்றத் தாரும்
தம்முறு கிளைஞர்ப் போக்கி அவன்நிலை தாமும் கேட்டு
மம்மர்கொள் மனத்த ராகி மற்றவன் இருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையி னாளைக் கொண்டுபோய் விடுவ தென்றார்.

1758 மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில்அன் னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு என்ன ஏற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல்செய் சுற்றத் தாரும்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார்.

1759 சிலபகல் கடந்து சென்று செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன் மாநகர் மருங்குவந்து
குலமுதல் மனைவி யாரைக் கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னார்க்குச் சொல்லிமுன் செல்ல விட்டார்.

Koviloor Digital Library

1755. இத்தகைய நிலைமையுடன் பரமதத்தன் இருந்தான். இப்பக்கம் நீண்ட கெடுதல் இல்லாத பெரிய மதில் சூழ்ந்த மாடங்களையுடைய காரைக்காலின் வணிகனான தனக்கு ஒப்பில்லாத செல்வம் உடைய தனதத்தனின் மகளான புனிதவதியம்மையாரும் நிலை பெற்ற கற்புடன் இல்லறம் புரிந்து தங்க,

1756. பெருகும் ஒளியுடைய மணிகளையுடைய ஒரு கொம்பைப் போன்ற புனிதவதி அம்மையாரின் உறவினர், ''வாணிகத்தால் விளைக்கப்படும் வளங்களைப் பெருக்குதற் பொருட்டு மரக்கலத்தின் மீது ஏறிச் சென்ற பரமதத்தன், வளரும் புகழையுடைய பாண்டிய நாட்டில் ஒரு நகரில் தங்கி, அளவில் பெருஞ்செல்வங்களை ஆக்கி அங்கு நிலையாய் விரும்பி இனிதாய் இருந்தான்'' என்று தாங்கள் கேள்விப்பட்டனர்.

1757. அத்தகைய சொல்லைக் கேட்ட போதே அம்மையாருடைய உறவினர் நெருங்கிய கிளைஞர்களை விடுத்து, அவ்வணிகனின் நிலையைத் தாமும் கேட்டறிந்து கொண்டு, துன்பம் கொண்ட மனமுடையவர்களாகி, ''அவன் இருந்த இடத்தில் பருத்த வெம் முலையினராகிய புனிதவதியம்மையாரைக் கொண்டு போய் விடுவது கடமையாகும்'' என்று உரைத்தனர்.

1758. பெரிய அழகிய பல்லக்கில் மடப்பம் உடைய நடையுடைய மயில் போன்ற புனிதவதியம்மையாரைத் தாமரை இருக்கையில் வீற்றிருக்கும் தனித்திருவினார் போன்று ஏற்றிக் கொண்டு, அழகிய திரையைச் சூழ்வித்து அன்பு செய்கின்ற உறவினர்களும் இனிய மொழியையுடைய தோழியர் முதலான பெண்களும் சூழ்ந்து செல்ல நெடுந் தொலைவு பல நாட்கள் கடந்து போயினர்.

1759. பலநாடுகள்கடந்து சென்று,செந்தமிழ்நாடான பாண்டிய நாட்டை அடைந்து, மலரும் புகழையுடைய பரமதத்தன் இருந்த பட்டினத்தின் பக்கம் வந்து, குல முதல் மனைவியாரைக் கொண்டு வந்து தாம் அணைந்துள்ள செய்திகளை எல்லாம் தொலைவில்லாத சிறப்புடைய அவன் அறியுமாறு முன்னே கூறியனுப்பினர்.

Koviloor Digital Library

1760 வந்தவர் அணைந்த மாற்றங் கேட்டலும் வணிகன் தானும்
சிந்தையில் அச்சம் எய்திச் செழுமணம் பின்பு செய்த
பைந்தொடி தனையுங் கொண்டு பயந்தபெண்மகவி னோடு
முந்துறச் செல்வேன் என்று மொய்குழ லவர் பால் வந்தான்.

1761 தானும்அம் மனைவியோடும் தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற மனைவியார் அடியில் தாழ்ந்தே
யான்உம தருளால் வாழ்வேன் இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம் என்றுமுன் பணிந்து வீழ்ந்தான்.

1762 கணவர்தாம் வணங்கக் கண்ட காமர்பூங்கொடிய னாரும்
அணைவுறுஞ் சுற்றத் தார்பால் அச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி உன்திரு மனைவி தன்னை
மணமலி தாரி னாய் நீ வணங்குவ தென்கொல் என்றார்.

1763 மற்றவர் தம்மை நோக்கி மானுடம் இவர்தாம் அல்லர்
நற்பெருந் தெய்வ மாதல் நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப் பேரிட்டேன் ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின் என்றான்.

Koviloor Digital Library

1760. அங்ஙனம் வந்தவர் தம் நகரத்தைச் சேர்ந்த சொல்லைக் கேட்டதும், பரமதத்தனும் உள்ளத்தில் அச்சம் கொண்டு செழுமையுடைய திருமணத்தைப்பின் நாளில் செய்து கொண்ட மனைவியையும் பெற்றெடுத்த பெண் மகவுடன் கொண்டு, ''அவர்கள் இங்கே வருவதற்கு முன்பு நான் அங்கே செல்வேன்!'' என எண்ணி அம்மையாரிடம் வந்தான்.

1761. பரமதத்தன் என்ற வணிகனும் அந்த மனைவி யோடும் தளர்நடைப் பருவத்தில் உள்ள பெண் குழந்தை யோடும், மானின் இளம் பிணைபோல் நின்ற மனைவி யாரின் அடிகளில் வீழ்ந்து வணங்கி, ''நான் உம் அருளால் வாழ்வேன்! இந்த இளங் குழந்தைக்கு அப்பான்மை பற்றி உம் திருப்பெயரையே சூட்டியுள்ளேன்!'' எனக் கூறி, அவர் முன்பு மீண்டும் பணிந்து நிலம் பொருந்த வீழ்ந்தான்.

1762. தம் கணவர் தம்மை வணங்கியதைக் கண்ட அழகிய பூங்கொடி போன்ற புனிதவதி யம்மையாரும் பக்கத்தே பொருந்தி நின்ற சுற்றத்தாரிடம் அச்சத்துடன் ஒதுங்கி நின்றார். உணர்வு பொருந்தும் சுற்றத்தார் வெட்கம் அடைந்து, ''மணம் மிக்க மாலையை அணிந்த நீ உன் மனைவியை வணங்குவது ஏன்?'' என வினவினர்.

1763. பரமதத்தன் தன்னை நோக்கி அவ்வாறு வினவிய சுற்றத்தாரைப் பார்த்து, ''இவர் மனிதப் பிறவியுடையவர் அல்லர். நல்ல பெருந்தெய்வம் ஆவார். அவ்வாறு தெய்வமாதலை நான் அறிந்து அவரை நீங்கி வந்த பின்பு பெற்ற இம் மகவுக்கு அவர் பெயரைச் சூட்டினேன். ஆதலால் இவருடைய பொன்னடிகளை வணங்கினேன். அதுபோலவே நீங்களும் வணங்குங்கள்!'' என்று சொன்னான்.

Koviloor Digital Library

1764 என்றலுஞ் சுற்றத் தாரும் இதுஎன்கொல் என்று நின்றார்
மன்றலங் குழலி னாரும் வணிகன்வாய் மாற்றங் கேளாக்
கொன்றைவார் சடையி னார்தங் குரை கழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கில் மிக்க உணர்வுகொண் டுரைசெய் கின்றார்.

1765 ஈங்கிவன் குறித்த கொள்கை இது இனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியே னுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமர் தாள் பரவி நின்றார்.

1766 ஆனஅப் பொழுது மன்றுள் ஆடுவார் அருளினாலே
மேனெறி உணர்வு கூர வேண்டிற்றே பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை எல்லாம் உதறிஎற் புடம்பே யாக
வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவம் ஆனார்.

1767 மலர்மழை பொழிந்த தெங்கும் வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் தாமும்
குலவினர் கணங்கள் எல்லாங் குணலையிட்டன முன் நின்ற
தொலைவில்பல் சுற்றத் தாரும் தொழுதஞ்சி அகன்று போனார்.

Koviloor Digital Library

1764. என்று இங்ஙனம்பரமதத்தன்கூறவும், உறவினர் 'இஃது என்ன?' என்று ஒன்றும் தோன்றாமல் நின்றனர். மணம் தங்கிய கூந்தலையுடைய புனிதவதி அம்மையாரும், வணிகன் கூறிய சொல்லைக் கேட்டு, கொன்றை மலரைச் சூடிய நீண்ட சடையுடைய சிவபெருமானின் ஒலிக்கும் கழலை அணிந்த பொற்பாதங்களை வணங்கித் துதித்து மனம் ஒன்றிய அக நோக்கின் மிக்க உள் உணர்ச்சியை மேற்கொண்டு சொல்லலானார்.

1765. "இங்கு இவ் வணிகன் தம் மனத்தில் கொண்ட கொள்கை இது. இனிமேல் இவனுக்காகத் தாங்கிய வனப்பு மிக்க தசைப்பொதிந்த சுமையை இங்குக் கழித்துவிட்டு உன்னிடத்து அவ்வுலகத்தில் நின் அடிகளைப் போற்றும் பேய் வடிவத்தை அடியவளான எனக்கு, நற்பாங்கு கொள்ள அருள வேண்டும்" என்று வேண்டி இறைவரின் அடிகளைத் துதித்து நின்றார்.

1766. இங்ஙனம் புனிதவதி அம்மையார் வணங்கி நின்றபோது, அம்பலத்தில் ஆடுபவரின் அருளால், மேலான நெறிதரும் உணர்வு மிகுதலால், தாம் வேண்டிய அதையே பெறுவாராகி, உடம்பில் தசையும் அதனை இடமாகக் கொண்டு அடைந்த அழகுகளும் ஆகிய இவை எல்லாவற்றையும் உதறி, எலும்புக் கூடான உடலே தம் மேனியாகிட, மேல் உலகமும் மண் உலகமும் எல்லாம் வணங்கத்தக்க பேயான சிவகண நாதரின் வடிவம் உள்ளவர் ஆனார்.

1767. அப்போது எங்கும் மலர் மழை பொழிந்தது! தெய்வ துந்துபியின் முழக்கம் உலகத்தில் எல்லாம் நிறைந்து பெருகத் தேவர்களும் முனிவர்களும் கலந்து மகிழ்ந்தனர். பூதகணங்கள் எல்லாம் குணலைக் கூத்து ஆடின. முன்னால் நின்ற குறைவில்லாத பல சுற்றத்தாரும் தொழுது அஞ்சி நீங்கிச் சென்றனர்.

(குணலை — மகிழ்ச்சி மிகும்போது பாட்டுடன் ஆடும் ஆட்ட வகை.)

Koviloor Digital Library

1768 உற்பவித் தெழுந்த ஞானத் தொருமையின் உமை கோன் தன்னை
அற்புதத் திருவந் தாதி அப்பொழு தருளிச் செய்வார்
பொற்புடைச் செய்ய பாத புண்டரீ கங்கள் போற்றும்
நற்கணத் தினில் ஒன்றானேன் நான் என்று நயந்து பாடி.

1769 ஆய்ந்தசீர் இரட்டை மாலை அந்தாதி எடுத்துப் பாடி
ஏய்ந்தபே ருணர்வு பொங்க எயிலொரு மூன்றும் முன்னாள்
காய்ந்தவர் இருந்த வெள்ளிக் கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருள்முன் கூர வழிபடும் வழியால் வந்தார்.

1770 கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன் றோடு வார்கள்
கொண்டதோர் வேடத் தன்மை உள்ளவா கூறக் கேட்டே
அண்ட நாயகனார் என்னை அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்க ளுக்கியான் எவ்வுரு வாயென் என்பார்.

1771 வடதிசைத் தேசம் எல்லாம் மனத்தினுங் கடிது சென்று
தொடையவிழ் இதழி மாலைச் சூலபா ணியனார் மேவும்
படரொளிக் கைலை வெற்பின் பாங்கணைந் தாங்குக் காலின்
நடையினைத் தவிர்ந்து பார்மேல் தலையினால் நடந்து சென்றார்.

Koviloor Digital Library

1768. உள்ளே தோன்றி மேல் எழுந்த ஒருப்பட்ட ஞானத்தால் தையல் பாகரான சிவபெருமானைத் துதித்து, 'அற்புதத் திருவந்தாதி'யை அப்போதே பாடி அருளத் தொடங்கி, "அழகிய சிவந்த பாத தாமரைகளைப் போற்றுகின்ற நல்ல சிவ பூதங்களுள் நானும் ஒன்றாயி னேன்" என விரும்பியபடி பாடினார்.

1769. அதன் பின்பு சிறப்புடைய இரட்டை மணி மாலையையும் அந்தாதித் தொடையாக அமையப் பாடினார். பின்பு பொருந்திய பேருணர்வு மேலும் மேலும் பெருகி எழுதலால், மதில்களையுடைய மூன்று புரங்களை யும் முன்நாளில் எரித்த சிவபெருமான் வீற்றிருக்கின்ற பெரிய கயிலாய மலையைப் போய் அடையும் பொருட்டு வாய்ப்பான பேரருள் முன்னே கூடுதலால் வழிபடுகின்ற வழியால் வந்தார்.

(அம்மையார் 'அற்புதத் திருவந்தாதியை'யும் 'திரு விரட்டை மணிமாலையை'யும் பாடினார்.)

1770. அவர் விரும்பி ஏற்றுக்கொண்ட பேய் வடிவத்தைக் கண்டவர் வியப்படைந்து அச்சம் கொண்டு அங்கிருந்து நீங்கி ஓடலாயினர். அக்கோலத்தைத் தாம் கண்டவாறே உள்ளபடி சொல்லக் கேட்டு "எல்லாத் தேவர்களுக்கும் தலைவரான சிவபெருமான் என்னை அறிவாராகில் உண்மை அறியாநிலையில் எட்டுத் திக்கில் உள்ள ஐயறிவுடைய மாக்களுக்கு நான் எந்தக் கோலம் தாங்கினதாகக் காணப்பட்டாலும் அதனால் எனக்கு ஆவது என்?" என்று சொல்வாராய்.

1771. வடதிசையில் உள்ள நாடுகளை எல்லாம் மனத்தின் வேகத்தைவிட அதிக வேகமாய்க் கடந்து சென்று மாலை போல மலர்கின்ற கொன்றை மாலை சூடிய சூலம் ஏந்திய திருக்கையையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் பரவும் ஒளியுடைய திருக்கயிலை மலையின் பக்கத்தை அடைந்து அங்குக் காலால் நடந்து செல்வதை விட்டு நிலத்தின் மேல் தலையால் நடந்து சென்றார்.

Koviloor Digital Library

1772 தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி
மலையின் மேல் ஏறும் போது மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமய வல்லி திருக்கண்நோக் குற்ற தன்றே.

1773 அம்பிகை திருவுள் ளத்தின் அதிசயித்தருளித் தாழ்ந்து
தம்பெரு மானை நோக்கித் தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மானோர் எற்பின் யாக்கைஅன் பென்னே என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயகன் அருளிச் செய்வான்.

1774 வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே மற்றிப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள் என்று பின்றை
அருகுவந் தணைய நோக்கி அம்மையே என்னுஞ் செம்மை
ஒருமொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார்.

1775 அங்கணன் அம்மையே என்றருள் செய அப்பா என்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்து வீழ்ந்தெழுந் தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாருந்தாமெதிர் நோக்கி நம்பால்
இங்குவேண் டுவதென் என்ன இறைஞ்சிநின் றியம்பு கின்றார்.

Koviloor Digital Library

1772. தலையால் நடந்து போய்ச் சிவபெருமான் வீற்றிருக்கும் வெள்ளி மலையான கயிலைமலையில் ஏறும் போது, மகிழ்ச்சி மிகுதலால் அன்பானது மேல் மேல் அதிகரித்தலால் ஒரு கலையுடன் நின்ற இளமையுடைய பிறைச்சந்திரன் ஆன மாலையைச் சூடிய நெற்றிக் கண்ணரின் ஒரு பாகத்தில் அமர்ந்த வில்லைப் போன்ற நெற்றியையுடைய உமையம்மையாரின் திருக்கண் பார்வை அப்போதே பொருந்தியது.

1773. உமையம்மையார் தம் உள்ளத்தில் அதிசயம் கொண்டு விருப்பித் தம் தலைவரான சிவபெருமானைப் பார்த்து "தலையால் நடந்து இம்மலை மீது ஏறிவரும் ஓர் எலும்புக்கூடு பெற்ற அன்புதான் என்னே!" என வினவ, நம் பெருமாட்டியான உமையம்மையார்க்கு அருள் செய்வாராய்,

1774. எம் பெருமான், "உமையே! நீ சொல்லியவாறு வரும் இவள் நம்மைப் பேணும் அம்மையே ஆவாள். இந்தப் பேய் வடிவத்தை நம்மை வேண்டிப்பெற்றுக் கொண்டார்!" எனக் கூறியருளினார். அப்போது பக்கத்தில் அம்மையார் நெருங்கவே அவரைப் பார்த்து "நம் அம்மையே!" என்ற செம்மைதரும் ஒப்பில்லாத ஒரு சொல்லை உலகம் எல்லாம் உய்யும் பொருட்டு அருளினார்.

1775. சிவபெருமான் அம்மையே என்று அழைத்திட, 'அப்பா!' என்று ஆர்வத்துடன் சொல்லிக்கொண்டு தாமரை போன்ற பொன் திருப்பாதங்களில் பணிந்து விழுந்து எழுந்து நின்ற அவரைச் சங்கினால் ஆன வெண்மையான குழையை அணிந்த சிவபெருமானும் எதிர்நோக்கி "இங்கு நம்மிடம் விரும்பும் வரம் யாது?" என்று வினவினார். அம்மையார் மகிழ்ந்து நின்று சொல்லலானார்.

Koviloor Digital Library

1776 இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு
கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க
என்றார்.

1777 கூடுமா றருள் கொடுத்துக் குலவுதென் றிசையில்
என்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும் நீகண் டானந்தஞ் சேர்ந்தெப்
போதும்
பாடுவாய் நம்மை என்றான் பரவுவார் பற்றாய்
நின்றான்.

1778 அப்பரி சருளப் பெற்ற அம்மையுஞ் செம்மை வேத
மெய்ப்பொருளானார் தம்மை விடைகொண்டு
வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை அன்பால் திகழ்திரு வாலங்
காடாம்
நற்பதி தலையினா லே நடந்துபுக் கடைந்தார்
அன்றே.

1779 ஆலங்கா டதனில் அண்ட முறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண் பொழுது கொங்கை திரங்கி என்
றெடுத்துத் தங்கு
மூலங்காண் பரியார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப் போற்றும் நடம்போற்றி
நண்ணு நாளில்

Koviloor Digital Library

1776. எக்காலத்தும் கெடுதல் இல்லாத இன்ப அன்பை வேண்டிக் கொண்டு பின்னும் வேண்டுவாராய் "இனி நான் பிறவாதிருக்கும் வரம் வேண்டும். மீண்டும் பிறவி உளதாயின், உன்னை என்றும் மறவாதிருக்கும் வரம் வேண்டும். அறவா! நான் மேலும் வேண்டுவது தேவரீர் அருட்கூத்து ஆடும்போது மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டு உம் திருவடியின் கீழ் இருக்கும் பேறு ஆகும்!'' எனவுரைத்தார்.

1777. தம் திருவடியின் கீழ்க் கூடியிருக்கும் பேற்றை அருளித், துதிக்கின்றவர்களுக்குப் பற்றுக் கோடாய் நிற்கும் இறைவர், விளக்கமுடைய தெற்குத் திக்கில் எப்போதும் அழியாது வாழ்வு தரும் பழையனூர் என்னும் பழைய பதியில் நிலவும் திருவாலங்காட்டில் நாம் ஆடும் பெருங் கூத்தை நீ கண்டு எப்போதும் ஆனந்தத்துடன் கூடி நம்மைப் பாடிக் கொண்டிருப்பாயாக!'' என அருள் செய்தார்.

1778. அத்தகைய வரம் அருளப் பெற்றவரான அம்மையாரும் வேதங்களில் 'செம் பொருள்' என்றும் 'சத்து' என்றும் கூறப்படும் இறைவரிடம் விடைபெற்றுக் கொண்டு வணங்கிச் சென்று கூறுவதற்கரிய பேரன்பினால் விளங்கும் நல்ல திருத்தலத்தைத் தலையினால் நடந்து சென்று கோயிலுள் புகுந்து திருமுன்பை அடைந்தார்.

1779. மேல் அண்டங்களில் பொருந்தத் தம் திருவடியை மேலே உயர்த்தி ஆடும் கூத்தின் கோலத்தைக் காணப் பெற்ற அப்போது 'கொங்கை திரங்கி' எனத் தொடங்கி; தாம் தங்கும் மூலத்தைக் காண்பதற்கு அரிய வரானை இறைவரை நன்மையுடைய 'மூத்த திருப்பதிகத்தைப்' பாடி, அன்பு கொண்டு போற்றும் திருக்கூத்தைப் போற்றிக் கொண்டு தங்கியிருக்கும் நாளில்,

Koviloor Digital Library

1780 மட்டவிழ்கொன் றையினார் தம் திருக்கூத்து முன் வணங்கும்
இட்டமிகு பெருங்காதல் எழுந்தோங்க வியப் பெய்தி
எட்டிஇல வம்மீகை எனஎடுத்துத் திருப்பதிகம்
கொட்டமுழ வங்குழகன் ஆடும் எனப் பாடினார்.

1781 மடுத்தபுனல் வேணியினார் அம்மை என மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்தில் அவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றும்இருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா.

1782 ஆதியோ டந்த மில்லான் அருள்நடம் ஆடும் போது
கீதமுன் பாடும் அம்மை கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்க ளூரில் அப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த திருத்தொண்டு புகல லுற்றேன்.

காரைக்காலம்மையார் புராணம் முற்றிற்று

Koviloor Digital Library

1780. மணம் கமழ்கின்ற கொன்றை மலர் மாலையை யுடைய இறைவரின் திருக்கூத்தை நேரே வணங்கப் பெற்ற விருப்பம் மிகும் பேராசையானது மேலும் மேலும் பெருகி மிகுந்திட, வியப்பு அடைந்து, 'எட்டி இலவம்' எனத் தொடங்கி 'கொட்ட முழவம் குழகன் ஆடும்' என்ற முடிவினையுடைய திருப்பாட்டுக்களால் திருப்பதிகத்தைப் பாடினார்.

(மூத்த பதிகம்— அம்மையாரின் பதிகங்கள் இவ்வாறு வழங்குவது வழக்கம். 'கொங்கை திரங்கி' என்ற தொடக்கம் உடையது அம்மையார் பாடிய பதிகம்.)

1781. கங்கை நீரைத் தங்க வைத்த சடையையுடைய சிவபெருமான் 'அம்மையே!' என்று இனிய சொல்லைக் கூறியருளும் பேறு பெற்றவரை அண்டம் பொருந்த விளங்கிய அவரது திருக்கூத்தில் அவரது தூக்கியருள்கின்ற சேவடியின் கீழ் என்றும் நீங்காது எழுந்தருளியிருக்கப் பெற்றவரை பொருந்திய பெருஞ் சிறப்பைப் போற்றும் செயல் யாவருடைய அளவுள் படுவது? ஒருவர் அளவிலும் படாது! இது அற்புதம்!'

1782. முதலும் முடிவும் இல்லாத இறைவர் அருட் கூத்து ஆடும்போது கீதத்தை முன் பாடும் அம்மையாரின் ஒளியுடைய மலரடிகளைத் துதித்துக் கொண்டு, அத்துணை யினால், குளிர்ந்த் நீர் வளம் வாய்ந்த வயல்கள் சூழ்ந்த திங்களூரில் வாழ்ந்த அப்பூதியார் என்னும் ஞானமா முனிவர் செய்த திருத்தொண்டைக் கூறத் தொடங்கு கிறேன்,

காரைக்காலம்மையார் புராணம் முற்றிற்று.

Koviloor Digital Library

31. அப்பூதி அடிகள் நாயனார் புராணம்

1783 தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னாருக்கன்பர்
ஈண்டிய புகழின் பாலார் எல்லையில் தவத்தின் மிக்கார்
ஆண்ட சீர் அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
காண்டகு காதல் கூரக் கலந்தஅன் பினராய் உள்ளார்.

1784 களவுபொய் காமம்கோபம் முதலிய குற்றம் காய்ந் தார்
வளமிகு மனையின் வாழ்க்கை நிலையினார் மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமஞ் சாற்றும்அவ் வொழுக்க லாற்றார்.

1785 வடிவுதாங் காணா ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானார் அருளுங் கேட்டவர்நா மத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள்செய்து முறைமையால் வாழும் நாளில்.

Koviloor Digital Library

31. அப்பூதி அடிகள் நாயனார் புராணம்

1783. அப்பூதி அடிகள் பெருங்கூத்து இயற்றுவதில் வல்ல சிவபெருமானுக்கு அன்புடையவர்; பொருந்திய புகழை உடையவர். அளவில்லாத தவத்தால் மிக்கவர். சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட சிறப்பு மிக்க திருநாவுக்கரசு நாயனாரின் திருவடிகளையே சார்பாக அடைந்து, அவர் தம்மை அறியாத முன்பே காணத் தக்க காதல் மிக்கதால் உள்ளம் கலந்த அன்புடையவராய் விளங்கினார்.

1784. களவு, பொய், காமம், சினம் முதலான எல்லாக் குற்றங்களையும் ஒழித்தவர். வளமை வாய்ந்த இல்லற வாழ்க்கையில் நின்றவர். வீட்டில் உள்ள முகத்தல் நீட்டல் முதலான அளவுக் கருவிகளும் துலைக்கோல் முதலிய அளவைக் கருவிகளும் மைந்தரும் பசுக்களுடனே எருமைகளும் மற்றும் உள்ள எல்லாமும் திருநாவுக்கரசு நாயனாரின் திருப் பெயர் சூட்டி அழைக்கும் அந்த ஒழுக்க நெறியில் நின்றவர்.

1785. திருவடிவத்தைத் தானும் காணாத வராயினும் நிலைபெற்ற சிறப்பையுடைய திருநாவுக்கரசு நாயனாரின் திருத்தொண்டின் திறத்தையும் இறைவர் வைத்த திருவருளினையும் கேட்டு, அவரது திருப்பெயரால் வழங்கும் திருமடங்களும் தண்ணீர்ப் பந்தல்களும் முதலாக உள்ள முடிவில்லாத அறங்களைச் செய்து அந்நியதியில் அமைந்து வாழ்ந்து வரும் நாளில்,

Koviloor Digital Library

1786 பொருப்பரையன் மடப்பிடியி னுடன்புணருஞ் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவும் உடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினொடுந் திங்களூர் மருங்குவழி மேவுவார்.

1787 அளவில்சனஞ் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்.

1788 வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்குந் தாங்கண்டார்.

1789 இப்பந்தர் இப்பெயரிட் டிங்கமைத்தார் யாரென்றார்க்கு
அப்பந்தர் அறிந்தார்கள் ஆண்டஅர செனும்பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள சாலைகுளங்கா என்றார்.

Koviloor Digital Library

1786. மலையரசனின் மகளான இளம் பிடியைப் போன்ற உமையம்மையாருடன் அணையும் சிவக்களிற்றின் 'திருப்பழனம்' என்னும் தலத்தைப் பணிந்து திருப்பணி செய்யும் திருநாவுக்கரசர் தன்னை, உடைய இறைவரின் மற்றத் தலங்களையும் ஒன்றுபட்ட காதலால் வணங்கும் விருப்பினோடும் திங்களூரின் பக்கத்தே வருவாராய்,

1787. அளவற்ற மக்கள் சென்று கொண்டிருத்தலை ஒழியாத நல்ல வழியினது கரையில், அருள் உடைய பெரியோர்களின் உள்ளத்தைப் போல் குளிர்ந்த அருள் தன்மை உடையதாய், வேனிலின் வெம்மையைப் போக்கிக் குளமும் நிறைந்த நீரையுடைய தடமும் போல் குளிர்மை நீங்காது முழுதும் தங்கும் பரப்பைக் கொண்டதாய் வளம் வாய்ந்த நிழலைத் தரும் தண்ணீர்ப் பந்தலை வந்தடைந்தார்.

(குளம்— இயற்கையாய் அமைந்த நீர் வளம் உடையது. தடம்— அவ்வப்போது நீர் இறைக்கப்படும் பொய்கை.)

1788. அங்கு வந்து அடைந்த திருநாவுக்கரசு நாயனார், குளிர்ந்த—மென்மையாக வீசும் இளந்தென்றல் காற்றையுடைய குளிர்ந்த பந்தலுடனே அமுதமான தண்ணீரும் பார்த்துத், தம் உள்ளத்தில் வியப்புக் கொள்ள வருபவர், 'திருநாவுக்கரசு' என்னும் பெயரை அழகு பொருந்த எழுதியதை அங்கே எல்லாப் பக்கங்களிலும் தாம் கண்டார்.

1789. ''இந்தப் பந்தலுக்கு இந்தப் பெயரைச் சூட்டி அமைத்தவர் யார்?'' என வினவிய திருநாவுக்கரசு நாயனார்க்கு, அந்தப் பந்தலைப் பற்றி அறிந்த அங்கு இருந்தவர், ''ஆண்ட அரசு' என்னும் பெயரால் சொல்வதற்கரிய சிறப்புடைய அப்பூதி அடிகளார் என்பவர் செய்து அமைத்தார். தவறுதல் எதுவும் இன்றி இன்னும் இங்ஙனமே சாலை, குளம், சோலை என்னும் இவைகளும் எங்கும் உள்ளன!'' என்று இயம்பினர்.

Koviloor Digital Library

1790 என்றுரைக்க அரசுகேட் டிதற்கென்னோ கருத்
தென்று
நின்றவரை நோக்கி அவர் எவ்விடத்தார் என
வினவத்
துன்றியநூல் மார்பரும்இத் தொல்பதியார்
மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவுஞ் சேய்த் தன்று
நணித் தென்றார்.

1791 அங்ககன்று முனிவரும்போய் அப்பூதி அடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன் சார்வாக
உள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர் செழுங்கடையில்
வந்தடைந்தார்
நங்கள்பிரான் தமர்ஒருவர் எனக்கேட்டு
நண்ணினார்.

1792 கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
அடி பணியா முன்பணியும் அரசின் எதிர்
அந்தணனார்
முடிவில் தவஞ் செய்தேன்கொல் முன்பொழியுங்
கருணைபுரி
வடி வுடையீர் என்மனையில் வந்தருளிற் றென்
என்றார்.

1793 ஒருகுன்ற வில்லாரைத் திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றோம் வழிக்கரையில் நீர்வைத்த
வாய்ந்தவளந்
தருகின்ற நிழல்தண்ணீர்ப் பந்தருங்கண்
டத்தகைமை
புரிகின்ற அறம்பிறவுங் கேட்டணைந்தோம் எனப்
புகல்வார்.

Koviloor Digital Library

1790. என அவர்கள் சொல்ல, நாவுக்கரசர் அதனைக் கேட்டு, 'இதற்கு என்ன கருத்து!' எனத் தமக்குள் வினவிக் கொண்டு, அங்கிருந்தவர்களைப் பார்த்து, "அப்பூதி அடிகளார் எங்கு இருக்கின்றார்?" என்று வினவ, "பூணூல் பொருந்திய மார்பையுடைய அவரும் இந்தப் பழைய பதியினர். இப்போதுதான் அவர் தம் மனைக்குச் சென்றார் அவரது மனையும் நெடுந் தொலைவில் உள்ளதன்று; பக்கத்தில் தான் உள்ளது!" என்று அவர்கள் கூறினர்.

1791. அந்த இடத்தினின்று நீங்கி முனிவரான நாவுக்கரசரும் போய், அப்பூதி அடிகளார் வாழ்கின்ற இல்லத்தின் முன் கடை வாயிலை அடைந்தார். வீட்டுள் இருந்த திங்களூர் வேதியரான அப்பூதி அடிகள் செழிப்பான தம் மனையின் முன், வாசலில், தம் சிவபெருமானின் அடியவர் வந்துள்ளார் எனக் கூறக் கேட்டு, மனையின் உள் இருந்து முன் வாயிலுக்கு வந்து சேர்ந்தார்.

1792. அப்பூதி அடிகள் விரைவாய் வந்து திருநாவுக்கரசரின் திருவடிகளை வணங்குவதற்கு முன்பே தாம் வணங்கும் திருநாவுக்கரசர் முன்பு மறையவரான அப்பூதி அடிகளார், "முன்னே பொழிகின்ற அருள் செய்யும் திருவடிவை உடைய பெரியீர்! முடிவற்ற தவத்தை நான் முன்னம் செய்திருந்தேன் போலும்! அதனால் என் மனையில் தாங்கள் எழுந்தருளினீர்! தங்கள் வருகை என்னே அதிசயம்!" என்று வினவினர்.

1793. "ஒப்பில்லாத பெரிய மேரு மலையை வில்லாக உடைய சிவபெருமானைத் திருப்பழனம் என்னும் தலத்தில் வணங்கிக் கொண்டு வருகின்றோம். வரும் வழியின் கரையிலே நீவிர் அமைத்திருக்கின்ற வாய்ப்புடைய வளத்தைத் தருகின்ற நிழல் பொருந்திய தண்ணீர்ப் பந்தரைக் கண்டும் அத்தன்மையால் செய்கின்ற அறங்கள் பிறவற்றையும் கேட்டும் இங்கு வந்து சேர்ந்தோம்!" எனப் புகன்றவர் மேலும்,

Koviloor Digital Library

1794 ஆறணியுங் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில் நும்பேர்
எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்
என்கொல்
கூறும் என எதிர்மொழிந்தார் கோதில் மொழிக்
கொற்றவனார்.

1795 நின்றமறை யோர் கேளா நிலையழிந்த சிந்தையராய்
நன்றருளிச் செய்திலீர் நாணில் அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூட்சி திருத்தொண்டின் உறைப்
பால
வென்றவர்தந் திருப்பேரோ வேறொருபேர் என
வெகுள்வார்.

1796 நம்மையுடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்
டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ருந்
தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயர்எழுத
வெம்மையொழி யான்கேட்க விளம்பினீர் என
விளம்பி.

1797 பொங்குகடற் கல்மிதப்பில் போந்தேறும் அவர்
பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்கலமாந் திருவேடத் துடனின்றிவ் வகை
மொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்பும் என இயம்பி
னார்.

1798 திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்
அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி
னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள
அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்
என்றார்.

Koviloor Digital Library

1794. ''கங்கையை அணிந்த சடையையுடைய இறைவரின் அடியார்களுக்காக நீவிர் அமைத்த முடிவற்ற பெருமை கொண்ட தண்ணீர்ப் பந்தலில் உம் பெயரை எழுதாமல் வேறு ஒரு பெயரை முன் எழுத வேண்டிய காரணம் என்ன? கூறுவீராக!'' எனக் குற்றம் அற்ற சொல்லாக எதிர் மொழிந்தார்.

1795. அங்கே நின்ற அப்பூதி அடிகளார் நாவுக்கரசர் உரைத்ததைக் கேட்டு, உள்ளத்தின் நிலை அழிந்தவராகி, ''நீவிர் நல்ல மொழிகளைக் கூறவில்லை! நாணம் இல்லாத சமணர்களான சண்டாளர்களுடன் சேர்ந்த மன்னன் செய்த சூழ்ச்சிகளை எல்லாம் வென்ற திருத்தொண்டின் உறைப்பையே துணையாகக் கொண்டு வென்ற அவரது திருப்பெயரோ வேறொரு பேர் எனக் கூறத்தக்கது?'' எனச் சினம் கொள்வாராகி,

1796. ''நம்மை உடையவரான சிவபெருமானின் திருவடிகளின் கீழ்ச் செய்யும் திருத் தொண்டினால் இம்மையிலும் நாம் உறுதியைப் பெறுவது என்று எம்மைப் போன்றவரும் தெளியுமாறு செம்மை மேற்கொண்ட திருநாவுக்கரசரின் திருப்பெயரை நான் எழுதிடவும் கொடிய சொற்களை யான் கேட்கும்படி கூறினீர்!'' எனக் கூறி,

1797. ''பொங்கும் கடலைக், கல்லினையே மிதவையாகக் கொண்டு கரையேறிய அவர் பெருமையைச் சிவபெருமானது புவனத்தில் அறியாதவர் எவரேனும் உள்ளனரோ? மங்கலமான திருக்கோலத்துடன் நின்றும் இவ்வாறு உரைத்தீர்! நீவிர் எவ்விடத்தில் உள்ளவர்? நீர் தாம் யார்? சொல்லுக!'' என இயம்பினர்.

1798. திருவுடைய மறையவரான அப்பூதி அடிகளார் அவ்வாறு உரைக்கக் கேட்டு அவர் பெருமையை அறிந்து நாவுக்கரசர் விடை சொல்வாராய், ''மற்றச் சமயத் துறையினின்று ஏறும் பொருட்டு அருள் செய்து, பெருஞ்சூலை நோயை அளித்து இறைவர் ஆட்கொள்ள அடைந்து உய்தி பெற்ற தெளிவு கொண்ட உணர்வில்லாத சிறுமையினை உடையேன் யான்!'' எனக் கூறினார்.

Koviloor Digital Library

1799 அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாங்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுளகம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகமலம் பூண்டார்.

1800 மற்றவரை எதிர்வணங்கி வாகீசர் எடுத்தருள
அற்றவர்கள் அருநிதியம் பெற்றார்போல் அருமறையோர்
முற்றவுளங் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன் சூழ ஓடினார் பாடினார்.

1801 மூண்டபெரு மகிழ்ச்சியினால் முன்செய்வ தறியாதே
ஈண்டமனை அகத்தெய்தி இல்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்டஅர செழுந்தருளும் ஓகையுரைத் தார்வமுறப்
பூண்டபெருஞ் சுற்றமெலாங் கொடுமீளப் புறப்பட்டார்.

1802 மனைவியா ருடன்மக்கள் மற்றுள்ள சுற்றத்தோர்
அனைவரையுங் கொண்டிறைஞ்சி ஆராத காதலுடன்
முனைவரை உள் ளெழுந்தருளு வித்தவர்தாள் முன் விளக்கும்
புனைமலர் நீர் தங்கள்மேல் தெளித்துள்ளும் பூரித்தார்.

1803 ஆசனத்தில் பூசனைகள் அமர்வித்து விருப்பினுடன்
வாசநிறை திருநீற்றுக் காப்பேந்தி மனந்தழைப்பத்
தேசம்உய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்
நேசம்உற விண்ணப்பஞ் செயஅவரும் அதுநேர்ந்தார்.

Koviloor Digital Library

1799. இவ்வாறு நாவுக்கரசர் அப்பூதி அடிகள் அறிய உரைத்தருளிச் செய்யவே, உண்மையை அறிந்து கொண்ட அப்பூதி அடிகள், கைம் மலர்கள் தாமே தலை மீது குவிந்து கொள்ளவும் கண்களினின்றும் நீர் அருவி போல் பாய்ந்து வழியவும், சொல் தடுமாறிடவும், உடல் முழுவதும் மயிர்ப் புளகத்தை அடைந்து நிலத்தில் உடல் பொருந்த விழுந்து அவருடைய திருவடித் தாமரைகளைத் தலையில் பொருந்தப் பூண்டார்.

1800. அங்ஙனம் விழுந்து திருவடி பூண்ட அப்பூதி அடிகளைத் திருநாவுக்கரசர் தாமும் எதிர் வணங்கி, அவரை எடுத்தருளவே அரிய வேதியரான அப்பூதியார் வறியவரான வர் தேடிய பெரிய நிதியத்தைப் பெற்றதைப் போல உள்ளம் முழுதும் பெருமகிழ்ச்சி கூர்ந்து அவர் முன்பு நின்று ஆனந்தக் கூத்தாடி மிக்க விருப்பத்துடன் அவரைச் சூழ்ந்து ஓடினார்; பாடினார்.

1801. பெரிய மகிழ்ச்சி மூண்டதால் முன்னர்ச் செய்யக் கூடியது இது என்பதையும் அறியாதவராய், இல்லத்துக்குள் விரைந்து போய், மனைவியாருக்கும் மக்களுக்கும் வீட்டில் உள்ள மற்றச் சுற்றத்தார்க்கும் ஆண்ட அரசுகள் வந்திருக்கும் செய்தியை உரைத்து, ஆசை மிக அன்பு பூண்ட அப்பெருஞ் சுற்றத்தார் எல்லாரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு வெளியில் வந்து,

1802. மனைவியாருடன் மக்களும் மற்றும் உள்ள உறவினர்களும் முதலான எல்லாரையும் கொண்டு வந்து வணங்கிக் குறையாத ஆசையுடன் தலைவரான நாவுக் கரசரை முன்னே எழுந்தருளச் செய்து, அவருடைய திருவடி களை விளக்கும் மலர்கள் இட்ட புனித நீரைத் தங்கள் தலைமீது தெளித்துக் கொண்டு அதனை உள்ளேயும் நிறைத் தார் (பருகினார்).

1803. தக்க இருக்கையில் நாவுக்கரசரை அமரும்படி செய்து, செய்ய வேண்டிய அருச்சனை தூப தீபம் முதலிய வற்றை விதிப்படி விரும்பிச் செய்து, மிக்க விருப்புடனே மணம் உடைய திருநீற்றுக் காப்பு நிறைந்த திருநீற்று மடக்கை அவர்க்கு உபசாரமாக, அவர்க்கு முன் ஏந்தி, மனம் தழைத்து ஓங்க, உலகம் உய்யுமாறு திருவவதாரம் செய்த நாயனாரைத் திருவமுது செய்விக்கும் அன்புமிக அவரிடம் வேண்டிக் கொண்டனர். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

Koviloor Digital Library

1804 செய்தவர் இசைந்த போது திருமனை யாரை நோக்கி
எய்திய பேறு நம்பால் இருந்தவா றென்னே என்று
மைதிகழ் மிடற்றி னான் றன் அருளினால் வந்த தென்றே
உய்தும் என்றுவந்து கொண்டு திருவமு தாக்கல் உற்றார்.

1805 தூயநற் கறிக ளான அறுவகைச் சுவையாய் ஆக்கி
ஆலின் னமுதும் ஆக்கி அமுதுசெய் தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக்கொண்டு வாஎன விரைந்து விட்டார்.

1806 நல்லதாய் தந்தை ஏவ நான்இது செயப்பெற் றேன் என்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை யீரும் பொழுதினில் வாளரா ஒன்று
அல்லல்உற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே.

1807 கையினிற் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
பையரா வுதறி வீழ்த்துப் பதைப்புடன் பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தால் எய்திக்
கொய்தஇக் குருத்தைச் சென்று கொடுப்பான் என்றோடி வந்தேன்

Koviloor Digital Library

1804. தவத்தில் பெரிய திருநாவுக்கரசர் உணவு கொள்ளச் சம்மதித்தபோது, அப்பூதி அடிகள் தன் மனைவி யாரைப் பார்த்து, ''நம்மிடத்துப் பொருந்திய பேறு நம்மிடம் இருந்தவாறுதான் என்னே!'' எனச் சொல்லி மேலும் கருமையுடைய திருக்கண்டத்தையுடைய சிவபெரு மானின் திருவருளால் இது வந்தது என்று போற்றி 'நாம் உய்வோம்!' என்று தமக்குள் மகிழ்ந்து எண்ணிக் கொண்டு திருவமுது அமைக்கத் தொடங்கினார்.

1805. தூய்மையான நல்ல கறி வகைகள் ஆறு சுவை களும் பொருந்துமாறு சமைத்து, இனியதான அமுதையும் ஆக்கி, தம் மைந்தருள் மூத்த திருநாவுக்கரசைப் பார்த்து, ''வாழையின் நல்ல ஒரு குருத்தை அரிந்து கொண்டு வா!'' என்று விரைவுபடுத்தி அனுப்பி வைத்தார்.

1806. ''நல்ல தாயும் தந்தையும் என்ற இருவரும் பணிக்க, அதன்படி நான் இந்தப் பணியைச் செய்யும் பேற்றைப் பெற்றேன்!'' என்று மூத்த திருநாவுக்கரசு உள்ளம் மகிழ்ந்து, மிகவும் விரைந்து போய்த், தோட்டத் திற்குள் புகுந்து, பெரிய வாழையின் செழித்த அழகிய குருத்தை அரியும்போது ஒளியுடைய பாம்பு ஒன்று துன்பப் பட்டு மயங்கி விழும்படி அவனது உள்ளங் கையில் தீண்டியது.

1807. கையில் தீண்டி அக் கையையே சுற்றிக் கொண்டு கண்களில் தீயை வீசுகின்ற நச்சுப் பையையுடைய அந்தப் பாம்பைக், கையை உதறி வீழ்த்திவிட்டு, மனப் பதைப்புடனே ''பாம்பு தீண்டியதால் உண்டான கொடிய வேகத்தால் நான் கீழே விழுவதற்கு முன்பே மிக வேகமாய்ச் சென்று அரிந்த இந்த வாழைக் குருத்தைத் தருவேன்'' என்று தீர்மானித்து ஓடி வந்தான்.

Koviloor Digital Library

1808 பொருந்திய விடவே கத்திற் போதுவான் வேகம் முந்த
வருந்தியே அணையும் போழ்து மாசுணம் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவர் அமுதுசெய்யத் தாழ்க்கயான் அறையேன் என்று
திருந்திய கருத்தினோடுஞ் செழுமனை சென்று புக்கான்.

1809 எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படி மேல் வீழ்ந்தான்.

1810 தளர்ந்துவீழ் மகனைக்கண்டு தாயாருந் தந்தை யாரும்
உளப்பதைத் துற்றுநோக்கி உதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய்வதற் குச் சூழ்வார்.

1811 பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே
அறஇது தெரியா வண்ணம் அமுதுசெய்விப்போம் என்று
விறலுடைத் தொண்ட னார்பால் விருப்பொடு விரைந்து வந்தார்

Koviloor Digital Library

'1808. சேர்ந்த விடத்தின் வேகத்தைவிட முன் கூறிய வாறு ஓடிச் சென்ற அவனது வேகம் முந்தும்படி வருத்தத் துடன் சேரும்போது, ''பாம்பு தீண்டியதை அருந்தவரான திருநாவுக்கரசர் அமுது செய்வதற்கு இடையூறாக ஆகும்படி நான் இதனை யாரிடமும் சொல்ல மாட்டேன்'' என்று மனத்தில் எண்ணித் திருத்தமுற்ற கருத்தினோடு செழிப் புடைய இல்லத்திற்குள் புகுந்தனனாய்,

'1809 அழிக்கும் நஞ்சானது முறையே மேல் ஏறித் தலைக் கொண்ட ஏழாம் வேகத்தை அடைந்த நிலையைப் புறத் தோற்றத்தினும் தெரியும்படி பற்களும் கண்களும் மேனியும் கருகித் தீய்ந்து, விரிவாகப் பேசும் சொற்கள் தடுமாறி உயிர் விடும் நிலை ஏற்படும் நிலை வரவும், அதை விடாமல் தாங்கிக் கொண்டு மயங்கி வீழ்கின்ற மகன் உணவு உண்ணுவதற்கான இலையான வாழைக் குருத்தைத் தாயாரிடம் வைத்து நிலத்தில் விழுந்தான்.

'1810, தாயாரும் தந்தையாரும் மயங்கி விழுகின்ற மகனைப் பார்த்து, உள்ளம் பதைப்பை அடைந்து காரணத்தை அறியக் கூர்ந்து நோக்கி, இரத்தம் வடிந்த வடிவத்தையும் மேனியில் விளங்கிய மற்றக் குறிகளையும் கண்டு 'நஞ்சினால் இறந்தான்' எனத் துணிந்து, சற்றும் மன நடுக்கம் இல்லாமல் அடியவர் அமுது செய்வதற்கேற்ற உபாயத்தை ஆராய்பவராய்,

1811. (அவர்கள் இருவரும்) பெறுவதற்கரிய மைந்த னைப் பாயுள் வைத்து மூடி, மனையின் வெளி முற்றத்தில் ஒரு பக்கத்தில் மறைத்து வைத்து, ''இது சிறிதும் தெரியாத படி அவரை நாம் அமுது செய்விப்போமாக!'' எனத் துணிந்து, உறுதி கொண்டு, ஆற்றல் உடைய திருநாவுக் கரசரை நோக்கி விருப்போடும் விரைந்து வந்தனர்.

Koviloor Digital Library

1812 கடிதுவந் தமுது செய்யக் காலந்தாழ்க் கின்ற
தென்றே
அடிசிலும் கறியும் எல்லாம் அழகுற அணைய
வைத்துப்
படியில்சீர்த் தொண்டனார்முன் பணிந்தெழுந்து
அமுதுசெய்தெங்
குடிமுழு துய்யக் கொள்வீர் என்றவர் கூறக்கேட்டு.

1813 அருந்தவர் எழுந்து செய்ய அடியிணை விளக்கி
வேறோர்
திருந்தும்ஆ சனத்தில் ஏறிப் பரிகலந் திருத்து
முன்னர்
இருந்துவெண் ணீறுசாத்தி இயல்புடை இருவ
ருக்கும்
பொருந்திய நீறுநல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும்
போழ்தில்.

1814 ஆதிநான் மறைநூல் வாய்மை அப்பூதி யாரை
நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையுங் காட்டும்
முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதுமொன்றுரையார் இப்போ திங்கவன் உதவான்
என்றார்.

1815 அவ்வுரை கேட்ட போதே அங்கணர் அருளால்
அன்பர்
செவ்விய திருவுள் ளத்தோர் தடுமாற்றஞ் சேர
நோக்கி
இவ்வுரை பொறாதென் உள்ளம் என்செய்தான்
இதற்கொன் றுண்டால்
மெய்விரித் துரையும் என்ன விளம்புவார்
விதிர்ப்புற்றஞ்சி.

Koviloor Digital Library

1812. விரைவாய் வந்து, 'உணவு உண்ணக் காலம் தாழ்க்கின்றது' என எண்ணிக் கொண்டு, அடிசிலும் கறிகளும் முதலான எல்லாவற்றையும் அழகு பெற ஒழுங்காய்ப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அதன்பின், ஒப்பில்லாத சிறப்பையுடைய தொண்டர் பெருமான் திருமுன்பு விழுந்து பணிந்து எழுந்து நின்று, "இங்கு அமுது செய்து குடி முழுதும் உய்யுமாறு செய்தருளல் வேண்டும்." என்று அவர்கள் உரைத்தனர். அதை நாவுக்கரசர் கேட்டு,

1813. அரிய தவத்தவரான அப்பர் செம்மையான தம் அடிகளை விளக்கிக் கொண்டு வேறே ஒரு திருந்திய இருக்கையில் அமர்ந்து, அவர்கள் உண்ணும் இலையைத் திருத்தி இடுவதற்கு முன்னம், அந்த ஆசனத்தில் அமர்ந்து தாம் வெண்ணீற்றை அணிந்து கொண்டு இயல்பின் நின்ற அப்பூதியாருக்கும் அவருடைய மனைவியாருக்கும் பொருந்திய திருநீற்றை அளித்து, மைந்தருக்கும் அத்திரு நீற்றை அளிக்கும்போது

1814. பழைய நான்மறைகளிலும் நூல்களிலும் பயின்ற வாய்மையுடைய ஒழுக்கமுடைய அப்பூதி அடிகளைப் பார்த்து அன்பால் "இவர்க்கு மூத்த பிள்ளையையும் முன்னே மேதகு வெண்ணீறு சாத்துதற்குக் காட்டுக!" என்று உரைத்தார். நிகழ்ந்த செயல் ஒன்றையும் சிறிதும் வெளிப்பட உரையாதவராய் "இப்போது இங்கு அவன் உதவான்?" என்று உரைத்தனர்.

1815. அத்தகைய சொல்லைக் கேட்ட அளவில் அன்பரான நாவுக்கரசரின் திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் வந்து சேர, அதனை நோக்கி, "இந்தச் சொல்லை என் உள்ளம் பொறுத்துக் கொள்ளாது! அவன் என்ன செய்தனன்? இதற்கு உள்ளுறை ஒன்று உண்டு. உண்மையைக் கூறுக!" என்று அரசு உரைக்கவும், அவர்கள் உடல் நடுக்கம் உற்றனர். உற்று,

Koviloor Digital Library

1816 பெரியவர் அமுது செய்யும் பேறிதுபி ழைக்க என்னோ
வருவது என்றுரையா ரேனும் மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டுஞ் சீலத்தால் சிந்தை நொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தார் அன்றே.

1817 நாவினுக் கரசர்கேளா நன்றுநீர் புரிந்த வண்ணம்
யாவர்இத் தன்மை செய்தார் என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்.

1818 தீவிடம் நீங்க உய்ந்த திருமறை யவர்தஞ் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவர்ஆட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ றளித்தார் அன்றே.

1819 பிரிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்றஅப் பயந்தார் தாங்கள்
அறிவரும் பெருமை அன்பர் அமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தான் இவன் என்று சிந்தை நொந்தார்.

1820 ஆங்கவர் வாட்டந் தன்னை அறிந்துசொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி அமுதுசெய் தருள வுற்ற
பாங்கினில் இருப்ப முந்நூல் பயில்மணி மா..பர் தாமும்
தாங்கிய மகிழ்ச்சி யோடுந் தகுவன சமைத்துச் சார்வார்.

Koviloor Digital Library

1816. 'பெரியவரான நாவுக்கரசர் உணவு உண்டருளும் இப்பெரும் பேறு கிடைக்காது பிழைக்குமாறு இவ்வாறு வருவதும் என்னோ!' என்று எண்ணி உரையார் ஆயினும், பெருந்தவத்தவரான அவர் வினவும்போது வாய்மையை உள்ளவாறு தெரியும்படியாகச் சொல்லிவிட வேண்டும் என்ற சீலத்தால் உள்ளம் உடைந்து வருந்தித் துயரத்துடன் வணங்கி மகனுக்கு நேரிட்டதனை உள்ளவாறு அப்போதே உரைத்தனர்.

1817. அவர்கள் உரைத்ததைக் கேட்ட நாவுக்கரசர், 'நீங்கள் கூறியவண்ணம் நன்றாய் உள்ளது! இவ்வாறு செய்தவர் உலகத்தில் யார் இருக்கின்றார்?'' எனக் கூறி, முன்னாக எழுந்து சென்று, உயிர் நீங்கிய அந்த மைந்தனின் பிணத்தைப் பெருமையுடையவரான சிவபெருமான அருள் செய்யுமாறு பாவின் இசையுடைய திருப்பதிகத்தைப் பாடிப் பாம்பின விடத்தைப் போக்கியருளினார்.

1818. தீயைப் போன்ற நஞ்சு இங்ஙனம் நீக்கப் பெற்று உய்தி அடைந்த அந்தணரான அப்பூதியாரின் மைந்தனும், பொருந்திய உறக்கத்தினின்றும் நீங்கி விரைவாய் எழுபவனைப் போலக் காளைக் கொடியை உயர்த்திய சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட நாவுக்கரசரின் செம்மையுடைய மலர் போன்ற திருவடிகளை வணங்க, அதைப் பார்த்து நாவுக்கரசர் புனிதமான திருநீற்றை அவனுக்கு அளித்தார்.

1819. பிரிந்த உயிரைத் திரும்பவும் பெற்ற பிள்ளையைக் காண்பவர் எல்லாம் தெய்வத் திருத்தொண்டின் செம்மையான நெறிச்சிறப்பைப் போற்றி வாழ்வை அடைந்தனர். அங்கு நின்ற அப்பெற்றோர்கள், ''அறிதற்கு அரிய பெருமையுடைய அன்பர் திருவமுது செய்வதற்கு இவன் சிறிது இடையூறு செய்தான்!'' என்று உள்ளம் நொந்தனர்.

1820. அங்ஙனம் அவர்களின் மனவாட்டத்தை அறிந்து, அதனால், திருநாவுக்கரசர் அவர்களுடன் ஓங்கிய இல்லத்தினை அடைந்து, உண்டருளும் பாங்குடன் இருக்க, முப்புரிநூல் மார்பையுடைய அப்பூதியடிகளும் மேற்கொண்ட பெரு மகிழ்ச்சியுடன், அதற்குச் செய்யத் தக்கவற்றையெல்லாம் அமைத்துச் சார்வார் ஆகி,

Koviloor Digital Library

1821 புகழ்ந்தகோ மயத்து நீரால் பூமியைப் பொலிய
நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத்
தீபம்ஏற்றி
நிகழ்ந்தஅக் கதலிநீண்டகுருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற
மரபின்வைத்தார்.

1822 திருந்திய வாச நன்னீர் அளித்திடத் திருக்கை
நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப் பிள்ளைக
ளுடனே நோக்கி
அரும்புதல் வர்களும் நீரும் அமுதுசெய்வீர்இங்
கென்ன
விரும்பிய உள்ளத் தோடு மேலவர் ஏவல்
செய்வார்.

1823 மைந்தரும் மறையோர் தாமும் மருங்கிருந் தமுது
செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனார்
அடியாரோடும்
அந்தமி ழாளி யார்அங் கமுதுசெய் தருளி னாரே.

1824 மாதவ மறையோர் செல்வ மனையிடை அமுது
செய்து
காதல்நண் பளித்துப் பன்னாள் கலந்துடன்
இருந்தபின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதஞ் சேர்ந்து நற்றமிழ் பதிகஞ்
செய்வார்.

Koviloor Digital Library

1821. புகழும் கோமயம் கலந்த நீரால் நிலத்தை விளங்க மெழுகி, விளங்கும் வெண் சுண்ணத்தையும் கோலம் பெற இட்டு, சிறப்பான திருவிளக்கை ஏற்றிச் சரித நிகழ்ச்சிக்குக் கருவியாக இருந்த அந்த வாழையின் நீண்ட குருத்தை விரித்து அதனை நீரில் கழுவி, அரிந்த பக்கம் வலப் பக்கமாய் இருக்குமாறு அதை முறைமையாய் இட்டவராகி,

1822. திருத்தமான மணமுடைய நல்ல நீரைக் கொடுக்கத் திருக்கரத்தைக் கழுவும் பெருந்தவரான திருநாவுக்கரசர், அப்பூதி அடிகளைப் பிள்ளைகளுடன் பார்த்து, ''அரிய மைந்தர்களும் நீவிரும் இங்குப் பக்கத்தில் அமர்ந்து உணவு உண்பீராக!'' எனக் கூற, விரும்பிய உள்ளத்துடன் மேலவரான அவர் பணித்தபடி செய்பவராய்,

1823. மைந்தரும் மறையவரான அப்பூதி அடிகளும் பக்கத்தில் இருந்து உணவு உண்ண, மனமகிழ்ச்சியுடன் மனைவியார் திருவமுது எடுத்துப் படைக்கக் கொத்தாய் மலர்ந்த கொன்றை மலரை அணிந்த சடையையுடைய அருட் பெருங்கூத்தரான சிவபெருமானின் அடியார்களோடும் அழகிய தமிழ்ச் சிங்கத்தைப் போன்ற திருநாவுக்கரசு நாயனார் அங்கு உணவு உண்டருளினார்.

1824. மாதவம் செய்த மறையவரான அப்பூதியாரின் செல்வம் பொருந்திய இல்லத்தில் இங்ஙனம் உணவு உண்டருளி, அன்பு பெருகிய நட்பின் திறத்தை அளித்தருளிப் பல நாட்கள் மனங் கலந்த ஒருமையுடன் அங்கு இருந்த பின்பு, மேன்மை கொண்ட நாவுக்கரசர் விளக்கம் பொருந்திய 'திருப்பழனம்' என்ற மூதூரில் அமர்ந்தருளிய இறைவரின் திருவடிகளைச் சார்ந்து நல்ல தமிழ்ப் பதிகத்தை அருளிச் செய்து,

Koviloor Digital Library

1825 அப்பூதி அடிக ளார்தம் அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை விரும்பு சொன் மாலை வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பால் என்றுஞ்
செப்பு ஊதி யங்கைக்கொண்டார் திருநாவுக் கரசர் பாதம்.

1826 இவ்வகை அரசின் நாமம் ஏத்திஎப் பொருளும் நாளும்
அவ்வருந் தவர்பொற் றாளே எனவுணர்ந் தடை வார்செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்றுள் ஆடும்
நவ்விய கண்ணாள் பங்கர் நற்கழல் நண்ணினாரே.

1827 மான்மறிக் கையர் பொற்றாள் வாகீசர் அடைவால் பெற்ற
மேன்மைஅப் பூதி யாராம் வேதியர் பாதம் போற்றிக்
கான்மலர்க் கமல வாவிக் கழனிசூழ் சாத்த மங்கை
நான்மறை நீல நக்கர் திருத்தொழில் நவில லுற்றேன்.

அப்பூதி அடிகள் நாயனார் புராணம் முற்றிற்று.

Koviloor Digital Library

1825. அப்பூதி அடிகளாரின் திருத்தொண்டின் பெருமையினைச் சிறப்பித்துப் பெருமையுடைய திருமேனியில் திருநீற்றை அணிந்த இறைவரை விரும்பும் சொன் மாலையினைத் தொடுத்துச் சாத்திய இந்தப் பெருஞ் செல்வத்தைப் பெறும் பேறு பெற்ற நல்லவரான அந்த அப்பூதி அடிகள் 'திருநாவுக்கரசரின் திருவடிகளே பொருள்' என்று கொண்டு, எல்லையற்ற அன்பினால் எப்போதும் எந்நாளும் கூறித் துதிக்கின்ற இந்த ஊதியத்தைக் கையில் பெற்றார்.

1826. இவ்வகையாய் அவர் திருநாவுக்கரசரின் திருப்பெயரைத் துதித்துக் கொண்டு "அடைய வேண்டிய பொருள் எல்லாம் எந்நாளும் அந்தத் தவத்தவரின் அரிய திருவடிகளேயாம்" எனவுணர்ந்து, செம்மையான வழி அதுவே யாம் எனக் கொண்டு தில்லை அம்பலத்தில் ஆடுகின்ற மான் போன்ற அழகிய கண்களையுடைய உமையம்மையாரின் பாகத்தைஉடையவரின் நல்ல பொற்பாதங்களை அடைந்தார்.

1827. மான் கன்றைக் கையில் கொண்ட சிவபெருமானின் பொன்னடிகளைத் திருநாவுக்கரசரின் அடைவாலே பெற்ற மேன்மையுடைய அப்பூதியார் என்னும் அந்தணர் பாதத்தைப் போற்றி, அதன் துணையால் காடு போலத் தாம்ரைகளையுடைய பொய்கைகள் சூழ்ந்த 'திருச் சாத்தமங்கையில்' தோன்றியருளிய நான்மறையில் வல்ல 'திருநீலநக்கர்' செய்த திருத் தொண்டினைச் சொல்லப் புகுகின்றேன்.

அப்பூதி அடிகள் நாயனார் புராணம் முற்றுப் பெற்றது.

Koviloor Digital Library

32. திருநீலநக்க நாயனார் புராணம்

1828 பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகயல்
உகளுங்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கைஎன் றுலகலெலாம் புகழ்வுறுந்
தகைத்தால்
வாய்ந்த மங்கல மறையவர் முதற்பதி வனப்பு.

1829 நன்மை சாலும்அப் பதியிடை நறுநுதல் மடவார்
மென்ம லர்த்தடம் படியமற் றவருடன் விரவி
அன்னம்முன் துறை ஆடுவ பாடுவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற் றுவபல பூவை.

1830 ஆய்ந்தமெய்ப்பொருள்நீ றென வளர்க்கும்
அக்காப்பில்
ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துளார் இருபிறப் பாளர்
நீந்து நல்லறம் நீர்மையின் வளர்க்கும்அத் தீயை
வாய்ந்த கற்புடன் நான்கென வளர்ப்பர்கண்
மடவார்.

Koviloor Digital Library

32. திருநீலநக்க நாயனார் புராணம்

''ஒலிபுனல் சூழ் சாத்த மங்கை நீலநக்கர்க்கு
அடியேன்!''
—திருத்தொண்டத் தொகை.

1828. பூத்த தாமரையின் கொட்டையின் மீது கயல் மீன்கள் துள்ளுகின்ற விளைந்து முதிர்ந்த நெற்பயிர்களான காடு சூழ்கின்ற காவிரி பாயும் சோழ நாட்டில, மங்கலங்கள் வாய்க்கப் பெற்ற அந்தணர்களுக்கு இடமான தலைமை யுடைய பதியின் சிறப்பு திருச்சாத்த மங்கையில் அமைவது என்று உலகம் எல்லாம் புழ்கின்ற தகுதியுடையதாகும்.

(சாத்த மங்கை — உலகம் தூய்மை பெறப் பூப்போலச் சாத்திக் கொள்ளும் மங்கை போல் விளங்கும் என்பது பொருள்)

1829. நலங்கள் பொருந்திய அந்தப் பதியில் நல்ல நெற்றியையுடைய பெண்கள் மென்மையான மலர்களை யுடைய பொய்கையில் குளிக்க, அவர்களுடன் ஒருங்கே முன் துறையில் அன்னப்பறவைகள் தாமும்தோய்ந்து ஆடும். வேதம ஓதும் சிறுவர்களின் கூட்டத்துடன் சாமவேதம் பாடுவனவாகிய பல பூவைகள் அவர்களைப் பிழை நீக்கிக் கற்கும்படி செய்யும்.

(கிடை — மறை பயிலும் சிறுவர் கூட்டம்)

1830. 'ஆய்ந்து தெளிந்த உண்மைப் பொருள் திரு நீறேயாகும்' என்று எண்ணி வளர்த்து வருகின்ற காவலுள், இருபிறப்புடைய அந்தணர்கள் மூன்று தீயினையும் வளர்த்து வருவர். பிறவிக் கடலினின்றும் நீந்தத் துணை யாகின்ற நல்ல அறங்களின் தன்மையில் வளர்க்கும் அந்தத் தீயைப், பொருந்திய கற்புத் தீயுடன் கூட்டி நான்கு தீயாகப் போற்றி வளர்ப்பர்.

Koviloor Digital Library

1831 சீலம் உய்த்தஅத் திருமறை யோர்செழு மூதூர்
ஞாலம் மிக்கநான் மறைப்பொருள் விளக்கிய
நலத்தார்
ஆலம் வைத்தகண் டத்தவர் தொண்டராம் அன்பர்
நீலநக்கனார் என்பவர் நிகழ்ந்துளார் ஆனார்.

1832 வேத உள்ளுறை யாமுன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி யாரையும் நயந்து
பாதம் அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காத லால்அவை இரண்டுமே செய்கருத் துடையார்.

1833 மெய்த்த ஆகம விதிவழி வேதகா ரணரே
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
அத்தர் அன்பருக் கமுதுசெய் விப்பது முதலா
எத்தி றத்தன பணிகளும் ஏற்றெதிர் செய்வார்.

1834 ஆய செய்கையில் அமருநாள் ஆதிரை நாளில்
மேய பூசனை நியதியை விதியினால் முடித்துத்
தூய தொண்டனார் தொல்லைநீ டயவந்தி
அமர்ந்த
நாய னாரையும் அருச்சனை புரிந்திட நயந்தார்.

1835 உறையு ளாகிய மனை நின்றும் ஒருமைஅன் புற்ற
முறைமை யால்வரு பூசைக்கும் முற்றவேண் டுவன
குறைவ றக்கொண்டு மனைவியார் தம்மொடுங்
கூட
இறைவர் கோயில்வந் தெய்தினர் எல்லையில்
தவத்தோர்.

Koviloor Digital Library

1831. ஒழுக்கத்தைத் தவறாது மேற் கொண்டு ஒழுகும் மறையவர் வாழும் அத்தலத்தில் இந்த நிலவுலகத்தில் சிறந்த நான்மறைப் பொருளை விளக்கிய நன்மையையுடையவர். நஞ்சை வைத்த மிடற்றையுடைய சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டு ஒழுகும் அன்புடையவர். அவர் 'நீல நக்கர்' என்று அழைக்கப்படுவர். அவர் உலகம் புகழச் சிறந்து வாழ்வார் ஆனார்.

1832. 'வேதங்களின் உள் உறை பொருளாகக் கிடைப்பவை விரிந்த கங்கைப் புனலைத் தரித்த சடையையுடைய தலைவரான சிவபெருமானையும் அவர் அடியார்களையும் அன்பால் பாத அர்ச்சனை செய்வதும், பணிவதுமேயாகும்,' எனத் தெளிந்து, காதல் மிகுதியால் அவ்விரண்டு செயல்களையுமே செய்யும் எண்ணம் கொண்டவராய்.

1833. உண்மைப் பொருளைப் புலப்படுத்தும் சிவாகமங்களின் விதிப்படியே மறை முதல்வரான சிவபெருமானை வணங்கி, நாள்தோறும் பூசை செய்து எழும் நியமங்களை எல்லாம் முடித்தும் சிவனின் அன்புடையார்களுக்குத் திரு அமுது செய்விப்பது முதலாக எல்லாத் தன்மையினாலும் கூடிய அடியவர் பணிகளையும் தாமே மேற்கொண்டு செய்பவராகி

1834. இத்தகைய செயல்களில் வழுவாது ஒழுகி வருகின்ற நாளில் ஒரு திருவாதிரை நாளில். பொருந்திய சிவ பூசையை விதிப்படி முடித்துக் கொண்ட பின்னர், தூய தொண்டரான அந்த நீல நக்கர் பழைமையாய் நீடியுள்ள 'அயவந்தி' என்னும் கோயிலில் விரும்பி வீற்றிருக்கின்ற சிவபெருமானுக்கு அருச்சனை செய்ய எண்ணினார்.

1835. எல்லை இல்லாத் தவத்தையுடைய திருநீல நக்க நாயனார் தம் இருப்பிடமான வீட்டினின்றும் ஒன்றுபட்ட அன்புடைய முறைமையினால் வரும் பூசையைச் செய்வதற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் குறைவில்லாமல் அமைத்துக் கொண்டு தம் மனைவியாருடன் சிவபெருமானின் திருக்கோயிலில் வந்து சேர்ந்தார்.

Koviloor Digital Library

1836 அணைய வந்துபுக் கயவந்தி மேவிய அமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ மனைவியார் ஏந்த
உணர்வின் மிக்கவர் உயர்ந்தஅர்ச் சனைமுறை உய்த்தார்.

1837 நீடு பூசனை நிரம்பியும் அன்பினால் நிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு வணங்கிமுன் வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி
நாடும் அஞ்செழுத் துணர்வுற இருந்துமுன் நவின்றார்.

1838 தொலைவில் செய்தவத் தொண்டனார் கருதியே முதலாங்
கலையின் உண்மையாம் எழுத்தஞ்சுங் கணிக்கின்ற காலை
நிலையின் நின்றுமுன் வழுவிட நீண்டபொன் மேருச்
சிலையி னார்திரு மேனிமேல் விழுந்ததோர் சிலம்பி.

1839 விழுந்த போதில் அங்கயல்நின்ற மனைவியார் விரைவுற்று
எழுந்த அச்சமோ டிளங்குழ வியில்விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதிமுன் துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினால் ஊதிமேல் துமிந்தனர் போக.

1840 பதைத்த செய்கையால் மனைவியார் முற்செயப் பந்தஞ்
சிதைக்கு மாதவத் திருமறை யவர்கண்டு தங்கண்
புதைத்து மற்றிது செய்ததென் பொறியிலாய் என்னச்
சுதைச்சி லம்பிமேல் விழவூதித் துமிந்தனன் என்றார்.

Koviloor Digital Library

1836. அவர் கோயிலின் உள்ளே சேரும்படி வந்து உள்ளே புகுந்து, 'அயவந்தி' என்ற அக்கோயிலில் விளங்க வீற்றிருக்கும் சிவபெருமானின் இணையடிகளை வணங்கிப் பூசை செய்யத் தொடங்கித் தம்முடன் இணையாக நின்று கொண்டு அங்கு வேண்டுவனவற்றை எல்லாம் மனைவியார் எடுத்துத்தர, உணர்வின் மிக்க அவர் உயர்ந்த பூசைகளை எல்லாம் செய்தார்.

1837. தாம் இயற்றிய பெரிய பூசை முடிந்தும் அன்பு நிரம்பாதவரான அவர், இறைவர் வீற்றிருக்கும் உள் புறத்தை வலமாகச் சுற்றி வந்து, நிலத்தில் பொருந்தக் கீழே விழுந்து. திருமுன்பு துதித்து நின்று, பெரிய மறைகள் தேடுகின்ற பொருளைத் தெளியும்படி கூர்ந்து அழுந்திய பார்வை செய்து, நாடும் ஐந்தெழுத்து உணர்ச்சியில் பொருந்தத் திருமுன்பு விதிப்படி நினைந்தார்.

1838. அழியாத தவத்தைத் செய்த தொண்டரான அந்நீலநக்கர், வேதங்களை முதலாகக் கொண்ட எல்லாக் கலைகளும் எடுத்துச் சொல்லும் உண்மைப் பொருளான திருவைந்தெழுத்தை எண்ணும் பொழுது, ஒரு சிலந்தி தான் நின்ற நிலையினின்றும் வழுவியதால் நீண்ட பொன் மேரு மலையை வில்லாக உடைய இறைவரின் அருள் குறியான சிவலிங்கத்தின் மேனி மீது விழுந்தது.

1839. அங்ஙனம் சிலந்தி சிவலிங்கத்தின் மீது விழுந்த போது அங்குப் பக்கத்தில் நின்றிருந்த மனைவியார் விரைவாகப் பயத்துடன், இளங் குழந்தையின் மீது விழுந்த சிலந்தி ஒழியுமாறும் அதன் நச்சுத் தன்மை நீங்குமாறும் ஊதி முன் துமிக்கும் தாய் போன்று பொங்கி மேல் எழுந்த அன்பினால் ஊதித் திருமேனி மேல் நின்றும் அச்சிலந்தி மேல் போகுமாறு மேலே துமிந்தனர்.

(துமிதல் — வாய்க் காற்று, நீருடன் சேர்ந்து செல்லுமாறு உமிழ்தல்)

1840. மனம் பதைத்த தால் தூண்டப்பட்ட செய்கையினாலே மனைவியார் முன் இவ்வாறு செய்ய, மலங்களை நீக்கும் மாதவம் செய்யும் மறையவரான திருநீல நக்கனார் அதைக் கண்டு ஆற்றமாட்டாமல் தம் கண்களைப் பொத்திக் கொண்டு, ''அறிவற்றவளே! தகாத இச்செயலைச் செய்தது என்ன காரணம்?'' என வினவ, ''சுதைச் சிலம்பி இறைவரின் திருமேனி மீது விழுந்தபடியால் அதனை நீக்க ஊதித் துமிந்தேன்'' எனக் கூறினார் அம்மையார்.

Koviloor Digital Library

1841 மனைவி யார்செய்த அன்பினை மனத்தினிற்
கொள்ளா
புனையும் நூல்மணி மார்பர்தம் பூசனைத் திறத்தில்
இனைய செய்கைஇங் கநுசித மாம் என எண்ணும்
நினைவினால் அவர் தம்மைவிட் டகன்றிட
நீப்பார்.

1842 மின்நெடுஞ்சடை விமலர்மேல் விழுந்தநூற்
சிலம்பி
தன்னை வேறொரு பரிசினால் தவிர்ப்பது தவிர
முன்அ ணைந்துவந் தூதிவாய் நீர்ப்பட முயன்றாய்
உன்னை யான்இனித் துறந்தனன் ஈங்கென
உரைத்தார்.

1843 மற்ற வேலையிற் கதிரவன் மலமிசை மறைந்தான்
உற்ற ஏவலின் மனைவியார் ஒருவழி நீங்க
முற்ற வேண்டுவ பழுதுநீர் பூசனை முடித்துக்
கற்றை வேணியார் தொண்டருங் கடிமனை
புகுந்தார்.

1844 அஞ்சும் உள்ளமோ டவர்மருங் கணைவுற
மாட்டார்.
நஞ்சம் உண்டவர் கோயிலில் நங்கையார் இருந்தார்
செஞ்சொல் நான்மறைத் திருநீல நக்கர்தாம்
இரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற் பள்ளிகொள்
கின்றார்.

1845 பள்ளி கொள்பொழு தயவந்திப் பரமர்தாங்
கனவில்
வெள்ள நீர்ச்சடை யொடுநின்று மேனியைக்
காட்டி
உள்ளம் வைத்தெமை ஊதிமுன் துமிந்தபால்
ஒழியக்
கொள்ளும் இப்புறஞ் சிலம்பியின் கொப்புள்
என்றருள.

Koviloor Digital Library

1841. பூணூல் புனையும் மார்பினரான திருநீலக்கர், தம் மனைவியார் செய்த செயலில் உள்ள அன்பை மனத்தில் கொள்ளாதவராய் தம் பூசையுள் இஃது இங்குத் தகாத செயலாகும் என்று எண்ணும் எண்ணங் கொண்டதனால், அம்மனைவியார் தம்மை விட்டு நீங்குமாறு துறப்பவராய்,

1842. ''மின் போல் ஒளிவீசுகின்ற நீண்ட சடையுடைய குற்றமற்றவரான இறைவரின் திருமேனியின் மேல் விழுந்த நூல் சிலந்தியை வேறு ஒருவகையினால் தவிர்க்காது முன் வந்து வாய்நீர் படுமாறு முயன்றாய்! இனி நான் உன்னைத் துறந்து விட்டேன்!'' என மொழிந்தார்.

1843. அச்சமயத்தில் கதிரவன் மேற்குத் திக்கிலே மறைந்தான். பொருந்திய கட்டளையின் வழியே நின்று மனைவியார் ஒரு பக்கம் நீங்கத், தம் பூசை முற்றுதற்கு வேண்டிய குற்றம் நீங்கும் பூசை முறைகளைச் செய்து முடித்துக், கற்றையாக முடித்த சடையுடைய சிவபெருமானின் அடியாரான நீலநக்கரும் தம் இல்லத்துக்குள் புகுந்தார்.

1844. நீலநக்கரின் மனைவியார் அஞ்சிய உள்ளத்துடன் அவரது பக்கத்தில் சேராதவராய் நஞ்சையுண்ட பெருமானின் கோயிலில் தங்கியிருந்தார். செம்மையான சொற்களையுடைய நான்கு மறைகளில் வல்ல திருநீலநக்கர் தனியாய் அன்றிரவு பஞ்சு இட்ட மெல்லிய அணையில் துயிலலானார்.

1845. அவ்வாறு அவர் உறங்கும் போதில் அயவந்தி என்ற கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான் அவரது கனவில் எழுந்தருளிக் கங்கை நீர் ததும்பும் சடையுடன் தம் திருமேனியைக் காட்டி, ''மனத்தில் அன்பு வைத்து எம்மை முன்பு ஊதித் துமிந்த பக்கம் ஒழிய மற்ற இந்தப் பக்கம் எல்லாம் சிலந்தியின் கொப்புளங்கள் காண்பாயாக!'' என்று உரைத்தருளினாராக,

Koviloor Digital Library

1846 கண்ட அப்பெருங் கனவினை நனவெனக் கருதிக்
கொண்ட அச்சமோ டஞ்சலி குவித்துடன்
விழித்துத்
தொண்ட னார்தொழு தாடினார் பாடினார்
துதித்தார்
அண்ட நாயகர் கருணையைப் போற்றிநின்
றழுதார்.

1847 போது போயிருள் புலர்ந்திடக் கோயிலுட்
புகுந்தே
ஆதி நாயகர் அயவந்தி அமர்ந்தஅங் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவீழ்ந் தெழுந்துமுன் பரவி
மாத ராரையுங் கொண்டுதம் மனையில்மீண்
டணைந்தார்.

1848 பின்பு முன்னையிற் பெருகிய மகிழ்ச்சிவந் தெய்த
இன்பு றுந்திறத் தெல்லையில் பூசனை இயற்றி
அன்பு மேம்படும் அடியவர் மிகஅணை வார்க்கு
முன்பு போலவர் வேண்டுவ விருப்புடன்
முடிப்பார்

1849 அன்ன தன்மையில் அமர்ந்தினி தொழுகும்அந்
நாளில்
மன்னு பூந்தராய் வருமறைப் பிள்ளையார்
பெருமை
பன்னி வையகம் போற்றிட மற்றவர் பாதஞ்
சென்னி வைத்துடன் சேர்வுறும் விருப்பினிற்
சிறந்தார்.

1850 பண்பு மேம்படு நிலைமையார் பயிலும் அப்பருவம்
மண்பெ ருந்தவப் பயன்பெற மருவுநற் பதிகள்
விண்பி றங்குநீர் வேணியார் தமைத்தொழ
அணைவார்.
சண்பை மன்னருஞ் சாத்தமங் கையில்வந்து
சார்ந்தார்.

Koviloor Digital Library

1846. தாம் கண்ட அந்தக் கனவை நனவு என்றே எண்ணி அடைந்த அச்சத்துடனே அஞ்சலியாய்த் தலை மேல் குவித்த கைகளுடனே விழித்து எழுந்து, அடியாரான திருநீலநக்க நாயனார், தொழுது ஆடினார். துதித்தார்; தேவர் தலைவரான இறைவர் பெருங்கருணையைப் போற்றி நின்று அழுதார்.

1847. இரவுக் காலமானது நீங்கி இருள் நீங்கிப் புலர்ந்திடக் கோயிலுள் போய், ஆதிநாயகராய் அயவந்தியில் வீற்றிருக்கின்ற இறைவரின் அடிகளில் வணங்கிக் கீழே விழுந்து எழுந்து திருமுன்பு துதித்து அம்மையாரையும் உடன் அழைத்துக் கொண்டு தன் இல்லத்துக்கு மீண்டும் வந்து சேர்ந்தார்.

1848. அதன்பின்பு, முன்னால் இருந்ததைவிடப் பெருமகிழ்ச்சி வந்து அடைய, இன்பம் உடைய எண்ணில்லாத பூசனைகள் இறைவர்க்குச் செய்து, அன்புமிக்க அடியவர் வந்தடைவார்களுக்கெல்லாம் முன்போலவே அத்தகையர் வேண்டியவற்றையெல்லாம் விருப்புடன் செய்து முடிப்பாரானார்.

1849. அங்ஙனம் அவர் ஒழுகி வந்த நாட்களில் நிலைபெற்ற சீகாழிப்பதியில் தோன்றியருளிய திருஞான சம்பந்தரின் பெருமைகளைப் பலவகையாய்ச் சொல்லி உலகம் போற்றக் கேட்டு, அவருடைய திருவடிகளை வணங்கி அவருடன் கூடியிருக்கும் விருப்பம் மிக்க சிறப்புடையவர் ஆனார்.

1850. பண்பினால் மேன்மையுடைய திருநீலநக்கர் முன் சொன்ன நிலையில் பயின்ற காலத்தில், பெருந்தவப் பயனை உலகம் அடையும் பொருட்டுப் பொருந்திய நல்ல பதிகளில், விண்ணில் விளங்கும் கங்கை தங்கிய சடையையுடைய சிவபெருமானைத் தொழுவதற்குச் சேர்வாராய்ச், சீகாழித் தலைவரான திருஞானசம்பந்தரும் திருசாத்தமங்கையில் வந்து அடைந்தார்.

Koviloor Digital Library

1851 நீடு சீர்த்திரு நீலகண் டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் விறலியர் உடன்வரத்
தொண்டர்
கூடும் அப்பெருங் குழாத்தொடும் புகலியர்
பெருமான்
மாடு வந்தமை கேட்டுளம் மகிழ்நீல நக்கர்.

1852 கேட்ட அப்பொழு தேபெரு மகிழ்ச்சியிற்
கிளர்ந்து
தோட்ட லங்கலுங் கொடிகளும் புனைந்துதோ
ரணங்கள்
நாட்டி நீள்நடைக் காவண மிட்டுநற் சுற்றத்து
ஈட்ட முங்கொடு தாமுமுன் எதிர்கொள
எழுந்தார்.

1853 சென்று பிள்ளையார் எழுந்தரு ளுந்திருக் கூட்டம்
ஒன்றி அங்கெதிர் கொண்டுதங் களிப்பினால்
ஒருவாறு
அன்றி ஆடியும் பாடியுந் தொழுதெழுந்
தணைவார்
பொன்ற யங்குநீள் மனையிடை யுடன்கொடு
புகுந்தார்.

1854 பிள்ளை யாரெழுந் தருளிய பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய அடியவர் கூட்டமும் விரும்ப
உள்ளம் ஆதர வோங்கிட ஓங்குசீ காழி
வள்ள லாரைத்தம் மனையிடை அமுதுசெய்
வித்தார்.

1855 அமுது செய்தபின் பகலவன் மேல்கடல் அணையக்
குமுத வாவியிற் குளிர்மதிக் கதிரணை போதில்
இமய மங்கைதன் திருமுலை அமுதுண்டார் இரவும்
தமது சீர்மனைத் தங்கிட வேண்டுவ சமைத்தார்.

1856 சீல மெய்த்திருத் தொண்டரோ டமுதுசெய் தருளி
ஞாலம் மிக்கிட நாயகி யுடன் நம்பர் நண்ணும்
காலம் முற்பெற அழுதவர் அழைத்திடக் கடிது
நீல நக்கனார் வந்தடி பணிந்துமுன் நின்றார்.

Koviloor Digital Library

1851. திருநீடிய பெரிய திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் மலர்கள் பொருந்துவதற்கு இடமான கூந்தலையுடைய பாணினியான மதங்க சூளாமணியாரும் உடன் வர, தொண்டர்கள் கூடும் அந்தப் பெருங்கூட்டத்துடன் சீகாழித் தலைவரான திருஞானசம்பந்தர் தம் நகரத்தின் பக்கத்தில் எழுந்தருளியதனைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்த திருநீலநக்க நாயனார்,

1852. கேள்விப்பட்ட அப்போதே பெருமகிழ்ச்சி பொங்கி மலர்மாலைகளையும் கொடிகளையும் தூக்கி அலங்கரித்துத் தோரணங்கள் நாட்டி நீண்ட தொலைவு வரை நடைக்காவணம் இட்டு, நல்ல சுற்றத்தாரின் கூட்டத்தையும் உடன் அழைத்துக் கொண்டு தாம் முன்பு எதிர் கொள்ளும் பொருட்டு எழுந்தாராகி,

1853. சென்று, ஞானசம்பந்தர் எழுந்தருளும் அக் கூட்டத்தைச் சேர்ந்து அங்கு அவரை எதிர்கொண்டு வரவேற்றுத் தம் மகிழ்ச்சியின் மேலீட்டால் ஒருபடித்தாய் அன்றிப் பலவகையாக ஆடியும் பாடியும் தொழுது எழுந்து அணைபவராய் பொன் விளங்கும் பெரிய தன் மனையிடத்து உடனே அழைத்துக் கொண்டு புகுந்தார்.

1854. திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருக்கும் பெருமைக்கு ஏற்றபடி பெருந்திரளாகக் கூடிய அடியவர் கூட்டமும் விரும்பி வர, மனத்தில் அன்புமிக, தம் இல்லத்தில் சீகாழியில் அவதாரம் செய்த வள்ளலான அஞ் ஞானசம்பந்தரை உணவு உண்ணும்படி செய்தார்.

1855. திருஞானசம்பந்தரும் அடியார் கூட்டமும் திருவமுது செய்தபின்பு கதிரவன் மேற்குத் திக்கில் அடைந்த அத்தமனம் உண்டாக, ஆம்பல் மலர்களையுடைய பொய்கைகளில் குளிர்ந்த மதியின் கதிர்கள் சேரும் இரவுக் காலத்தில், உமையம்மையாரின் முலைப்பாலையுண்ட அந்த ஞானசம்பந்தர் அன்றிரவிலும் சிறப்புடைய திருமனையில் தங்குவதற்கு வேண்டியவற்றை நீலநக்கர் அமைத்தார்.

1856. ஒழுக்கமுடைய மெய்த்தொண்டர்களுடனே திருவமுது செய்த பின்பு, உலகம் ஓங்கும் பொருட்டுப் பெரிய நாயகி அம்மையாருடன் தோணியப்பர் வெளிப்பட்டருளுமாறு முன் அழுதவரான திருஞான சம்பந்தர் அழைக்கத் திருநீல நக்கர் விரைவில் வந்து அடிவணங்கித் திருமுன்பு நின்றார்.

Koviloor Digital Library

1857 நின்ற அன்பரை நீலகண் டப்பெரும் பாணர்க்கு
இன்று தங்களோர் இடங்கொடுத் தருளுவீர் என்ன
நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தனர்திரு
மறையோர்.

1858 ஆங்கு வேதியில் அறாதசெந் தீவலஞ் சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த்
தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளாற்பள்ளி
கொண்டார்.

1859 கங்கு லிற்பள்ளி கொண்டபின் கவுணியர்க்
கிறைவர்
அங்கு நின்றெழுந் தருளுவார் அயவந்தி அமர்ந்த
திங்கள் சூடியை நீலநக் கரைச்சிறப் பித்தே
பொங்கு செந்தமிழ்த் திருப்பதி கத்தொடை
புனைந்தார்.

1860 பதிக நாண்மலர் கொண்டுதம் பிரான்கழல் பரவி
அதிக நண்பினை நீலநக் கருக்களித் தருளி
எதிர்தொ ழும்பதி களில்எழுந் தருளினார்
என்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்தபூ சுரனார்.

1861 பிள்ளை யார்எழுந் தருளஅத் தொண்டர் தாம்
பின்பு
தள்ளும் அன்புடன் கேண்மையும் தவிர்ப்பில
எனினும்
வள்ள லார்திரு வருளினை வலியமாட் டாமை
உள்ளம் அங்குடன் போக்கிமீண் டொருவகை
இருந்தார்.

Koviloor Digital Library

1857. அங்ஙனம் வந்து நின்ற அடியாரான திருநீல நக்கரைப் பார்த்துத் "திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு இன்று இங்குத் தங்குதற்குரிய ஓர் இடம் அளித்தருளுக!" என்று திருஞானசம்பந்தர் கூறினார். பெரிதும் மகிழ்ச்சியை அடைந்து அதை ஏற்றுச் சென்று அத் திருநீலகண்ட யாழ்ப் பாணருக்கு நடுமனையின் வேதிகையின் பக்கத்தில் மறைய வரான திருநீலநக்கர் இடம் அமைத்துத் தந்தார்.

1858. அங்கு அந்த வேதிகையில் என்றும் நீங்காது வளர்க்கப்பட்டு உள்ள செந்தீயானது வலமாகச் சுழித்து எழுந்து மேல் ஓங்கி முன்னையவிட ஒருவிதமாய் அன்றிப் பலவகையாய் விளக்கம் அடையவே, சகோட யாழ்த் தலை வரான திருநீலகண்டர் தம் பக்கத்தில் அமரும் மதங்க சூளாமணியாருடனே திருவருள் மயமாய்ப் பள்ளி கொண் டார்.

1859. கவுணியர் குலத் தலைவரான திருஞான சம்பந்தர் அன்று இரவு அங்குப் பள்ளிகொண்ட பின், எழுந்து அங்கிருந்தும் புறப்படுவாராகித் திருநீலநக்கரைச் சிறப்பாக எடுத்துக் கூறி, அயவந்தியில் விரும்பி எழுந்தருளி யுள்ள பெருமானைப் பொங்கும் செந்தமிழான திருப்பதிக மான மாலையைப் புனைந்து பாடினார்.

1860. திருப்பதிகமான புதிய மலர் மாலையைக் கொண்டு ,தம் இறைவரின் திருவடிகளைத் துதித்து, பெரு நட்பினை நீலநக்கருக்குத் தந்தருளி, பழைமையுடைய மறைகளை என்றும் புதிதாய் உள்ள செந்தமிழால் கூறி யருளிய அந்தணரான ஞானசம்பந்தர் மேலும் தொழச் செல்லும் பதிகளை நோக்கிச் செல்லலானார்.

1861. அவ்வாறு அந்தப் பதியினின்று திருஞான சம்பந்தர் புறப்பட, அத்திரு நீலநக்கரும் ஞானசம்பந்தரைத் தொடர்ந்து செல்லுமாறு தம்மை உந்திச் செலுத்தும் அன்பும் நட்பும் தவிர்க்க இயலாதவையாய் இருப்பினும், வள்ளலாரான ஆளுடைய பிள்ளையாரின் அருளிப் பாடான திருவாணையை வற்புறுத்தி மறுக்க இயலாததால், தம் மனத்தை மட்டும் அவர் போகும் இடங்களில் செல்லும்படி விடுத்துத் தாம் மீண்டு ஒருவாறு தங்கியிருந்தனர்.

Koviloor Digital Library

1862 மேவு நாளில்அவ் வேதியர் முன்புபோல் விரும்பும்
தாவில் பூசனை முதற்செய்கை தலைத்தலை
சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராந் திருமறைச் சிறுவர்
பூவ டித்தலம் பொருந்திய உணர்வொடும்
பயின்றார்.

1863 சண்பை யாளியார் தாமெழுந் தருளும்எப் பதியும்
நண்பு மேம்பட நாளிடைச் செலவிட்டு நண்ணி
வண்பெ ரும்புக ழுவருடன் பயின்றுவந்
துறைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகி திருநீல நக்கர்.

1864 பெருகு காதலிற் பின்நெடு நாள்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர் வாழிசீ காழி
ஒருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறஞ் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார்.

1865 தருதொ ழில்திரு மறையவர் சாத்தமங் கையினில்
வருமு தற்பெருந் திருநீல நக்கர்தாள் வணங்கி
இருபி றப்புடை அந்தணர் ஏறுயர்த் தவர்பால்
ஒருமை உய்த்துணர் நமிநந்தி யார்தொழில்
உரைப்பாம்.

திருநீலநக்க நாயனார் புராணம் முற்றிற்று

Koviloor Digital Library

1862. அங்ஙனம் அவர் தங்கியிருந்த நாளில் அந்த வேதியரான நீலநக்கர் முன்புபோல் வேதம் விரும்பிய குற்றம் இல்லாத பூசை முதலான செய்கைகள் எல்லாம் மேலும் மேலும் சிறப்பாய் ஓங்கக் காளை ஊர்தியின் மேல் வரும் இறைவரின் மைந்தரான அந்தணச் சிறுவரின் அழகிய திருவடிகளைப் பொருந்திய வுணர்வுடன் வணங்கி வந்தார்.

1863. சண்பை என்ற சீகாழியில் தோன்றிய ஞான சம்பந்தர் எழுந்தருளும் எவ்வெத்தலங்களிலும் இடை இடையே பல நாள்கள் கழிந்த பின்பு அன்பு மேலீட்டினால் சென்று சேர்ந்து திண்மையான பெரிய திருநீலநக்கர் வண்மையுடன் பெரும்புகழினையுடைய அவருடனே கூடி யிருந்து மீண்டுவந்து அமர்ந்திருந்தனர்.

1864. பெருகும் அன்பினால் பின்னர் நீண்ட நாள்கள் இவ்வாறு விளங்கும்படி நிகழவரும் பெரிய வேதியரான திருநீலநக்கர் எந்நாளும் வாழ்வுடைய சீகாழிப்பதியில் அவதரித்த ஒப்பில்லாத ஞானசம்பந்தரின் திருமணச் சிறப்பில், அத்திருமணச் சிறப்பைக் கும்பிட்டபடியால் அவருடன் கூடிச் சிவபெருமான் திருவடிகளை அடைந்தார்.

1865. சிறந்த தொழிலினரான திருச்சாத்தமங்கையில் தோன்றியருளிய முதன்மையுடைய பெரிய நீலநக்கரின் திருவடிகளை வணங்கி, அதன் துணையினால், இரு பிறப்புடைய அந்தணராய்க் கொடியை உயர்த்திய சிவ பெருமானிடத்து மன ஒருமைப்பாடு கொண்டு உணர்கின்ற 'நமிநந்தியார்' செய்த திருத்தொண்டினை உரைக்கப் புகுகின்றேன்.

திருநீலநக்க நாயனார் புராணம் முற்றிற்று.

Koviloor Digital Library

33. நமிநந்தியடிகள் நாயனார் புராணம்

1866 வையம் புரக்குந் தனிச்செங்கோல் வளவர்
பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம்பணையும் செழுநீர்த் தடமும்
புடையுடைத்தாய்ப்
பொய்தீர் வாய்மை அரு மறைநூல் புரிந்தசீலப்
புகழதனால்
எய்தும் பெருமை எண்டிசையும் ஏற்றார் ஏமப்
பேறூரால்.

1867 மாலை பயிலும் தோரணங்கள் மருங்கு பயிலும்
மணிமறுகு
வேலை பயிலும் புனல்பருகு மேகம் பயிலும்
மாடங்கள்
சோலை பயிலும் குளிர்ந்தஇருள் சுரும்பு பயிலும்
அரும்பூகம்
காலை பயிலும் வேதஒலி கழுநீர் பயிலும்
செழுநீர்ச்செய்.

1868 பணையில் விளைந்த வெண்ணெல்லின் பரப்பின்
மீது படச்செய்ய
துணர்மென் கமலம் இடைஇடையே சுடர் விட்
டெழுந்து தோன்றுவன
புணர்வெண் புரிநூ லவர் வேள்விக் களத்தில்
புனைந்த வேதிகைமேல்
மணல்வெண் பரப்பின் இடைஇடையே வளர்த்த
செந்தீ மானுமால்.

Koviloor Digital Library

33. நமிநந்தியடிகள் நாயனார் புராணம்

'அருநம்பி நமிநந்தி யடியார்க்கும் அடியேன்'
—திருத்தொண்டத்தொகை.

1866. உலகத்தைக் காவல் செய்யும் தனிச் செங் கோலையுடைய சோழர்களின் காவிரித் திருநாட்டில் செந்தாமரைத் தடங்களையுடைய பெருவயல்களையும் செழுமையான நீர்ப் பொய்கைகளையும் எப்பக்கங்களிலும் கொண்டதாகி, மலங்களை நீக்கும் தன்மையுடைய மெய்ப் பொருளைக் கூறும் அரிய வேதங்களிலும் அவற்றின் வழிப்பட்ட நூல்களிலும் சொல்லும் விதிகளை இடை விடாமல் சிந்தித்துச் செய்யும் நல்ல ஒழுக்கமுடையவரின் புகழால் வரும் பெருமையானது எல்லாத் திக்குகளிலும் பரவிச் செல்கின்ற ஊர் 'ஏமப்பேறூர்' என்பதாகும்.

1867. அழகிய தெருக்களின் பக்கங்களில் மாலைகள் மிகவும் தொங்கவிடப்பட்ட தோரணங்கள் விளங்கும் மாளிகைகளின் மீது கடலில் நீரையுண்ணும் மேகங்கள் பொருந்தியிருக்கும். குளிர்ந்த இருண்ட நிழல், சோலை களில் விளங்கும். அரிய பாக்கு மரங்களில் வண்டுகள் மொய்க்கும். உரிய காலங்களில் வேத ஒலி மிக்கு ஒலிக்கும். செழிப்பான நீர்வயல்களில் கழுநீர் மலர்கள் விளங்கும்.

1868. வயல்களில் விளைந்த வெண்மையான நெற் பயிரிடையே, மேலே தோன்றும்படி இடை இடையே ஒளி விட்டு மேல் எழுந்து தோன்றும் சிவந்த பன்மெல்லிதழ்களை யுடைய தாமரைப் பூக்கள், பொருந்திய வெண்மையான பூணூல் அணிந்த வேதியர்கள் வேள்விக்களத்தில் அழகுடன் அமைத்த வேதிகைமீது வெண்மையான மணலைப் பரப்பி இடைஇடையே வளர்த்த செந்தீயை ஒத்திருக்கும்.

Koviloor Digital Library

1869 பெருமை விளங்கும் அப்பதியிற் பேணும் நீற்றுச்
சைவநெறி
ஒருமை நெறிவாழ் அந்தணர்தம் ஓங்கு குலத்தினுள்
வந்தார்
இருமை உலகும் ஈசர்கழல் இறைஞ்சி ஏத்தப்
பெற்றதவத்
தருமை புரிவார் நமிநந்தி அடிகள் என்பா
ராயினார்.

1870 வாய்மை மறைநூல் சீலத்தால் வளர்க்கும் செந்தீ
எனத் தகுவார்
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப் பொருளென்
றறியுந் துணிவினார்
சாமகண்டர் செய்யகழல் வழிபட் டொழுகுந்
தலைமை நிலை
யாம இரவும் பகலும்உணர் வொழியா இன்பம்
எய்திவார்.

1871 அவ்வூர் நின்றுந் திருவாரூ ரதனைஅடைவார்
அடியார்மேல்
வெவ்வூ றகற்றும் பெருமான்றன் விரைசூழ்
மலர்த்தாள் பணிவுறுதல்
எவ்வூ தியமும் எனக்கொள்ளும் எண்ணம்
உடையார் பலநாளும்
தெவ்வூர் எரித்த வரைச் சிலையார் திருப்பா
தங்கள் வணங்கினார்.

1872 செம்பொற் புற்றின் மாணிக்கச் செழுஞ்சோ
தியைநேர் தொழுஞ்சீலம்
தம்பற் றாக நினைந்தணைந்து தாழ்ந்து பணிந்து
வாழ்ந்துபோந்
தம்பொற் புரிசைத் திருமுன்றில் அணைவார்
பாங்கோர் அறனெறியின்
நம்பர்க் கிடமாங் கோயிலினுட் புக்கு வணங்க
நண்ணினார்.

Koviloor Digital Library

1869. பெருமையுடன் விளங்கும் அந்தப் பதியில் போற்றும் திருநீற்றுச் சார்புடைய சைவ நெறியில் ஒருமைப்பாடு உற்ற வழியில் வாழும் அந்தணர்களின் சிறந்த குலத்திலே, தோன்றியவராய், இம்மையிலும் மறுமையிலும் சிவபெருமான் திருவடிகளையே வணங்கி வாழ்த்தும் பேறுடைய தவத்தை அரிய வகையால் இடைவிடாது ஒழுகி வருபவர். அவர் 'நமிநந்தி அடிகள்' என்று அழைக்கப்படுவர்.

1870. வாய்மையுடைய மறைநூலும் அதன் வழி வரும் நூலால் விதித்த ஒழுக்கத்தால் வளர்க்கப்படும் ''செந்தீ இவர் ஆவர்'' எனக் கூறப்படும் தகுதி உடையவர். தூய திருநீற்றின் சார்பே மெய்ப்பொருளாவது எனத் துணிந்து மேற்கொண்ட அறிவை உடையவர். அவர் சாம வேதத்தை அருளியவரான சிவபெருமானின் சிவந்த திருவடிகளையே வழிபட்டு ஒழுகும் தன்மை நிலையை இரவுப்போதிலும் பகற் போதிலும் உணர்ச்சியில் கொள்கின்ற இடைவிடா இன்பத்தை எய்தியிருந்தார்.

1871. அடியார் மேல் வரும் கொடிய ஆணவமலமான பிணியைப் போக்கியருளும் சிவபெருமானின் மணம் கமழும் மலர் போன்ற திருவடிகளைப் பணியும் தன்மை பெறுவதையே எல்லா ஊதியமும் ஆகும் என்று கொள்ளும் எண்ணம் உடைய அவர், அந்த ஏமப் பேறூரினின்றும் திருவாரூரை அடைவாராகிப் பகைவரின் திரிபுரங்களை எரித்த மேருமலையான வில்லை ஏந்திய சிவபெருமானின் திருவடிகளைப் பல நாள்களிலும் வணங்கினார்.

1872. செம்பொன் போன்ற புற்றில் வீற்றிருக்கும் மாணிக்க ஒளியைப் போன்ற இறைவரை நேரில் கண்டு வழிபடும் நல்லொழுக்கமே தமக்கு உறுதியாவது என்று எண்ணிச் சார்ந்து நிலம் பொருந்த விழுந்து வணங்கி அதனால் வாழ்வடைந்து வெளியே வந்து பொன்மதில் திருமுற்றத்தில் தனியிடமான 'அரன் நெறி' என்னும் பதியில் சிவபெருமானுக்கு இடமான கோயிலுள் புகுந்து வணங்குதற்குச் சென்றார்.

(கோயில் முற்றத்தில் உள்ளது 'அரநெறி' என்னும் தனித்தலம்)

Koviloor Digital Library

1873 நண்ணி இறைஞ்சி அன்பினால் நயப்புற் றெழுந்த காதலுடன்
அண்ண லாரைப் பணிந்தெழுவார் அடுத்த நிலைமைக் குறிப்பினால்
பண்ணுந் தொண்டின் பாங்குபல பயின்று பரவி விரவுவார்
எண்ணில் தீபம் ஏற்றுவதற் கெடுத்த கருத்தின் இசைந்தெழுவார்.

1874 எழுந்த பொழுது பகற்பொழுதங் கிறங்கு மாலை எய்துதலும்
செழுந்தண் பதியினிடையப்பாற் செல்லிற் செல்லும் பொழுதென்ன
ஒழிந்தங் கணைந்தோர் மனையில்விளக்கு குறு நெய்வேண்டி உள்புகலும்
அழிந்த நிலைமை அமணர்மனை ஆயிற்றங்கண் அவருரைப்பார்

1875 கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகை காணும்
நெய்யிங் கில்லை விளக்கெரிப்பீ ராகில் நீரை முகந்தெரித்தல்
செய்யும் என்று திருத்தொண்டர்க் குரைத்தார் தெளியாது ஒருபொருளே
பொய்யும் மெய்யும் ஆம் என்னும் பொருள்மேற் கொள்ளும் புரை நெறியார்.

1876 அருகர் மதியா துரைத்தவுரை ஆற்ற ராகி அப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன் பெயர்ந்து போந்து பிறையணிந்த
முருகு விரியும் மலர்க்கொன்றை முடியார் கோயில் முன்எய்தி
உருகும் அன்பர் பணிந்துவிழ ஒருவாக் கெழுந்தது உயர்விசும்பில்.

Koviloor Digital Library

1873. பொருந்தி வணங்கி அன்பு காரணமாக ஆசை மேலே எழுந்த பக்தியுடன் பெருமையுடைய இறைவரைத் தாழ்ந்து எழுவார்; அடுத்து வரும் நிகழ்ச்சிக்காக மனத்தில் எழுந்த குறிப்பால் செய்யும் திருத்தொண்டின் பாங்கு பலவும் செய்து துதித்து அங்குத் தங்குவாராய் எண்ணற்ற விளக்குகளை ஏற்றுவதற்கு மனத்துள் ஏற்பட்ட எண்ணத்துக்கு இசைந்து அதைச் செய்ய எழுவாராய்,

1874. அவ்வாறு துணிந்து எழுந்த பொழுதானது பொழுது இறங்கும் மாலை நேரமாகச் சேரலும், செழுமை யான அந்தத் திருவாரூர்ப் பதியில் சேர்ந்து திரும்பும்படி சேர்ந்தால் பொழுதானது போய்விடும் என எண்ணி அதனை விடுத்து, அங்கே அணைந்த விளக்கிற்கு நெய் பெறுதலை வேண்டி ஓர் இல்லத்துக்குள் புகவும், அது சமணரின் இல்லமாய் விளங்கியது. அங்கு அவர்கள் சொல்வாராகி,

1875. "கையில் விளங்கும் தீயை ஏந்திய சிவபெரு மானுக்கு விளக்கு மிகையானது. விளக்குக்கு நெய் இங்கு இல்லை! நீவீர் விளக்கு எரிப்பீரானால் நீரை மொண்டு எரிப்பீராக!" என்று திருத்தொண்டர்க்குக் கூறினர். "தெளிவில்லாமல் ஒரு பொருளே பொய்யும் மெய்யுமாகும்" என்ற கொள்கை மேற்கொண்டு நடக்கும் குற்றமுடைய நெறியையுடைய அந்தச் சமணர்.

1876. மேற்கண்ட வண்ணம் சமணர் மதியாமல் சொன்ன சொல்லைக் கேட்டுப் பொறுத்துக் கொள்ள இயலாதவராகி அப்போதே மனத்தில் பொருந்தும் வருத்தத் துடன், அங்கிருந்து நீங்கிச் சென்று, பிறையைச் சூடிய மணம் வீசும் கொன்றை மலரை அணிந்த சடையையுடைய சிவபெருமானின் கோயில் முன்பு சேர்ந்து, உள்ளம் உருகும் அன்பர் பணிந்து வீழ்ந்தார். அச்சமயத்தில் வானத்தி னின்றும் ஒரு திருவாக்குத் தோன்றியது.

Koviloor Digital Library

1877 வந்த கவலை மாற்றும்இனி மாறா விளக்கு
பணிமாற
இந்த மருங்கில் குளத்துநீர் முகந்து கொடுவந்
தேற்றும் என
அந்தி மதியம் அணிந்தபிரான் அருளால் எழுந்த
மொழிகேளாச்
சிந்தை மகிழ்ந்து நமிநந்தி அடிகள் செய்வ
தறிந்திலரால்.

1878 சென்னி மிசைநீர் தரித்தபிரான் அருளே சிந்தை
செய்தெழுவார்
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு நாதர் நாமம்
நவின்றேத்தி
அந்நீர் முகந்து கொண்டேறி அப்பர்கோயில்
அடைந்து அகலுள்
முந்நீர் உலகம் அதிசயிப்ப முறுக்குந் திரிமேல்
நீர்வார்த்தார்.

1879 சோதி விளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட்
டெழுந்தது அது நோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார் கோயில் அடைய
விளக்கேற்றி
ஏதம் நினைந்த அருகந்தர் எதிரே முதிருங்
களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார்
நாடறிய.

1880 நிறையும் பரிசு திருவிளக்கு விடியு மளவும்
நின்றெரியக்
குறையுந் தகளி களுக்கெல்லாங் கொள்ள வேண்டும்
நீர்வார்த்து
மறையின் பொருளை அருச்சிக்கும் மனையின்
நியதி வழுவாமல்
உறையும் பதியின் அவ்விரவே அணைவார்
பணிவுற்றொருப் பட்டார்.

Koviloor Digital Library

1877. "உனக்கு உண்டான கவலையை மாற்றிக் கொள்ளும். இனி இடைவிடாமல் திருவிளக்குப் பணியைச் செய்வதற்குப் பக்கத்தில் உள்ள இந்தக் குளத்தின் நீரை முகந்து கொணர்ந்து விளக்கை ஏற்றுவாயாக!" என்று மாலைக் காலத்தில் தோன்றும் பிறைச் சந்திரனை அணிந்த சிவபெருமானின் அருளால் எழுந்த சொல்லைக் கேட்டு நமிநந்தி அடிகள் மனம் மகிழ்ந்து செய்வதறியாமல்நின்றார்.

1878. தலையில் கங்கையை அணிந்த சிவபெருமானின் அருளை எண்ணிய வண்ணம் எழுவாராகி நல்ல நீரையுடைய அந்தக் குளத்தில் புகுந்து இறைவரின் திருநாமமான பெருமந்திரத்தைக் கூறித் துதித்த வண்ணம் அந்தக் குளத்து நீரை மொண்டு எடுத்துக் கொண்டு மேல் ஏறி அப்பரின் அரன்நெறிக் கோயிலை அடைந்து, கடல் சூழ்ந்தவுலகத்தார் வியந்து காணும்படி, அகலுள் முறுக்கிய திரியின் மீது அந்நீரை வார்த்தார்.

1879. அந்த அகல் விளக்கு ஒன்றில் தீயை ஏற்றுதலும் அது சுடர் விட்டு மேல் நோக்கி எழுந்து எரிந்தது. அதைப் பார்த்து ஆதி முதல்வரான அரனெறியப்பரின் திருக்கோயில் முழுவதும் எங்கும் திருவிளக்குகளை ஏற்றுவித்துக் குற்றமே நினைந்து நிந்தை கூறிய சமணர்களின் எதிரில் மிக்குப் பெருகிய மகிழ்ச்சியுடன் இறைவரின் திருவருளால் நாடு முழுதும் அறியுமாறு நீரை வார்த்துத் திருவிளக்கை எரித்தார்.

1880. விடியும் வரை திருவிளக்குகள் அணையாமல் நின்று எரியும் பொருட்டு, எரிவதால் விளக்கின் நெய்யான நீர் குறையும் அகல்களில் எல்லாம் நிறையும் தன்மையினால் எரியும் தன்மைக்கும் அகலின் அளவுக்கும் ஏற்றவாறு கொள்ளத்தக்க நீரை விளக்கு நெய்யாய் வார்த்து, வேதப் பொருளான சிவபெருமானைத் தம் இல்லத்தில் வைத்துப் பூசனை செய்யும் நியதி தவறாமல் தாம் வாழும் 'ஏமப்பேறு' என்னும் ஊரில் அன்றைய இரவே சேர்பவராய், இறைவரைத் தொழுது புறப்பட்டார்.

Koviloor Digital Library

1881 இரவு சென்று தம்பதியில் எய்தி மனைப்புக்
கென்றும் போல்
விரவி நியமத் தொழில்முறையே விமலர் தம்மை
அருச்சித்துப்
பரவி அமுது செய்தருளிப் பள்ளி கொண்டு புலர்
காலை
அரவம் அணிவார் பூசைஅமைத் தாரூர் நகரின்
மீண்டணைந்தார்.

1882 வந்து வணங்கி அரனெறியார் மகிழுங் கோயில்
வலங் கொண்டு
சிந்தை மகிழப் பணிந்தெழுந்து புறம்பும் உள்ளுந்
திருப்பணிகள்
முந்த முயன்று பகலெல்லாம் முறையே செய்து
மறையவனார்
அந்தி அமையத்து அரியவிளக்கெங்கும் ஏற்றி
அடிபணிவார்.

1883 பண்டு போலப் பலநாளும் பயிலும் பணிசெய்
தவரொழுகத்
தண்டி அடிக ளால்அமணர் கலக்கம் விளைந்து
சார்வில் அமண்
குண்டர் அழிய ஏழுலகும் குலவும் பெருமை நிலவிய
தால்
அண்டர் பெருமான் தொண்டர் கழல் அமரர்
பணியு மணியாரூர்.

1884 நாத மறைதேர் நமிநந்தி அடிக ளார்நற்
றொண்டாகப்
பூத நாதர் புற்றிடங்கொள் புனிதர்க் கமுது
படிமுதலாம்
நீதி வளவன் தான்வேண்டும் நிபந்தம் பலவும்
அரியணையின்
மீது திகழ இருந்தமைத்தான் வேதா கமநூல் விதி
விளங்க.

Koviloor Digital Library

1881. அன்றிரவே சென்று தம் நகரில் சேர்ந்து மனையுள் புகுந்து நாள்தோறும் தாம் செய்வதைப் போல் பொருந்தி நியமமாகச் செய்யும் பூசைமுறைச் செயல்களின் முறைப்படியே விமலரைப் பூசித்துப் போற்றிப் பின்பு திருவமுது செய்தருளிப் பள்ளி கொண்டு, விடியலில் எழுந்து, பாம்பை அணிந்த இறைவரின் பூசை நியமத்தை முடித்துக் கொண்டு, திருவாரூர்த் திருநகரத்தை மீண்டும் வந்து அடைந்தார்.

1882. திருவாரூர் வந்து வணங்கி அரன்நெறியப்பர் விரும்பி விளங்க வீற்றிருக்கும் கோயிலை வலமாக வந்து மன மகிழ்ச்சியுடன் கீழே விழுந்து வணங்கிப் பணிந்து எழுந்து, கோயிலின் உள் பக்கத்திலும் வெளிப் பக்கத்திலும் செய்யக்கூடிய பல பணிகளையும் முதலில் செய்து அந்த நாளில் பகற்காலத்தில் முழுமையும் முறைமைப்படி செய்து முடித்து அந்தணரான நமிநந்தியடிகள் மாலைக் காலம் வர அப்போது அரிய திருவிளக்குகளை ஏற்றி அடி பணிவாராய் ஆனார்.

1883. முன்பு போலவே பல நாள்களிலும் பொருந்தும் பணிகள் செய்து அவர் ஒழுகி வந்தார். தண்டி அடிகளால் சமணர்களுக்குக் கலக்கம் சேர்ந்ததால் நற்சார்பு இல்லாத சமணர்களான கீழ்மக்கள் அழிந்தொழிந்தனர். தேவர் தலைவரான தியாகேசர் அடியார்களின் அடிகளைத் தேவர்கள் போற்றுதற்கு இடமான திருவாரூரில் ஏழ் உலகங்களும் போற்றும் பெருமை விளங்கியது.

(தண்டியடிகளால் சமணர் அழிந்ததைத் தண்டியடிகளின் புராணத்துள் அறியலாம்.)

1884. நாதத்தின் வடிவான வேதங்களைக் கற்றுத் தெளிந்த நமிநந்தியடிகளின் நல்ல தொண்டின் பயனாக பூதத் தலைவரான புனித இறைவர்க்கு நாள்தோறும் நிவேதனத்துக்குரிய திருவமுது படி முதலாகத் தான் வேண்டியபடியே நிவந்தங்கள் பலவற்றையும் வேதங்கள் ஆகமங்கள் முதலான நூல்களில் விதித்தவாறே விளங்கும்படி நீதியுடைய சோழர் தன் அரியணையில் வீற்றிருந்து அமைத்தார்.

Koviloor Digital Library

1885 வென்றி விடையார் மதிச்சடையார் வீதி விடங்கப் பெருமாள்தாம்
என்றும் திருவா ரூர்ஆளும் இயல்பின் முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ்செயலும் பங்குனியுத் திரமாந் திருநாள் உயர்சிறப்பும்
நின்று விண்ணப் பஞ்செய்த படிசெய் தருளும் நிலைபெற்றார்.

1886 இன்ன பரிசு திருப்பணிகள் பலவுஞ் செய்தே ஏழுலகும்
மன்னும் பெருமைத் திருவாரூர் மன்னர் அடியார் வழிநிற்பார்
அன்ன வண்ணந்திருவிளையாட் டாடி அருள எந்நாளும்
நன்மை பெருக நமிநந்தி அடிகள் தொழுதார் நாம்உய்ய.

1887 தேவர் பெருமான் எழுச்சிதிரு மணலிக் கொருநாள் எழுந்தருள
யாவ ரென்னா துடன்சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரும்
மேவ அன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங்
காவலாளர் ஓலக்கம் அங்கே கண்டு களிப்புற்றார்

1888 பொழுது வைகச் சேவித்துப் புனிதர் மீண்டுங் கோயில்புகத்
தொழுது தம்மூர் மருங்கணைந்து தூய மனையுட் புகுதாதே
இழுதும் இருள்சேர் இரவுபுறங் கடையில் துயில இல்லத்து
முழுதுந் தருமம் புரிமனையார் வந்துட் புகுத மொழிகின்றார்.

Koviloor Digital Library

1885. வெற்றி பொருந்திய காளையை உடையவரும் பிறைச் சந்திரனை அணிந்த சடையை உடையவரும் ஆகிய வீதி விடங்கப் பெருமான், என்றும் திருவாரூரினை ஆட்சி செய்யும் இயல்பின் முறையான திருவிளையாடல் பொருந்திய செயலையும், பங்குனி உத்தரமான திருநாளில் உயர்ந்த திருவிழாவையும் நின்று விழாக் கொண்டருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்ய அவ்வாறே விழாக் கொண்டருளும் நிலைமையையும் நமிநந்தியடிகள் பெற்றார்.

1886. நமிநந்தியடிகள் இவ்வாறு பற்பல திருப்பணிகளையும் செய்து ஒழுகினார். ஏழு உலகங்களிலும் நிறையும் பெருமையுடைய் திருவாரூர்ச் செல்வத் தியாகேசர் அடியார்களின் அன்பின் வழியே நிற்பவராதலின், அவர் விண்ணப்பித்த வண்ணமே திருவிளையாடல்களைக் கொண்டருளியவர். ஆதலின் நமிநந்தியடிகள் எந்நாளும் எல்லா நன்மைகளும் பெருக நாம் உய்யுமாறு அவரை வணங்கினர்.

1887. தேவரின் தலைவரான தியாகப் பெருமான் எழுச்சியாய் ஒரு நாள் திருமணலிக்கு எழுந்தருள, இவர் இன்னார் என்று கண்டறியாது ஒருங்கே கலந்து வணங்கி எல்லாக் குலத்தில் உள்ளவர்களும் உடன் கலந்து வந்து பொருந்த அடியாரான நமிநந்தி அடிகள் அவர்களுடன் கூடி வணங்கிச் சேர்ந்து தேவர்களின் காவலரான தியாகராசரின் திருவோலக்கத்தை அங்கே பார்த்து மகிழ்வு எய்தினார்.

(மணலி— திருவாரூர்க்கும் ஏமப்பேறூர்க்கும் அண்மையில் உள்ள ஓர் ஊர்.)

1888. பகல் பொழுது உள்ள வரையிலும் வணங்கிய வண்ணம் இருந்து இறைவர் திரும்பவும் தம் கோயிலுக்கு எழுந்தருளவும், அவரைத் தொழுது, தம் பதியினை அடைந்து தூய தம் திருமனைக்குள் புகாமல் இழுதைப் போன்ற செறிவான இருள உள்ள இரவில் இல்லத்தின் வெளியே உறங்கினார். அப்போது இல்லறங்கள் முற்றும் செய்யும் மனைவியார் வந்து நாயகரை உள்ளே வருமாறு சொல்வார் ஆனார்.

Koviloor Digital Library

1889 திங்கள் முடியார் பூசனைகள் முடித்துச் செய்யுங்
கடன் முறையால்
அங்கி தனைவேட் டமுதுசெய்து பள்ளி கொள்வீர்
என அவர்க்குத்
தங்கள் பெருமான் திருமணலிக் கெழுச்சி சேவித்
துடன் நண்ண
எங்கும் எல்லா ரும்போத இழிவு தொடக்கிற்றெனை
என்று.

1890 ஆத லாலே குளிர்த்தடுத்த தூய்மை செய்தே
அகம் புகுந்து
வேத நாதர் பூசனையைத் தொடங்க வேண்டும்
அதற்குநீ
சீத நன்னீர் முதலான கொண்டிங் கணைவாய்
எனச்செப்பக்
காதல் மனையார் தாமும்அவை கொணரு
மதற்குக்கடி தணைந்தார்.

1891 ஆய பொழுது தம்பெருமான் அருளா லேயோ
மேனியினில்
ஏயும் அசைவின் அயர்வாலா அறியோம் இறையும்
தாழாதே
மேய உறக்கம் வந்தணைய விண்ணோர் பெருமான்
கழல்நினைந்து
தூய அன்பர் துயில்கொண்டார் துயிலும் பொழுது
கனவின்கண்,

1892 மேன்மை விளங்குந் திருவாரூர்வீதி விடங்கப் பெரு
மாள்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
ஞான மறையோய் ஆரூரில் பிறந்தார் எல்லாம்
நங்கணங்கள்
ஆன பரிசு காண்பாய் என் றருளிச் செய்தங்
கெதிரகன்றார்.

Koviloor Digital Library

1889. ''பிறைச் சந்திரனைச் சூடிய முடியையுடைய சிவபெருமானின் பூசைகளை முடித்துச் செய்கின்ற கடமை முறைமைப்படி அக்கினி காரியமும் செய்து உறங்குவீராக?'' என்று அவருடைய மனைவியார் உரைத்தார். உரைக்க, அவருக்குத் ''தம் தலைவரான இறைவர் மணலிக்கு எழுந்தருளும் எழுச்சியை வணங்கி உடன் கலக்குமாறு எவ்விடத்தும் எல்லாரும் கலந்து வந்ததால் என்னை இழிவு தீண்டியது (எனக்கு இழிவு உண்டாகியது)'' என்று சொல்லி,

(நாயனார் பலருடனும் சேர்ந்ததால் தமக்குத் தாழ்வு — தீட்டு — வந்து விட்டதாக எண்ணினார். வந்தவர் பலருள் தூய்மையற்றவரும் இருப்பர், ஆதலால் இங்ஙனம் எண்ணினார். எண்ணியதால் பூசை செய்ய உள்ளே புகவும் இயலாமை ஏற்பட்டது.)

1890. ''ஆதலால் நீராடிப் பின்பு அடுத்தபடி தூய்மையைச் செய்த பின்னரே இல்லத்துக்குள் வந்து பூசையைச் செய்ய வேண்டும். எனவே, அதற்கு நீ குளிர்ந்த நீர் முதலியவற்றைக் கொணர்வாயாக!'' எனக் கூறினார், நமிநந்தி அடிகள். அவருடைய மனைவியாரும் அவற்றைக் கொண்டு வருவதற்கு விரைவாகப் போனார்.

1891. அச்சமயத்தில், தம் இறைவரின் அருளாலோ அல்லது அவரது உடலில் வழிகடந்து வந்த களைப்பாலோ, இன்ன காரணத்தால் என்று அறியோம்! சிறிதும் தாமதிக்காது உறக்கம் வந்து சேரத் தேவர் பெருமானை, சிவபெருமானின் அடிகளை நினைந்த வண்ணம் நமிநந்தியடிகள் உறக்கம் கொண்டார். அங்ஙனம் உறங்கிய போது அவரது கனவில்,

1892. பெருமை விளங்குவதற்கு இடமான திருவாரூர் வீதி விடங்கப் பெருமான், தாமே, பெருமை கொண்ட நமிநந்தியடிகளின் பூசனை ஏற்பதற்கு வருபவர் போல் எழுந்தருளிவந்து ''திருவாரூர்ப் பிறந்தவர் எல்லாம் ஞான மறையவராய் நம் சிவகணங்களான தன்மையை நாம் காண்பிக்க நீ காண்பாயாக!'' என அருளிச் செய்து அவர் எதிரே இருந்து மறைந்தருளினார்.

Koviloor Digital Library

1893 ஆதி தேவர் எழுந்தருள உணர்ந்தார் இரவர்ச்
சனை செய்யாது
ஏதம் நினைந்தேன் எனஅஞ்சி எழுந்த படியே
வழிபட்டு
மாத ரார்க்கும் புகுந்தபடி மொழிந்து விடியல்
விரைவோடு
நாத னார்தந் திருவாரூர் புகுத எதிர் அந்நகர்
காண்பார்.

1894 தெய்வப் பெருமாள் திருவாரூர்ப் பிறந்து வாழ்வார்
எல்லோரும்
மைவைத் தனைய மணிகண்டர் வடிவே யாகிப்
பெருகொளியால்
மொய்வைத் தமர்ந்த மேனியராம் பரிசு கண்டு
முடிகுவித்த
கைவைத் தஞ்சி அவனிமிசை விழுந்து பணிந்து
களிசிறந்தார்.

1895 படிவம் மாற்றிப் பழம்படியே நிகழ்வுங் கண்டு
பரமர்பால்
அடியேன் பிழையைப் பொருத்தருள வேண்டும்
என்று பணிந்தருளால்
குடியும் திருவா ரூரகத்துப் புகுந்து வாழ்வார்
குவலயத்து
நெடிது பெருகுந் திருத்தொண்டு நிகழச் செய்து
நிலவுவார்.

1896 நீறு புனைவார் அடியார்க்கு நெடுநாள் நியதி
யாகவே
வேறு வேறு வேண்டுவன எல்லாஞ் செய்து
மேவுதலால்
ஏறு சிறப்பின் மணிப்புற்றில் இருந்தார்
தொண்டர்க் காணியெனும்
பேறு திருநா வுக்கரசர் விளம்பப் பெற்ற
பெருமையினார்.

Koviloor Digital Library

1893. ஆதிதேவரான சிவபெருமான் மறைந்தருள நமிநந்தியடிகள் உணர்ந்தவராகி, "இரவில் செய்யும் பூசையைச் செய்யாமல் பிழைபட எண்ணினேன்!" என்று அஞ்சி, எழுந்தபடியே வணங்கி உள்ளே புகுந்து, வழிபட்டு, மனைவியாருக்கும் கனவில் நேர்ந்த செய்தியைத் தெரிவித்தார். விடியற்காலையில் விரைவாய் இறைவரின் திரு திருவாரூரில் புகுந்திட எதிரில் அத்திருவாரூர் நகரத்தைக் காண்பாரான அவர்,

1894. 'தேவர்களின் தலைவரான தியாகேசரின் திருவாரூரில் பிறந்து வாழ்பவர் எல்லாம் கரிய திருக்கழுத்தை உடைய சிவபெருமானின் திருவடிவத்தையே உடையவர்களாகிப் பெருகும் ஒளியால் திரண்ட மேனியை உடையவராய் விளங்கும் இயல்பைப், பார்த்துத் தலைமீது கூப்பிய கை தூக்கி வைத்து அஞ்சி நிலத்தில் படிய விழுந்து வணங்கி மிதவும் களிப்பை அடைந்தார்.

1895. முன் காட்டிய கோலத்தை மறைக்க, முன் இருந்தபடியே நிகழ்வதையும் பார்த்து, இறைவரிடம் "அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும்!" என்று வேண்டி வணங்கித் திருவருளால் தம் தலத்தினின்றும் திருவாரூரில் குடிபுகுந்து வாழ்வாரானார்; உலகத்தில் நெடிது பெருகும் தொண்டுகள் பலவற்றையும் நிகழும்படி செய்து வரலானார்.

1896. 'திருநீற்றினை அணியும் சிவபெருமானின் அடியார்களுக்கு நீண்ட காலமாக நியதியாக வேறு வேறாக வேண்டுவன பலவற்றையும் செய்தமையால், உயர்வாகிய சிறப்புடன் மணிப்புற்றை இடமாகக் கொண்டு வாழ்கின்ற இறைவரின் தொண்டர்க்கு ஆணிப் பொன்னாவார் இவர்' என்று பாராட்டும் பேறு திருநாவுக்கரசு பெருமானால் கூறப் பட்ட பெருமை உடையவராய்,

Koviloor Digital Library

1897 இன்ன வகையால் திருப்பணிகள் எல்லா உலகுந்
தொழச் செய்து
நன்மை பெருகும் நமிநந்தி அடிகள் நயமார்
திருவீதிச்
சென்னி மதியும் திருநதியும் அலைய வருவார்
திருவாரூர்
மன்னர் பாத நீழல்மிகும் வளர்பொற்சோதி
மன்னினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

1898 நாட்டார் அறிய முன்னாளில் நன்னாள் உலந்த
ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன்
தன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கண் தனிமா முதலை
வாய்நின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை மீளா வழியின்
மீட்பனவே.

நமிநந்தியடிகள் நாயனார் புராணம் முற்றிற்று

திருநின்ற சருக்கம் முற்றிற்று

இரண்டாம் காண்டம்
ஆறாம் வம்பறா வரிவண்டுச் சருக்கம்

34. திருஞானசம்பந்த நாயனார் புராணம்

1899 வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை
விளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு
பரவுவாம்.

Koviloor Digital Library

1897. நன்மைகள் பெருக விளங்கும் நமிநந்தி அடிகள் இங்ஙனம் எல்லாவுலகும் தொழும்படியாய்த் திருப்பணிகள் பலவற்றையும் செய்து, நலம் பொருந்தும் திருவீதியில், தலையில் பிறையும் கங்கையும் சூடும் இறைவரான திருவாரூர்த் தியாகப் பெருமானின் திருவடி நிழலில் வளர்கின்ற அழகிய சோதியுள் நிலைபெறச் சேர்ந்தார்.

சுந்தர மூர்த்தி நாயனார் துதி

1898. நாட்டில் உள்ள மக்கள் அறியும்படி முன் நாளில், ஐம்படைத்தாலியை அணிந்த மார்பையுடைய சிறிய மறையவர் மைந்தனைப் புக்கொளியூரில் தாளையுடைய பொய்கையில் தனித்த பெரிய முதலையின் வாயினின்றும் நல்ல நாளில் மீட்டவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவடிகளே தம்மை நினைவார்களை மீளா வழியினின்றும் மீட்பவையாம்!

நமிநந்தியடிகளின் புராணம் முற்றுப் பெற்றது

திருநின்ற சருக்கம் முற்றிற்று

இரண்டாம் காண்டம்
ஆறாம் வம்பறா வரிவண்டுச் சருக்கம்

34. திருஞான சம்பந்த நாயனார் புராணம்

1899. இவ்வுலகத்தில் வேத நெறிகள் தழைத்து ஓங்கவும், மேன்மையுடைய சைவத்துறைகள் நிலைபெற்று விளங்கவும், பூதங்களின் பரம்பரையான சைவ அடியார்கள் கூட்டம் தழைத்து விளங்கவும், தூய்மையான திருவாய் மலர்ந்து அழுதவரான குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றியருளிய திருஞானசம்பந்தரின் திருவடித் தாமரைகளைத் தலைமீது கொண்டு அவற்றின் துணையால் அப்பெருமான் செய்த திருத்தொண்டின் இயல்புகளை எடுத்துச் சொல்வோம்.

Koviloor Digital Library

1900 சென்னிவளர் மதியணிந்த சிலப்பணிசே வடியார்
தம்
மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு பொலிவெய்த நிலவிய
தால்
கன்னிமதில் மருங்குமுகில் நெருங்குகழு மலமூதூர்.

1901 அப்பதிதான் அந்தணர்தங் கிடைகள் அரு
மறைமுறையே
செப்பும்ஒலி வளர்பூகச் செஞ்சோலை புறஞ்சூழ
ஒப்பில்நகர் ஓங்குதலால் உலக்கடைநாள்
அன்றியே
எப்பொழுதும் கடல்மேலே மிதப்பதென இசைந்
துளதால்.

1902 அரிஅயனே முதல்அமரர் அடங்களழும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதணம் மீதெறிந்த திரை
வரைகள்
புரிசை முதல் புறஞ்சூழ்வ பொங்கோதங் கடை
நாளில்
வரிஅரவ மந்தரஞ்சூழ் வடம்போல வயங்குமால்.

1903 வளம்பயிலும் புறம்பணைப்பால் வாசப்பா
சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா மரைச்செவ்வித்
தடமலரால்
களம்பயில்நீர்க் கடல்மலர்வ தொருபரிதி எனக்கருதி
இளம்பரிதி பலமலர்ந்தாற் போல்பஉள இலஞ்சிபல.

1904 உளங்கொள்மறை வேதியர்தம் ஓமதூ மத்திரவும்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண்
பகலுமலர்ந்து
அளந்தறியப் பல்லூழி ஆற்றுதலால் அகலிடத்து
விளங்கியஅம் மூதூர்க்கு வேறிரவும் பகலுமிகை.

Koviloor Digital Library

1900. வளர்கின்ற தன்மை கொண்ட பிறைச்சந்திரனைத் தலையில் சூடியசிலம்பைச் சூடிய சிவபெருமானின் நிலைபெற்ற சைவத்துறையில் வழிவழியாய் வந்த குடியான சோழரின் காவிரியாறு வளம் செய்கின்ற நாடு பொலிவு பெறும்படி நிலைபெற்றுள்ளது, அழியாத மதிலின் பக்கத்தில் மேகங்கள் வந்து நெருங்கும் 'திருக்கழுமலம்' என்ற 'சீகாழி' என்ற பழைய பதியாகும்

(கழுமலம் — சீகாழியின் பன்னிரண்டு பெயர்களுள் ஒன்று.)

1901. அந்தணச் சிறுவர் அரிய மறைகளை ஓதுகின்ற ஒலியுடன் வளர்கின்ற பாக்கு மரங்களின் செழுமையான சோலைகள் புறத்தில் சூழ ஒப்பில்லாமல் ஓங்குதலால் அந்தக் கழுமலம் என்ற நகரமானது ஊழிக்காலத்தில் மிதப்பது மட்டுமே அல்லாது எந்தக் காலத்திலும் கடலில் மிதப்பதாகும் என்ற தோற்றத்தைப் பொருந்தியுள்ளதாகும்.

1902. திருமாலும் நான்முகனும் முதலிய தேவர்கள் அடங்குமாறு மேலே எழும் பல நீர்ப்பெருக்குகள் விரிந்த கதிர்களையுடைய பெரிய மணிகள் அழுத்திய மேடைகளின் மீது வீசிய அலைகளால் உண்டான கீற்றுகள், புறமதிலின் பக்கத்தில் வரிசையாய் அமைந்திருப்பவை பொங்கும் பாற்கடலைக் கடைந்த காலத்தில் மந்தரமலையை வரிவரியாய்ச் சுற்றிய வாசுகி என்ற பாம்பின் வடத்தைப் போல் விளங்கும்.

1903: கரிய நீர் நிறைந்த கடலில் மலர்கின்ற ஒரு கதிரவன் என எண்ணி, வளம் மிக்க மணம் கொண்ட மருத நிலத்தின் புறத்தே மணம் கமழும் பசிய இலைகளிடையே நெருங்கிய இதழ்களுடன் விளங்கும் நீர்ப் பூவான செந்தாமரைமலர்கள் மலர்ந்ததால் இளஞாயிறு பல தோன்றினாற் போன்ற தோற்றம் கொண்டனவான பல நல்ல நீர்நிலைகள் அங்கு எங்கும் விளங்கின.

1904. மனத்தில் கொண்ட வேதநெறி ஒழுக்கத்தையுடையமறையவர் செய்யும் ஓமப்புகைகளின் படலங்களான இரவும், கிளர்ச்சி பெற்ற விபூதியின் ஒளியால் பொருந்திய நண்பகலுமாய் எக்காலத்தும் மிக்கு விளங்கி, எல்லை அளந்தறியப்படாத பல வழிகளிலும் செல்வதால், அகன்ற உலகத்தில் விளங்கிய அந்தப் பழைய ஊருக்கு வேறு இரவும் பகலும் வேண்டப்படாத மிகையாகும்.

Koviloor Digital Library

1905 பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்
கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரம் நீள்இலைக்கடையால் ஒழுகுதலால்
நெடிதவ்வூர்
மரங்களும்ஆ குதிவேட்குந் தகையவென மன்னுந்துள
தால்.

1906 வேலையழற் கதிர்படிந்த வியன்கங்குல் வெண்
மதியம்
சோலைதொறும் நுழைந்துபுறப் படும்பொழுது
துதைந்த மலர்ப்
பாலணைந்து மதுத்தோய்ந்து தாதளைந்து பயின்
றந்தி
மாலைஎழுஞ் செவ்வொளிய மதியம்போல் வதியு
மால்.

1907 காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற்
கடிகமழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருநுண் துகள் அணிந்து துளிவருகண்
ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம்
பாடுமால்.

1908 புனைவார்பொற் குழைஅசையப் பூந்தானை
பின்போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண் சுதை
ஒழுக்கும்
கனைவான முகில்கூந்தற் கதிர்செய்வட மீன்
கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ
மாடங்கள்.

Koviloor Digital Library

1905. பரந்த விளைவுடன் கூடிய வயல்களில் தோன்றிய சிவந்த தாமரை மலர் என்ற பொங்கிய தீயில், அவ்வயல் வரப்பில் வளர்ந்த தேமா மரத்தின் பழம் பிளந்ததால் வெளிப்படும் சாறான நறு நெய்யானது, உரிய மக்களே அன்றி. மரங்களும் வேள்வியைச் செய்யும் இயல் புடையன என்னும்படி அந்த வூர் விளங்கியது,

1906. கதிரவன் கடலில் மறைந்த பின்பு உண்டாகும் இரவில் தோன்றி விளங்கும் வெண்மையான சந்திரன், சோலைகள் தோறும் புகுந்து வெளிப்பட்டுத் தோன்றும் போது, நெருங்கிய மரங்களின் பக்கத்தில் சேர்ந்து அவற்றின் தேனில் தோய்ந்தும் மகரந்தங்களை அளாவியும் இங்ஙனம் நெடுநேரம் பயின்றதால் மாலையில் தோன்றும் சிவந்த ஒளியையுடைய சந்திரனைப்போல் தோன்றி விளங்கும்.

1907. அழகிய அந்த நகரத்தில் மணம் கமழும் தாமரையும், அந்தணர்களைப் போல், புற இதழ்களையும் நூலையும்தாங்கிக்கொண்டு தூய்மையுடைய நுண்மையான துகள்களை அணிந்து, துளித்து வருகின்ற நீர் ததும்பித் தேன் பொருந்த வரும் வண்டின் இசையால் இனிய சாம வேத கீதத்தைப் பாடும்.

1908. அணிகின்ற நீண்ட பொன்னால் ஆன குழைகள் காதில் அசைய, அழகிய பட்டுடையின் தானையினைப் பின் பக்கமாய்ச் செருகித் தமக்குரிய தொழில்களையுடைய தீ யுண்டாக்கும் வேதிகையினை மெழுக்குப் பொருந்தச் செய்து வெண்மை நிறமுடைய கோலம் இடுகின்று, ஒலி யினைப் பொருந்திய வானத்தில் எழும் மேகம் போன்ற கூந்தலையுடைய, ஒளியுடைய அருந்ததியின்கற்பு வாய்க்கப் பெற்ற இல்வாழ்க்கைத் துணையாய் விளங்கும் குலமகளிர் நிரம்பிய வளங்களால் மாளிகைகள் விளக்கம் கொண்டு விளங்கின.

Koviloor Digital Library

1909 வேள்விபுரி சடங்கதனை விளையாட்டுப் பண்ணை தொறும்
பூழியுற வகுத்தமைத்துப் பொன்புனைகிண் கிணி ஒலிப்ப
ஆழிமணிச் சிறுதேரூர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறார் நெருங்கியுள மணிமறுகு.

1910 வீடுசுடர்நீள் மணிமறுகின் வெண்சுதைமா ளிகை மேகம்
தொடுகுடுமி நாசிதொறுந் தொடுத்தகொடி சூழகங்குல்
உடுஎனுநாண் மலர்அலர உறுபகலிற் பலநிறத்தால்
நெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம்.

1911 மடைஎங்கும் மணிக்குப்பை வயலெங்கும் கயல்வெள்ளம்
புடைஎங்கும் மலர்ப்பிறங்கல் புறமெங்கும் மகப்பொலிவு
கிடைஎங்கும் கலைச்சூழல் கிளர்வெங்கும் முரல்அளிகள்
இடைஎங்கும் முனிவர்குழாம் எயிலெங்கும் பயில்எழிலி.

1912 பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

Koviloor Digital Library

1909. வேள்விகளில் பெரியோர் செய்யும் சடங்குகளைத் தாம் விளையாடும் இடங்களில் எல்லாம் மண்ணின் புழுதி பொருந்த அமைத்து, பொன்னால் ஆன கிண்கிணிகள் ஒலிக்கச் சக்கரம் பூட்டிய அழகிய சிறு தேர்களை ஊர்ந்து, அந்தத் தேர் ஊர்தலால் கிளம்பிய மண் தூசி படிய விளையாடும் சிறுவர் நெருங்கியுள்ளன தெருக்கள்.

1910. சுடர் விடுகின்ற நீண்ட மணிகள் பதித்த தெருக்களின் வெண்ணிறச் சுண்ணச் சாந்தால் ஆன மாளிகைகள், மேக மண்டலத்தைத் தொடும்படி நீண்ட நாசிகள் தோறும் கட்டிய கொடிகளால் இருள் பரவியுள்ள இரவில் விண்மீன்கள் என்னும் புதிய பூக்கள் பூப்பதற்குப் பொருந்திய பகற்பொழுதில் பல நிறங்களுடன் நீண்ட வானத்தில் தளிர்ப்பதைப் போன்று பக்கங்களில் எல்லாம் நெருங்கியுள்ளன.

1911. அந்த பதியின் நீர்மடைகளில் எங்கும் மணிகளின் குவியல்கள் உள்ளன. வயல்களில் எங்கும் நீர் வெள்ளத்துடன் கயல் மீன்களின் கூட்டம் உள்ளன. அங்குள்ள வயல்களின் பக்கங்களில் பூக்குவியல்கள் உள்ளன; அவற்றின் வெளியில் எங்கும் வேள்விகளின் பொலிவுகள் நிரம்பியுள்ளன. கிளர்ச்சியுடைய சோலைகளில் எங்கும் ஒலிக்கும் வண்டுகளின் கூட்டங்கள் உள்ளன. மதில்களில் எங்கும் தவழ்கின்ற மேகங்கள் உள்ளன.

1912. அந்தப் பதியானது பிரமபுரம், வேணுபுரம், புகலி, பெரிய வெங்குருகு, நீரினுள் ஒப்பில்லாது விளங்கும் திருத்தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், முன் வரும் புறவம், சண்பை நகர், வளரும் காழி, கொச்சைவயம், போற்றுகின்ற திருக்கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப் பெயர்களைக் கொண்டதாகும்,

Koviloor Digital Library

1913 அப்பதியின் அந்தணர்தங் குடிமுதல்வர்
ஆசில்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத்
திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத
விருதயர்என்று
இப்புவிவா ழத்தவஞ்செய் இயல்பினார்
உளரானார்.

1914 மற்றவர்தந் திருமனையார் வாய்ந்தமறை
மரபின்வரு
பெற்றியினார் எவ்வுலகும் பெறற்கரிய
பெருமையினார்
பொற்புடைய பகவதியார் எனப்போற்றும்
பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பால் கணவனார்
கருத்தமைந்தார்.

1915 மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த
கேண்மையினார்
அரவணிந்த சடைமுடியார் அடியலால் அறியாது
பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த
மேவுநாள்.

1916 மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம்
பொய்ம்மிகுத்தே
ஆதிஅரு மறைவழக்கம் அருகிஅரன் அடியார்பால்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா
தொழியக்கண்டு
ஏதமில்சீர்ச் சிவபாத விருதயர் தாம் இடருழந்தார்.

Koviloor Digital Library

1913. அந்தப் பதியில் அந்தணர்களின் குடியில் வந்த மூதன்மை உடையவரும், குற்றம் நீக்கும் வேதங்களில் கூறிய வண்ணம் ஒழுகும் ஒழுக்கத்தை உடையவரும் கவுணியர் கோத்திரம் மேன்மை அடையும்படி செப்பும் கோத்திரத்தின் உட்பிரிவு வழியிலே தோன்றியவரும் 'சிவபாத இருதயர்' என்று இந்த உலகம் வாழும் பொருட்டுத் தவம் செய்யும் இயல்பையுடையவருமாய் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

1914. அவருடைய மனைவியார் வாய்ப்புடைய அந்தணர் மரபில் வந்தவர். எல்லாவுலகமும் பெறுவதற்கு அரிய பெருமையையுடையவர். அழகுடைய 'பகவதியார்' என்று போற்றப்படுகின்ற பெயரையுடையவர். கற்பால் மேன்மையுறும் சிறப்புப் பற்றித் தம் கணவரின் கருத்துக்கு ஏற்ப அமைந்து ஒழுகுபவர்.

1915. தாய்வழி தந்தைவழி என்ற இரண்டு மரபும் வைதிக சைவ நெறிவந்த உரிமையுடைய அந்த இருவரும் பாம்பை அணிந்த சடையையுடைய சிவபெருமானின் திருவடிகளை அன்றி மற்றொன்றையும் பொருள் என்று உணராமல், நுதிக்கத் தக்க திருநீற்றின் அன்பிலே பாது காக்கும் தன்மையுடையவராய், வேத விதிப்படி வரும் மனை வாழ்க்கைத் திறத்தில் எல்லாரும் வியப்படையும்படி வாழ்ந்து வரும் நாட்களில்,

1916. உலகத்தில் கீழ் மக்களான சமணர் பௌத்தர் என்ற இவர்களின் பொய்ச் சமயங்கள் மிகுதியாய் வளர்ந்து அதனால் பழைய அரிய மறைவழக்கங்கள் சுருங்கி, அடியார்களிடத்தில் திருநீற்றுச் சாதனத்தின் விளக்கமானது போற்றப் பெறாது மறையக்கண்டு குற்றம் இல்லாத சிறப்புடைய சிவ பாத இருதயர் பெரிதும் வருத்தம் அடைந்தார்.

Koviloor Digital Library

1917 மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான்
விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந்
தவம்புரிந்தார்.

1918 பெருத்தெழும்அன் பாற்பெரிய நாச்சியா
ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவும் காதலியார்
மணிவயிற்றில்
உருத்தெரிய வரும்பெருப்பே றுலகுய்ய உளதாக.

1919 ஆளுடையா ளுடன்தோணி அமர்ந்தபிரான்
அருள்போற்றி
மூளுமகிழ்ச் சியில்தங்கள் முதல்மறைநூல்
முறைச்சடங்கு
நாளுடைய ஈரைந்து திங்களினும் நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து 'பேரின்பங்
கிளர்வுறுநாள்.

1920 அருக்கன்முதற் கோள்அனைத்தும் அழகியஉச்
சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப் பேணியநல்
லோரைஎழ
திருக்கிளரும் ஆதிரைநாள் திசைவிளங்கப்
பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமும்
தழைத்தோங்க.

Koviloor Digital Library

1917. இல்வாழ்க்கையில் இன்பம் அளிக்கும் மகவைப் பெறும் விருப்பத்தைக் கொள்பவர் அந்த நிலையில் சிறந்து நின்று, சிவபெருமானின் சூடும் திருவடிக் கமலங்களை நினைத்து முன்னர்ப் பர சமயங்களின் தீமையைப் போக்கித், திருநீற்றின் விளக்கத்தை மிகுதிப் படுத்தும் அழகிய அணிகளை அணியும் திருமகனைப் பெறும் பொருட்டுத் தவத்தைச் செய்தார்.

1918. பெருகிய எழும் அன்பால் பெரிய நாயகி அம்மையாருடன் புகலியில் திருத்தோணியில் வீற்றிருந்தவரான தோணியப்பரின் சேவடிகளின் கீழ் வணங்கிக் கணவரின் கருத்து முற்றுப் பெறும்படி பரவும் பகவதியாரின் மணி வயிற்றிடத்தில் உருவம் தெரிய வரும் கருப்பமான பெரும் பிள்ளைப் பேறு உலகம் உய்ய உள்ளதாயிற்று. அவ்வாறு ஆகிட,

1919. ஆளும் தன்மையுடைய பெரியநாயகியுடன் தோணியப்பரின் திருவருளையும் துதித்து, கருக்கொண்ட காரணத்தினால் மனத்தில் பெருகும், மகிழ்ச்சியுடன், தங்களுக்குரிய வேதத்தில் விதித்த முறைப்படி செய்யும் சடங்குகளையெல்லாம் நாள் எண்ணிக்கையுடைய பத்து மாதங்களிலும் நன்மை உண்டாகுமாறு உறவினர் கூடிச் செய்து பெரிய இன்பம் உண்டாகும் அத்தகைய நாட்களில்,

1920. சூரியன் முதலான கோள்கள் எல்லாம் அவ்வவற்றுக்குரிய நியமமான அழகிய உச்சவிடங்களில்பெருக்கவும், வலிமையுடன் நிற்கவும், சோதிட நூலார் விரும்பும் வேளை வரவும், செம்மை மிக்க திருவாதிரை நாள் திசை விளக்கம் அடையவும், மற்றச் சமயங்களின் தருக்கிய நிலை ஒழியவும், முதல்மையான சைவத்துறையும் வைதிகத் துறையும் தழைத்து ஓங்கவும்,

Koviloor Digital Library

1921 தொண்டர்மனம் களிசிறப்பத் தூயதிரு நீற்றுநெறி
எண்டிசையும் தனிநடப்ப ஏழுலகும் குளிர்தூங்க
அண்டர்குலம் அதிசயிப்ப அந்தணர்ஆ
குதிபெருக
வண்டமிழ்செய் தவம்நிரம்ப மாதவத்தோர்
செயல்வாய்ப்ப.

1922 திசையனைத்தின் பெருமைஎலாந் தென்றிசையே
வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின்
துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும்
நிலைபெருக.

1923 தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை
தலைமைபெற
நாளுடைய நிகழ்காலம் எதிர்கால நவைநீங்க
வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ
ஆளுடைய திருத்தோணி அமர்ந்தபிரான்
அருள்பெருக.

1924 அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம்
பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல்
லூழிதொறும்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா
சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதா
ரஞ்செய்தார்.

Koviloor Digital Library

1921, தொண்டர்களின் உள்ளம் களிப்படையவும் தூய திருநீற்றின் நெறியானது எட்டுத்திசைகளிலும் ஒப்பில்லாதபடி நடக்கவும், ஏழ் உலகங்களில் உள்ள உயிர்கள் எல்லாம் மகிழ்ச்சியில் திளைக்கவும், தேவர்கள் குலங்கள் அதிசயத்துடன் நோக்கவும், அந்தணர்களின் வேள்விகள் பெருகவும், வண்மையுடைய தமிழ் செய்த தவம் முற்றுப் பெறவும், பெரிய தவத்தைச் செய்பவர்களின் செயல் முற்றுப் பெறவும்,

1922. எட்டுத்திசைகளின் பெருமைகள் எல்லா வற்றையும் தென்திசையின் பெருமையே வெற்றி கொண்டு மேன்மை அடையவும், மேல் உலகமும் மற்ற உலகமும் எஞ்பனவற்றை இம்மண்ணுலகமே சிறப்படைந்து வெல்ல வும், அசைதல் இல்லாத செழுந்தமிழே மற்ற மொழித் துறைகளின் வழக்குகளை வெல்லவும், இசையறிவும் மெய் யறிவும் பொருந்தும் நிலை பெருகவும்,

1923. முயற்சியுடைய மக்கள் படைப்பு என்ற நான்முகனின் படைப்புத் தொழில் குணமானது தலைமைத் தன்மை பெறவும், காலக் கூறுபாட்டில் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் வருகின்ற குற்றங்கள் நீங்கவும், நம்மை ஆள்கின்ற திருத்தோணியில் எழுந்தருளும் சிவபெருமான் அருளானது பெருகவும்,

1924. தீயநெறியைப் பெருகச் செய்கின்ற புல்லறிவை யுடைய சமணசமயம் முதலிய பிற சமயங்களான பிறவியைப் பெருக்கும் குற்றம் - பொருந்திய நெறிகள் பாழ்படவும், நல்ல ஊழிக்காலந்தோறும் தான் அழியாமல் மிதந்து நின்று தவநெறியைப் பெருகச் செய்கின்ற 'சண்பை' என்ற நகரில், குற்றம் அற்ற சரம் அசரம் என்ற உயிர்களில் எல்லாம் சிவத்தன்மை (நன்மை) பெருகச் செய்யும் ஆளுடைய பிள்ளையாரான ஞானசம்பந்தர் அவதாரம் செய் தருளினார்.

(சண்பை—சீகாழி. சரம்—இயங்குபவை; அசரம்—இயங்காதவை)

Koviloor Digital Library

1925 அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரி னோரும்அயல் எய்தும் இடையின்றி
மெய்ப்படு மயிர்ப்புளகம் மேவிஅறி யாமே
ஒப்பில்களி கூர்வதொர் உவப்புற உரைப்பார்.

1926 சிவனருள் எனப்பெருகு சித்தமகிழ் தன்மை
இவணிது நமக்குவர எய்தியதென் என்பார்
கவுணியர் குலத்தில்ஒரு காதலன் உதித்தான்
அவன்வரு நிமித்தம்இது என்றறி சயித்தார்.

1927 பூமுகை அவிழ்ந்துமணம் மேவுபொழில் எங்கும்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாம்
தூமருவு சோதிவிரி யத்துகள்அடக்கி
மாமலய மாருதமும் வந்தசையும் அன்றே.

1928 மேலைஇமை யோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவும்
சீலமறை யோர்களுடன் ஓமவினை செய்தார்.

1929 பூதகண நாதர்புவி வாழஅருள் செய்த
நாதன்அரு ளின்பெருமை கண்டு நலம் உய்ப்பார்
ஓதுமறை யோர்பிறி துரைத்திடினும் ஓவா
வேதமொழி யால்ஒலி விளங்கிஎழும் எங்கும்.

Koviloor Digital Library

1925. அச்சமயத்தில் அழகான அக்கழுமல நகரத்தில் இருப்பவர்கள் யாவரும் பக்கங்களில் பொருந்தும் வேறு இடம் இன்றி, உடம்பில் கூடும் மயிர்ப்புளகம் பொருந்தித் தம்மை அறியாமலே ஒப்பில்லாத மகிழ்ச்சி மிகுவதான ஓர் உவகை தோன்றக் கூறலானார்.

(கழுமலம்—சீகாழி)

1926. 'சிவபெருமானது திருவருளைப் போல் பெருகும் மனம் மகிழ்கின்ற தன்மை இங்கு இவ்வாறு நமக்கு வருவதற்குக் காரணம் 'யாது?' என வினவுவார், 'கவுணியர் கோத்திரத்தில் ஒரு மகன் தோன்றினான். அங்ஙனம் அவன் அவதரித்ததன் நந்நிமித்தம் இதுவாகும்' என்று மனம் தெளிந்து அதிசயித்தார்.

1927. பூக்கள் மொட்டு அலர்வதால் மணம் பொருந்திய சோலைகள் எங்கும் தேன் பொருந்திய மகரந்தம் பரவுவதால் நெருங்கிய திசைகளில் எல்லாம், தூய்மையுடைய ஒளி விரியுமாறு அத்துகளை அடக்கி, பெருமையுடைய பொதிய மலையினின்றும் வருகின்ற தென்றல் காற்றும் அப்போதே வந்து மென்மையாக வீசும்.

1928. விண் உலகத்தில் உள்ள தேவர்களும் விருப்பத்துடன் ஒழிவில்லாது பூஞ்சோலைகள் பூக்களைச் சொரிவதைப் போல் மலர் மழையைப் பொழிந்து நிலவுலகத்தில் வந்து வளரும் சீகாழி தலத்தில் பொருந்திய ஒழுக்கமுடைய அந்தணருடன் கூடி வேள்விச் செயல்களைச் செய்தனர்.

1929. பூதகணங்களுக்குத் தலைவரான சிவகணங்கள் உலகம் உய்யும் பொருட்டு ஞானசம்பந்தரை அவதரிக்கச் செய்யச் சிவபெருமானின் திருவருளின் பெருமையைக் கண்டு ஞானசம்பந்தரைப் பேணுதல் முதலியவற்றைச் செய்தனர். வேதம் ஓதுபவர் மற்ற சொற்களைச் சொல்வாராயினும் இடைவிடாத வேத மந்திரங்களால் வருகின்ற ஒலியாகவே எங்கும் விளங்கும்.

Koviloor Digital Library

1930 பயன்தருவ பஃறருவும் வல்லிகளும் மல்கித்
தயங்குபுன லுந்தெளிவ தண்மையுடன் நண்ணும்
வயங்கொளி விசும்புமலி னங்கழியும் மாறா
நயம்புரிவ புள்ளொலிகள் நல்லதிசை எல்லாம்.

1931 அங்கண்விழ விற்பெருகு சண்பைஅகல் மூதூர்ச்
சங்கபட கங்கருவி தாரைமுத லான
எங்கணும் இயற்றுபவ ரின்றியும் இயம்பும்
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம்.

1932 இரும்புவனம் இத்தகைமை எய்தஅவர் தம்மைத்
தருங்குல மறைத்தலைவர் தம்பவன முன்றில்
பெருங்களி வியப்பொடு பிரான்அருளி னாலே
அருந்திரு மகப்பெற அணைந்தஅணி செய்வார்.

1933 காதல்புரி சிந்தைமகி ழக்களி சிறப்பார்
மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார்
சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார்.

1934 மாமறை விழுக்குல மடந்தையர்கள் தம்மில்
தாமுறு மகிழ்ச்சியொடு சாயல்மயில் என்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகள் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார்.

Koviloor Digital Library

1930. எல்லாத் திக்குகளிலும் பலவகையான மரங்களும் கொடிகளும் பெருகித் தம்தம் பயன்களைத் தர லாயின. கலக்கமுடைய நீரும் தெளிவுடனும் குளிர்ச்சி யுடனும் விளங்கின. விளங்கும் ஒளிகளையுடைய வானமும் களங்கம் நீங்கின. மாறுபாடற்ற நன்மையையே பறவை களின் ஒலி செய்வன ஆயின. இங்ஙனம் எல்லாம் நன்மையன வாய் விளங்கின.

1931. அழகிய இடங்கள்தோறும் இவ்வாறான விழாவின் மங்கலங்களால் பெருகும் சீகாழி என்ற பழைய ஊரில் உள்ள சங்குகள், ஒருகண் பறை, வேறு நரம்புக் கருவிகள், தாரை சின்னம் முதலான இசைக்கருவிகள் எங்கும் இயக்குபவர் இல்லாமலேயும் ஒலிக்கின்ற தெருக் களில் எல்லாம் மங்கலமான பேரொலி நிறைந்தன.

1932. இந்தப் பெரிய வுலகமானது இத்தகைய தன்மையை அடைய, அந்த ஞானசம்பந்தரைப் பெற்ற அந்தணரின் தலைவரான சிவபாத இருதயர் தம் இல்லத் தின் முன் பக்கத்தில் பெருங்களிப்பும் வியப்பும், பொருந்த இறைவர் அருளால் அரிய அழகிய மகனைப் பெறப் பொருந்திய அணிகளைச் செய்பவராய்,

1933. விருப்பம் செய்கின்ற தம் மனமகிழ்தல் காரண மாய்க் களிப்படைவார். மேலே பூசப்படுகின்ற நெய்யாட்டு விழாச் செய்து மகிழ்ச்சி அடைவார். அவர்தம் அவதாரம் காரணமாய்ச் செய்யும் மங்கலச் செயல்களின் ஆரவாரம் பெருகச் சாதகருமம் முதலான பல சடங்குச் செயல் களையும்,

1934. சிறந்த அந்தணர் குல மங்கையர்கள் கலந்து பெரு மகிழ்ச்சியுடன், சாயலையுடைய மயிலைப் போல் தூய அழகுடைய விளக்குகளுடனே ஒளியுடைய குழை முதலிய அணிகள் மின்ன அழகான தம் மாளிகையை அழகு பெறச் செய்வார்.

Koviloor Digital Library

1935 சுண்ணமொடு தண்மலர் துதைந்ததுகள் வீசி
உண்ணிறைவி ருப்பினுடன் ஓகையுரை செய்வார்
வெண்முளைய பாலிகைகள் வேதிதொறும்
வைப்பார்
புண்ணியந றும்புனல்கொள் பொற்குடம்
நிரைப்பார்.

1936 செம்பொன்முத லான பல தானவினை செய்வார்
நம்பர்அடி யார்அமுது செய்யநலம் உய்ப்பார்
வம்பலர்ந றுந்தொடையல் வண்டொடு
தொடுப்பா
நிம்பமுத லானகடி நீடுவினை செய்வார்.

1937 ஐயவி யுடன்பல அமைத்தபுகை யாலும்
நெய்யகில் நறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழல் ஆகுதி விழுப்புகையி னாலும்
தெய்வமணம் நாறவரு செய்தொழில் விளைப்பார்.

1938 ஆயபல செய்தொழில்கள் அன்றுமுதல் விண்ணோர்
நாயகன் அருட்பெருமை கூறுநலம் எய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி ஐயிரு தினத்தினும் விளைத்தார்.

1939 நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்
சேமவுத யப்பரிதி யில்திகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி என்னத்
தூமணி நிரைத்தணிசெய் தொட்டில்அமர்
வித்தார்.

Koviloor Digital Library

1935. சுண்ணப் பொடிகளுடன் குளிர்ந்த மலர்த் தாதுக்களை வீசி உள்ளத்தில் நிறைந்த விருப்பத்துடன் அவரது அவதாரச் செய்தியை மகிழ்வுடன் எங்கும் உரைப்பர். வெண்மையான முறைகளுடன் கூடிய முளைப் பாலிகைளை மேடை தோறும் வைப்பார்கள். மணமுடைய புண்ணியப் புதுநீர் கொண்ட புதுக் குடங்களை வரிசையாய் வைப்பார்கள்.

1936. செம்பொன் முதலியவற்றைத் தானம் செய்வார்கள். சிவனடியார்கள் அமுது செய்தற்கு உரிய நலங்கள் பலவற்றை நாடிச்செய்வார்கள். புதிதாய்மலர்ந்த மணமலர் மாலைகளை அவற்றில் மொய்க்கும் வண்டுகளுடன் சேர்த்துக் கட்டுவார்கள். வேம்பு செருகுதல் முதலான காப்புத் தொழிலைச் செய்வார்கள்.

1937. வெண்கடுகு முதலானவற்றைச் சேர்த்து அமைத்த புகையினாலும் நெய்யுடன் நல்ல மணமுடைய அகில் துண்டுகளால் உண்டாக்கப்பட்ட புகையாலும் விருப்பம் அளிக்கும் வேள்வித்தீயின் சிறந்த புகையாலும் கடவுள் தன்மை கமழ்கின்ற செயலைச் செய்வார்கள்.

1938. அத்தகைய பற்பல செயல்களையெல்லாம் தேவரின் தலைவரான சிவபெருமான் திருவருளின் பெருமை மிகுமாறு நன்மை பொருந்துமாறு தூய்மை வேதங்களிலும் அவற்றுடன் தொடர்புடைய கற்ப சூத்திரம் முதலிய ஒழுக்க நூல்களிலும் பொருந்திய விதி முறைப்படி அவதாரம் உண்டான நாள் தொட்டுப் பத்து நாட்களிலும் விளைப்பார்கள்.

1939. பெயர் சூட்டும் அழகிய சடங்கினை அவதார நாளுக்குப் பொருந்தும்படி செய்வித்து, ஆளுடைய பிள்ளையார் எனப் பெயர் சூட்டிச் சேமம் செய்யத் தோன்றும் இளஞாயிற்றைப் போல் விளங்கும் ஞானசம்பந்தப் பெருமானைத் தாமரையில் எழுந்தருளியிருக்கும் தனி முதலான (முருகப் பெருமானான) குழந்தைப் போலத் தூய மணிகள் வரிசையாய் அழுத்தி அழகு செய்யப்பட்ட தொட்டிலில் இட்டனர். (தனிமுதல் குழந்தை— பிரமன் எனவும் உரைப்பர்.)

Koviloor Digital Library

1940 பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பால்
அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தருமறைவி யார் பரமர் தாள்பரவும் அன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார்.

1941 ஆறுலவு செய்யசடை ஐயர்அரு ளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரிய வர்க்கு
வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியில் நிறுத்திநிறை வித்தார்.

1942 தாயர்திரு மடித்தலத்தும் தயங்குமணித்
தவிசினிலும்
தூயசுடர்த் தொட்டிலினும் தூங்குமலர்ச்
சயனத்தும்
சேயபொருள் திருமறையும் தீந்தமிழும் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு நலம்பலபா ராட்டினார்.

1943 வருமுறைமைப் பருவத்தில் வளர்புகலிப்
பிள்ளையார்
அருமறைகள் தலைஎடுப்ப ஆண்டதிரு முடிஎடுத்துப்
பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசையோம்
என்பார்போல்
திருமுகமண் டலமசையச் செங்கீரை ஆடினார்.

Koviloor Digital Library

1940. பெரிய இமயமலை மன்னன் பெற்ற கொடி போன்ற பார்வதியம்மையாரின் பேணும் திருக்கொங்கையில் உள்ளதான இனிய பாலுடன் அரிய சிவஞானத்தைக் குழைத்து அமுது செய்தருளவுள்ள அக்குழந்தையாரைப் பெற்ற அந்தணர் குல மாதரான பகவதியார் சிவபெரு மானின் திருவடிகளைப் போற்றும் அன்பே தம் திருக்கொங் கையிலே பாலாய்ச் சுரக்க அதனைத் திருவமுது செய்தருளப் பால் உண்பித்தார்.

1941. கங்கையாறு தங்கப் பெற்ற சடையையுடைய சிவபெருமான் திருவருளால், உலகத்துக்கு அதைக் காக்கின்ற பேறாவார் இவர் எனத் தோன்றிய பெரியவரான பிள்ளைக்கு, மற்றும் பல காப்புகள் மிகையாகும் என அவை எவற்றையும் விரும்பாதவராய்த் திருநீற்றை அவரின் நெற்றியில் பூசிக் காப்புச் சடங்கை நிறைவு செய்தார்.

1942. சிறந்த பொருளையுடைய வேதங்களும் இனிய தமிழும் சிறப்புப் பெற வந்து தோன்றிய தலைவரான அப்பிள்ளையாரை, நல்தாயர் முதலியவர் தம் மடியிலும். விளங்கும் மணிகளையுடைய பீடங்களிலும் தூய ஒளி யுடைய தொட்டிலிலும் உறங்குதற்கேற்ற மலர்ப் பள்ளி யிலும் தாலாட்டுதலால் அவர் அவதரித்த பல நலங்களையும் எடுத்துப் பாராட்டிப் பாடினர். (இது தாலாட்டுப் பருவத்தைக் குறித்தது).

1943. முதன்மையால் வருகின்ற பருவந்தோறும் உரியபடி வளர்ச்சி பெறும் பிள்ளையார் அரிய வேதங்கள் தலையெடுக்குமாறு தலைமுடியை மேல் எடுத்தும், 'பெரு மழுவைக் கையில் ஏந்திய சிவபெருமானுடைய திருத் தொண்டே அல்லால் வேறொன்றையும்யாம் கைக் கொள் ளோம்!'' எனக் காட்டுவார் போல் திருமுக மண்டலம் அசையச் செங்கீரை யாடியருளினார்.

(ஒரு காலை மடக்கி மற்றொரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி தலை நிமிர்ந்து ஆடுதல் 'செங்கீரையாடுதல்' என்ப.)

Koviloor Digital Library

1944 நாமறியோம் பரசமயம் உலகிர் எதிர் நடாது
போமகல என்றங்கை தட்டுவதும் புனிதன்பால்
காமருதா ளம்பெறுதற் கொத்துவதுங்
காட்டுவபோல்
தாமரைச்செங் கைகளினாற் சப்பாணி
கொட்டினார்.

1945 விதிதவறு படும்வேற்றுச் சமயங்க ளிடைவிழுந்து
கதிதவழ இருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழுஞ் சடைமுடியார் ஞானம்அளித்
திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமுன்றில் மருங்குதவழ்ந்
தருளினார்.

1946 சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையரும் தாதியரும்
காழியர்தஞ் சீராட்டே கவுணியர்கற் பகமே
என்று
ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே
வாழவரும் அவர்தம்மை வருக வரு கெனஅழைப்ப.

1947 திருநகையால் அழைத்தவர்தம் செழுமுகங்கள்
மலர்வித்தும்
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் செலவு
கைத்தும்
உருகிமனங் கரைந்தலைய உடனணைந்து தழுவி
யும்முன்
பெருகியஇன் புறஅளித்தார் பெரும்புகலிப்
பிள்ளையார்.

Koviloor Digital Library

1944. "யாம் சைவசமயம் அன்றிப் பிற சமயங்களை அறியோம்! எனவே, புறச் சமயத்தவரே! இவ்வுலகத்தில் எதிர்ப்பட நாடாது அகன்று செல்லுங்கள்" என்று அங்கைகளைக் கொட்டுவதையும் சிவபெருமானிடத்து விருப்பம் அளிக்கின்ற தாளத்தைப் பெறுவதற்காகக் கைகளை ஒத்துவதையும் காட்டுவன போல் தாமரை போன்ற சிவந்த கைகளால் அப்பிள்ளையார் சாப்பாணி கொட்டினார்.

(சப்பாணி கொட்டுதல்— கைக் கொட்டுதல்; ச— சேர்ந்தது; பாணி— கை. இது சப்பாணிப்பருவத்தைக் குறித்தது.

1945. இறைவனின் வேதவிதியினின்று மாறுபட்ட புறச் சமயங்கள் விழுந்து நிலைகுலையுமாறு பெரிய வானத்தில் நிறைந்த அளவாக்கப்பட்டுப் போந்த பெரிய கங்கையாறு பொருந்திய சடையையுடைய சிவபெருமான் ஞானம் தந்தருளுதற்குரிய அப்பிள்ளையார் சந்திரன் தவழும் மாளிகையின் முன் பக்கத்தில் தவழ்ந்தருள் செய்தார்.

(புறச்சமயம்— சமணம், பௌத்தம்)

1946. தம்மைச் சூழ்கின்ற அந்தண மங்கையரும் தோழியரும் "சீகாழி என்ற பதியினர் எல்லாருக்கும் சிறப்புச் செய்யும் செல்வமே! கவுணிய குலத்தவரின் கற்பகம் போன்றவரே!" எனச்சொல்லி, ஏழிசையும், வேதம் முதலான பல கலைகளும், எல்லா வுயிர்களும், தனித்தனியே வாழுமாறு வந்து தோன்றிய அந்தப் பிள்ளையாரை 'வருக' 'வருக' என்று அழைக்க.

(இதில் வருகைப் பருவம் குறிக்கப்பட்டது)

1947. அங்ஙனம் அழைத்தவரின் செழுமையான முகங்களைத் தம் திரு நகைப்பினால் மலரச் செய்தும், அதனால் உண்டாகும் மகிழ்ச்சி மேலும் மேலும பெருகுமாறு அவர்களின் மேனி மீது பொருந்து மாறு உந்தியும், உள்ளம் உருகிக் கரைந்து நிலை கொள்ளாது இளகும்படி உடன் அணைந்து தழுவியும், பெருக்கெடுக்கும் இன்பம் பொருந்துமாறு அளித்தருளினர் சீகாழியில் அவதரித்த அப்பிள்ளையார்.

Koviloor Digital Library

1948 வளர்பருவ முறையாண்டு வருவதன்முன்
மலர்வரிவண்டு
உளர்கருமென் சுருட் குஞ்சியுடன் அலையச்
செந்நின்று
கிளர்ஒலிகிண் கிணி எடுப்பக் கீழ்மைநெறிச்
சமயங்கள்
தளர்நடையிட் டறத்தாமும் தளர்நடையிட்
டருளினார்.

1949 தாதியர்தங் கைப்பற்றித் தளர்நடையின்
அசைவொழிந்து
சோதியணி மணிச்சதங்கை தொடுத்தவடம்
புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை
ஆண்டொன்றின்
மீதணைய நடந்தருளி விளையாடத்
தொடங்கினார்.

1950 சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச் செழுமணற்
சிற்றில்கள்இழை
நறுநுதற்பே தையர்மருங்கு நடந்தோடி
அடர்ந்தழித்தும்
குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும் பொடியா
டியகோல
மறுகிடைப்பே ரொளிபரப்ப வந்து வளர்ந்
தருளினார்.

1951 மங்கையோ டுடனாகி வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தம் திருவருட்குச்
செய்தவத்தின்
அங்குரம்போல் வளர்ந்தருளி அருமறையோ
டுலகுய்ய
எங்கள்பிரான் ஈராண்டின் மேலோராண்
டெய்துதலும்.

Koviloor Digital Library

1948. மேல் உரைத்தவண்ணம் வளரும் பருவங்களின் முறையிலே ஓராண்டு நிறைவதற்குள் பூக்களில் வரிவண்டு கள் ஒலிக்கும் கருமையான மெல்லிய சுருண்ட தலை மயிருடன் அசையச் செம்மையாய் நேர் நின்று விளங்கும் ஒலியைக் கிண்கிணிகள் ஒலிக்கக் கீழ் நெறிகளைக் காட்டு கின்ற சமயங்கள் தள்ளாடி நீங்கும்படி தாமும் தளர் நடை பயின்றருளினார்.

1949. வளர்ப்புத்தாயரின் கைகளைப் பற்றி நடத்த லால் தளர் நடையின் அளவு நீங்கி ஒளியும் அழகும் கொண்ட மணிகள் இழைத்த சதங்கைகள் கட்டிய வடம் பக்கத்தே சுற்றிய திருவடிமலர்கள் நிலத்திற் பொருந்தும் படி பருவமுறையில் ஓராண்டு நிறைந்து மேற் செல்ல, பிள்ளையார் நடந்து சென்றருளவும் விளையாடவும் தொடங்கினார்.

1950. அழகிய சிறு தேரைப் பற்றித் தொடர்ந்து உருட்டிச்செல்ல, செழிய மணலால் சிற்றில் கட்டி விளை யாடும் நல்ல நெற்றியுடைய பேதைப் பெண்களிடத்தில் நடந்தும் ஓடியும் சிறிய வியர்வைத் துளிகள் திருமேனி மேல் அரும்ப, அதனுடன் திருநீற்றை அணிந்து விளங்கிய திருக் கோலம் அந்த வீதியில் ஒளிபரப்ப, வந்து இவ்வாறாக அவர் வளர்ந்து வந்தார். அந்நாளில்,

1951. பெரிய நாயகி யாருடன் இருந்து, வளரும் சீகாழியில் வீற்றிருந்தருளும் மதி சேர்ந்த சடையுடைய சிவபெருமானின் திருவருளான பயனுக்கு, செய்யும் தவத் தின் மூலம் உள்ள முளையைப் போன்று வளர்ந்து, அரிய மறைகளால் உலகம் உய்யுமாறு எம்பெருமானான பிள்ளையார்க்கு இரண்டாண்டின் மேல் ஓராண்டு நிறை வெய்தவும்.

Koviloor Digital Library

1952 நாவாண்ட பலகலையும் நாமகளும் நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும்
பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துக் சிறுவருக்கு
மூவாண்டில் உலகுய்ய நிகழ்ந்ததனை
மொழிகின்றேன்.

1953. பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்
தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டின்
அளித்தருளத்
தொண்டின்நிலை தரவருவார் தொடர்ந்தபிரி
வுணர்வொருகால்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போல்
அழுவார் குறிப்பயலாய்.

1954 மேதகைய இந்நாளில் வேறொருநாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது தம்பெருமான்
அருள்கூடச்
சோதிமணி மறைமுன்றில் தொடர்ந்தழுது
பின்சென்றார்.

1955 பின்சென்ற பிள்ளையார் தமைநோக்கிப்
பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து முனிவார்போல்
விலக்குதலும்
மின்செய்பொலங் கிண்கிணிக்கால் கொட்டி
அவர் மீளாமை
உன்செய்கை இதுவாகில் போ தென்றங்
குடன்சென்றார்.

Koviloor Digital Library

1952. நாவால் ஓதுவதற்குரிய வேதம் முதலிய பல கலைகளும், தாமரை மலரில் வாழும் திருமகளும் சிவ புண்ணியமும் பொலிவு பொருந்தவும், காளையைக் கொடி யாகக் கொண்ட சிவபெருமான் எழுந்தருளிய சீகாழியில் தோன்றியருளிய பிள்ளையாருக்கு மூன்றாண்டுப் பருவத்தில் உலகமானது உய்ய நிகழ்ந்த அருட்செயலை இனிச் சொல்லத் தொடங்குகின்றேன்.

1953. முன் காலத்தில் திருவடியை மறவாத பான்மை உடையவரை, மிக்க தவம் இயற்றிய சிவ பாத இருதய ருக்குத் தந்தருளினாராக, திருத்தொண்டின் நிலையை உலகத்துக்கு அருள்வதற்கெனத் தோன்றிய அப்பிள்ளை யார், சிவனையே தொடர்ந்து கொண்ட நிலை நீங்காது பிரிந்து போந்த பிரிவுணர்வு ஒரு கால் மனத்தில் கொண்டு, அந்த நினைவானது உண்டானவுடனே, அச்சம் கொண்ட வரைப்போல் அயலான ஒரு குறிப்புடன் அழுவார்.

1954. மேன்மையுடைய இத்தகைய நாட்களில் ஒரு நாள் வேதங்களில் சொல்லப்பட்ட நியதியில் முறையில் செய்யும் சடங்கு நெறியை முடிப்பதற்காக, முதலில் நீராடும் பொருட்டாகத், தந்தை சிவ பாத இருதயர் புறப்படும் போது, தம் பெருமானின் அருள் கூடப்பெறுவ தால், திருமனையின் ஒளியும் அழகும் உடைய முன்றிலில் பிள்ளையார் தாமும் தந்தையாரைத் தொடர்ந்து அழுதபடி பின்னால் சென்றார்.

1955. தம் பின்னால் தொடர்ந்து வந்த பிள்ளை யாரைத் தந்தையாரான சிவபாத இருதயர் பார்த்து, தாம் மேலே செல்வதை நிறுத்தி, சினம் கொண்டவர் போல் காட்டிப் பின்னால் வருவதை விலக்கவும், ஒளி விளங்கும் பொன்னால் ஆன சிறு கிண்கிணி அணிந்த திருவடிகளைப் பூமியில் உதைந்து அந்த ஆளுடைய பிள்ளையார் நிற்க, 'உன் செயல் இதுவானால், வருக' எனக்கூறி அவருடனே சென்றார்.

Koviloor Digital Library

1956. கடையுகத்தில் தனிவெள்ளம் பலவிரிக்கும்
கருப்பம்போல்
இடையறாப் பெருந்தீர்த்தம் எவற்றினுக்கும்
பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா
மேன்மையதாம்
தடமதனில் துறையணைந்தார் தருமத்தின்
தலைநின்றார்.

1957 பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம்
பிரிவஞ்சித்
தெள்ளுநீர்ப் புகமாட்டார் தேவியொடுந்
திருத்தோணி
வள்ளலார் இருந்தாரை எதிர்வணங்கி மணிவாவி
உள்ளிழிந்து புனல்புக்கார் உலகுய்ய மகப்பெற்றார்.

1958 நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்
சீராடுந் திருமகனார் காண்பதன்முன்
செய்ததற்பின்
ஆராத விருப்பினால் அகமருடம் படியநீர்
பேராது மூழ்கினார் பெருங்காவல் பெற்றாராய்.

1959 மறைமுனிவர் மூழ்குதலும் மற்றவர்தம்
மைக்காணாது
இறைதரியா ரெனு நிலைமை தலைக்கீடா
ஈசர்கழல்
முறைபுரிந்த முன்னுணர்வு மூளஅழத்
தொடங்கினார்
நிறைபுனல்வா விக்கரையில் நின்றருளும்
பிள்ளையார்.

Koviloor Digital Library

1956. அறநெறியில் சிறந்த சிவபாத இருதயர், ஊழியின் முடிவில் தோன்றும் பெரு வெள்ளங்கள் பலவற்றையும் தன்னிடத்திலிருந்து விரியுமாறு தோற்றுவிக்கும் கருப்பம் போல் இடையறாது நிற்கும் பெரிய நீர்நிலைகள் எல்லாவற்றுக்கும் பிறப்பிடமாய்க், காளைக் கொடியை உயர்த்திய சிவபெருமான் எழுந்தருளிய திருத்தோணியின் தொடர்ச்சியை நீங்காத மேலான நீர்நிலையின் துறையை அடைந்தார்.

1957. உலகம் உய்ய மகப்பெற்ற சிவபாத இருதயர் ஞானசம்பந்தப் பிள்ளையாரைத் தீர்த்தகரையில் இருக்கச் செய்து, தாம் பிரிவதை அஞ்சித் தெளியும் நீரில் நீராடமாட்டாதவராகி, பெரியநாயகி அம்மையாரோடும் திருத்தோணியில் வள்ளலாராகி எழுந்தருளியிருந்த பெருமானை எதிரில் வணங்கிய பின்பு, அழகிய வாவியுள் மூழ்கினார்.

1958. நீரில் ஆடித் தருப்பணம் செய்து பின் வேத நியமங்கள் பலவற்றையும் செய்பவரான சிவபாத இருதயர் பலரும் பாராட்டவுள்ள மகனார் தம்மைத் தேடிக்காண்பதற்கு முன்னம் அவை யெல்லாம் செய்து முடித்தார். பின், தம் மகனார்க்குத் தம்மைவிடப் பெரிய காவல் பெற்றாராகி அடங்காத விருப்பத்தால் அதன் பின் அகமருட ஸ்நானம் செய்யும் பொருட்டுத் தாம் நின்ற இடத்தினின்றும் அடி பெயர்க்காமல் நீருள் முழுகினார்.

(அகமருட ஸ்நானம்—அகமர்ஷண ஸ்நானம், அதாவது அகமருடண சூக்தத்தை நீரில் நின்று மூன்று முறை செபித்து மூழ்குதல். அகமருஷண சூக்தம் இருக்கு வேதத்தில் உள்ளது. இவ்வேதத்தின் பத்தாம் மண்டலத்துள் நூற்றுத் தொண்ணூறாவது சூக்தம் அகமர்ஷணம் என்பது. 'பாவத்தைக் கெடுப்பது' எனப் பொருள் படும்.)

1959. மறை முனிவரான சிவபாத இருதயர் நீருள் முழுகவும், அவரைக் கண் எதிரே காணாமையால் சிறிது போதும் தரித்திருக்க மாட்டார் என்ற காரணத்தைக் காட்டிச் சிவபெருமானின் திருவடிகளை முறையாய் மறவாமல் இடைவிடாமல் எண்ணியிருந்த முன் நினைவு மூண்டதனால், நிறைந்த நீரையுடைய பொய்கைக் கரையில் நின்றிருந்த பிள்ளையார் அழத் தொடங்கினார்.

Koviloor Digital Library

1960 கண்மலர்கள் நீர்ததும்பக் கைமபலர்க
ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணிஅதரம்
புடைதுடிப்ப
எண்ணில்மறை ஒலிபெருக எவ்வுயிரும் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமிஅழு
தருளினார்.

1961 மெய்ம்மேற்கண் துளிபனிப்ப வேறெங்கும்
பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பிள்
ளைமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச்
சிகரம்பார்த்து
அம்மே அப்பா என்றென் றழைத்தருளி அழுதருள.

1962 அந்நிலையில் திருத்தோணி வீற்றிருந்தார்
அருள்நோக்கால்
முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க்
கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும் பொருவிடைமேல்
எழுந்திருளிச்
சென்னிஇளம் பிறைதிகழச் செழும்பொய்கை
மருங்கணைந்தார்.

1963 திருமறைநூல் வேதியர்க்கும் தேவியர்க்கும்
தாங்கொடுத்த
பெருகுவரம் நினைந்தோதான் தம்பெருமைக்
கழல்பேணும்
ஒருநெறியில் வருஞானம் கொடுப்பதனுக்
குடனிருந்த
அருமறையா ளுடையவளை அளித்தருள
அருள்செய்வார்.

Koviloor Digital Library

1960. கண்கள் என்ற மலர்களிலிருந்து நீர் வெளிப் படக் கைம் மலர்களால் அவற்றைப் பிசைந்து அழகிய தாமரை மலரையும் சிவந்த கொவ்வைக் கனியும் போன்ற திருவாயின் அழகிய உதடுகள் பெயர்ந்து துடிக்க, எண்ணில் லாத மறைகளின் ஒலி பெருகவும், எல்லாவுயிர்களும் களிப் படையவும், புண்ணியக் கன்றைக் போன்ற பிள்ளையார் பொருமிப் பொருமி அழலானார்.

1961. தம் திருமேனியின் மீது கண்ணீர்த் துளிகள் வீழ வேறு எல்லாவிடங்களிலும் சுற்றிப் பார்த்து அழும் நிலையில் நின்றபிள்ளையார், தம் மேலை நிலைமைச்சார்பை உணர்ந்த காரணமாகவோ, அல்லது அப்போது பொருந்திய பிள்ளைமைச்சார்பாலோ, அறியோம். செம்மேனியில்வெண் ணீற்றையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத் தோணிச் சிகரம் பார்த்து, 'அம்மே! அப்பா!' என்று அழுத வண்ணம் அழைத்தாராக!

1962. அப்போது திருத்தோணியில் வீற்றிருக்கும் சிவ பெருமான் அருள் நோக்கம் செய்தலால் முன்னை நிலைமைத் திருத்தொண்டு நினைந்த அவருக்கு அருள் செய்யும் பொருட் டாக, பொன்மலை வல்லியான பெரியநாயகி அம்மையாரும் தாமும் போர் விடையின் மேல் ஏறி எழுந்தருளித், தலையில் சூடிய இளம்பிறை விளங்கித் தோன்றச் செழுமையான அந்தப் பொய்கையின் பக்கத்தில் சேர்ந்தருளிச் செய்தார்.

(சம்பந்தப் பெருமான் 'அம்மே, அப்பா' என அழைத் தமையால் இறைவர் தாமும் அம்மையுமாய் எழுந்தருளி னார்.)

1963. வேதநூல்களில் வல்ல அந்தணரான சிவபாத இருதயருக்கும் அவருடைய மனைவியரான பகவதியாருக்கும் தாம் தந்தருளிய பெருகிய வரத்தை நிறைவு செய்ய எண்ணி யதனால் போலும், தம் பெருமையுடைய திருவடிகளையே போற்றுகின்ற நெறிகளில் நிற்க வரும் சிவஞானத்தைக் கொடுப்பதற்காகத் தம்முடன் இருந்த அரிய வேதங்களைத் தம் வடிவமாகக் கொண்டு ஆள்கின்ற ஞான முதல்வியரான பெரிய நாயகி அம்மையாரை அதனை அளித்தருளுமாறு அருள் செய்வாராகி,

Koviloor Digital Library

1964 அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி
அருட்கருணை
எழுகின்ற திருவுள்ளத் திறையவர்தாம் எவ்வுலகும்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித்
துணைமுலைகள்
பொழிகின்ற பால்அடிசில் பொன்வள்ளத்தூட்
டென்ன.

1965 ஆரணமும் உலகேழும் ஈன்றருளி
அனைத்தினுக்கும்
காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான
சீரணங்கு சிவபெருமான் அருளுதலும்
சென்றணைந்து
வாரிணங்கு திருமுலைப்பால் வள்ளத்துக்கறந்தருளி.

1966 எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
உண்ணடிசில் எனஊட்ட உமையம்மை
எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற்
கிண்ணம்அளித்து
அண்ணலைஅங் கழுங்கதிர்த் தங்கணனார்
அருள்புரிந்தார்.

1967 யாவருக்குந் தந்தைதாய் எனும் இவர்இப் படிஅளித்
தார்
ஆவதனால் ஆளுடைய பிள்ளையா ராய்அகில
தேவருக்கும் முனிவருக்குந் தெரிவரிய பொருளாகும்
தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினார்.

1968 சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய
மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார்
அந்நிலையில்.

Koviloor Digital Library

1964. அழும் பிள்ளையாரைப் பார்த்து, அருளும் கருணையும் எழும் உள்ளம் கொண்டவராய்ச் சிவபெருமான், எல்லாவுலகங்களும் தொழுகின்ற பர்வதனின் மகளான கொடி போன்ற பெரிய நாயகி அம்மையாரைப் பார்த்தருளி, 'இரண்டு திருமுலைகளும் பொழியும் பாலைப் பொற்கிண்ணத்தில் இப்பிள்ளைக்கு ஊட்டுக!'' என்று இயம்பினார்.

1965. மேற்சொன்னவண்ணம் சிவபெருமான் கூறியருளவும், வேதங்களையும் ஏழுலகங்களையும் பெற்றருளி எல்லாப் பொருளுக்கும் மூல காரணமாய் உள்ளவரும் வளம் பெருகும் கருணையே தம் வடிவமாய்க் கொண்டவருமான சிறப்புடைய பெரிய நாயகி அம்மையார், பிள்ளையார் அருகில் போய்க் கச்சுடைய தம் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தருளி,

1966. பெரிய நாயகி அம்மையார் நினைத்தற்கரிய சிவஞானமான இனிய அமுதத்தைப் பாலுடனே குழைத்தருளித், தம்மை எதிர் நோக்கிய பிள்ளையாரின் கண்ணீரைத் துடைத்தருளிப் ''பாலமுதத்தை உண்பாயாக!'' என்று உண்ணச் செய்ய, பெருமையுடைய பிள்ளையாரை இங்கு அழுகை தீர்த்துச் சிவபெருமான் அருள் செய்தார்.

1967. எல்லாருக்கும் தந்தை தாய் என்னும் அம்மையப்பர் வெளிப்பட்டுத் தாமே அளித்தார் ஆதலால், 'ஆளுடைய பிள்ளையார்' என்னும் திருப்பெயரை உடையவராய் எல்லாத் தேவர் முனிவர்க்கும் தெரிந்து அறிய இயலாத மெய்ப்பொருளாகிய எக்காலத்தும் கெடுதல் இல்லாத ஒப்பில்லாத சிவத்தை உணரும் சம்பந்தம் உடையவர் என்ற காரணத்தால் திருஞான சம்பந்தர் என்ற திருப்பெயரை உடையவர் ஆனார்.

1968. சிவபெருமான் திருவடிகளையே நினைத்தலான செம்மை பெருகச் செய்யும் சிவஞானமான ஒப்பில்லாத கலைஞானத்தையும் பிறப்பையும் இறப்பையும் மீண்டும் வாராமல் தடுக்கும் குணத்துடன் கூடிய ஞானமான உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் தவ முதல்வரான திருஞானசம்பந்தர் அந்நிலையில் உணர்ந்தார்.

Koviloor Digital Library

1969. எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும்உணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள்
எனுமறிவும்
இப்படியால் இதுவன்றித் தம்இசைவு
கொண்டியலும்
துப்பரவில்லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்.

1970 சீர்மறையோர் சிவபாத விருதயருஞ் சிறுபொழுதில்
நீர்மருவித் தாம்செய்யும் நியமங்கள் முடித்தேறிப்
பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்
தமைநோக்கி
யாரளித்த பாலடிசில் உண்டதுநீ எனவெகுளா.

1971 எச்சில்மயங் கிடஉனக்கீ திட்டாரைக் காட்டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக்
காலெடுத்தே
அச்சிறிய பெருந்தகையார் ஆனந்தக்
கண்துளிபெய்து
உச்சியினில் எடுத்தருளும் ஒருதிருக்கை விரற்சுட்டி.

1972 விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ
விடைமேலே
பண்ணிறைந்த அருமறைகள் பணிந்தேத்தப்
பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினால் நின்றாரை
எதிர்காட்டி
உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத்
திருமொழியால்.

1973 எல்லையிலா மறைமுதல்மெய் யுடன்எடுத்த எழுது
மறை
மல்லல்நெடுந் தமிழால்இம் மாநிலத்தோர்க் குறை
சிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத் திருசெவியைச்
சிறப்பித்து.

Koviloor Digital Library

1969. எல்லாப் பொருளையும் இயக்குபவன் ஈசனே என்னும் உணர்வும், அந்தப் பொருளாவது அவ்வாறு ஆளுடையாரும் அவருடைய அடியார்களும் ஆவர் என்ற அறிவும் இங்ஙனம் இன்றித் தம் தம் அறிவுக்கு ஏற்றவாறு எண்ணி இயல்கின்ற தூய்மை அற்றவரின் துணிவுகளை எல்லாம் தூளாகுமாறு எண்ணி எழுந்தார்.

1970. சிறப்புடைய சிவபாத இருதயரும் சிறிது நேரத்தில் நீருள் பொருந்தித் தாம் செய்யும் நியமங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு, கரையில் ஏறிப் பேருணர் வில் விளங்கும் தம் மகனாரைப் பார்த்து, ''நீ யார் தந்த பாலை உண்டாய்?'' எனச் சினந்து,

1971. ''எச்சில் உண்டாக உனக்கு இதை அளித்த வரை எனக்குக் காட்டு'' எனச்சிவபாத இருதயர் உரைத்துச் சிறிய ஒரு கோலைக் கையில் எடுத்து அடிப்பவரைப் போல் ஓங்கிட, அந்தச் சிறுபெருந்தகையரான பிள்ளையார், ஒரு காலை எடுத்துநின்று, கண்களினின்று ஆனந்தக்கண்ணீரைச் சொரிந்து உச்சிமேல் தூக்கிய திருக்கையின் ஒரு விரலால் சுட்டிக் காட்டி,

1972. வானத்தில் நிறைந்த பெருகும் ஞான ஒளியால் விளங்கும் காளையின் மீது பண்ணால் நிறைந்த அரிய வேதங்கள் வணங்கித் துதிக்க உமா தேவியாருடன் எண்ணிறந்த அருளால் நின்ற திருத்தோணி புரத்தாரை எதிரே காட்டி, உள்ளே நிறைந்து தேக்கி மேல் எழுந்து பொழிந்த சிவஞானத் திருவாக்கினால்,

1973. எல்லையற்ற வேதங்களின் முதல் எழுத்தை மெய்யுடனே தொடங்கி எழுதும் முறையை வளம் வாய்ந்த நெடுந்தமிழால், இந்தப் பெரிய உலகத்தில் உள்ளவர்க்கு உரைசிறந்து பயன் அளிக்கப், பல உயிர்களும் இன்பம் அடைய, தம் திருப்பாடல் இறைவரிடம் செல்கின்ற வகையைப் பெறும் பொருட்டாய்த் திருச் செவியைச் சிறப்பித்து,

Koviloor Digital Library

1974 செம்மைபெற எடுத்ததிருத் தோடுடைய செவியன் எனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுரம் மேவினார்
தம்மை அடையாளங்க ளுடன்சாற்றித் தாதை யார்க்கு
எம்மையிது செய்தபிரான் இவனன்றே என இசைத்தார்.

1975 மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந் தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்து முறிந் திசை பாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பாடருள் செய்தார்.

1976 தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத் தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த டடி விரித்தார்.

1977 வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதன்நெறி அறிந்துய்யார் தம்மிலே நலங் கொள்ளும்
போதம்இலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே யென மொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்.

Koviloor Digital Library

1974. செம்மைப் பொருந்தும்படி தொடங்கிய 'தோடுடைய செவியன்' என்ற மெய்ம் மொழியான திருப்பதிகத்தைத் திருப்பிரமபுரத்தில் எழுந்தருளிய சிவ பெருமானை அடையாளங்களுடன் சொல்லி, "எம்மை இது செய்தவன் இந்த இறைவன் அன்றோ" என்று தந்தை யாருக்குக் கூறியருளினார்.

(ஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் தொடக்கம் "தோடுடைய" என்பதாகும்.)

1975. இம்மண் உலகத்தில் வாழும் உயிர்கள் பிழையைச் செய்தாலும் அவை தம்மை வந்து அடைந்தால் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் பெருங்கருணை யினால் அவற்றைக் கைகொடுத்து ஆள்வார் என்பதைக் காட்ட, நல்லுணர்வு இல்லாதவனான வன்கண்மையுடைய அரக்கனான இராவணன் திருக்கயிலை மலையை எடுத்து உடல் முரிவுபட்டுப் பின் இசையைப் பாடவே, பெருமை யுடைய இறைவர் அவனுக்கும் அருள் செய்த ஆக்கப்பாடு களை அந்தத் திருப்பதிகத்துள் வைத்துப் பாடினார்.

1976. வணங்குபவர்க்கே அருளுவார் இறைவர் என்பதைத் தெரிந்துகொண்டு, தொழாதவராகித் தவறு செய்த மனத்தால் மயக்கம் கொண்ட திருமாலும் நான் முகனும் இழிந்த பன்றியும் அன்னப்பறவையுமாகக் கீழும் மேலும் போய்க் காணமாட்டாமல் விழுவார்கள் திருவைந்தெழுத்தைத் துதித்து உய்தி பெற்ற இயல்பை மேலே விரிவாய் எடுத்து உரைத்தார்.

1977. வேதங்களின் காரணரான வெண்மையான பிறைச்சந்திரனை யணிந்த சிவந்த சடையையுடைய சிவ பெருமானின் நெறியை அறிந்து அடைந்து உய்தி பெறாத வரான புறச் சமயத்தாருள் நன்மையில்லாத சமணர்களும் புத்தர்களும் ஆன இவர்களின் நெறிகள் பழியை விளைக்கும் கேடுகளே ஆகும் என்று எம்பெருமான் ஞானசம்பந்தர் மொழிந்தருளினார்.

Koviloor Digital Library

1978 திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக்காப்
புச்சாத்தி
இருக்குமொழிப் பிள்ளையார் எதிர்தொழுது
நின்றருள
அருட்கருணைத் திருவாள னார்அருள்கண்
டமரரெலாம்
பெருக்கவிசும் பினில்ஆர்த்துப் பிரசமலர் மழை
பொழிந்தார்.

1979 வந்தெழுமங் கலமான வானகதுந் துபிமுழக்கும்
கந்தருவர் கின்னரர்கள் கானஒலிக் கடல்முழக்கும்
இந்திரனே முதல்தேவர் எடுத்தேத்தும் இசை
முழக்கும்
அந்தமில்பல் கணநாதர் அரஎனும் ஓசையின்
அடங்க.

1980 மறைகள் கிளர்ந்தொலி வளர முழங்கிட வானோர்
தம்
நிறைமுடி உந்திய நிரைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடைய நிறைந்திட ஓவா
மெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவ ரெனுங்கடல்
புடைசூழ.

1981 அணைவுற வந்தெழும் அறிவு தொடங்கின
அடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்கள் இகந்திட
இருதாளின்
புணையருள் அங்கணர் பொருவிடை தங்கிய
புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த
பெருந்தோணி.

Koviloor Digital Library

1978. திருப்பதிகத்தை நிறைவாகப் பாடித் திருக் கடைக் காப்பையும் சாத்தியருளி, வேதமொழியையுடைய பிள்ளையார் எதிரில் தொழுது நின்றார். நிற்க, அருட் கருணையுடைய சிவபெருமானின் நிறைந்த அருளைக் கண்டு தேவர்கள் பெருகிய வானத்தில் ஆரவாரித்துத் தேனைச் சொரியும் தெய்வ மலர்களை மழையாய்ப் பெய்தனர்.

1979. அழிவற்ற பல பூதகண நாதர்கள் முழக்கும் 'அரகர' என்ற ஓசையுள் அடங்குமாறு, மங்கலமான வான துந்துபி ஒலியும், கந்தருவர், கின்னரர் முதலான தேவ இனத்தார்பாட்டு ஒலியின் கடல் போன்ற ஒலியும், இந்திரன் முதலிய தேவர்கள் எடுத்துத் துதிக்கும் இசையின் ஒலியும் என்ற இத்தகைய ஒலிகளின் தொகுதி இங்கு வந்து ஒலிப்ப தாகும்.

1980. வேதங்கள் எழுந்து ஒலி வளர முழங்கவும், தேவர்களின் நிறைந்த முடிகள் ஒன்றுடன் ஒன்று மோதி மணிகள் சிதறலாலே, அவை நீண்ட வானத்தினின்றும் விழும் பனிநீர்த் துளிகள் போல் வந்து உலகத்தில் எங்கும் நிறையவும், இடையறாத மெய்ப்மையும் சாந்தமும் பெருகும் தவமுனிவர் என்ற கடல் பக்கங்களில் சூழவும்,

1981. தம்மை வந்து அடையுமாறு வந்து எழுகின்ற பரிபக்குவம் உற்ற உணர்ச்சியுடைய அடியாரிடத்தினின்றும் ஒப்பில்லாத வலிமையுடைய பிறவி பெருகும் கடல்கள் நீங்குமாறு தம் இரு திருவடிகளான இனிய புணையை அருளும் கருணையுடைய திருத்தோணியப்பர், போர் செய்யும் காளையின் மேல் தம்முடன் தங்கிய துணைவியா ருடனே வேதங்கள் தொடர்ந்த பெருந்திருத் தோணியில் அமர்ந்தருளினார்.

Koviloor Digital Library

1982 அண்ணல் அணைந்தமைகண்டு தொடர்ந்தெழும்
அன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு போதகம் அன்னாருங்
கண்வழி சென்ற கருத்து விடாது கலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலின் உட்
புக்கார்.

1983 ஈறில்பெ ருந்தவம் முன்செய்து தாதை எனப்
பெற்றார்
மாறுவி ழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்தாடி
வேறுவி ளைந்த வெருட்சி வியப்பு விருப்போடும்
கூறும்அ ருந்தமி ழின்பொரு ளான குறிப்போர்
வார்.

1984 தாணுவி னைத்தனி கண்டு தொடர்ந்தவர்
தம்மைப்போல்
காணுதல் பெற்றில ரேனும் நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணிபு ரத்திறை தன்னரு ளாதல் துணிந்தார்வம்
பேணும னத்தொடு முன்புகு காதலர் பின்
சென்றார்.

1985 அப்பொழு தங்கண் அணைந்தது கண்டவர்
அல்லாதார்
முப்புரி நூண்மறை யோர்கள் உரோம முகிழ்ப்
பெய்தி
இப்படி ஒப்பதோர் அற்புதம் எங்குளது என்
றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின் வாயில் புறஞ்சூழ.

1986 பொங்கொளி மால்விடைமீது புகுந்தணி
பொற்றோணி
தங்கிஇ ருந்தபெ ருந்திரு வாழ்வு தலைப்பட்டே
இங்கெனை யாளுடை யான் உமையோடும்
இருந்தான் என்று
அங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத் தமுதுண்
டார்

Koviloor Digital Library

1982. சிவபெருமான் கோயிலில் எழுந்தருளப் பெற்றதைப் பார்த்து, அப்பெருமானைத் தொடர்ந்து எழும் அன்பினால், கண்களின் வழியே போன கருத்து விடாது கலந்ததால், பொய்கைக் கரையில் நிலத்தில் நின்றருளிய வேதச்சிறு யானை போன்ற பிள்ளையாரும் புண்ணியரான சிவபெருமான் சேர்ந்த அழகிய திருத்தோணி கோயிலுக்குள் போய்ப் புகுந்தார்.

1983. இறுதியில்லாத தவத்தைச் செய்து இவருடைய தந்தை என்று சொல்லும் நிலைபெற்ற சிவபாத இருதயர் அடிக்க ஓங்கிய சிறுகோலைக் கீழே நழுவவிட்டு மலர்க் கைகளைக் கூப்பிக்கொண்டு மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி, வேறாக உண்டான வெருட்சி, வியப்பு, வெறுப்பு என்ற இவற்றுடன் கூடியவராய்த் தம் பிள்ளையார் எடுத்துச் சொல்லும் அருந்தமிழின் பொருளான குறிப்பை உணர்வாராகி,

1984. சிவபெருமானைத் தனியே கண்டு அவரைத் தொடர்ந்தவரான பிள்ளையாரைப் போல் தாம் அவ்விறைவரைக் காணாராயினும், நிகழ்ந்தனவான அடையாளக் குறிகளையும் திருப்பதிகத் தமிழ் பாடிச் சுட்டிக்காட்டியதையும் கண்டவராதலால், இது தோணிபுர இறைவரின் திருவருள் என்பதை உணர்ந்து கொண்டு ஆசை பெருகிய மனத்துடன் முன்னால் போய்ப் புகும் மகனைத் தொடர்ந்து சென்றார்.

1985. அச்சமயத்தில் அங்கு நிகழ்ந்தனவற்றைக் கண்டவர்களும் காணாமல் கேட்டவர்களும் பூணூல் அணிந்த வேதியர்களும், ''இத்தகைய அற்புத நிகழ்ச்சி வேறு எங்கு உள்ளது?'' எனக் கூறிப் பவளம் போன்ற சிவந்த சடையையுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் திருத்தோணிக் கோயிலின் திருவாயில் புறத்தில் வந்து சூழ்ந்து கொள்ள.

1986. ஞான அமுதை உண்ட பிள்ளையார் பொங்கும் ஒளியுடைய காளையூர்தியில் வந்து அழகிய பொன் பொருந்திய தோணியில் எழுந்தருளிய பெருந்திரு வாழ்வைப் போய்க் கூடி, ''என்னை ஆளுடைய பெருமான் உமையம்மையாருடன் இங்கு எழுந்தருளியிருந்தான்'' என்னும் கருத்துக் கொண்ட திருப்பதிகத்தை அங்கே திரு முன்புநின்று கூறித் துதித்தார்.

Koviloor Digital Library

1987 இன்னிசை ஏழும் இசைந்த செழுந்தமிழ் ஈசற்கே
சொன்முறை பாடு தொழும்பருள் பெற்ற தொடக்
கோடும்
பன்மறை வேதியர் காண விருப்பொடு பால்நாறும்
பொன்மணி வாயினர் சோயிலின் நின்று புறப்
பட்டார்.

1988 பேணிய அற்புத நீடருள் பெற்றபி ரான்முன்னே
நீணிலை யில்திகழ கோபுர வாயிலின் நேரெய்தி
வாணில வில்திகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்
வெய்தும்
தோணி புரத்தவர் தாம்எதிர் கொண்டு துதிக்
கின்றார்.

1989 காழியர் தவமே சவுணியர் தனமே கலைஞாலத்து
ஆழிய கடலே அதனிடை அமுதே அடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள்தன் திரு வருள்பெற்றனை
என்பார்.

1990 மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்
ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொரு
பொன்னித்
துறைபெறு மணியே சுருதியின் ஒளியே வெளியேவந்
திறையவன் உமையா ளுடனருள் தரஎய்தினை
என்பார்.

1991 புண்ணிய முதலே புனைமணி அரைஞா ணொடு
போதும்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்
மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள் பெற்றனை
என்பார்.

Koviloor Digital Library

1987. அன்புடன் ஞான அமுதத்தின் மணம் கமழும் திருவாயையுடைய திருஞான சம்பந்தர், மறைகளை ஓதும் வேதியர் பலரும் காண இனிய ஏழிசைகளும் பொருந்திய செழுந்தமிழ்த் திருப்பதிகங்களைச் சொன்முறையாகச் சிவபெருமானுக்கே பாடுகின்ற திருத்தொண்டராவ அடிமைத் திறத்தையும் அருளையும் பெற்ற பிணைப்புடனே கோயிலினின்று புறப்பட்டார்.

1988. விரும்பிய அற்புதமான நீண்ட திருவருளைப் பெற்ற ஞானப்பிள்ளையாரின் முன்பு, ஒளிபொருந்திய சந்திரனைவிடச் சிறந்து விளங்குகின்ற சடையையுடைய சிவபெருமானின் தொண்டர்களும், வாழ்வடையும் திருத் தோணிபுரத்தில் உள்ளவர்களும், நீண்ட நிலைகளுடன் விளங்குகின்ற கோயிலின் வாயிலை அடைந்து தாம் கூடி எதிர்கொண்டு பின்வருவாறு துதிக்கத் தொடங்கினர்.

1989. ''சீகாழியில் உள்ளவரின் தவப்பயனாய் உள்ளவரே! கவுணியரின் செல்வமே! கலைஞானம் நிறைந்த ஆழ்ந்த கடல் போன்றவரே! அக்கடலின் அமுதம் போன்றவரே! அடியார் கண்டு வாழும் பொருட்டு இம்மண் உலகத்தின்மீது அவதரித்து வந்து வானவரின் ஒப்பற்ற தலைவரான சிவபெருமானும் ஏழிசை மொழியுடைய உமையாளும் என்ற இவருடைய திருவருளையும் ஒருங்கே பெற்றீர்!'' எனச் சிலர் உரைப்பார்.

1990. ''மறையை வளர்க்கும் செல்வமே! வைதிக நெறியின் நிலையான பொருளே! வளர்கின்ற ஞானம் என்ற கருத்தாங்கிய முகிலே! புகலி என்ற நகரத்தவரின் புகலிடமே! அலைமோதும் காவிரித் துறையில் பெறத்தக்க மணியே! சுருதிகளில் விளங்கும் ஒளியே! சிவபெருமான் உமையம்மையாருடன் வெளிப்பட்டு வந்து அருள் தரப் பெற்றீர்!'' என்பார் சிலர்.

1991. ''புண்ணியங்களின் முதலே! மணி புனைந்த அரைஞாணுடன் போந்து காட்சியளிக்கும் கண் நிறைந்த கதிரே! கலைகள் வளரும் சந்திரனே! அழகு பொருந்தும் பண்களுக்கு இயலும் கதியே! பருவம் மூன்றாண்டில், தியானங்களுக்கெல்லாம் பொருளாய் நின்ற சிவபெருமானின் திருவருளைப் பெற்றீர்!'' என்பர் சிலர்.

Koviloor Digital Library

1992 என்றினைய பலகூறி இருக்குமொழி அந்தணரும்
ஏனையோரும்
நின்றுதுதி செய்தவர்தாள் நீள்முடிக்கண் மேலேந்தி
நிரந்தபோது
சென்றணைந்த தாதையார் சிவபாத விருதயர்தாம்
தெய்வ ஞானக்
கன்றினைமுன் புக்கெடுத்துப் பியலியின் மேற்
கொண்டுகளி கூர்ந்து செல்ல.

1993 மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத்
தொண்டர் குழாம் மருங்கு சூழ்ந்து
தாமறுவை உத்தரியந் தனிவிசும்பில் எறிந்து
ஆர்க்குந் தன்மையாலே
பூமறுகு சிவானந்தப் பெருக்காறு போதஅதன் மீது
பொங்கும
காமர் நுரைக் குமிழிஎழுந் திழிவனபோல் விளங்கு
பெருங்காட்சித் தாக.

1994 நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமேல்
நெருங்கி அங்கண்
மாடுநிறை மடவார்கள் மங்கலமா மொழிகளால்
வாழ்த்தி வாசத்
தோடுமவி நறுமலருஞ் சுண்ணமும்வெண்
பொரியினொடுந் தூவி நிற்பார்
கோடு பயில் குலவரைமேல் மின்குலங்கள்
புடைபெயருங் கொள்கைத் தாக.

1995 மங்கலதூ ரியந்துவைப்பார் மறைச்சாமம் பாடுவார்
மருங்கு வேதிப்
பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமும்
நிரைப்பார் போற்றிசெய்வார்
அங்கவர்கள் மனத்தெழுந்த அதிசயம் பெருவிருப்பும்
அன்பும் பொங்கத்
தாங்குதிரு மலிவிதிச் சண்பைநகர் வலஞ்செய்து
சாருங் காலை.

Koviloor Digital Library

1992. என்று இத்தகையவற்றைச் சொல்லி, வேத மொழிகளையுடைய அந்தணர்களும் மற்ற அடியார்களும் நின்று துதித்து அப்பிள்ளையாரின் திருவடிகளைத் தம் முடியில் அணிந்து வரிசை பெற நின்றபோது, தாமே முன் சென்று சேர்ந்து, தந்தையாரான சிவபாத இருதயர், தெய்வத் தன்மையுடைய சிவஞான குழந்தையான பிள்ளை யாரை முன் சென்று எடுத்துத் தோளில் சுமந்து பெரு மகிழ் வுடனே (சென்றார்.) செல்ல,

1993. சிறந்த வேதியர் கூட்டத்துடன் பெருகிய அடியார் கூட்டப் பக்கத்தில் சூழ்ந்து, தம் உடையின் மேல் உள்ள ஆடைகளையும் உத்தரியங்களையும் வானத்தில் வீசி ஆரவாரம் செய்கின்ற தன்மையினால், சீகாழியின் அழகிய தெரு, சிவானந்தமான வெள்ளம் பெருக்கெடுத்த ஆறுசெல்ல, அதன் மேல் பொங்கும் நுரைக்குமிழிகள் மேலே காட்சியுடையதாக விளங்கியது. விளங்க,

'1994. நீடும் சீகாழியில் அந்தணர்களின் மாளிகை மேல் நெருங்கி அவ்விடத்தில் ,பக்கத்தில் நிறைந்த மறை யோரின் மங்கையர் உயர்ந்த உச்சியையுடைய பெரிய மலை களின் மேல் மின்னல் கூட்டம் புடைபெயர்ந்து போகின்ற காட்சியைக் கொண்டதைப் போல, மங்கலமான பெருஞ் சொற்களால் வாழ்த்தியும் மணமுடைய இதழ்களையுடைய புதிய குளிர்ந்த பூக்களையும் சுண்ணப் பொடிகளையும் வெண்ணெல் பொரியுடனே தூவி நிற்பாராயினர்.

1995. மற்றும் சிலர் மங்கல வாத்தியங்களை இசைப் பார். சிலர் சாம கானங்களைப் பாடுவார். சிலர் பக்கங்களில் திண்ணைகளில் பொங்கும் அழகிய விளக்குகளை ஏந்திப் பூரணக் கலசங்களையும் வரிசையாய் வைப்பார் இங்ஙனம் அவர்கள் மனத்தில் எழுந்த அதிசயமும் பெரு விருப்பும் அன்பும் பெருகும்படி தங்கிய வீதியின்வழியே சண்பை நகரை வலமாக வரும்போது,

Koviloor Digital Library

1996 தந்திருமா ளிகையின்கண் எழுந்தருளிப்
புகும்பொழுது சங்க நாதம்
அந்தரதுந்துபிமுதலா அளவில் பெருகொலி
தலைழப்ப அணைந்து புக்கார்
சுந்தரப்பொற் றோணிமிசை இருந்தபிரா னுடன்
அமர்ந்த துணைவி யாகும்
பைந்தொடியாள் திருமுலையின் பாலறா
மதுரமொழிப் பவளவாயார்.

1997 தூமணிமா ளிகையின்கண் அமர்ந்தருளி அன்றிரவு
தொல்லை நாத
மாமறைகள் திரண்டபெருந் திருத்தோணி
மனைவீற் றிருந்தார் செய்ய
காமருசே வடிக்கமலங் கருத்திலுற இடையறாக்
காதல் கொண்டு
நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி
நம்பர் கோயில்.

1998 காதலுடன் அணைந்துதிருக் கழுமலத்துக்
கலந்துவீற் றிருந்த தங்கள்
தாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானம்
தம்பால் வந்து
போதமுலை சுரந்தளித்த புண்ணியத் தாயாரையும்
முன் வணங்கிப் போற்றி
மேதகைய அருள்பெற்றுப் திருக்கோலக் காஇறைஞ்ச
விருப்பிற் சென்றார்.

1999 பெருக்கோலிட் டலைபிறங்குங் காவிரிநீர் பிரசமலர்
தரளஞ் சிந்த
வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு
மணிநீர் வாவித்
திருக்கோலக் காஎய்தித் தேவர்பிரான் கோயில்வலஞ்
செய்து முன்னின்று
இருக்கோலிட் டறிவரிய திருப்பாதம் ஏத்துவதற்
கெடுத்துக் கொள்வார்.

Koviloor Digital Library

1996. அழகிய பொன் பூண்ட திருத்தோணியின் மேல் இருந்த இறைவருடன் கூடிய துணைவியாரான பெரிய நாயகி அம்மையாரின் திருமுலைப்பால் மணம் மாறாத இனிய மொழியையுடைய பவளம் போன்ற வாயையுடைய பிள்ளையார் தம் திருமாளிகைக்கு எழுந்தருளிப் புகும்போது சங்கு ஒலியும், தேவ துந்துபி முதலான அளவில்லாத பெருகிய ஒலி மிக, உள்ளே புகலானார்.

1997. தூய்மையான அழகிய திருமாளிகையில் அமர்ந்திருந்து, திருஞானம் அருளப் பெற்ற அன்றைய இரவில், பழைமையான நாத உருவான பெரு வேதங்கள் திரண்டு உருவெடுத்தாற் போன்ற திருத்தோணியில் நிலை பெற்று வீற்றிருந்த சிவபெருமானின் திருவடித் தாமரைகள் தம் கருத்தில் பொருந்தியதால், இடையறாத காதல் கொண்டவராகிப் பெரிய ஞாயிறு தோன்றும் முன் நேரத்திலே திருத்தோணியப்பரின் திருக்கோயிலைப் போய் அடைந்தார்.

1998. மிக்க அன்புடன் சேர்ந்து திருக்கழுமலம் என்ற அத்திருத்தலத்திலே உடன் எழுந்தருளியிருந்த தம் தந்தையாரையும் தம்மிடம் வெளிப்பட்டு வந்து யாவராலும் தாங்குவதற்கரிய மெய்ஞ்ஞானத்தை ஞானப்பால் ஆக்கித் திருமுலை சுரந்து தமக்கு அளித்து ஊட்டிய புண்ணிய வடிவுடைய திருத்தாயாரையும் முன் வணங்கிப் போற்றி மேன்மையான அருளைப் பெற்றுத் 'திருக்கோலக்கா' என்ற தலத்தை வணங்கும் பொருட்டு விருப்புடன் சென்றார்.

1999. நீர்ப்பெருக்கால் இரைச்சல் இட்டு அலைகள் பொருந்திய காவிரியாறு நன்னீருடன் தேன் உடைய மலர்களையும் முத்துக்களையும் சொரிய, மலர்களைச் சூழ்ந்து கொண்டு வரிவண்டுகள் மொய்க்க, மங்கையர் குடைந்து நீராடுகின்ற நீரையுடைய வாவிகள் பொருந்திய 'திருக்கோலக்கா' என்ற பதியை அடைந்து, தேவர்களின் தலைவரான இறைவரின் திருக்கோயிலை வலமாக வந்து திருமுன் நின்று வேதங்கள் முறையிட்டும் அறிவதற்கு அரிய இறைவரின் திருவடிகளைத் துதிப்பதற்குத் தொடங்கியவராய்,

Koviloor Digital Library

2000 மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்
பொருளை வேணி மீது
பைந்நிறைந்த அரவுடனே பசுங் குழவித் திங்கள்
பரித் தருளு வானை
மைந்நிறைந்த மிடற்றானை மடையில்வா
ளைகள்பாய என்னும் வாக்கால்
கைந்நிறைந்த ஒத்தறுத்துக் கலைப்பதிகம்
கவுணியர்கோன் பாடுங் காலை.

2001 கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக்
கருணை கூர்ந்த
செய்யசடை வானவர்தம் அஞ்செழுத்தும் எழுதியநற்
செம்பொற்றாளம்
ஐயரவர் திருவருளால் எடுத்தபா டலுக்கிசைந்த
அளவால் ஒத்த
வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து
வந்த தன்றே.

2002 காழிவரும் பெருந்தகையார் கையில்வரும்
திருத்தாளக் கருவி கண்டு
வாழிய தந் திருமுடிமேற் கொண்டருளி மனங்களிப்ப
மதுர வாயில்
ஏழிசையுந் தழைத்தோங்க இன்னிசைவண்
டமிழ்ப்பதிகம் எய்தப்பாடித்
தாழுமணிக் குழையார்முன் தக்கதிருக்
கடைக்காப்புச் சாத்தி நின்றார்.

2003 உம்பருல கதிசயிப்ப ஓங்கியநா தத்தளவின் உண்மை
நோக்கித்
தும்புருநா ரதர்முதலாஞ் சுருதிஇசைத் துறை
யுள்ளோரா துதித்து மண்மேல்
வம்பலர்மா மழைபொழிந்தார் மறைவாழ
வந்தருளும் மதலை யாரும்
தம்பெருமான் அருள்போற்றி மீண்டருளிச்
சண்பைநகர் சாரச் செல்வார்.

Koviloor Digital Library

2000. மெய்மை நிறைந்த செம்பொருள் எனப்படுகின்ற வேதங்களில் கூறப்படும் பொருளாய் உள்ளவரை, சடையின் மேல் பையுடைய பாம்புடன் பசுமையான பிறைச் சந்திரனைத் தாங்குபவரை, நஞ்சுடைய திருமிடற்றையுடையவரை "மடையில் வாளைகள் பாய" என்ற திருப்பதிகத்தின் வாக்கினால், திருக்கரங்களால் அமைந்த கால வரையறையினைச் செய்யும் தாள ஒத்துச் செய்து, கலைகள் நிரம்பிய திருப்பதிகத்தைக் கவுணியர் பெருமானான சம்பந்தர் பாடிய போது,

(இங்குப் பாடிய பதிகத்தின் தொடக்கம் 'மடையில் வாளைகள் பாய" என்பதாம்,)

2001. அங்ஙனம் சம்பந்தர் பெருமான் திருக்கைகளால் தாள ஒத்து அறுதியிட்டுப் பாடவும் (இறைவர்) கண்டு அருள் செய்து, கருணை கூர்ந்த தேவர் பெருமானின் திருவைந்தெழுத்து எழுதியுள்ள செம்பொன் தாளங்கள். இறைவரின் அருளால் எடுத்த அத்திருப்பதிகத்திற்குப் பொருந்திய அளவுபட, உலகம் முழுவதும் உய்ய வரும் மறைச் சிறுவரான பிள்ளையாரின் திருக்கைகளில் அப்போதே வந்து சேர்ந்தன.

2002. சீகாழியில் வந்து தோன்றிய பெருந்தகையாரான ஆளுடைய பிள்ளையார் தம்திருக்கையில் வந்த தாளக் கருவியைப் பார்த்து, வாழ்வடையுமாறு அதனைத் தம் திருமுடிமீது வைத்து மனம் மகிழ. இனிமை மிக்க திருவாக்கால் ஏழிசைகளும் தழைத்து ஓங்க, இனிய இசை பொருந்திய தமிழ்ப் பதிகத்தைப் பொருத்தமாகப்பாடி, விரும்பி ஏற்றருளிய குழை அணிந்த சிவபெருமானின் திருமுன்னர் தக்க திருக்கடைக் காப்புச் சாத்தி நின்றார்.

2003. தேவர் உலகமும் வியப்புக் கொள்ள, ஓங்கிய அந்தத் தாளத்தின் நாத அளவு உண்மையினை நோக்கித் தும்புரு நாரதர் முதலான சுருதி பயில்கின்ற இசைத்துறை வல்லவர் யாவரும் துதித்துத் தேன் உடைய பூமழை பொழிந்தனர். வேதங்கள் வாழத் தோன்றியருளிய மகனாரும் தம் இறைவரின் அருளைப் போற்றி அங்கு நின்று விடை பெற்றுச் சீகாழிப் பதியை அடைவாராய்,

Koviloor Digital Library

2004 செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத் துடன்
நடந்து செல்லும்போது
தங்கள்குலத் தாதையார் தரியாது தோளின்மேல்
தரித்துக்கொள்ள
அங்கவர்தம் தோளின்மிசை எழுந்தருளி
அணைந்தார்சூழ்ந்தமரர் ஏந்தும்
திங்கள்அணி மணியாடத் திருத்தோணி
புறத்தோணிச் சிகரக் கோயில்.

2005 திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங் கொண்ட
ருளித் திருமுன் நின்றே
அருட்பெருகு திருப்பதிகம் எட்டொரு
கட்டளையாக்கி அவற்றுள் ஒன்று
விருப்புறு பொற் றிருத்தோணி வீற்றிருந்தார்
தமைப்பாட மேவு காதல்
பொருத்தம்உற அருள்பெற்றுப் போற்றிஎடுத் தரு
ளினார் பூவார் கொன்றை.

2006 எடுத்ததிருப் பதிகத்தின் இசைதிருத்தா ளத்தினால்
இசைய ஒத்தி
அடுத்தநடை பெறப்பாடி ஆர்வமுற வணங்
கிப்போந் தலைநீர்ப் பொன்னி
மடுத்தவயற் பூந்தரா யவர் வாழ மழவிளங்கோ
லத்துக் காட்சி
கொடுத்தருளி வைகினார் குறைவிலா நிறைஞானக்
கொண்ட லாதாம.

2007 அந்நிலையில் ஆளுடைய பிள்ளையார் தமைமுன்னம்
அளித்த தாயார்
முன்னுதிக்க முயன்றதவத் திருநன்னி பள்ளிமுதல்
மறையோர் எல்லாம்
மன்னுபெரு மகிழ்ச்சியுடன் மங்கலதூ ரியந்து
வைப்ப மறைகள் ஓதிக்
கன்னிமதிற் சண்பைநகர் வந்தணைந்து
கவுணியர்கோன கழலில் தாழ்ந்தார்.

Koviloor Digital Library

2004. செந்தாமரை மலர் போன்ற திருக்கைகளில் பொன் தாளத்துடன் நடந்து போகும் சமயத்தில், தம் குலத் தந்தையார் அவர் நடந்து வருதலைப் பொறுத்துக் கொள்ளாதவராய் அவரைத் தம் தோள்மீது தரித்துக் கொள்ள, அதனால் அவருடைய தோள்மீது அமர்ந்தபடி, சுற்றிச் சூழ்ந்து தேவர்கள் போற்றுகின்ற திருத்தோணிபுரம் என்ற அத்தலத்தில் திருத்தோணி என்ற திங்கள் தங்கும் அழகிய மாடச் சிகரக் கோயிலை வந்து அடைந்தார்.

2005. அருட் செல்வம் பெருகும் அந்தப் பெருங் கோயிலை வலமாகச் சுற்றி வந்து, இறைவரின் திருமுன் நின்று, அருள் பெருகும் திருப்பதிகத்தைத் தக்க ராகப் பண்ணில் பினகாலத்தில் வகுத்தபடி கட்டளைகளுள் எட்டுப் பதிகங்கள் கொண்டதாகிய கட்டளைகளுள் ஒன்றில்தோணி யப்பரைப் பாட வேண்டும் என்ற விருப்புக்கு ஏற்ப அருள் பெற்றுப் 'பூவார் கொன்றை' எனத் தொடங்கிப் பாடினார்.

2006. மேல் கூறிய வண்ணம் தொடங்கிய அந்தப் பதிகத்தின் இசையமைதியைத் திருவருளால் பெற்ற அத் தாளத்தால பொருந்துமாறு தாளவரையறை செய்து, முன் பாடிய அத்திருப்பதிகத்தினை அடுத்து அதைப் போன்றே நிகழும்படி பாடியருளி, பேரன்பு பொருந்த வணங்கப் போய்க் குறைவில்லாத நிறைவான ஞானமழை கருக் கொண்ட மேகத்தைப் போன்ற சம்பந்தர் அலைகளை யுடைய நீர் பெருகும் காவிரி பாயும் வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் உள்ளவர் வாழ்வு அடையுமாறு இளங் குழவியான திருக்கோலத்தின் தோற்றம்தந்து இருந்தருளிச் செய்தார்.

2007. அவ்வாறு இருக்கும் நாளில், சம்பந்தரைப் பெற்றெடுத்த தாயான பகவதியார் முதலில் தன்னிடத்தில் வந்து தோன்ற, முயன்ற தவம் உடைய திருநனிபள்ளியில் உள்ள முதன்மையுடைய மறையவர் எல்லாரும் நிலைத்த மகிழ்ச்சியுடன் மங்கல வாத்திய ஒலியுடன் வேதங்களை ஓதிக்கொண்டு அழியாத மதில் சூழ்ந்த சீகாழி என்ற நகருக்கு வந்து சேர்ந்து கவுணியர் பெருமானின் திருவடி களில் வீழ்ந்து வணங்கினர்.

Koviloor Digital Library

2008 மங்கலமா மெய்ஞ்ஞானம் மண்களிப்பப் பெற்றபெரு
வார்த்தை யாலே
எங்கணும்நீள் பதிமருங்கில் இருபிறப்பா ளரும்
அல்லா ஏனை யோரும்
பொங்குதிருத் தொண்டர்களும் அதிசயித்துக்
குழாங்கொண்டு புகலி யார்தஞ்
சிங்க இள வேற்றின்பால் வந்தணைந்து
சழல்பணியும் சிறப்பின் மிக்கார்.

2009 வந்ததிருத் தொண்டர்க்கும் மல்குசெழு மறையவர்க்
கும் மற்று ளோர்க்கும்
சிந்தைமகிழ் வுறமலர்ந்து திருவமுது முதலான
சிறப்பின் செய்கை
தந்தம்அள வினில் விரும்புந் தகைமையினால்
கடனாற்றும் சண்பை மூதூர்
எந்தைபிரான் சிவலோகம் எனவிளங்கி எவ்வுலகும்
ஏத்து நாளில்.

2010 செழுந்தரளப் பொன்னிசூழ் திருநன்னி பள்ளியுள்
ளோர் தொழுது திங்கட்
கொழுந்தணியுஞ் சடையாரை எங்கள்பதி யினிற்
குப்பிட் டருள அங்கே
எழுந்தருள வேண்டும் என இசைந்தருளித்
தோணிவீற் றிருந்தார் பாதந்
தொழுந்தகைமை யாலிறைஞ்சி அருள்பெற்றுப்
பிறபதியும் தொழமுன் செல்வார்.

2011 தாதவிழ்செந் தாமரையின் அகவிதழ்போல் சீறடி
கள் தரையின்மீது
போதுவதும் பிறர்ஒருவர் பொறுப்பதவும் பொறா
அன்பு புரிந்த சிந்தை
மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத்
தோளின்மேல் வைத்துக் கொள்ள
நாதர்கழல் தம்முடிமேல் கொண்டகருத்
துடன்போந்தார் ஞானம் உண்டார்.

Koviloor Digital Library

2008. மங்கலம் செய்யும் சிவஞ்மெய்ஞ் ஞானத்தை உலகம் மகிழப் பெற்ற. பெரு வார்த்தை கேட்டலால் நீண்ட அத்திருத்தலத்தின் பக்கத்தில் எங்கணும் உள்ள இருபிறப் பாளர்களும் அவரல்லாத மற்றவரும் பெருகும் தொண்டர் களும் வியப்புக் கொண்டு கூட்டமாகக் கூடிச் சீகாழியில் உள்ளவரின் இளஞ்சிங்கமான பிள்ளையாரிடத்து வந்து சேர்ந்து அவருடைய திருவடிகளில் வணங்கும் சிறப்பில் மிக்கவர் ஆனார்கள்.

2009. அங்ஙனம் வந்து கூடிய திருத்தொண்டர்களுக் கும் அந்தணர்களுக்கும் மற்றவர்க்கும் மனமகிழ்ந்து முகம் மலர்ந்து உண்பித்தல் முதலான சிறப்புடைய செயல்களைத் தம் தம் அளவில் விரும்பும் தன்மையினால் தத்தம் கடமை யாய்ச் செய்யும் அந்தச் சீகாழிப் பதி, எம் இறைவரின் சிவலோகமே என விளக்கம் பெற்று எல்லா வுலகமும் துதித்தது. அந்நாளில்,

2010. செழுமையான முத்துகளைத் தரும் காவிரி யாறு சூழ்ந்த நனிபள்ளியில் உள்ளவர் சம்பந்தரை வணங்கிப் "பிறைச் சந்திரனை அணியும் சடையையுடைய சிவபெருமானை எங்கள் தலத்திலே கும்பிடும் பொருட்டுத் தாங்கள் எழுந்தருள வேண்டும்" என வேண்டிக் கொண் டனர். அதற்குச் சம்பந்தர் சம்மதித்துத் திருத்தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவடிகளை வணங்கும் முறைப்படி வணங்கி, விடைபெற்று, நனிபள்ளியே அல்லாது மற்றத் தலங்களுக்கும், தொழுவதற்கு எண்ணிச் செல்வார் ஆனார்.

2011. ஞானப் பாலமுது உண்ட சம்பந்தர் இதழ்கள் மலரும் செந்தாமரை மலரின் உள்ளிதழ்கள் போன்ற சிறிய திருவடிகள் தரையில் பொருந்த நடந்து செல்வதையும், மற்றவர் எவரும் தாங்கப் பொறுக்காத அன்புகொண்ட மனமுடைய மாதவம் செய்த தந்தை சிவபாத இருதயர், வந்து எடுத்துத் தம் தோளின்மீது சுமந்து கொண்டு செல்லத் தாம் சிவபெருமானின் திருவடிகளைத் தம் முடிமீது கொண்ட உள்ளத்தவராய்ச் (சம்பந்தர்) செல்லலானார்.

Koviloor Digital Library

2012 தேனலருங் கொன்றையினார் திருநன்னி
பள்ளியினைச் சாரச்செல்வார்
வானணையும் மலர்ச்சோலை தோன்று வதெப் பதி
என்ன மகிழ்ச்சி எய்திப்
பானல்வயல் திருநன்னி பள்ளி எனத் தாதையார்
பணிப்பக் கேட்டு
ஞானபோ னகர்தொழுது நற்றமிழ்ச்சொல்
தொடை மாலை நவில லுற்றார்.

2013 காரைகள் கூகைமுல்லை எனநிகழ் கலைசேர்
வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத்
தன்னில்
நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளி உள்கு
வார்தம்
பேரிடர் கெடுதற் காணை நம தெனும் பெருமை
வைத்தார்.

2014 ஆதியார் கோயில் வாயில் அணைந்துபுக் கன்பு
கூர
நீதியால் பணிந்து போற்றி நீடிய அருள்முன்
பெற்றுப்
போதுவார் தம்மைச் சூழ்ந்த பூசுரர் குழாங்கள்
போற்றும்
காதல்கண் டங்க யர்ந்தார் கவுணியர் தலைவ
னார்தாம்.

2015 அம்பிகை அளித்த ஞானம் அகிலமும் உய்ய உண்ட
நம்பெருந் தகையார் தம்மை எதிர்கொண்டு
நண்ண வேண்டி
உம்பரும் வணங்கும் மெய்ம்மை உயர்தவத்
தொண்டரோடு
தம்பெரு விருப்பால் வந்தார் தலைமை அந்
தணர்க ளெல்லாம்.

Koviloor Digital Library

2012. தேன் சிந்தும் கொன்றை மலரை அணிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் திருநன்னிபள்ளியைச் சேரச் செல்பவரான ஞானப்பாலமுது உண்ட பிள்ளையார், "வானம் அளாவும் மலர்ச் சோலைகளுடன் தோன்றும் இது எப்பதி?" என்று வினவ, மகிழ்ச்சி அடைந்து, தந்தையார் சிவ பாத இருதயர், "குவளை மலர்கள் நிறைந்த வயல் களையுடைய திருநன்னி பள்ளியாகும்" எனக் கூறினார். அதைக் கேட்டுப் பிள்ளையார் நன்மை தரும் தமிழ்ப் பாமாலையான திருப்பதிகத்தைச் சொல்லத் தொடங் கினார்.

2013. 'காரைகள் கூகை முல்லை' எனத் தொடங்கிச் செல்லும் கலைசேரும் வாய்மை விளங்கும் சிறப்புக் கொண்ட இயற்பதிகம் பாடித் திருக்கடைக் காப்பில், "உமையம்மையாரை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெரு மான் நிலையாய் எழுந்தருளியுள்ள திருநனிபள்ளியை நினைப்பவர்களின் பெரிய இடர்கள் யாவும் கெடுவதற்கு நம் ஆணையாகும்" என்ற பெருமையினைப் பொறித்து வைத்தார். (இங்குப் பாடிய பதிகம், 'காரைகள் கூகை முல்லை' என்ற தொடக்கத்தை உடையது.)

2014. பழைமையுடைய நனிபள்ளி சிவபெருமானின் கோயில் வாயிலை அடைந்து உள்ளே சென்று, அன்புமிக நியதியால் வணங்கித் துதித்துப் பேரருளைப் பெற்று, வெளியே செல்பவரான கவுணியர் தலைவரான பிள்ளை யார், தம்மைச் சூழ்ந்து கொண்டு அந்தணர், கூட்டம் போற்றுகின்ற அன்பைக் கண்டு அங்கே விரும்பி எழுந்தருளி யிருந்தார்.

2015. பார்வதி அம்மையார் தந்த ஞானப்பால முதத்தை உலகம் எல்லாம் உய்யும்படி உண்ட நம் பெருந் தகையான பிள்ளையாரை எதிர்கொண்டு அடையுமாறு, தேவர்களும் வணங்கும் மெய்ம்மையுடைய தவத்தில் சிறந்த தொண்டருடனே திருத்தலைச்சங்காட்டில் வாழும் அந்தணர்கள் அனைவரும் தம் பெரிய விருப்பத்தால் வந்தார்கள்.

(தலைசை— தலைச்சங்காடு)

Koviloor Digital Library

2016 காவணம் எங்கும் இட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
பூவணை தாமந் தூக்கிப் பூரண கும்பம் ஏந்தி
ஆவண வீதி எல்லாம் அலங்கரித் தண்ண லாரை
மாவணை மலர்மென் சோலை வளர்பதி கொண்டு புக்கார்.

2017 திருமறை யோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை ஓசை மல்கப் பெருந்திருக் கோயில் எய்தி
அருமறைப் பொருளா னாரைப் பணிந்தணி நற்சங் கத்தின்
தருமுறை நெறியக் கோயில் சார்ந்தமை அருளிச் செய்தார்.

2018 கறையணி கண்டர் கோயில் காதலால் பணிந்து பாடி
மறையவர் போற்ற வந்து திருவலம் புரத்து மன்னும்
இறைவரைத் தொழுது பாடும் கொடியுடை ஏத்திப் போந்து
நிறைபுனல் திருச்சாய்க் காடு தொழுதற்கு நினைந்து செல்வார்.

2019 பன்னகப் பூணி னாரைப் பல்லவனீச் சரத்துச்
சென்னியால் வணங்கி ஏத்தித் திருந்திசைப் பதிகம் பாடிப்
பொன்னிசூழ் புகாரில் நீடு புனிதர்தந் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்டர் எல்லாம் மகிழ்ந்தெதிர் கொள்ளப் புக்கார்.

Koviloor Digital Library

2016. அந்த அந்தணர் முதலியவர் எங்கும் பந்தல் இட்டுக் கமுகு மரங்களையும் வாழை மரங்களையும் நிறுத்தியும், மலர் மாலைகளைத் தொங்கவிட்டும், பூரண கும்பங்கள் எடுத்து, அங்காடித் தெருக்களை எல்லாம் அலங்காரம் செய்தும், பெருமையுடைய சம்பந்தரை, வண்டுகள் மொய்க்கும் மலர்கள் நிறைந்த மென்சோலைகள் சூழ்ந்த வளமான தம் பதிக்குள் அழைத்துப் போயினர்.

2017. அந்தணர்கள் சூழ்ந்து தம் தம் உள்ளத்தில் மகிழ்ச்சி மிக, சம்பந்தர் பெரிய திருமாடக் கோயிலை அடைந்து அரிய வேதத்தின் பொருளாய் உள்ளவரை வணங்கி, அழகிய வலம்புரிச் சங்கின் வடிவில் அமைக்கப் பட்ட அக்கோயிலில் அவ்விறைவர் விரும்பி வீற்றிருக்கும் தன்மை பற்றித் திருப்பதிகத்தைப் பாடினார்.

(இம்மாடக் கோயில் கோச்செங்கண் சோழரால் அமைக்கப்பட்டது.)

2018. நஞ்சின் கருமை கொண்ட கழுத்தையுடைய சிவபெருமானது கோயிலைக் காதலால் பணிந்து திருப்பதிகம் பாடிப் பின் அந்தணர்கள் தம்மைச் சூழ்ந்து துதிக்க வெளியே வந்து. 'திருவலம்புரம்' என்ற தலத்தில் சிவபெருமானைத் தொழுது பாடும் 'கொடியுடைமும்மதில்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தால் துதித்து வெளியே வந்து, நிறைந்த நீரையுடைய 'திருச்சாய்க்காடு' என்ற தலத்தைத் தொழுவதற்கு நினைந்து செல்பவராய்,

(இங்குப் பாடிய பதிகம் 'கொடியுடை மும்மதில்' எனத் தொடங்குவதாகும்.)

2019 பாம்புகளை அணியாய்ப் பூண்ட சிவபெருமானைத் திருப்பல்லவன் ஈச்சரத்தில் தலையினால் வணங்கித் துதித்துத் திருந்தும் இசையையுடைய திருப்பதிகத்தைப் பாடி காவிரியாறு சூழும் புகார் நகரத்தின் நீடு புனிதரான இறைவர் வீற்றிருக்கும் திருச்சாய்க் காட்டில் நிலையான சிறப்புடைய திருத்தொண்டர்கள் எல்லாம் மகிழ்வுடன் எதிர்கொள்ளப் புகுந்தவர்.

(இங்குப் பாடிய பதிகம் 'பரசு பாணியர்' எனத் தொடங்குவதாகும்.)

Koviloor Digital Library

2020 வானள வுயர்ந்த வாயி லுள்வலங் கொண்டு புக்குத்
தேனலர் கொன்றை யார்தந் திருமுன்பு சென்று
தாழ்ந்து
மானிடந் தரித்தார் தம்மைப் போற்றுவார்
மாண்புகார் என்ற
ஊனெலாம் உருக ஏத்தி உச்சிமேற் குவித்தார்
செங்கை.

2021 சீரினில் திகழ்ந்த பாட்டில் திருக்கடைக் காப்புப்
போற்றிப்
பாரினில் பொலிந்த தொண்டர் போற்றிடப்
பயில்வார் பின்னும்
ஏரிசைப் பதிகம் பாடி ஏந்திப்போந் திறைவர்
வெண்கா
டாருமெய்க் காத லோடும் பணிவதற் கணைந்தா
ரன்றே.

2022 பொன்னிதழ்க் கொன்றை வன்னி புனல்இள
மதியம் நீடு
சென்னியர் திருவெண் காட்டுத் திருத்தொண்டர்
எதிரே சென்றங்கு
இன்னதன் மையர்களானார் என வொணா
மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாளும் மன்னரைக் கொண்டு
புக்கார்.

2023 முத்தமிழ் விரகர் தாமும் முதல்வர்கோ புரத்து
முன்னார்ச்
சித்தநீ டுவகை யோடுஞ் சென்றுதாழ்ந் தெழுந்து
புக்குப்
பத்தாரம் அடியார் குழப் பரமர்கோ யிலைச்சூழ்
வந்து
நித்தனார் தம்முன் பெய்தி நிலமுறத் தொழுது
வீழ்ந்தார்.

Koviloor Digital Library

2020. பிள்ளையார் அக்கோயிலை வலமாக வந்து வானை அளாவ உயர்ந்த திருவாயிலுள் புகுந்து தேன் சொரிய மலர்கின்ற கொன்றை மலர் மாலை அணிந்த சிவ பெருமானின் திருமுன் போய்த் தாழ்ந்து, இடக்கையில் மானைக் கொண்ட சிவபெருமானைப் போற்றுபவராய் ''மண் புகார்'' என்ற பதிகத்தைத் தொடங்கி, ஊன் எல்லாம் உருகும்படி ஏத்தித் தமது சிவந்த திருக்கைகளை உச்சி மீது கொண்டு கூப்பி வணங்கினார்.

(இங்குப் பாடிய பதிகம் 'மண்புகார் வான் புகுவர்' எனத் தொடங்குவதாகும்.)

2021. சிறப்புடன் விளங்கும் பாடலால் திருக்கடைக் காப்புச் செய்து வணங்கி, உலகில் விளங்கிய திருத் தொண்டர் போற்ற அங்கு இருந்த பிள்ளையார், மேலும் அழகும் இசையும் கொண்ட பதிகத்தைப் பாடித் துதித்துச் சென்று இறைவர் எழுந்தருளிய திருவெண் காட்டினை நிறைந்த மெய்யன்புடன் பணிய அப்போதே புறப்பட்டார்.

2022. பொன் போன்ற இதழ்களையுடைய கொன்றை மலரும், வன்னியும், கங்கையும், பிறைச் சந்திரனும் என்ற மூவற்றை அணிந்துள்ள தலையையுடைய சிவபெருமான் 'திருவெண்காடு' என்ற ஊரில் உள்ள தொண்டர்கள் எதிரே வந்து, இவ்வளவு தன்மையுடையவர் ஆவார் என்று கூற இயலாதபடி மேலும் மேலும் மகிழ்ச்சி பெருக, நிலையான சிறப்புடைய சீகாழியில் வந்து உலகை ஆள்கின்ற தலைவரான பிள்ளையாரை வரவேற்று அழைத்துக் கொண்டு அந்நகரத்துள் புகுந்தனர்.

(பிள்ளையார் திருச்சாய்க் காட்டில் பாடிய பதிகம் 'நித்தலும் நியமம்' எனத் தொடங்குவதாகும்.)

2023. முத்தமிழ் வல்லவரான பிள்ளையார் சிவபெருமானின் திருக் கோபுரத்தை, முன்பு உள்ளத்தில் பெருகிய மகிழ்ச்சியுடனே போய்த் தாழ்ந்து வணங்கி எழுந்து உள் சென்று, பக்தர்களான தொண்டர்கள் சூழ, இறைவரின் திருக்கோயிலை வலம் வந்து, நித்தனாரான இறைவரின் திருமுன்பு போய் நிலம் பொருந்தத் தொழுது விழுந்தார்.

Koviloor Digital Library

2024 மெய்ப்பொரு ளாயி னாரை வெண்காடு மேவி னாரைச்
செப்பரும் பதிகமாலை கண்காட்டு நுதல் முன் சேர்த்தி
முப்புரஞ் செற்றார் பாதம் சேருமுக் குளமும் பாடி
ஒப்பரு ஞானம் உண்டார் உளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார்.

2025 அருமையாற் புறம்பு போந்து வணங்கிஅங் கமரும்நாளில்
திருமுல்லை வாயில் எய்திச் செந்தமிழ் மாலை சாத்தி
மருவிய பதிகள் மற்றும் வணங்குவார் மறையோர் ஏத்தத்
தருமலி புகலி வந்து ஞானசம் பந்தர் சார்ந்தார்.

2026 தோணிவீற் றிருந்தார் தம்மைத் தொழுதுமுன் நின்று தூய
ஆணியாம் பதிகம் பாடி அருட்பெரு வாழ்வு கூரச்
சேணுயர் மாடம் ஓங்குந் திருப்பதி யதனிற் செய்ய
வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார்.

2027 வைகும்அந் நாளிற் கீழ்பால் மயேந்திரப் பள்ளி வாசம்
செய்பொழிற் குருகா வூருந் திருமுல்லை வாயில் உள்ளிட்டு
எய்திய பதிகள் எல்லாம் இன்புற இறைஞ்சி ஏத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினார் தமிழ்ச்சொல் மாலை.

Koviloor Digital Library

2024. மெய்ப் பொருளரான திருவெண்காட்டில் வீற்றிருக்கும் இறைவரைச் சொல்வதற்கரிய திருப்பதிகமான 'கண்காட்டு நுதலானும்' எனத் தொடங்கும் பதிகத்தை மாலையாய்ச் சேர்த்தித் திரிபுரங்களை எரித்த இறைவரது திருவடிகளைச் சேரும் மூன்று குளங்களையும் அந்தப் பதிகத்துடன் அமைத்துப்பாடி, ஒப்பில்லா ஞானப் பாலமுது உண்ட பிள்ளையார் மனம் மகிழ்ந்து துதித்து இருந்தார்.

(இங்குப் பிள்ளையார் பாடிய பதிகம், 'கண்காட்டு நுதலானை' எனத் தொடங்குவதாகும்)

(மூன்று குளங்கள் — சோம குண்டம், சூரிய குண்டம், அக்கினி குண்டம்)

2025. அரிதாய் அக்கோயிலினின்று வெளியே வந்து வணங்கிச் சென்று அத்தலத்தில் அவர் எழுந்தருளியிருந்தார். அந்நாளில், தென் திருமுல்லை வாயிலைச் சென்று சேர்ந்து செந்தமிழ் மாலையான திருப்பதிகத்தைப் பாடிப் பொருந்திய மற்றத் தலங்களையும் வணங்குவாராய், அந்தணர் போற்ற வந்து, ஞானசம்பந்தர் அருட்செல்வம் மிக்க சீகாழியை அடைந்தார்.

(இங்குப் பாடியது ''துளிமண்டி யுண்டு'' எனத் தொடங்கும் பதிகமாகும்)

2026. திருத்தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கித் திருமுன்பு நின்று தூய்மையுடைய உரையாணியான திருப்பதிகம் பாடி அருட்பெரு வாழ்வு பெருக, வானத்தில் உயரும் மாளிகைகள் ஓங்கும் அந்தப் பதியில் சிவந்த சடையை யுடைய சிவபெருமானை நாளும் போற்றிய விருப்பம் மிக்கவராயினார்.

2027. முன் சொன்னபடி வாழ்ந்து வந்த அந்நாட்களில் கிழக்குத் திசையில் உள்ள 'திருமயேந்திரப்பள்ளியும் மணம் கமழ்கின்ற சோலை சூழ்நத 'திருக்குருகாவூரும' 'திருமுல்லை வாயில்' உள்ளிட்டு முன்பு போய் வணங்கிய தலங்கள் பலவற்றையும் இன்பம் உண்டாகத் துதித்து உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமான் மீது தமிழ்ச் சொல் மாலைகளைப் பாடினார்.

(திருமகேந்திரப் பள்ளியில் பாடியது 'திரைதரு பவளமும்' என்று தொடங்கும் பதிகமாகும். திருக்குருகாவூரில் பாடியது ''சுண்ண வெண்ணீறணி'' என்று தொடங்கும் பதிகமாகும்.)

Koviloor Digital Library

2028 அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகளில் அரனார் பொற்றாள்
மெய்வகை ஞானம் உண்ட வேதியர் விரவிப் போற்றி
உய்வகை மண்ணு ளோருக் குதவிய பதிகம் பாடி
எவ்வகை யோரும் ஏத்த இறைவரை ஏத்து நாளில்.

2029 திருநீல கண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை இசைப்பாட்டு மதங்கசூ ளாமணியார்
ஒருநீர்மை யுடன்உடைய பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு சண்பையிலே வந்தணைந் தார்.

2030 பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையார் எதிர்கொள்ளச்
சுரும்பார் செங்கமலமலர்த் துணைப்பாதந் தொழுதெழுந்து
விரும்பார்வத் தொடும் ஏத்து மெய்ம்மொழிக ளால்துதித்து
வரும்பான்மை தருவாழ்வு வந்தெய்த மகிழ்சிறந்தார்.

2031 அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி ஐயர்நீர்
உளமகிழ இங்கணைந்த உறுதியுடை யோம்என்றே
இளநிலா நகைமுகிழ்ப்ப இசைத்தவரை யுடன்கொண்டு
களநிலவு நஞ்சணிந்தார் பாலணையுங் கவுணியனார்.

Koviloor Digital Library

2028. அங்ஙனமே சுற்றியுள்ள திருத்தலங்களில் போய் இறைவரின் பொற் பாதங்களை மெய்ஞ்ஞானப் பாலமுது உண்ட பிள்ளையார் போற்றி, இந்நிலவுலகத்தில் உள்ளவருக்கு உய்யும் வகை உதவும் பொருட்டுத் திருப்பதி கங்களைப் பாடி எல்லாவகையோடும் போற்றும் படி சிவ பெருமானை வணங்கியிருக்கின்ற நாட்களில்,

2029. 'திருநீலகண்டத்து யாழ்ப்பாண நாயனாரும்' தெளிவான அமுதம் போன்ற இயல்புடைய இசைப் பாட லையுடைய 'மதங்க சூளாமணியாரும்' ஒன்றுபட்ட அன்பின் திறத்தால் ஞான சம்பந்தரின் திருவடிகளை வணங்குவதற்கு இசை இன்பம் அளிக்கும் யாழினைக் கொண்டு சீகாழிப்பதிக்கு வந்து சேர்ந்தனர்.

(மதங்க சூளாமணியார் — திருநீலகண்ட யாழ்ப்பாண ரின் மனைவியார்)

2030. திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடைய மனைவியார் மதங்க சூளாமணியாரும் வருதலை அறிந்து ஞானசம்பந்தப் பிள்ளையார் எதிர் கொண்டு வரவேற்க, வண்டுகள் பொருந்திய செந்தாமரை மலர் போன்ற அவரு டைய இரு திருவடிகளையும் வணங்கிஎழுந்து, விரும்பும் ஆர்வத்தோடும் ஏத்தி மெய்ம் மொழிகளால் துதித்து வரும் பான்மையால் தரப்பட்ட வாழ்வு வந்து பொருந்த, அவ் விருவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

2031. அளவற்ற மகிழ்ச்சி உடைய அந்த இருவரை யும் நோக்கி, ''ஐயரே! தாங்கள் மனம் மகிழ இங்குச் சேர்ந்ததனால் ஆன உறுதிப் பொருளைப் பெற்றவர் ஆனோம்'' என்று இளநிலா ஒளிவீசும் புன்னகையுடன் கூறி, அவர்களையும் தம்முடனே கொண்டு, கருமை நிலவும் நஞ்சுடைய கண்டரான சிவபெருமானிடம் சேரும் கவுணி யரான பிள்ளையார்,

Koviloor Digital Library

2032 கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக்
குப்பிடுவித்து
ஏயும்இசை யாழ்உங்கள் இறைவருக்கிங் கியற்றும்என
ஆயபுகழ்ப் பிள்ளையார் அருள்பெற்ற
அதற்கிறைஞ்சி
மேயதொடைத் தந்திரியாழ் வீக்கிஇசை
விரிக்கின்றார்.

2033 தானநிலைக் கோல்வடித்துப் படிமுறைமைத்
தகுதியினால்
ஆனஇசை ஆராய்வுற் றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார் நான்மறையோர்
அதிசயித்தார்.

2034 யாழின்எழும் ஓசையுடன் இருவர்மிடற் றிசைஒன்றி
வாழிதிருத் தோணியுளார் மருங்கணையும்
மாட்சியினைத்
தாழும்இரு சிறைப்பறவை படிந்ததனிவிசும்பிடை
நின்று
ஏழிசைநூற் கந்தருவர் விஞ்சையரும்
எடுத்திசைத்தார்.

2035 எண்ணருஞ்சீர்த் திருத்தோணி எம்பெருமான்
கழல்பரவிப்
பண்ணமையாழ் இசைகூடப் பெரும்பாணர்
பாடியபின்
கண்ணுதலார் அருளினாற் காழியர்கோன்
கொடுபோந்து
நண்ணியுறை யிடஞ் சமைத்து நல்விருந்து
சிறந்தளிப்ப.

2036 பிள்ளையார் அருள்பெற்ற பெரும்பாணர்
பிறையணிந்த
வெள்ளநீர்ச் சடையாரை அவர்மொழிந்த
மெய்ப்பதிகம்
உள்ளபடி கேட்டலுமே உருகுபெரு
மகிழ்ச்சியராய்த்
தெள்ளமிர்தம் அருந்தினர்போல் சிந்தைகளிப்
புறத் தொழுதார்.

Koviloor Digital Library

2032. ஞானசம்பந்தர், கோயிலின் வெளியே உள்ள திருமுற்றத்தில் கொண்டு புகுந்து வணங்கச் செய்து, "பொருந்திய இசையையும் யாழையும் உம் இறைவர்க்கு இங்கிருந்து இயக்குங்கள்" என்று கூறியருளினார். அவர்கள் புகழ் பொருந்திய பிள்ளையாரின் திருவருளைப் பெற்று தால் வணங்கிப் பொருந்திய தொடை நரம்புகளை வீக்கி இசையை வாசிப்பவராகி,

2033. சுரத்தானங்கள் உரிய இடங்களில் உண்டாக்கும்படி கருவியினால் அமைத்து, நரம்புபடியும் முறைமையின் தகுதியால் ஆன ஆரோகண அவரோகண வகையில் இசையைத் தெரிந்து இறைவரின் திருப்பாட்டினை அளவுபடும் முறையில் பாடினவரான மதங்க சூளாமணியுடன் ஒன்றிப் பாடி வாசிக்கக் கேட்டு ஞானப்பால் உண்டவரான சம்பந்தர் மகிழ்ச்சியடைந்தனர். நான்மறையவர்கள் வியப்புக் கொண்டனர்.

2034. யாழினின்று எழும் ஓசையோடு இருவர் மிடற்றின் இசையும் ஒன்றிக் கூடி, வாழும் திருத்தோணியில் உள்ளாரிடம் அணையும் பெருமையை, தாழ்ந்து வரும் கின்னர மிதுனங்களான இரு பறவைகள வந்து படிந்த தனி விசும்பில் நின்று ஏழிசை நூலில் வல்ல கந்தருவர், வித்தியாதரர் என்பவர்களும் பாராட்டினர்.

2035. நினைத்தற்கு அரிய சிறப்புடைய திருத்தோணியில் வீற்றிருக்கும் இறைவனின் திருவடிகளைத் துதித்துப் பண் பொருந்திய யாழும் மிடற்று இசையும் பொருந்துமாறு திருநீலகண்டப் பெரும்பாணர் பாடி முடித்தார். பின்பு, நெற்றிக் கண்ணையுடைய இறைவரின் அருளால் சீகாழித் தலைவரான ஞானசம்பந்தர் அழைத்துக் கொண்டு சென்று அவர்கள் தங்கியிருப்பதற்குத் தனியிடம் அமைத்து நல்ல விருந்தையும் சிறப்பாய் அளிக்க,

2036. ஞானசம்பந்தரின் அருளைப் பெற்ற பெரும்பாணர் பிறைச் சந்திரனை அணிந்த தங்கையாறு தங்கிய சடையுடையவரை அவர் பாடிய மெய்ப்பதிகங்களை உள்ளவாறு அடியார்கள் சொல்லக் கேட்டவுடனே மனமுருகும் பெரு மகிழ்வு உடையவராய்த் தெளிந்த அமுதத்தை உண்டவர் போல உள்ளம் களிப்புக் கொள்ள வணங்கினர்.

Koviloor Digital Library

2037 காழியர் தவப்பயனாம் கவுணியர்தம் தோன்றலார்
ஆழிவிடம் உண்டவர்தம் அடிபோற்றும் பதிகஇசை
யாழின்முறை மையின்இட்டே எவ்வுயிரும்
மகிழ்வித்தார்
ஏழிசையும் பணிகொண்ட நீலகண்ட
யாழ்ப்பாணர்.

2038 சிறியமறைக் களிறளித்த திருப்பதிகஇசை யாழின்
நெறியிலிடும் பெரும்பாணர் பின்னும் நீர்
அருள்செய்யும்
அறிவரிய திருப்பதிக இசையாழில் இட்டடியேன்
பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டும்
எனத்தொழுதார்.

2039 மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற்
றிசைந்தருளப்
பெற்றவர்தாம் தம்பிரான் அருளிதுவே
எனப்பேணிச்
சொற்றமிழ்மாலையின் இசைகள் சுருதியாழ்
முறைதொடுத்தே
அற்றைநாட் போல்என்றும் அகலாநண் புடன்
அமர்ந்தார்.

2040 சிரபுரத்தில் அமர்ந்தருளுந் திருஞான சம்பந்தர்
பரவுதிருத் தில்லைநடம் பயில்வாரைப்
பணிந்தேத்த
விரவிஎழும் பெருங்காதல் வெள்ளத்தை
உள்ளத்தில்
தரஇசையும் குறிப்பறியத் தவமுனிவர்க்
கருள்செய்வார்

Koviloor Digital Library

2037. சீகாழிப் பதியினர் செய்த தவப்பயனாய் உள்ள கவுணியர் குலத்தில் தோன்றிய சம்பந்தர் கடலில் தோன்றிய நஞ்சை உண்ட இறைவரின் திருவடிகளைப் போற்றும் திருப்பதிகங்களின் இசையை, ஏழிசையை ஏவல் கொண்ட திருநீலகண்ட யாழ்பாணர், யாழ் முறைமையால் வாசித்து எல்லா வுயிர்களையும் மகிழ்வித்தார்.

2038. சிறிய வேதக்களிறான ஞான சம்பந்தர் அருளிய திருப்பதிக இசையினை யாழிசையின் நெறியில் வாசித்த பெரும்பாணர், மேலும் அவரைப் பார்த்துத், "தாங்கள் ஆணையிட்டருளிய அறிவதற்கு அரிய பெருமை யுடைய திருப்பதிகங்களது இசையை யாழில் வாசித்து அடியேன் தங்களைப் பிரியாமல் வணங்கி உடன் இருக்கும் பேறு பெற வேண்டும்" என்று வேண்டி வணங்கினார்.

2039. அங்ஙனம் வேண்டிக் கொண்ட அதற்கு ஞான சம்பந்தர் உள்ளம் மகிழ்ந்து இசைந்தருள, அத்தகைய பேற்றைப் பெற்றுக் கொண்ட பாணனார், "இது தம் பெருமானின் அருளே யாகும்" என்று விருப்பத்துடன் பேணி, பிள்ளைப் பெருமானின் திருப்பதிகங்களான தமிழ் மாலைகளைச் சுருதியுடைய யாழிசையின் முறையில் வைத்து வாசித்துக் கொண்டே, அந்த நாள் போன்றே என்றும் பிரியாதவராய் உடன் இருந்து வந்தனர்.

2040. சிரபுரம் என்ற சீகாழியில் இருக்கின்ற திருஞான சம்பந்தர் யாவரும் வணங்கித் துதிக்கும் திருத்தில்லைப் பொன்னம்பலத்தில் நடனம் ஆடும் இறைவரைப் பணிந்து துதிக்கப் பொருந்தி எழும் விருப்பமான பெரு வெள்ளத்தைத் தன் உள்ளத்தில் கொள்ள இசையும் அருட் குறிப்பு நிகழ்ந்ததாக அதைத் தவ முனிவரான தந்தை சிவ பாத இருதயர்க்குக் கூறினார்.

Koviloor Digital Library

2041 பிள்ளையார்அருள் செய்யப் பெருந்தவத்தால்
பெற்றெடுத்த
வள்ளலார் தாமும்உடன் செல்வதற்கு மனங்களிப்ப
வெள்ளிமால் வரைஎன்னத் திருத்தோணி
வீற்றிருந்த
புள்ளிமான் உரியாரைத் தொழுதருளாற்
புறப்பட்டார்.

2042 தாவில்யாழ்ப் பாணரொடும் தாதையார்
தம்மோடும்
மேவியசீர் அடியார்கள் புடைவரவெங் குருவேந்தர்
பூவின்மேல் அயன்போற்றும் புகலியினைக்
கடந்துபோய்த்
தேவர்கள்தம் பெருந்தேவர் திருத்தில்லை
வழிச்செல்வார்

2043 நள்ளி ருட்கண்நின் றாடுவார் உறைபதி நடுவுகண்
டனபோற்றி
முள்ளி டைப்புற வெள்ளிதழ்க் கேதகை முகிழ்விரி
மணஞ்சூழப்
புள்ளு டைத்தடம் பழனமும் படுகரும்புடை
கழிந் திடப்போந்து
கொள்ளி டத்திரு நதிக்கரை அணைந்தனர்
கவுணியர் குலதீபர்.

2044 வண்டி ரைத்தெழு செழுமலர்ப் பிறங்கலும்
மணியும்ஆ ரமும்உந்தித்
தண்ட லைப்பல வளத்தொடும் வருபுனல்
தாழ்ந்துசே வடிதாழத்
தெண்டி ரைக்கடற் பவளமும் பணிலமும்
செழுமணித் திரள்முத்தும்
கொண்டி ரட்டிவந்தோ தமங்கெதிர்கொளக்
கொள்ளிடங் கடந்தேறி.

Koviloor Digital Library

2041. மேல் சொன்னவண்ணம், சம்பந்தப் பெருமான் அருள் செய்ய, பெருந்தவத்தால் பெற்றெடுத்த பிள்ளை யாரைத் தமக்கு மகனாகப் பெற்ற வள்ளலாரான சிவபாத இருதயர், தாமும் அவருடன் செல்ல மன மகிழ்ச்சியுடன் இசைந்தார். பெரிய வெள்ளி மலையில் போல் திருத்தோணி யில் வீற்றிருந்தருளிய புள்ளிமான் தோலையுடைய இறைவரை வணங்கி அருள் விடை பெற்றுச் சீகாழியி னின்றும் புறப்பட்டார்.

2042. குற்றம் இல்லாத யாழ்ப் பாணரோடும் தந்தை சிவபாத இருதயருடனும் பொருந்திய சிறப்புடைய அடியார்கள் பக்கத்தில் சூழ்ந்து வர மண்ணுலகத்தில் வந்து நான்முகன் பூசித்து வழிபடும் சீகாழிப் பதியைக் கடந்து தேவர்களுக்கெல்லாம் பெருந்தேவரான கூத்தப் பெரு மானின் திருத்தில்லையை நோக்கிச் செல்லும் வழியில் போவார் ஆனார்.

2043. நள்ளிருளில் நின்று ஆடுகின்ற இறைவர் எழுந்தருளிய பதிகள் நடுவில் கண்டவற்றை வழிபட்டு, இடையில் முட்களுடன் கூடிய புற இதழ்களைக் கொண்ட தாழைகளின் மொட்டுகள் மலர்கின்றதால் மணம் கமழ்கின்ற நீர்ப்பறவைகளையுடைய இடம் அகன்ற வயல் களும் பள்ள நிலங்களும் பக்கங்களில் கடந்திடச் சென்று, கவுணியர் குல விளக்கான ஞானசம்பந்தர் கொள்ளிட ஆற்றின் தென்கரையை அடைந்தார்.

2044. வண்டுகள் ஒலித்து எழுகின்ற செழுமையான மலர்களின் கூட்டத்தையும் மணிகளையும் சந்தனக் கட்டைகளையும் வாரிக் கொண்டு, சோலைகளின் வளங்கள் பலவற்றுடன் வருகின்ற ஆற்றின் நீர் தாழ்ந்த தம் அடிகளை வணங்கவும், தெளிவான அலைகளையுடைய கடலினின்று பவளங்கள், சங்குகள் ஆகியவற்றையும், மற்ற மணிகளையும் திரண்ட முத்துக்களையும் வாரிக் கொண்டு வீசி வரும் கடலின் சுழிநீர் எதிர் கொள்ளவும், கொள்ளிடத் திருநதியினைக் கடந்து வடகரையின் மேல் ஏறி,

Koviloor Digital Library

2045 பல்கு தொண்டர்தங் குழாத்தொடும் உடன்வரும்
பயின்மறை யவர்சூழச்
செல்க திப்பயன் காண்பவர் போற்களி சிந்தைகூர்
தரக்கண்டு
மல்கு தேவரே முதலனைத் துயிர்களும் வணங்க
வேண் டினவெல்லாம்
நல்கு தில்லைசூழ் திருஎல்லை பணிந்தனர் ஞான
ஆரமுதுண்டார்.

2046 செங்கண் ஏற்றவர் தில்லையே நோக்கிஇத்
திருந்துல கினிற்கெல்லாம்
மங்க லந்தரு மழவிளம் போதகம்வரும் இரு
மருங்கெங்கும்
தங்கு புள்ளொலி வாழ்த்துரை எடுத்துமுன்
தாமரை மதுவாசப்
பொங்கு செம்முகை கரங்குவித் தலர்முகங்
காட்டின புனற்பொய்கை.

2047 கலவ மென்மயி லினங்களிக் தழைத்திடக்
கடிமணக்குளிர் கால்வந்
துலவிமுன் பணிந்தெதிர்கொளக் கிளர்ந்தெழுந்
துடன்வருஞ் சுரும்பார்ப்ப
இலகு செந்தளிர் ஒளிநிறந் திகழ்தர இருகுழை
புடையாட
மலர்மு கம்பொலிந் தசையமென் கொம்பர்நின்
றாடுவ மலர்ச்சோலை.

2048 இழைத்த டங்கொங்கை இமயமா மலைக்கொடி
இன்னமு தெனஞானம்
குழைத்த ளித்திட அமுதுசெய் தருளிய குருளையார்
வரக்கண்டு
மழைத்த மந்தமா ருதத்தினால் நறுமலர் வண்ண
நுண் துகள் தூவித்
தழைத்த பொங்கெழில் முகஞ்செய்து வணங்கின
தடம்பணை வயற்சாலி.

Koviloor Digital Library

2045. நிறைந்த அடியார் திருக்கூட்டத்துடன் பயிலும் அந்தணர் சூழ்ந்து வர, செல்லும் கதியின் பயனைக் காண்பவரைப் போல் உள்ளத்தில் மிக்க மகிழ்ச்சி கொண்டு பெருகிய தேவர் முதலான எல்லாவுயிர்களும் வணங்க, அவரவர் வேண்டிய வரங்களையெல்லாம் தரும்தில்லையைச் சூழ்ந்த திருவெல்லையினை ஞானமான நிறைந்த அமுது உண்ட பிள்ளையார் நிலத்தில் விழுந்து வணங்கினார்.

2046. இந்தத் திருந்திய உலகுக்கெல்லாம் மங்கலம் தரும் இளமையுடைய யானைக் கன்றான ஞானசம்பந்தர் வரும் இரண்டு பக்கங்களில் எங்கும் தங்கும் பறவைகளின் ஒலியான வாழ்த்துரை எடுத்து முன்பு, தாமரை மலர்களின் செம்முகையான கை குவித்து நீர்ப்பொய்கைகள் மலர்ந்த முகத்தைக் காட்டி வரவேற்றன.

2047. மலர்ச் சோலைகளில், தோகைகளையுடைய மென்மையான மயில் இனங்கள் அழைக்கவும், புதிய மண முடைய குளிர்ந்த தென்றல் காற்று வந்து எதிர் கொண்டு வரவேற்கவும், பெயர்ந்து எழுந்து உடன் வரும் வண்டுகள் ஆரவாரம் செய்யவும், விளங்கும் செந்தளிர்கள் ஒளியுடைய நிறம் விளங்கவும், இருகுழைகள் பக்கங்களிலே ஆடவும், மலர்கள் முகம் பொலிந்து அசையவும், மென்மையான கொம்புகள் நின்று ஆடின.

2048. இடம் அகன்ற வயல்களில் உள்ள நெற் பயிர்கள், அணிகள் அணிந்த கொங்கைகளையுடைய இமய மலையில் தோன்றிய கொடிபோன்ற பார்வதியம்மையார் இனிய அமுதச் சிவஞானத்தைக் குழைத்து அளிக்க, அதை யுண்டருளிய ஞானசம்பந்தர் வரக்கண்டு, குளிர்ந்த மென்மையான காற்றினால் மணம் கமழும் மலர்களின் அழகிய நுண்ணிய பூந்தாதுக்களான சுண்ணத்தைத் தூவித் தழைத்த எழில் முகம் செய்து வணங்கின.

Koviloor Digital Library

2049 ஞாலம் உய்ந்திட ஞானமுண் டவர்எழுந் தருளும்
அந் நலங்கண்டு
சேல லம்புதண் புனற்றடம் படிந்தணை
சீதமாருதம்வீசச்
சால வும்பல கண்பெறும் பயன்பெறுந் தன்மையிற்
களிகூர்வ
போல சைந்திரு புடைமிடைந்தாடின புறம்பணை
நறும்பூகம்.

2050 பவந்த விர்ப்பவர் தில்லைசூழ் எல்லையில்
மறையவர்பயில் வேள்விச்
சிவந்த ரும்பய னுடையஆ குதிகளின் செழும்புகைப்
பரப்பாலே
தவந்த ழைப்பவந் தருளிய பிள்ளையார் தாமணை
வுறமுன்னே
நிவந்த நீலநுண் துகில்விதா னித்ததுபோன்றது
நெடுவானம்.

2051 கரும்பு செந்நெல்பைங் கமுகொடு கலந்துயர்
சழனியம்பணை நீங்கி
அரும்பு மென்மலர் தளிர்பல மூலமென் றனைத்
தின்ஆ கரமான
மருங்கில் நந்தன வனம்பணிந் தணைந்தனர்
மாடமா ளிகையோங்கி
நெருங்கு தில்லைசூழ் நெடுமதில் தென்திரு
வாயில்நே ரணித்தாக.

2052 பொங்கு கொங்கையிற் கறந்தமெய்ஞ் ஞானமாம்
போனகம் பொற்குன்ற
மங்கை செங்கையால் ஊட்டஉண் டருளிய
மதலையார் வந்தார் என்று
அங்கண் வாழ்பெருந் திருத்தில்லை அந்தணர்
அன்பர் களுடன்ஈண்டி
எங்கும் மங்கல அணிமிக அலங்கரித் தெதிர்கொள
அணைவார்கள்

Koviloor Digital Library

2049. வயல்களின் பக்கங்களில் உள்ள மணம் கமழும் பாக்கு மரங்கள், உலகம் உய்யும் பொருட்டாக ஞான அமுதையுண்டவர் எழுந்தருளும் அந்நலத்தைக் கண்டு, சேல் மீன்கள் அலம்பும் குளிர்ந்த நீரையுடைய பொய் கைகளில் படிந்து அணைகின்ற குளிர்ந்த காற்று வீச, மிகப் பல கண்கள் பெற்ற பயன் பெறும் தன்மையினால் மகிழ்ச்சி அடைவன போல், இரண்டு பக்கங்களிலும் அசைந்து நெருங்கி ஆடின.

2050. தவமானது தழைக்கத் தோன்றியருளிய ஞான சம்பந்தப் பெருமான் வந்து சேர அவரை உபசரிக்கும் பொருட்டு, முன்னே, பிறவியை ஒழித்தருளுபவரான கூத்தரின் திருத்தில்லை நகரத்தைச் சூழ்ந்த எல்லையிலே, வேதியர் பயிலும் வேள்வியில் சிவத்தன்மையை விளைக்கும் பயன் கொண்ட ஆகுதிகளினின்றும் எழுகின்ற செழும் புகையினது பரப்பினால், பெரிய வானம் உயர்ந்த நீலநிறமான நுட்பமான துகிலை மேற் கட்டியாய்க் கட்டியதைப் போல் விளங்கியது.

2051. கரும்பு செந்நெல் என்பவை பசுமையான பாக்குகளுடன் கலந்து உயர்தற்கு இடமான வயல்களைக் கொண்ட மருதநிலத்தைக் கடந்து, அரும்புகளும் மென்மையான தளிர்களும் பழங்களும் வேர்களும் என்றிவை முதலான எல்லாவற்றுக்கும் குறிப்பிடமான பக்கத்தில் உள்ள சோலைகளை வணங்கி, மாடமாளிகைகள் ஓங்கி நெருங்கும் தில்லையைச் சூழ்ந்த பெரிய மதிலின் தெற்குத் திசை வாயிலின் நேராய் அருகில் ஞான சம்பந்தர் வந்து சேர்ந்தார்.

2052 ''பால் பெருகிய திருமுலையில் கலந்த மெய்ஞ் ஞானம் என்ற பாலமுதத்தைப் பொன்மலையின் மங்கையரான உமையம்மையார் தம் கையினால் எடுத்து ஊட்ட அதனை உண்டருளிய பிள்ளையார் வந்தார்'' என்று அங்கு வாழ்கின்ற தில்லை வாழ் அந்தணர்கள் அடியார்களுடனே கூடி வந்து நிறைந்து, எங்கும் அலங்கரித்து பிள்ளையாரை வரவேற்க அணைவாராய்,

Koviloor Digital Library

2053 வேத நாதமும் மங்கல முழக்கமும் விசும்பிடை
நிறைந்தோங்கச்
சீத வாசநீர் நிறைகுடந் தீபங்கள் திசைஎலாம்
நிறைந்தாரச்
சோதி மாமணி வாயிலின் புறஞ்சென்று சோபன
ஆக்கமுஞ் சொல்லிக்
கோதி லாதவர் ஞானசம்பந்தரை எதிர்கொண்டு
கொடுபுக்கார்.

2054 செல்வம் மல்கிய தில்லைமூ தூரினில் தென்றிசைத்
திருவாயில்
எல்லை நீங்கியுள் புகுந்திரு மருங்குநின் றெடுக்கும்
ஏத்தொலிசூழ
மல்லல் ஆவண மறுகிடைக் கழிந்துபோய்
மறையவர் நிறைவாழ்க்கைத்
தொல்லை மாளிகை நிரைத்திரு வீதியைத்
தொழுதணைந் தனர்தூயோர்.

2055 மலர்ந்த பேரொளி குளிர்தரச் சிவமணங்
கமழ்ந்துவான் துகள்மாறிச்
சிலம்ப லம்புசே வடியவர் பயில்வுறுஞ் செம்மையால்
திருத்தொண்டு
கலந்த அன்பர்தஞ்சிந்தையில் திகழ்திரு வீதிகண்
களிசெய்யப்
பலன்கொள் மைந்தனார் எழுநிலைக் கோபுரம்
பணிந்தெழுந் தனர்போற்றி.

2056 நீடு நீள்நிலைக் கோபுரத் துள்புக்கு நிலவிய
திருமுன்றின்
மாடு செம்பொனின் மாளிகைவலங்கொண்டு
வானுற வளர்திங்கள்
சூடு கின்றபே ரம்பலந் தொழுதுபோந் தருமறை
தொடர்ந்தேத்த
ஆடு கின்றவர் முன்புற அணைந்தனர் அணிகிளர்
மணிவாயில்.

Koviloor Digital Library

2053. வேதங்களின் ஒலியும் மங்கல முழக்கமும் வானத்தில் நிறைந்து ஒலிக்கவும், குளிர்ச்சியும் மணமும் உடைய நீர் நிரம்பிய குடங்களும் தீபங்களில் எல்லாம் நிறைந்து பொருந்தவும், ஒளி பொருந்திய பெரிய மணிகளை யுடைய திருவாயிலின் வெளியே நின்று, 'சோபனம் ஆகுக' என்ற நல்ல மொழிகளையும் வாழ்த்துகளையும் சொல்லித் தீது நீங்கப் பெற்று வாழ்ந்தவர்களாகி, ஞானசம்பந்தரை எதிர் கொண்டு வரவேற்று அழைத்துக் கொண்டு உள்ளே சென்றனர்.

2054. செல்வம் நிரம்பிய தில்லை மூதூரில் தெற்குத் திக்கு வாயிலில் வழி எல்லை நீங்கி, உள்ளே புகுந்து, இரண்டு பக்கங்களிலும் எடுத்துப் போற்றும் ஒலி சூழ, வளமையுடைய அங்காடித் தெருவினைக் கடந்து போய், அந்தணர்களின் நிறைவுடைய வாழ்க்கை வாழும் பழைமை யான திருமாளிகைகள் வரிசை பெறும் திருவீதியைத் தொழுது, பிள்ளையாரான தூயவர் நகரத்துள் சென்றார்.

2055. உலகமெல்லாம் மலர்ந்த பேரொளி குளிர்ச்சி யினை செய்யச் சிவ மணம் கமழ்ந்து வீசி வானத்தின் குற்றங்கள் நீங்கப் பெற்று, சிலம்பு ஒலி செய்யும் சேவடியை யுடைய கூத்தப் பெருமான் பொருந்தியுள்ள தன்மையினால், திருத்தொண்டில் சென்று பட்டுக் கலந்த அடியாரின் உள்ளம் போல் விளங்கும் அந்த வீதியானது, கண்களை மகிழும்படி செய்ய, இவ்வுலகம் பயன் கொள்வதற்குரிய ஞானசம்பந்தப் பிள்ளையார் எழுநிலைக் கோபுரத்தைத் துதித்துப் பணிந்து எழுந்தார்.

2056. நீண்டு உயர்ந்த நிலைகளைக் கொண்ட தெற்குக் கோபுரத்துள் புகுந்து, நிலைபெற்றதிரு முற்றத்தின் பக்கத்தில் செம்பொன் மாளிகைப் பத்தியை வலமாக வந்து, வானளாவ வளரும் சந்திரனைச் சூடும்படி உயர்ந்த பேரம் பலத்தை வணங்கி மேலும் போய், அரிய வேதங்கள் தொடர்ந்து துதிக்கத் திருக்கூத்து ஆடுகின்ற கூத்தப்பெரு மானின் திருமுன்பு சேர்வதற்கு அழகு மிகும் மணிகளை யுடைய திருவணுக்கன் திருவாயிலை ஞானசம்பந்தர் அடைந்தார்.

Koviloor Digital Library

2057 நந்தி எம்பிரான் முதற்கண நாதர்கள்
நலங்கொள்பன் முறை கூட
அந்த மில்லவர் அணுகிமுன் தொழுதிரு
அணுக்கனாம் திருவாயில்
சிந்தை ஆர்வமும் பெருகிடச் சென்னியிற் சிறியசெங்
கையேற
உய்ந்து வாழ்திரு நயனங்கள் களிகொள்ள
உருகுமன் கொடுபுக்கார்.

2058 அன்ன லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யான
அம்பல முந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும் ஆனந்த ஒரு
பெருந் தனிக்கூத்துங்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங்
களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார்
புனிதராடியபொற்பு.

2059 உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை ஒழி
வின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர
அருளினை எனப்போற்றி
இணையில் வண் பெருங் கருணையே ஏத்திமுன்
எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர் பொழிந்தனர்
விழிமாரி.

2060 ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால்
வாழி திருத் தில்லைவாழ் அந்தணரை
முன்வைத்தே
ஏழிசையும் ஓங்க எடுத்தார் எமையாளும்
காழியர்தங் காவலனார் கற்றாங் கெரியோம்பி.

Koviloor Digital Library

2057. நந்திதேவரான நம் பெருமானைத் தலைவராகக் கொண்ட சிவகணநாதர், நன்மை மிக்க பல வரிசைகளாகக் கூடி நிற்க, எண்ணிறந்த அடியார்கள் முனிவர்கள் தேவர்கள் முதலியவர் அவ்வரிசைகளின் பின் நின்று தொழுகின்ற திருவணுக்கன் வாயிலில், உள்ளத்தில் ஆர்வம் பெருகவும், தலை மீது சிறிய சிவந்த கைகள் ஏறிக் குவியவும், கண்கள் மகிழ்ச்சி பொருந்தவும், மனம் உருகும் அன்புடனே உள்ளே புகுந்தார் காழிப் பிள்ளையார்.

2058. பெருமையுடைய இறைவர் தமக்குத் தந்த மெய்ஞ்ஞானமேயான திருவம்பலத்தையும், தமதுள்ளே நிறைந்த அந்தச் சிவஞானத்துள் எழுகின்ற சிவானந்தமான ஒப்பில்லாத பெருமையுடைய திருக் கூத்தையும் கண்களின் முன் வெளிப்படக் கண்டு வணங்கியதால் உண்டான பெரு மகிழ்வுடன், கடல் சூழ்ந்த சீகாழியில் தோன்றிய சிவ புண்ணியக் கொழுந்து போன்ற பிள்ளையார் தூயவரான இறைவரின் திருக்கூத்து இயற்றும் அழகைப் போற்றுபவராய்,

2059. "உள் உணர்வுக்குள் பெறும்படி வருகின்ற சிவபோகத்தை நீக்கமின்றி வெளி உருவிடம் புலப்படுகின்ற ஐம்பொறிகளின் அளவிலும் எளிதில் வருமாறு அருள் செய்தீர்" எனத் துதித்து, ஒப்பில்லாத கருணையைத் துதித்து முன்னே தொடங்கிய சொற்பதிகத்தில் பொருந்தும் இனிய இசையுடன் பாடுபவராய், ஆனந்தக் கூத்தாடுபவராய்க் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தவராய்,

2060. ஊழிகளின் முதல்வரான கூத்தப் பெருமானுக்குரிய தொழில் இயற்றும சிறப்பால் தில்லையில் வாழும் அந்தணரை முதலில் வைத்து ஏழிசையும் பொருந்தி விளங்க "கற்றாங்கு எரியோம்பி" என்ற தொடக்கம் உடைய திருப்பதிகத்தை எம்மை ஆளும் சீகாழிக் காவலர் தொடங்கியவராய்,

Koviloor Digital Library

2061 பண்ணார் பதிகத் திருக்கடைக்காப் புப்பரவி
உண்ணாடும் என்பும் உயிருங் கரைந்துருக்கும்
விண்ணா யகன்கூத்து வெட்ட வெளியேதிளைத்துக்
கண்ணா ரமுதுண்டார் காலம்பெற அழுதார்.

2062 முன்மால் அயன்அறியார் மூர்த்தியார் முன்னின்று
சொன்மாலை யாற்காலம் எல்லாந்
துதித்திறைஞ்சிப்
பன்மா மறைவெள்ளுஞ் சூழ்ந்து பரவுகின்ற
பொன்மா ளிகையை வலங் கொண்டு
புறம்போந்தார்.

2063 செல்வத் திருமுன்றில் தாழ்ந்தெழுந்து
தேவர்குழாம்
மல்குந் திருவாயில் வந்திறைஞ்சி மாதவங்கள்
நல்குந் திருவீதி நான்குந் தொழுதங்கண்
அல்குந் திறம்அஞ்சு வார்சண்பை ஆண்டகையார்.

2064 செய்ய சடையார் திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம் பாடிக் கழுமலக்கோன்
வைகி அருளுமிடம் அங்காக மன்றாடும்
ஐயன் திருக்கூத்துக் கும்பிட் டணைவுறுநாள்.

2065 கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி
விரைக்கொன்றைச்
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
அம்மானைக் கும்பிட் டருந்தமிழும் பாடினார்.

Koviloor Digital Library

2061. உரியகாலத்தில் ஞானம் உண்டாக அழுது அழைத்தவரான பிள்ளையார், பண் நிரம்பிய திருப்பதிகத்தின் நடைக் காப்பு நிறைவித்துப் போற்றி, உடலுள் ஆதரவாய் அறியப்படும் எலும்பும் உயிரும் கரையுமாறு உருக்குகின்ற இறைவரின் அருட்கூத்தை வெட்ட வெளியில் அனுபவித்துக் கண்கள் நிறைந்த அமுதை உட்கொண்டார்.

2062. முன்காலத்தில் திருமாலும் நான்முகனும் அறியாத இறைவரின் திருமுன் நின்று, சொல் மாலையான திருப்பதிகங்களால் எல்லாக் காலங்களிலும் அறிந்து வணங்கி, அளவில்லாத பெருமறைகளின் வெள்ளங்கள் சூழ்ந்து வணங்குகின்ற செம்பொன் மாளிகையான பொன்னம்பலத்தை வலமாக வந்து புறத்தே போந்தார்.

2063. செல்வம் பொருந்திய திருமுன்றிலில் கீழே விழுந்து வணங்கி எழுந்து, வானவர் கூட்டம் நிறைந்திருக்கும் திருவாயிலில் வந்து வணங்கி, மாதவங்களைத் தரும் நான்கு வீதிகளையும் வணங்கி, அவ்விடத்தில் தங்கும் தன்மைக்கும் பிள்ளையார் அஞ்சுபவராய்,

2064. ஞானசம்பந்தர் சிவந்த சடையையுடைய சிவபெருமானின் திருவேட்களத்துக்குச் சென்று கையால் தொழுது சொல்பதிகத்தைப் பாடி, தங்கி எழுந்தருளியிருக்கும் இடம் அவ்விடமாய் எண்ணி, அம்பலத்தில் கூத்தாடும் ஐயரின் நடனத்தைக் கும்பிட்டு அணைந்திருக்கும் நாளில்,

(திருவேட்களத்தில் 'அந்தமும் ஆதியும்' என்ற தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார்)

2065. தம் திருக்கையில் மான் கன்றை ஏந்திய சிவபெருமான் எழுந்தருளிய 'திருக்கழிப்பாலை'யுள் சேர்ந்து, மெய்மை பொருந்திய சொற் பதிகத்தைப் பாடி, மணமுடைய கொன்றை மலரால் அமைந்த அழகான மாலை சூடிய சடையையுடைய 'திருவுச்சி' என்னும் பதியில் எழுந்தருளிய இறைவரைக் கும்பிட்டு அரிய தமிழ்ப் பதிகத்தையும் பாடினார் காழிப் பிள்ளையார்.

(திருக்கழிப்பாலையில் 'வெந்த குங்குலி' என்ற தொடக்கம் உடைய பதிகத்தைப் பாடினார். திருவுச்சியில் (திருநெல்வாயிலில்) 'புடையினார் புள்ளி' என்ற தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார்.)

Koviloor Digital Library

2066 பாடும் பதிகஇசை யாழ்ப்பாண ரும்பயிற்றி
நாடுஞ் சிறப்பெய்த நாளுநடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை அந்தணர்கள் நீள்மன்றுள்
ஆடுங் கழற்கணுக்க ராம்பே றதிசயிப்பார்.

2067 ஆங்கவர்தஞ் சீலத் தளவின் மையுநினைந்தே
ஓங்கி எழுங்காதல் ஒழியாத உள்ளத்தார்
தேங்கமழுஞ் சோலைத் திருவேட் களங்கடந்து
பூங்கிடங்கு சூழ்புலியூர்ப் புக்கணையும் போழ்தின்கண்.

2068 அண்டத் திறைவர் அருளால்அணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார்.

2069 செல்வம் பிறிவறியாத் தில்லைவாழ் அந்தணரும்
எல்லையில்சீர்ச் சண்பை இளவே றெழுந்தருளி
ஒல்லை இறைஞ்சாமுன் தாமும் உடன்இறைஞ்சி
மல்லல் அணிவீதி மருங்கணைய வந்தார்கள்.

2070 பொங்கி எழுங்காதல் புலவாகப் பூசுரர்தஞ்
சிங்கம் அனையார் திருமுடியின் மேற்குவித்த
பங்கயத்தின் செவ்வி பழித்து வளைப்போங்கும்
செங்கை யொடுஞ் சென்று திருவாயி லுட்புக்கார்.

Koviloor Digital Library

2066. பாடப்பட்ட பதிகத்தின் இசையினைத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் யாழில் வாசித்து நாடும் சிறப்பைப் பெற்றார். நாளும் தில்லையில் சென்று இறைவரின் திருக்கூத்தைப் போற்றும் பிள்ளையார், தில்லை வாழ் அந்தணர்கள் நீளும் திருவம்பலத்தில் ஆடும் திருவடிகளுக்கு அணுக்கத் தொண்டர்களாக இருக்கும் பேற்றைப் பார்த்து வியப்புக் கொண்டார்.

2067. அதனுடன் அங்கு வாழும் அந்தணர்கள் தம் ஒழுக்கத்தில் அளவில்லாத சிறப்புடன் நிற்கும் நிலையையும் எண்ணி, மேல் கிளர்ந்து எழும் ஆசை நீங்காத மனத்துடன், ஒருநாள் மணம் வீசும் சோலை சூழ்ந்த திருவேட்களத்தைக் கடந்து, மலர்கள் நிரம்பிய அகழி சூழ்ந்த திருப்புலியூரினுள் புகுந்து சேர்கின்ற போழ்தில்,

2068. எல்லா வுலகங்களுக்கும் இறைவரான கூத்தப் பெருமான் திருவருளால் அழகிய தில்லையில் வாழ்கின்ற, நெற்றியில் திருநீற்றை அணிந்த அந்தணர் மூவாயிரவரும் திருத்தொண்டின் தன்மையுடைய சிவகண நாதர்களாய்த் தோன்றக் கண்டு, அதனை ஞானசம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குக் காட்டினார்.

2069. அருட்செல்வம் நீங்கப் பெறாத தில்லைவாழ் அந்தணரும், அளவற்ற சிறப்பையுடைய சீகாழியில் அவதரித்த இளஞ்சிங்க ஏற்றைப் போன்ற ஞானசம்பந்தர் எழுந்தருளி வந்து விரைந்து தம்மை வணங்குவதற்கு முன்பே, தாமும் உடனே வணங்கிச் செழிப்பும் அழகும் கொண்ட வீதியில் அவர் பக்கத்தில் வந்தனர்.

2070. மேலும் மேலும் பெருகி எழும்மிக்க ஆசையானது வெளித் தோன்றுமாறு அந்தணர்களின் சிங்கம் போன்ற ஆளுடைய பிள்ளையார், தலைமீது கூப்பிய தாமரை மலரின் அழகையும் வென்று அழகாலே ஓங்கும் கையுடனே சென்று திருவாயிலுள் புகுந்தார்.

Koviloor Digital Library

2071 ஒன்றிய சிந்தை உருக உயர்மேருக்
குன்றனைய பேரம் பலமருங்கு கும்பிட்டு
மன்றுள் நிறைந்தாடும் மாணிக்கக் கூத்தர்எதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற்
றுப்படிக்கீழ்.

2072 ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர் என்றெடுத்
தார்வத்தால்
பாடி னார்பின்னும் அப்பதி கத்தினிற் பரவிய
பாட்டொன்றில்
நீடு வாழ்தில்லை நான்மறை யோர்தமைக்
கண்டஅந் நிலைஎல்லாம்
கூடுமாறுகோத்து அவர்தொழு தேத்துசிற்
றம்பலம் எனக்கூறி.

2073 இன்ன தன்மையில் இன்னிசைப் பதிகமுந்
திருக்கடைக் காப்பேத்தி
மன்னும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தெதிர்
வந்துமுன் நின்றாடும்
பின்னுவார்சடைக் கூத்தர்பேரருள் பெறப் பிரியாத
விடைபெற்றுப்
பொன்னின் அம்பலஞ் சூழ்ந்துதாழ்ந்
தெழுந்துபோந் தணைந்தனர் புறமுன்றில்.

2074 அப்புறத்திடை வணங்கிஅங் கருளுடன் அணிமணித்
திருவாயில்
பொற்பு றத்தொழு தெழுந்துடன் போதரப்
போற்றிய புகழ்ப்பாணர்
நற்ப தந்தொழுது அடியனேன் பதிமுதல்
நதிநிவாக் கரைமேய
ஒப்பில் தானங்கள் பணிந்திடவேண்டும்
என்றுரைசெய அதுநேர்வார்.

Koviloor Digital Library

2071. இறைவரிடம் ஒன்றுபட்ட சிந்தை உருக, உயர்ந்த மேரு மலையைப் போன்ற பேரம்பலத்துள் நிறைந்து அருட்கூத்து ஆடுகின்ற மாணிக்கக் கூத்தரின் திருமுன்பு திருக்களிற்றுப் படியின் கீழே நின்று தாழ்ந்து எழுந்தார்.

2072. ஞான சம்பந்தர் "ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர்" என்று தொடங்கி மிகுந்த ஆசையுடன் பாடினார். மேலும் அந்தப் பதிகத்தில் துதித்தவற்றுள் ஒரு திருப்பாட்டில் தில்லை வாழ் அந்தணர்களை, அன்று தாம் கணநாதராய்க் கண்ட அந்நிலைகள் எல்லாம் பொருந்தும் படி கோத்து அத்தகைய தன்மையுடையவர் தொழுது வணங்கும் திருச்சிற்றம்பலமாகும் என்று எடுத்துக் கூறி.

(இங்குப் பாடியது 'ஆடினாய் நறுநெய்' எனத் தொடங்கும் பதிகமாகும்)

2073. இவ்வாறான தன்மையில் இனிய இசை பொருந்திய பதிகத்தைத் திருக்கடைக் காப்புச் சொல்லி நிறைவாக்கித் துதித்து, நிலைபெற்ற ஆனந்த வெள்ளத்துள் முழுகித் திளைத்து எதிரில் வந்து நின்றாடும் பின்னிய சடையையுடைய கூத்தரின் திருவருளைப் பெறும்படி பிரியா விடைபெற்றுப் பொன்னம்பலத்தை வலம் வந்து, வெளி முற்றத்தை அடைந்தார்.

2074. அந்த முற்றத்தைப் புறத்தில் வணங்கி அங்குத் திருவருள் பெற்று அழகிய மணிகள் பதித்த திருவாயிலில் தொழுது வணங்கி எழுந்தார். அப்போது, தம்முடன் வரப் பெறும் பேற்றைப் பெற்ற புகழையுடைய திருநீல கண்டயாழ்ப்பாணர் தம் திருவடிகளை வணங்கி நின்று, "அடியேனின் பதியான 'திருவெருக்கத்தம்புலியூர்' முதலாக நிவா நதியின் கரையில் உள்ள ஒப்பில்லாத திருத்தலங்களைச் சென்று வணங்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். பிள்ளையார் அதற்கு உடன் பட்டவராய்,

Koviloor Digital Library

2075 பொங்கு தெண்டிரைப் புனிதநீர் நிவாக்கரைக்
குடதிசை மிசைப்போந்து
தங்கு தந்தையா ருடன்பரி சனங்களுந் தவமுனி
வருஞ்செல்லச்
செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும் பாணனா
ருடன்சேர
மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி யாருடன்
வரவந்தார்

2076 இருந்த டங்களும் பழனமும் கடந்துபோய்
எருக்கத்தம் புலியூரின்
மருங்கு சென்றுற நீலகண் டப்பெரும் பாணனார்
வணங்கிப்பார்
நெருங்கு சோலைசூழ் இப்பதி அடியனேன் பதிஎன
நெடிதின்புற்று
அருங்க லைச்சிறு மழஇளங் களிறனார் அங்கணைந்
தருள்செய்வார்.

2077 ஐயர் நீர் அவ தரித்திட இப்பதி அளவில்லா தவம்
முன்பு
செய்தவாறெனச் சிறப்புரைத் தருளிஅச்செழும்
பதி இடங்கொண்ட
மைகொள் கண்டர்தங் கோயிலினுட்புக்கு
வலங்கொண்டு வணங்கிப்பார்
உய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிகம்அங்
கிசையுடன் உரைசெய்தார்.

2078 அங்கு நின்றெழுந் தருளிமற் றவருடன்
அம்பொன்மா மலைவல்லி
பங்கர் தாம்இனி துறையுநற் பதிபல பரிவொடும்
பணிந்தேத்தித்
துங்க வண்டமிழ்த் தொடைமலர் பாடிப்போய்த்
தொல்லைவெங் குருவேந்தர்
செங்க ணேற்றவர் திருமுது குன்றினைத்
தொழுதுசென் றணைகின்றார்.

Koviloor Digital Library

2075. பொங்கும் தெளிந்த அலைகளையுடைய புனிதநீர் நிரம்பிய நிவா நதிக்கரையின் வழியே மேற்குத் திசையில் போய், தம்முடன் வந்து தங்கிய தந்தையரான சிவபாத இருதயருடனே பரிவாரங்களும் தவமுனிவர்களும் உடன் வரச், செவ்விய கையில் யாழையுடைய திருநீலகண்ட யாழ்ப் பாணருடன் ஒன்றாக அவருடைய மனைவியாரான மதங்க சூளாமணியாரும் உடன் வரச் சென்றருளினார்.

2076. பெரிய நீர் நிலைகளும் வயல்களும் ஆகிய வற்றைக் கடந்து சென்று திருவெருக்கத்தம்புலியூரின் பக்கத்தில் சென்று சேர, திருநீலகண்ட யாழ்ப்பாணர் எதிர் வந்து வணங்கி நின்று மேகங்கள் நெருங்கிய பூஞ்சோலை களால் சூழப்பட்ட இந்தத்தலம் அடியேனின் தலமாகும் என்று வேண்டிக் கொள்ள, மிகவும் மகிழ்ச்சியடைந்து அரிய வேதம் முதலிய கலைகள் யாவும் விளங்குவதற்கு இடமான சிறிய இளைய யானைக் கன்றைப் போன்ற பிள்ளையார் அத்தலத்தில் அணைந்து அருள் செய்பவராய்.

2077. "ஐயரே! தாங்கள் இங்கு அவதரித்திடப் பெறுவதற்கு இத்தலமானது அளவற்ற பெருந்தவத்தைச் செய்திருந்தது" எனச் சிறப்பித்துக் கூறி, அந்தச் செழிப் புடைய திருத்தலத்தில் இடம் கொண்டு எழுந்தருளியிருக் கும் திருநீலகண்டரான இறைவரின் திருக்கோயிலுள் போய் வணங்கி உலகம் உய்யும் படியாய்த் தோன்றிய பிள்ளையார் செழுந்தமிழ்ப் பதிகத்தைக் கட்டளையிட்டு அருள் செய்தார்.

(சம்பந்தர் இங்குப் பாடியது "படையார் தருபூத" என்ற தொடக்கத்தை உடைய பதிகமாகும்.

2078 அந்தப் பதியினின்று புறப்பட்டு மேலே சென்று அழகிய பொன்மலையில் தோன்றியருளிய உமை யம்மையை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமான் இனிதாய் உறைகின்ற தலங்கள் பலவற்றுக்கும் சென்று பணிந்து ஏத்தி, உயர்ந்த வண்டமிழ்ப் பாமலைகள் பாடிச் சென்று பழைமையான சீகாழித் தலைவரான பிள்ளையார் சிவந்த கண்களையுடைய காளையை ஊர்தி யாகக் கொண்ட சிவபெருமானின் 'திருமுது குன்றத்தை' வணங்கிச் சென்று அணைபவராய்.

Koviloor Digital Library

2079 மொய்கொள் மாமணி கொழித்துமுத் தாறுசூழ்
முதுகுன்றை அடைவோம்என்
றெய்து சொன்மலர் மாலைவண் பதிகத்தை
இசையொடும் புனைந்தேத்திச்
செய்த வத்திரு முனிவரும் தேவரும் திசையெலாம்
நெருங்கப் புக்கு
ஐயர்சேவடி பணியும்அப் பொருப்பினில் ஆதரவுடன்
சென்றார்.

2080 வான நாயகர் திரு முது குன்றினை வழிபட
வலங்கொள்வார்
தூந றுந்தமிழ்ச் சொல்லிருக் குக்குறட் டுணைமலர்
மொழிந்தேத்தி
ஞான போனகர் நம்பர்தங் கோயிலை நண்ணி அங்
குள்புக்குத்
தேன லம்புதண் கொன்றையார் சேவடி திளைத்த
அன்பொடு தாழ்ந்தார்.

2081 தாழ்ந்தெ ழுந்துமுன் முரசதிர்ந் தெழும் எனுந்
தண்டமிழ்த் தொடைசாத்தி
வாழ்ந்து போந்தங்கண் வளம்பதி அதனிடை
வைகுவார் மணிவெற்புச்
சூழ்ந்த தண்புனல் சுலவுமுத்தாறொடு தொடுத்த
சொல் தொடை மாலை
வீழ்ந்த காதலாற் பலமுறை விளம்பியே மேவினார்
சிலநாள்கள்.

Koviloor Digital Library

2079. ''மிக்க பெருமணிகளைக் கொழித்துக் கொண்டு திருமணிமுத்தாறு சூழும் திருமுது குன்றத்தைச் சென்றடைவோம்'' என்று பொருந்தும் சொல்மலர் மாலைப் பதிகத்தை இசையுடன் பாடித்துதித்து, சிறந்த தவத்தையுடைய முனிவரும் தேவரும் திக்குகள் எல்லாம் நெருங்கப் புகுந்து, இறைவரின் சேவடிகளை வணங்குகின்ற அந்தப் பழமலையினிடத்து மிக்க அன்புடன் சென்றடைந்தார்.

(இங்குப் பாடிய பதிகம் 'மத்தாவரை நிறுவிக் கடல்' எனத் தொடங்குவதாகும்.)

2080. தேவதேவரான சிவபெருமானின் திருமுது குன்றத்தை வழிபடும் பொருட்டு, அதை வலமாய் வருகின்றவர், தூய நல்ல தமிழ்ச் சொற்களால் திருவிருக்குக் குறட் பதிகமாகிய துணை மலர்களை மொழிந்து துதித்து, சிவபெருமானின் கோயிலை அடைந்து, ஆங்கு உள்ளே புகுந்து, தேன் சிந்தும் குளிர்ந்த கொன்றை மலர்மாலையணிந்த சிவபெருமானின் அடிகளில், ஞான அமுதத்தை உண்ட பிள்ளையார், மிகுந்த அன்புடனே தாழ்ந்து வணங்கினார்.

(இருக்குக் குறள் — யாப்பில் ஒருவகை. இங்குப் பாடியது 'நின்று மலர் தூவி' எனத் தொடங்கும் பதிகமாகும்.)

2081. பிள்ளையார், வணங்கி எழுந்து 'முரசதிர்ந் தெழுதரு' என்ற குளிர் தமிழ் மாலை பாடி, இன்புற்று வெளியே வந்து, அந்த வளம் கொண்ட தலத்தில் தங்கியிருந்தார். அவர் மணிகளையுடைய அந்தத் திருமுது குன்றத்தைச் சூழ்ந்த குளிர்ந்த நீருடைய 'முத்தாற்றினுடனே' சோத்து இயற்றிய திருப்பதிக மாலையை, விரும்பிய அன்புடனே பலமுறையும் கூறி, அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார்.

(இங்குப் பாடிய பதிகம் 'முரசதிர்ந் தெழுதரு' என்னும் தொடக்கம் கொண்டதாகும்.)

அங்குப் பாடிய பல பதிகங்கள் : 'தேவராயும்' 'மெய்த் தாறு', 'தேவா சிறியோம்', 'வண்ணமா மலர்கொடு' என்னும் தொடக்கங்களையுடைய பதிகங்கள்.)

Koviloor Digital Library

2082 ஆங்கு நாதரைத் பணிந்துபெண்ணாகடம்
அணைந்தரு மறையோசை
ஓங்கு தூங்கானை மாடத்துள் அமர்கின்ற
ஒருதனிப் பரஞ்சோதிப்
பாங்க ணைந்துமுன் வலங் கொண்டு பணிவுற்றுப்
பரவுசொல் தமிழ்மாலை
தீங்கு நீங்குவீர் தொழுமின்கள் எனும்இசைப்
பதிகமுய் தெரிவித்தார்.

2083 கருவ ரைப்பிற் புகாதவர் கைதொழும்
ஒருவ ரைத்தொழு துள்ளம் உவந்துபோய்ப்
பெருவ ரத்தினிற் பெற்றவர் தம்முடன்
திருவ ரத்துறை சேர்துமென் றேகுவார்.

2084 முந்தை நாள்கள் ஒரோவொரு கால்முது
தந்தை யார்பியல் மேலிருப் பார்தவிர்ந்து
அந்த ணாளர் அவரரு கேசெலச்
சிந்தை செய்விருப் போடுமுன் சென்றனர்.

2085 ஆதி யார்தம் அரத்துறை நோக்கியே
காத லால்அணை வார்கடி தேகிடத்
தாதை யாரும் பரிவுறச் சம்பந்தர்
பாத தாமரை நொந்தன பைப்பய.

2086 மறைய னைத்தும் ஒருவடி வாமென
நிறைம திப்பிள்ளை நீள்நிலஞ் சேர்ந்தெனத்
துறைஅ லைக்கங்கை சூடும் அரத்துறை
இறைவ ரைத்தொழு வான்விரைந் தேகினார்.

Koviloor Digital Library

2082. அங்கு வீற்றிருக்கும் தலைவரை வணங்கி விடைபெற்றுப் போய்த் 'திருப்பெண்ணாகடம்' என்ற பதியை அடைந்து, அரிய வேதங்களின் ஓசை ஓங்கும் 'திருத்தூங்கானை மாடம்' என்ற அந்தத் தலக் கோயிலுள் விரும்பி வீற்றிருக்கின்ற ஒன்றான ஒப்பற்ற பரஞ்சோதி யான இறைவர் பக்கம் சேர்ந்து, வலம் வந்து, திருமுன்பு பணிந்து எழுந்து, போற்றும் சொல் தமிழ் மாலையான, "தீங்கினின்றும் நீங்கும் கருத்துடையீர்களே! இங்குத் தொழுமின்கள்" என்ற கருத்துடைய இசைப் பதிகத்தையும் பாடியருளினார்.

(இங்குப் பாடியது 'ஒடுங்கும் பிணிபிறவி' என்ற தொடக்கம் உடைய பதிகமாகும்.)

2083. பிறவியினது எல்லைக்கு உட்படாத (பிறவி இல்லாத) அடியவர்கள் கை தொழுகின்ற சுடர்க் கொழுந் தீசரை வணங்கி மனம் மகிழ்ந்து விடைபெற்றுக் கொண்டு போய், தோணியப்பரிடம் தவம் கிடந்து பெற்ற வரத்தால் தம்மை ஈன்ற தந்தையாருடன் 'திருவரத் துறையைச்' சேர்வோம் எனப் போவாராய்,

2084. முன் நாட்களில் செல்லும் போது முதுமைப் பருவம் உடைய தந்தையாரின் தோள் மீது ஒவ்வொரு சமயம் எழுந்தருளிச் சென்ற அப்பிள்ளையார், இப்போது அதை விடுத்து அந்தணர்களும் அத்தந்தையாரும் அருகே வர, மனத்திற் கொண்ட பெருவிருப்போடு முன்னால் சென்றார்.

2085. பழைமையுடையவரான சிவபெருமானின் திருவரத்துறையினை நோக்கி மிக்க விருப்புடன் அணைபவ ராய் விரைவாகப் போகவும், தந்தையாரும் வருந்த, ஞான சம்பந்தரின் பாத தாமரைகளும் சிறிது நொந்தன.

2086. வேதங்கள் யாவும் ஒருவடிவம் கொண்டாற் போல் நிறையும் பிறைச்சந்திரன் சென்று நீண்ட மண்ணுல கத்தில் வந்து சேர்ந்தாற் போல் போய் நீர்த்துறைகளில் அலைகளை வீசும் கங்கை சூடும் திருவரத் துறையில் வீற்றிருக்கும் இறைவரைத் தொழுவதற்காக விரைவாய்ப் போயினர்.

Koviloor Digital Library

2087 பாச மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினார்.

2088 இந்த மாநிலத் தின்இருள் நீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்
சிந்தை ஆரமு தாகிய செஞ்சடைத்
தந்தை யார்கழல் தாழ்ந்தெழுந் தேகினார்.

2089 மாறன் பாடி எனும்பதி வந்துற
ஆறு செல்வருத் தத்தின் அசைவினால்
வேறு செல்பவர் வெய்துறப் பிள்ளையார்
ஏறும் அஞ்செழுத் தோதிஅங் கெய்திட.

2090 உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்கு
எய்து வெம்மை இளைப்பஞ்சி னான்போலக்
கைகள் ஆயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன்.

2091 அற்றை நாள்இர வப்பதி யின்னிடைச்
சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்றம் ஊர்ந்த பிரான்கழல் பேணுவார்
வெற்றி மாதவத் தோருடன் மேவினார்.

2092 இந்தி லைக்கண் எழில்வளர் பூந்தராய்
மன்ன னார்தம் வழிவருத் தத்தினை
அன்ன மாடுந் துறைநீர் அரத்துறைச்
சென்னி யாற்றர் திருவுளஞ் செய்தனர்.

Koviloor Digital Library

2087. பாசம் சிறிதும் இல்லாதவராக இருந்தும் உலகத்தில் இறைவனிடத்து ஆசை கொண்ட தன்மையால், சிவ ஒளிமிக்க திருவுருவான பிள்ளையார் சிவபெருமானை வணங்கிச் சென்றார்.

2088. இந்தப் பெரிய வுலகத்தில் இருள் நீங்கத் தோன்றிய வேதியர் குல மணியான சம்பந்தர், மனத்தில் ஊறும் அமுதமான சிவந்த சடையையுடைய தந்தையாம் சிவபெருமானின் திருவடிகளைத் தாழ்ந்து வணங்கி எழுந்து போனார்.

2089. 'மாறன்பாடி' என்ற ஊரில் வந்து சேர, வழி நடந்து செல்லும் வருத்தத்தால் உண்டான சோர்வால் தம்மைச் சுற்றிலும் வரும் பரிவாரங்கள் முதலியவர் இளைப் படைய, பிள்ளையார் சிறந்த ஐந்தெழுத்தை உச்சரித்தபடி அங்குச் சேர,

2090. உலகம் உய்வதற்காக வந்த ஞானசம்பந்தருடன் வந்தவர்க்கு வழி நடந்து வந்த தன் வெம்மையினால் உண்டான இளைப்பைப் பார்த்து அச்சம் கொண்டவனைப் போல் தன் அளவற்ற கைகளையும் உள்ளே இழுத்துக் கொண்டு மறைந்து போய்க் கதிரவன் மேலைக் கடலில் விழுந்தான்.

2091. அன்றைய இரவில் அந்தப் பதியில் தம்மைச் சூழ்ந்த திருத்தொண்டர்கள் போற்றக் காளையூர்தியுடைய சிவபெருமானின் திருவடிகளையே போற்றுபவரான பிள்ளையார் வெற்றியுடைய மாதவத்தவருடன் அங்குத் தங்கியிருந்தனர்.

2092. இந்நிலையில் அழகு மிக்க சீகாழித் தலைவரின் வழி வருத்தத்தை, அன்னப்பறவைகள் பொருந்திய நீர்த்துறைகளையுடைய திருவரத்துறையில் எழுந்தருளிய தலையில் கங்கையாற்றை யுடைய இறைவர் தம் திருவுள்ளத்தில் கொண்டார். (வருத்தத்தைப் போக்கக் கருதினார்.)

Koviloor Digital Library

2093 ஏறுதற்குச் சிவிகை இடக்குடை
கூறி ஊதக் குலவுபொற் சின்னங்கள்
மாறில் முத்தின் படியினால் மன்னிய
நீறு வந்த நிமலர் அருளுவார்.

2094 நீடு வாழ்பதி யாகும்நெல் வாயிலின்
மாட மாமனை தோறும் மறையோர்க்குக்
கூடு கங்குல் கனவில் குலமறை
தேடு சேவடி தோன்றமுன் சென்றுபின்.

2095 ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான்
மான முத்தின் சிவிகை மணிக்குடை
யான சின்னம்நம் பாற்கொண் டருங்கலைக்
கோன வன்பால் அணைந்து கொடும் என.

2096 அந்த ணாளர் உரைத்த அப் போழ்தினில்
வந்து கூடி மகிழ்ந்தற் புதமுறுஞ்
சிந்தை யோடுஞ் செழுநீர் அரத்துறை
இந்து சேகரர் கோயில்வந் தெய்தினர்.

2097 ஆங்கு மற்ற அருள்அடி யாருடன்
ஓங்கு கோயிலுள் ளார்க்குமுண் டாயிட
ஈங்கி தென்ன அதிசயம் என்பவர்
தாங்கள் அம்மறை யோர்கள்முன் சாற்றினார்.

2098 சால மிக்க வியப்புறு தன்மையின்
பால ராதலும் பள்ளி எழுச்சியின்
காலம் எய்திடக் காதல் வழிப்படும்
சீல மிக்கார் திருக்காப்பு நீக்கினார்.

Koviloor Digital Library

2093. பிள்ளையார் ஏறிச் செல்வதற்குப் பல்லக்கும், மேலே கவித்துக் கொள்வதற்குக் குடையும், மெய்க்கீர்த்தி முதலியவற்றை எடுத்துக்கூறி ஊதுவதற்கு விளக்கம் கொண்ட அழகிய சின்னங்களும் என்னும் இவை ஒப்பில்லாத முத்துக்கள் பதியவைத்த சிறப்புடன், திருநீற்றை விரும்பும் அரத்துறை இறைவர் அருள்வாராய்,

2094. நீண்ட வாழ்வுடைய தலமான திருநெலவாயிலில் மாளிகைகளைக் கொண்ட பெரிய இல்லங்கள் தோறும் வேதியர்களுக்கு அன்றிரவு கனவில், பெருமையுடைய வேதங்கள் தேடும் செவ்விய திருவடிகள் தோன்றுமாறு அவர் முன் போய்,

2095. "ஞானசம்பந்தர் நம்மிடம் வருகிறான். அரிய கலைகளுக்கெல்லாம் தலைவனான அவனிடம் நீங்கள் பெரிய முத்துச் சிவிகையையும் அழகிய குடையையுமான சின்னங்களையும் நம்மிடம் பெற்றுக் கொண்டு போய்க் கொடுங்கள்" என்று இறைவர் (கனவில்) உரைத்தருள,

2096. இறைவர் உரைத்த அப்போது, அந்தணர்கள் வந்து ஒன்றாகக் கூடித் தாம் தாம் கண்ட கனவைச் சொல்லி மகிழ்ந்து அற்புதமான சிந்தையுடன் செழிய நீர் பொருந்திய திருவரத் துறையில் எழுந்தருளிய பிறை சூடிய சடைகொண்ட பெம்மானின் கோயிலின் வாயிலில் வந்து கூடினர்.

2097. அங்கு முன் சொன்ன வண்ணம் இறைவர் அருள், அந்த அடியாருடன் ஓங்கு கோயிலுள் உள்ளவர்களுக்கும் உண்டாகியது. உண்டாகவே, "இங்கு இது பேரதிசயமாக உள்ளதே!" என்று கூறும் அவர்கள், வந்து கூடிய அம்மறையவர்களுக்குத் தாங்கள் முதலில் கூறினர்.

2098. மிகப் பெரிய வியப்பை அடையும், அச்சமயத்தில் திருப்பள்ளி எழுச்சிக்குரிய காலம் வந்தது. வரவும், அன்பு வழிப்படும் ஒழுக்கம் உடைய அவர்கள் கோயிலின் கதவைத் திறந்தனர்.

Koviloor Digital Library

2099 திங்கள் நீர்மைச் செழுந்திரள் முத்தினால்
துங்க வெண்குடை தூய சிவிகையும்
பொங்க ஊதும் பொருவருஞ் சின்னமும்
அங்கண் நாதர் அருளினாற் கண்டனர்.

2100 கண்ட பின்அவர் கைதலை மேற்குவித்து
எண்டி சைக்கும் விளக்கிவை யாம் எனத்
தொண்ட ரோடும் மறையவர் சூழ்ந்தெழுந்து
அண்டர் நாடும் அறிவுற ஆர்த்தனர்.

2101 சங்குதுந்துபி தாரைபே ரிம்முதல்
பொங்கு பல்லிய நாதம் பொலிந்தெழ
அங்க ணன்அரு ளால்அவை கொண்டுடன்
பொங்கு காதல் எதிர்கொளப் போதுவார்.

2102 மாசில் வாய்மைநெல் வாயின் மறையவர்
ஆசில் சீர்ச்சண்பை ஆண்டகை யார்க்கெதிர்
தேசு டைச்சிவி கைமுத லாயின
ஈசர் இன்னரு ளால்தாங்கி ஏகினார்.

2103 இத்த லைஇவர் இன்னணம் ஏகினார்
அத்த லைச்சண்பை நாதர்க்கும் அவ்விரா
முத்த நற்சிவி கைமுத லாயின
உய்த்த ளிக்கும் படிமுன் உணர்த்துவார்.

2104 அள்ளல் நீர்வயல் சூழும் அரத்துறை
வள்ள லார்நாம் மகிழ்ந்தளிக் கும்அவை
கொள்ளலாகுங்கொண் டுய்த்தல்செய் வாய்என
உள்ள வாறருள் செய்ய உணர்ந்தபின்.

Koviloor Digital Library

2099. சந்திரன் போன்ற இயல்புடைய செழுமையான முத்துக்கள் இழைத்த பெரிய வெண்குடையும், தூய பல்லக்கும், பொங்குமாறு ஊதும் ஒப்பில்லாத சின்னங்களும் ஆகிய இவற்றை அங்கு இறைவரின் திருவருளால் அவர்கள் பார்த்தனர்.

2100. அங்ஙனம் அவற்றை அவர்கள் கண்ட பின்பு, தம் கைகளைத் தலைமீது குவித்து, "இவை எட்டுத் திக்குகளுக்கும் விளக்காகும்" எனக் கூறி தொண்டர்களுடன் சூழ்ந்து வணங்கி எழுந்து தேவர் உலகமும், அறியும்படி ஆரவாரம் செய்தனர்.

2101. சங்கு, துந்துபி, தாரை, பேரி முதலியவாய்ப் பொங்கி எழும் வாத்தியங்களின் ஓசை பொலிவு பெற்று எழுமாறு செய்து, இறைவரின் திருவருளால் அந்தப் பல்லக்கு, குடை, சின்னங்கள் என்ற இவற்றை உடன் கொண்டு பொங்கி எழுகின்ற ஆசை எதிர் கொள்ளப் போவராய்,

2102. குற்றம் இல்லாத வாய்மையுடைய திருநெல்வாயில் அந்தணர்கள் குற்றமற்ற சிறப்பையுடைய சீகாழியில் தோன்றிய பிள்ளையார்க்கு ஒளியுடைய சிவிகை முதலியவற்றை இறைவரின் திருவருளால் தாங்கிச் சென்றனர்.

2103. இங்கு அந்தணர் இவ்வாறு சென்றனர். அங்குச் சீகாழித் தலைவரான பிள்ளையாருக்கும் அன்றைய இரவே நல்லமுத்துக்கள் பதித்து வைத்த பல்லக்கு முதலானவற்றை ஏற்றுக் கொண்டு செல்லும்படி முன் உணர்த்துவாராய்,

2104. சேற்றையுடைய நீர் வளம் வாய்ந்த வயல்கள் சூழ்ந்த திருவரத்துறையில் எழுந்தருளிய வள்ளலான சிவபெருமான் "நாம் மகிழ்ந்தளிக்கும் இந்தச் சிவிகை முதலானவை ஏற்றுக் கொள்ளத் தக்கவையாகும். ஆதலால் அவற்றை ஏற்றுக் கொண்டு உரியவாறு செலுத்துவாயாக!" என்று அருளிச் செய்ய, அதை அறிந்து உறக்கம் நீங்கிய பின்பு,

Koviloor Digital Library

2105 சண்பை யாளியார் தாங்கொண்ட மெய்யருட்
பண்பு தந்தையார் தம்முடன் பாங்கமர்
தொண்ட ருக்கருள் செய்து தொழாமுனம்
விண்பு லப்பட வீங்கிருள் நீங்கலும்.

2106 மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்து
ஏல அஞ்செழுத் தோதி எழுந்தனர்.

2107 போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீதமுத்தின் சிவிகைமேல் ஏற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன்.

2108 ஆய போழ்தின் அரவெனும் ஆர்ப்புடன்
தூய முத்தின் சிவிகை சுடர்க்குடை
மேய சின்னங்கள் கொண்டுமெய் யன்பரோடு
ஏய அந்தணர் தாமெதிர் தோன்றினார்.

2109 வந்து தோன்றிய அந்தணர் மாதவர்
கந்த வார்பொழில் காழிநன் னாடர்முன்
அந்த மில்சீர் அரத்துறை ஆதியார்
தந்த பேரருள் தாங்குவீர் என்றனர்.

2110 என்று தங்களுக் கீசர் அருள்செய்தது
ஒன்றும் அங்கொழி யாமை உரைத்துமுன்
நின்று போற்றித் தொழுதிட நேர்ந்தது
மன்று ளார்அருள் என்று வணங்கினார்.

Koviloor Digital Library

2105. சண்பை என்ற சீகாழித் தலைவரான சம்பந்தர் தாம் கனவில் கண்ட மெய்யருளின் தன்மையைத் தந்தையார்க்கும் பக்கத்தில் அமர்ந்திருந்த தொண்டர்களுக்கும் கூறியருளிச் செய்து, திருவருளைத் தொழுவதற்கு முன்னம், முன்பு மூடிய இருள், வானம் வெளிப்பட்டுத் தோன்றுமாறு நீங்கவே,

2106. பின் இரவு யாமமும் முடிந்து பொழுது புலருதற்கு முன்னம் விடியற்காலையில் செய்யத்தக்க கடன்களை முடித்து, வெண்மையான திருநீற்றினை அணிந்த சிவக் கோலமான அழகிய திருமேனியராகிக் கைம்மலர்களைத் தலை மேல் குவித்துப், பொருந்துமாறு திருவைந்தெழுத்தை ஓதி எழுந்தருளியிருந்தார்.

2107. போத ஞானம் பெற்ற தூயவரான சீகாழித் தலைவரைக் குளிர்ந்த முத்துக்களையுடைய சிவிகையில் ஏற்றிக் கும்பிட மிக்க அன்பு கொண்டவன் போல, சூரியன் கரிய கடல் மீது தன் தேர்மீது ஏறி வந்தனன்.

2108. அச்சமயத்தில் 'அரகர' என்ற முழக்கத்துடன் தூய முத்தினால் ஆன சிவிகையையும் ஒளியுடைய குடையையும் பொருந்திய சின்னங்களையும் தாங்கிக் கொண்டு மெய்யன்பர்களுடனே பொருந்திய அந்தணர்களும், அங்ஙனம் எழுந்த பிள்ளையாருக்கு எதிரே, வந்து தோன்றினர்.

2109. எதிரில் தோன்றிய அந்தணர்களும் மெய்யன்பர்களும் மணம் மிக்க பொழில்களையுடைய சீகாழித் தலைவரான சம்பந்தர் திருமுன்பு நின்று, "அழிவற்ற சிறப்பையுடைய திருவரத்துறை இறைவர் அளித்தருளிய பேரருள் வடிவான இப்பொருள்களை ஏற்றுக் கொள்ளுவகள்" என வேண்டினர்.

2110. என இங்ஙனம் தங்களுக்குத் திருவரத்துறை ஈசர் உரைத்தவற்றுள் ஒன்றையும் விடாமல் எடுத்து கூறி, பிள்ளையாரின் முன்நின்று போற்றித் துதித்தனர்; இவ்வாறு நிகழ்ந்த செயல் திருவம்பலத்தில் ஆடும் கூத்தரின், திருவருளேயாகும்" எனப் பிள்ளையார் தொழுதார்.

Koviloor Digital Library

2111 மெய்ம்மை போற்றி விடாத விருப்பினால்
தம்மை உன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மை நித்தில யானச் சிறப்பருள்
எம்மை யாளுவப் பானின் றளித்தே.

2112 எந்தைஈசன் எனஎடுத்து இவ்வருள்
வந்த வாறுமற் றெவ்வண மோஎன்று
சிந்தை செய்யுந் திருப்பதி கத்திசை
புந்தி யாரப் புகன்றெதிர் போற்றுவார்.

2113 பொடிஅ ணிந்தபுராணன் அரத்துறை
அடிகள் தம்மரு ளேஇது வாம்எனப்
படியி லாதசொன் மாலைகள் பாடியே
நெடிது போற்றிப் பதிகம் நிரப்பினார்.

2114 சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்று
ஆதி யார்அரு ளாதலின் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்.

2115 தொண்டர் ஆர்த்தனர் சுருதிகள் ஆர்த்தன
தொல்லை
அண்டர் ஆர்த்தனர் அகிலமும் ஆர்ப்புடன் எய்தத்
கொண்டல் ஆர்த்தன முழவமும் ஆர்த்தன குழுமி
வண்ட றாப்பொலி மலர்மழை ஆர்த்தது வானம்.

2116 வளையும் ஆர்த்தன வயிர்களும் ஆர்த்தன
மறையின்
கிளையும் ஆர்த்தன கிளைஞரும் ஆர்த்தனர்
கெழுவும்
களைகண் ஆர்த்ததொர் கருணையின் ஆர்த்தன
முத்து
விளையு மாக்கதிர் வெண்குடை ஆர்த்தது
மிசையே.

Koviloor Digital Library

2111. கள்ளமின்றி உள்ளவாறு போற்றிப் பற்று விடாத விருப்பத்தால் தம்மை நினைத்திருக்கும் தன்மையைக் கொடுத்து ஆள்கின்ற இறைவர், செம்மையான முத்துச்சிவிகையின் சிறப்பை அளித்தல், எம்மைத் தம் அடியவராக உவந்து ஆட்கொள்ளும் பொருட்டாய் இன்று அளித்த பேறுதான் என்னே?

2112. "எந்தை ஈசன்" எனத் தொடங்கிச் சிவபெருமானின் திருவருள் வந்த வழிதான் இப்படியோ! என்று சிந்தை செய்யும் திருப்பதிகத்து இசையைப் புத்தி நிறைந்து கொள்ளப் புகன்று, எதிரே நின்று, போற்றுவாராய்,

('எந்தையீசன்' என்பது பதிகத் தொடக்கம்)

2113. 'திருநீற்றை அணிந்த பழையவரான திருவரத்துறை இறைவரின் திருவருளே இதுவாகும்' என, ஒப்பற்ற சொல் மாலைகளைப் பாடி நீள வணங்கித் திருப்பதிகத்தை நிறைவு செய்தார்.

2114. ஒளி பொருந்திய முத்துச் சிவிகையினைச் சூழ்ந்து, வலமாக வந்து நில மேல் விழுந்து வணங்கி, அதன் வெண்ணீற்று ஒளியைத் துதித்து நின்று, அது இறைவரின் அருள் ஆதலால் திருவைந்தெழுத்தை ஓதி, பிள்ளையார் உலகம் எல்லாம் உய்யும்படி அதில் ஏறியருளினார்.

2115. அடியவர் ஆரவாரம் செய்தனர். வேதங்கள் முழங்கின. பழைமையுடைய தேவர்கள் ஆரவாரம் செய்தனர். மேகங்கள் உலகம் ஆர்த்தெழுமாறு முழங்கின. முழவு வாத்தியங்கள் ஒலித்தன. கூட்டமாய்ச் சேர்ந்து வண்டுகள் நீங்காத அழகிய மலர் மழையை வானம் ஆர்த்துப் பெய்தது.

2116. சங்குகள் ஒலித்தன. கொம்புகள் ஒலித்தன. வேதச் சாகைகள் ஒலித்தன. உறவினர் ஆரவாரம் செய்தனர். ஆன்மாக்களுடன் கூடியுள்ள உயிர்க்கு உயிரான இறைவரின் கருணையினால் பிணிக்கப்பட்ட முத்துக்களினின்று வீசும் பெருங் கதிர்களுடன் வெண்குடை மேலே கவிக்கப்பட்டு ஆரவாரித்தது. (சாகை—பிரிவு)

Koviloor Digital Library

2117 பல்கு வெண்கதிர்ப் பத்திசேர் நித்திலச் சிவிகைப்
புல்கு நீற்றொளி யுடல்பொலி புகலிகா வலனார்
அல்கு வெள்வளை அலைத்தெழு மணிநிறைத் தரங்கம்
மல்கு பாற்கடல் வளர்மதி உதித்தென வந்தார்.

2118 நீடு தொண்டர்கள் மறையவர் ஏனையோர் நெருங்கி
மாடு கொண்டெழு மகிழ்ச்சியின் மலர்க்கைமேல் குவித்தே
ஆடு கின்றனர் அயர்ந்தனர் அளவில்ஆ னந்தம்
கூடு கின்றகண் பொழிபுனல் வெள்ளத்தில் குளித்தார்.

2119 செய்ய பொன்புனை வெண்டர ளத்தணி சிறக்கச்
சைவ மாமறைத் தலைவர்பால் பெறுந்தனிக் காளம்
வையம் ஏழுடன் மறைகளும் நிறைதவத் தோரும்
உய்ய ஞானசம் பந்தன்வந் தான் எனஊத.

2120 சுற்று மாமறைச் சுருதியின் பெருகொலி நடுவே
தெற்றி னார்புரம் எரித்தவர் தருதிருச் சின்னம்
முற்றும் ஆனவள் ஞானமே முலைசுரந் தூட்டப்
பெற்ற பாலறா வாயன்வந் தான்எனப் பிடிக்க.

2121 புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார் முன்னே
இணைந்த நித்திலத் திலங்கொளி நலங்கிளர் தாரை
அணைந்த மாமறை முதற்கலை அகிலமும் ஓதா
துணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தான் எனஊத.

Koviloor Digital Library

2117. பெருகும் வெண்கதிர்களின் ஒழுங்குடைய முத்துச் சிவிகையின்மீது திருநீற்று ஒளியுடன் விளங்கும் சீகாழித் தலைவர் தங்கும் வெண்மையான சங்குகளை வாரி எழுகின்ற அழகிய வரிசையான அலைகள் நிறைந்த பாற்கடலில் வளரும் சந்திரன் தோன்றினாற் போல எழுந்தருளி வந்தார்.

2118. மிக்க தொண்டர்களும் அந்தணர்களும் மற்றவர்களும் நெருங்கி வந்து தங்கள் உள்ளத்தின் பக்கமிடம் கொண்டு எழுகின்ற மகிழ்ச்சியினால் மலர்க் கைகளை மேலே குவித்துப் பரவசமாய் ஆடினர். அளவற்ற ஆனந்தம் சேர்கின்ற கண்களினின்று பொழியும் கண்ணீர் வெள்ளத்தில் குளித்தனர்.

2119. சிவந்த பொன்னால் ஆன வெண் முத்துகளின் அழகு சிறக்குமாறு உள்ள. சைவத்துக்கும் வேதங்களில் கூறப்பட்ட வைதிகத்துக்கும் தலைவரான சிவபெருமானிடத்தில் பெறும் ஒப்பில்லாத எக்காளம் என்ற சின்னம், 'உலகம் ஏழும் வேதங்களும் நிறைந்த தவத்தையுடையவர்களும் உய்யுமாறு திருஞான சம்பந்தர்' வந்தார் என்று கூறி ஊதினர்.

2120. சுற்றி ஒலிக்கும் பெரு வேதச் சுருதிகளின் பெரு முழக்கத்தினிடையே, பகைவரின் முப்புரங்களை எரித்த இறைவர் அளித்தருளிய திருச்சின்னம், "ஞானமே முழுதுமாகிய மேனியைக் கொண்ட பெரிய நாயகி அம்மையார் தமது ஞானத் திருமுலை சுரந்து ஞான அமுது ஊட்டப் பெற்ற பாலறாவாயர் வந்தார்" எனக் கூறி ஊதினர்.

2121. கூடிய மெய்த்தவ முனிவர் குழுவுடன் செல்கின்றவர் முன்பு, இணைந்த முத்துக்களின் விளங்கும் ஒளிப் பெருமை சூழ்ந்து கிளர்தற்கு இடமான தாரை என்ற சின்னம், "பெரிய வேதங்களும் அவற்றின் வழித்தாய் வரும் எல்லாக் கலைகளும் ஓதாமல் உணர்ந்தவரான முத்தமிழ் விரகர் வந்தார்" எனக் கூறி ஊதினர். இங்ஙனமாக,

Koviloor Digital Library

2122 தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர்
சிந்தை
இருளும் நீங்கவும் எழுதுசொன் மறைஅளிப்
பவர்தாம்
பொருளும் ஞானமும் போகமும் போற்றிஎன்
பாருக்கு
அருளும் அங்கணர் திருஅரத் துறையைவந்
தணைந்தார்.

2123 வந்து கோபுர மணிநெடு வாயில்சேய்த் தாகச்
சந்த நித்திலச் சிவிகைநின் றிழிந்துதாழ்ந்
தெழுந்து
சிந்தை ஆர்வமும் மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல
அந்தி நாண்மதி அணிந்தவர் கோயிலுள்
அடைந்தார்.

2124 மன்னு கோயிலை வலங்கொண்டு திருமுன்பு வந்து
சென்னி யிற்கரங் குவித்துவீழ்ந் தன்பொடு
திளைப்பார்
என்னை யும்பொரு ளாகவுன் னருள்புரிந் தருளும்
பொன்ன டித்தலத் தாமரை போற்றி என்
றெழுந்தார்

2125 சூடி னார்கர கமலங்கள் சொரிந்திழி கண்ணீர்
ஆடி னார்திரு மேனியில் அரத்துறை விரும்பி
நீடி னார்திரு அரும்பெருங் கருணையே நிகழப்
பாடி னார்திருப் பதிகம்ஏ ழிசையொடும் பயில.

2126 இசைவி ளங்கிட இயல்பினிற் பாடிநின் றேத்தி
மிசைவி ளங்குநீர் வேணியார் அருளினால் மீண்டு
திசைவி ளங்கிடத் திருவருள் பெற்றவர் சிலநாள்
அசைவில் சீர்த்தொண்டர் தம்முடன் அப்பதி
அமர்ந்தார்

Koviloor Digital Library

2122. தெளிவைத் தரும் உண்மைக் கலைகள் விளங்கும்படியும், அதனுடன் உலகத்தில் உள்ளவரின் சிந்தையில் தங்கிய இருளும் நீங்கும்படியும், எழுதும் சொல் மறையை அளிப்பவரான ஆளுடையபிள்ளையார், 'போற்றி' என்று துதிப்பவர்க்குப் பொருளையும் ஞானத்தையும் இன்பத்தையும் அளிக்கும் சிவபெருமானின் திருவரத் துறையை வந்து அடைந்தார்.

2123. அந்தத் தலத்தில் வந்து, கோபுர வாயில் தொலைவிலே தோன்றிய அளவில், அழகிய முத்துச் சிவிகையினின்றும் கீழே இறங்கி நிலத்தில் விழுந்து, தூல லிங்கமான அக்கோபுரத்தை வணங்கி எழுந்து, உள்ளத்தில் எழுந்த ஆசையும் மகிழ்ச்சியும் மேலும் மேலும் பொங்கித் தமக்கு முன்னால் போக, மாலைக் காலத்தில் தோன்றும் பிறைச் சந்திரனைச் சூடிய திருவரத்துறை இறைவரின் திருக் கோயிலுக்குள் புகுந்தார்.

2124. பொருந்திய அக்கோயிலை வலம்வந்து, திரு முன்பு வந்து, தலை மீது கைகளைக் குவித்து, நிலத்தில் விழுந்து, அன்பில் திளைப்பவராய், 'என்னையும் ஒரு பொருளாகக் கொண்டு இனிய அருளைச் செய்யும் பொன்னடித் தலங்களான தாமரைகளுக்கு வணக்கம்!'' என்று எழுந்து துதித்தார்.

2125. கைம்மலர்களைத் தலைமேல் சூடிக்கொண்டார். பெருகி வழிகின்ற கண்ணீர்த் தாரையினால் திருமேனி நனைய ஆடினார்; திருவரத்துறையை விரும்பிப் பழைமையாய் வீற்றிருந்தருளும் இறைவரின் கருணை நிகழுமாறு ஏழிசையுடன் பொருந்தத் திருப்பதிகம் பாடினார்.

2126. ஏழ் இசையும் விளங்கும்படி இயலில் திருப் பதிகத்தைப் பாடி நிறைவாக்கி நின்று துதித்து, மேலே கங்கை நீர் விளங்குவதற்கு இடமான சடையையுடைய சிவபெருமானின் திருவருள் பெற்று, அங்கு நின்று மீண்டும் எழுந்தருளி, எல்லாத் திக்குகளில் உள்ளவரும் சிவஞானம் பெற்றுய்யும்படி திருவருள் பெற்றவரான சம்பந்தர், சிலநாட்கள் அத்தலத்தில் அசைவற்ற சிறப்புடைய தொண்டர்களுடன் விரும்பி எழுந்தருளி இருந்தார்.

Koviloor Digital Library

2127 தேவர் தம்பிரான் திருஅரத் துறையினில் இறைஞ்சி
மேவு நாட்களில் விமலனார் நெல்வெண்ணெய்
முதலாத்
தாவில் அன்பர்கள் தம்முடன் தொழுதுபின்
சண்பைக்
காவ லார்அருள் பெற்றுடன் கலந்துமீண்
டணைந்தார்.

2128 விளங்கு வேணுபு ரத்திருத் தோணிவீற் றிருந்த
களங்கொள் கண்டர்தங் காதலி யாருடன்கூட
உளங்கொ ளப்புகுந் துணர்வினில் வெளிப்பட
உருகி
வளங்கொள் பூம்புனற் புகலிமேற் செலமனம்
வைத்தார்.

2129 அண்ண லார்திரு அரத்துறை அடிகளை வணங்கி
நண்ணு பேரரு ளால்விடை கொண்டுபோய்
நடங்கொண்டு
உண்ணி றைந்தபூங் கழலினை உச்சிமேற்
கொண்டே
வெண்ணி லாமலர் நித்திலச் சிவிகைமேற்
கொண்டார்.

2130 சிவிகை முத்தினிற் பெருகொளி திசைஎலாம்
விளக்கக்
கவிகை வெண்மதிக் குளிரொளி கதிர்செய்வான்
கலப்பக்
குவிகை மேற்கொண்டு மறையவர் குணலையிட்
டாடப்
புவிகைம் மாறின்றிப் போற்றவந் தருளினார்
போந்தார்.

Koviloor Digital Library

2127 தேவரின் தலைவரான சிவபெருமானின் திருவரத்துறையில் உள்ள அந்த இறைவரை வணங்கி அங்கிருந்த நாட்களில், சிவபெருமானின் திருவெண்ணெய் முதலான தலங்களைக் குற்றம் அற்ற அன்பர்களுடனே தொழுது, பின் சீகாழித்தலைவரான பிள்ளையார் இறைவரின் திருவருளைப் பெற்று, உடன் கலந்திருந்து. மீண்டும் திருவரத்துறையில் வந்து சேர்ந்தார்.

(திருவெண்ணெய் நல்லூரில் அவர்பாடிய பதிகம் "நல்வெணெய் விழுது பெய்" எனத் தொடங்குவதாகும்.)

2128. பிள்ளையார், வணங்கும்வேணுபுரமான சீகாழியில்திருத்தோணிக் கோயிலில் வீற்றிருந்த திருநீலகண்டரான இறைவர் தம் தேவியராகிய பெரிய நாயகி அம்மையாருடன் கூடத் தம் உள்ளத்தே இடம் கொள்ள நிறைந்து உள் புகுந்து உணர்வில் வெளிப்படக் கண்டு, உள்ளம் உருகி வளம் உடைய அழகிய நீர் பொருந்திய சீகாழிக்குச் செல்ல உள்ளம் கொண்டார்.

2129. பெருமையுடைய திருவரத்துறை இறைவரை வணங்கிப் பொருந்திய அவரது பெருந்திருவருளினால் விடைபெற்றுக் கொண்டு சென்று, ஆனந்தக் கூத்தியற்றி உள்ளே நிறைந்த அழகிய திருவடிகளைத் தலைமீது கொண்ட வண்ணம் வெண்மையான நிலவு ஒளி வீசும் முத்துச் சிவிகையின் மீது ஏறினார்.

2130. சிவிகையில் பதிக்கப் பெற்ற முத்தினின்று பெருகும் ஒளி எல்லாத் திசைகளையும் விளக்கவும், மேலே கவித்த முத்துக் குடையின் வெண்மையான மதி போன்ற ஒளி சூரியனது ஒளி பரவுகின்ற வானத்தில் கலக்கவும், குவித்த கைகளை மேலே கொண்டு அந்தணர்கள் ஆனந்த மேலீட்டால் குணலைக் கூத்து இட்டு மேலே ஆடவும், உலகத்தை எந்தக் கைம்மாறும் இல்லாமல் காக்கும் பொருட்டாக வந்தவதரித்த பிள்ளையார் வந்தார்.

[குணலை — ஒருவகைக் கூத்து]

Koviloor Digital Library

2131 மறைமு ழங்கின தழங்கின வண்டமிழ் வயிரின்
குறைந ரன்றன முரன்றன வளைக்குலம் காளம்
முறைஇ யம்பின இயம்பல ஒலித்தன முரசப்
பொறை கறங்கின பிறங்கின போற்றிசை அரவம்.

2132 உடைய பிள்ளையார் வரும்எல்லை உள்ளஅப் பதியோர்
புடைஇ ரண்டினுங் கொடியொடு பூந்துகில் விதானம்
நடைசெய் காவணந் தோரணம் பூகநற் கதலி
மிடையு மாலைகள் நிறைகுடம் விளக்கொடு நிரைத்தார்.

2133 அனைய செய்கையால் எதிர்கொளும் பதிகளா னவற்றின்
வினைத ரும்பவந் தீர்ப்பவர் கோயில்கள் மேவிப்
புனையும் வண்டமிழ் மொழிந்தடி பணிந்துபோந் தணைந்தார்
பனைநெ டுங்கைமா உரித்தவர் மகிழ்பெரும் பழுவூர்.

2134 அங்கணைந் திளம்பிறை அணிந்த சென்னியார்
பொங்கெழிற் கோபுரந் தொழுது புக்கபின்
துங்கநீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார்.

2135 மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழுது
எண்ணில்சீர்ப் பணிகள்செய் தேத்துந் தன்மையில்
நண்ணிய வகைசிறப் பித்து நாதரைப்
பண்ணினில் திகழ்திருப் பதிகம் பாடினார்.

Koviloor Digital Library

2131. வேதங்கள் ஒலித்தன; வளமையுடைய தமிழ் மறைகள் ஒலித்தன; கொம்புகளின் குறைகள் ஒலித்தன; சங்கின் கூட்டங்கள் ஒலித்தன; எக்காளங்கள் முறையான மெய்க்கீர்த்திகளைக் கூறி ஒலித்தன; மற்றும் பலவகை வாத்தியங்கள் ஒலித்தன; முரசுகளான பெரிய இயங்கள் ஒலித்தன; அடியவர் துதிக்கும் ஒலி இவற்றின் மேலாய் ஒலித்தன.

2132. ஆளுடைய பிள்ளையார் வரும் இடங்களில் உள்ள ஊரவர்கள், இரண்டு பக்கங்களிலும், கொடியுடன் அழகிய துகில்களையும் நடைக் காவணங்களையும் தோரணங்கள் பாக்கு வாழை நெருங்கிய மாலைகள் என்ற இவற்றால் செய்யும் அலங்காரங்களையும் விளக்குடன் நீர்நிறை குடங்களையும் வரிசைப்பட வைத்தனர்.

2133. அத்தகைய செய்கைகளால் தம்மை எதிர்கொண்ட தலங்களில், வினை காரணமாக வரும் பிறவிகளை விலக்கியருளும் இறைவரின் திருக்கோயில்களில் போய்ப் புனையும் வளமை கொண்ட தமிழ்ப் பதிகங்களைப் பாடி, இறைவரது அடிகளை வணங்கிச் சென்று, பனை போன்ற நீண்ட கையையுடைய யானையை உரித்த சிவ பெருமான் வீற்றிருக்கும் 'திருப்பழுவூர்' என்ற தலத்தைப் பிள்ளையார் அடைந்தார்.

2134, அங்கே சேர்ந்து, பிறைச் சந்திரனைச் சூடிய தலையையுடைய இறைவரின் பெருகும் அழகுடைய திருக்கோபுரத்தை வணங்கிக், கோயிலுள் புகுந்து, பின்பு, பெரிய விமானத்தைச் சூழ்ந்து வலம் வந்து, திருமுன்பு போய்த், தாமரை போன்ற திருவடிகளைத் தொழுது பாடுபவராய்,

2135. இம்மண் உலகில் சிறந்து விளங்கும் அந்தணர் குலத்தில் வந்த மலையாளர் தொழுது எண்ணற்ற சிறந்த பணிகள் செய்து துதிக்கும் தன்மையில் பொருந்தியுள்ள வகைகளைச் சிறப்பித்து இறைவரைப் பண் இசையால் விளங்கும் திருப்பதிகம் பாடினார்.

(இங்குப் பாடிய பதிகம் 'முத்தன் மிகு மூவிலைநல்' என்ற தொடக்கம் உடையது.)

Koviloor Digital Library

2136 பாவின திசைவழி பாடி அங்ககன்
றியாவருந் தொழுதுடன் ஏத்த எய்தினார்
மூவுல குய்யநஞ் சுண்ட மூர்த்தியார்
மேவிய பெருந்திரு விசய மங்கையில்.

2137 அந்தணர் விசயமங் கையினில் அங்கணர்
தந்தனி ஆலயஞ் சூழ்ந்து தாழ்ந்துமுன்
வந்தனை செய்துகோ தனத்தை மன்னிய
செந்தமிழ் மாலையிற் சிறப்பித் தேத்தினார்.

2138 விசயமங் கையினிடம் அகன்று மெய்யர்தாள்
அசைவில்வை காவினில் அணைந்து பாடிப்போந்து
இசைவளர் ஞானசம் பந்தர் எய்தினார்
திசையுடை ஆடையர் திருப்பு றம்பயம்.

2139 புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறப்பயில் இசையுடன் பாடி நீடிய
அறந்தரு கொள்கையார் அமர்ந்து மேவினார்.

2140 அத்திருப் பதிபணிந் தகன்று போய்அனல்
கைத்தலத் தவர்பதி பிறவுங் கைதொழு
முத்தமிழ் விரகராம் முதல்வர் நண்ணினார்
செய்த்தலைப் பணிலமுத்து ஈனுஞ் சேய்ஞலூர்.

Koviloor Digital Library

2136. திருப்பதிகத்தை இசை வழியே பாடி, அங்கு நின்றும் சென்று, எல்லாரும் உடன் கூடித் துதிக்குமாறு, மூன்று உலகங்களும் உய்ய நஞ்சை உண்டருளிய இறைவர் விரும்பி எழுந்தருளியுள்ள பெருந் 'திருவிசய மங்கை' என்ற தலத்தில் போய்,

2137. மறையவர் வாழ்கின்ற விசய மங்கை என்ற தலத்தில் சிவபெருமானின் ஒப்பற்ற திருக்கோயிலை வலம் வந்து வணங்கி, முன்னால் வணங்கி நின்று, அங்குப் பசுக்களும் காமதேனுவும் வழிபட்ட செயலை நிலைபெறச் செந்தமிழ்ப் பதிகத்தில் சிறப்பித்து எடுதது துதித்தனர்'

(இங்குப் பாடப்பட்டது 'மருவமர் குழலுமை' எனத் தொடங்கும் பதிகம்).

2138. பின்பு விசய மங்கை என்ற பதியினின்று நீங்கிச் சென்று, அசைவில்லாத 'வைகா' என்ற தலத்தை அடைந்தார். அங்குச் சத்தே சொரூபமாய் உடைய இறைவரின் திருவடிகளைப் பாடிச் சென்று, தமிழ் இசையை வளர்க்கின்ற சம்பந்தர், திக்குகளையே ஆடையாய்க் கொண்ட இறைவரின் 'திருப்புறம்பயம்' என்ற பதியை அடைந்தார்.

(வைகாவில் இவர் பாடியது, 'கோழைமிடறாக கவி' என்ற தொடக்கம் உடைய பதிகம்.)

2139. திருப்புறம்பயத்தில் எழுந்தருளிய சிவபெருமானை வணங்கித் துதிக்கும் திறம் புரிகின்ற தன்மையில் வரும் பதிகமான செந்தமிழை வண்ணம் மிகும் இசையுடன் பாடி, நீடும் அறத்தை உதவும் கொள்கையினரான பிள்ளையார் அங்கு விருப்புடன் தங்கியிருந்தார்.

(இங்குப் பாடியது, 'மறம்பய மலைந்தவர்' என்ற தொடக்கம் உடைய திருப்பதிகம்).

2140. அந்தத் திருப்புறம்பயம் என்ற தலத்தைப் பணிந்து சென்று தீயை ஏந்திய கையையுடைய இறைவரின் திருப்பதிகள் பலவற்றையும் வணங்கும் முத்தமிழ் வல்லரான பிள்ளையார், வயல்களில் சங்குகள் முத்துக்களை ஈனுவதற்கு இடமான 'திருச்சேய்ஞலூர்' வந்தடைந்தார்.

(இடையில் அவர் திருவியலூர், திருந்து தேவன் குடி என்ற தலங்களில் பதிகங்களைப் பாடினார். 'குரவங்கமழ்' என்ற தொடக்கம் உடைய பதிகம் திருவியலூரிலும். 'மருந்து வேண்டில்லிவை' என்ற தொடக்கம் உடைய பதிகம் திருந்துதேவன் குடியிலும் பாடினார்.)

Koviloor Digital Library

2141 திருமலி புகலிமன் சேரச் செய்ஞலூர்
அருமறை யவர்பதி அலங்க ரித்துமுன்
பெருமறை யொடுமுழ வொலிபி றங்கவே
வருமுறை எதிர்கொள வந்து முந்தினார்.

2142 ஞானசம் பந்தரும் நாய னார்சடைத்
தூநறுந் தொடையல்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி என்று நித்தில
யானமுன் இழிந்தெதிர் இறைஞ்சி எய்தினார்.

2143 மாமறை யாளர்வண் புகலிப் பிள்ளையார்
தாமெழுந் தருளிடத் தங்கள் பிள்ளையார்
காமரும் பதியில்வந் தருளக் கண்டனர்
ஆமகிழ் வுடன்பணிந் தாடி ஆர்த்தனர்.

2144 களித்தனர் புண்ணியக் கரக வாசநீர்
தெளித்தனர் பொரிகளும் மலருஞ் சிந்தினர்
துளித்தனர் கண்மழை சுருதி ஆயிரம்
அளித்தவர் கோயிலுள் அவர்முன் பெய்தினார்,

2145 வெங்குரு வேந்தரும் விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினாற் புடைவ லங்கொடு
செங்கைகள் சென்னிமேற் குவித்துச் சென்றுபுக்கு
அங்கணர் முன்புற அணைந்து தாழ்ந்தனர்.

2146 வேதியர் செய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதாள் தடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார்.

Koviloor Digital Library

2141. செல்வம் மிக்க சீகாழிதலத் தலைவர் இங்ஙனம் வர, சேய்ஞலூரில் வாழ்கின்ற அந்தணர்களும் தம் பதியை அலங்காரம் செய்து, முன்பாக வேத முழக்கத்துடன், மங்கல முழவுகளின் ஒலியும் விளங்க வரும் முறைமையின்படி பிள்ளையாரை எதிர்கொள்ளும் பொருட்டாய் வந்தனர்.

2142. திருஞான சம்பந்தப் பெருமானும், 'இறைவர் தம் சடையில் சாத்திய தூய நறிய கொன்றை மலர் மாலையை முன்னர்ச் சூட்டும் சண்டேசர், பான்மையினால் வந்து தோன்றிய தலம் இது' என்று மனத்துள் எண்ணி, முத்துப் பல்லக்கினின்று இழிந்து, எதிர் வணங்கி வந்து சேர்ந்தார்.

2143. பெருமையுடைய அந்தணர்கள், வண்மை யுடைய சீகாழிப் பிள்ளையார் அங்ஙனம் எழுந்தருளி வர, தங்களின் சண்டேசப் பிள்ளையாரே அழகிய பதியில் அன்று மீண்டும் எழுந்தருளி வரக் கண்டது போன்ற மகிழ்வுடன் வணங்கியும் ஆடியும் ஆரவாரம் செய்தனர்.

2144. அவ்வூரார் இங்ஙனம் மகிழ்ச்சியடைந்து கமண்டலத்தில் உள்ள மணம் கொண்ட நீரைத் தெளித்தனர். பொரிகளையும் மலர்களையும் சொரிந்தனர். ஆனந்தக் கண்ணீர் சிந்தினர். அளவற்ற வேதங்களை அளித்த சிவபெருமானது திருக்கோயிலில் புகுந்து அப் பிள்ளையாரின் முன்னர்ச் சென்றனர்.

2145. வெங்குரு என்ற சீகாழித் தலைவரான பிள்ளை யாரும், விளங்கும் கோயிலை மிக்க விருப்பத்துடன் சுற்றி வலமாய் வந்து, சிவந்த கைகளைத் தலைமேல் குவித்து, உள்ளே புகுந்து, இறைவரின் திருமுன்பு சேர்ந்து வணங்கினார்.

2146. அந்தணர் வாழ்வதற்கு இடமான சேய்ஞலூரில் வந்தருளிய விமலரின் திருவடிகளை வணங்கி அப் பெருமானின் அருள் திறத்தைத் துதிப்பவரான பிள்ளையார், தம் தந்தையின் காலை வெட்டிய சண்டேசப் பிள்ளையார், பாதகச் செயலான அதற்குப் பயனாய் இறைவரின் மகனார் ஆன தன்மையைப் போற்றிப் பாடினார்.

Koviloor Digital Library

2147 இன்னிசை வண்டமிழ் பாடி ஏத்தியே
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந் தாள்வ ணங்கினார்.

2148 ஆங்கணி சொன்மலர் மாலை சாத்திஅப்
பாங்குபந் தணைநலூர் பணிந்து பாடிப்போய்த்
தீங்குதீர் மாமறைச் செம்மை அந்தணர்
ஓங்கும்ஓ மாம்புலி யூர்வந் துற்றனர்.

2149 மற்றநற் பதிவட தளியின் மேவிய
அற்புதர் அடிபணிந் தலர்ந்த செந்தமிழ்ச்
சொற்றொடை பாடிஅங் ககன்று சூழ்மதில்
பொற்பதி வாழ்கொளி புத்தூர் புக்கனர்.

2150 சீர்வளர் கோயிலை அணைந்து தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி நீடுவார்
வார்பொழிற் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர்.

Koviloor Digital Library

2147. இனிய இசையுடன் கூடிய வண்டமிழ்ப் பதிகம் பாடித் துதித்து நல்ல பழைமையுடைய அந்தத் தலத்தில் உள்ளவர் விரும்பியதால் அங்குத தங்கியிருந்தார். பின்பு வெண்மையான பிறையைச் சூடிய 'சடையப்பர்' நிலை பெற்றுள்ள 'திருப்பனந்தாளு'க்குச் சென்று தொழுதார்.

(திருச்சேய்ஞலூர் பதிகம் 'நூலடைந்த' என்ற தொடக்கம் கொண்டதாகும்.)

2148. அந்தத் திருப்பனந்தாளில் அழகிய சொல் மலர்களால் ஆன பதிகமாலையைச் சாத்தினார். பின்பு, அவ்வூர்க்குப் பக்கத்தில் உள்ள திருப்'பந்தணை நல்லூரைப்' பணிந்து துதித்து, மேலே போயத், தீமையைத் தீர்க்கும் பெருமறை பயிலும் வேதியர் விளங்கி உயர்வதற்கு இடமான திரு 'ஓமாம புலியூரினில்' வந்து சேர்ந்தார் சீகாழித் தலைவா.

(பந்தணை நல்லூரில் பாடிய பதிகம் 'இடறினார் கூற்றை' என்னும் தொடக்கம் உடையதாகும்.)

2149. அந்த ஓமாம்புலியூரில் வடதளிக் கோயிலில் எழுந்தருளிய அற்புதரான சிவபெருமானின் திருவடிகளை வணங்கினார்; விளங்கும் செந்தமிழால் ஆன பதிகத்தைப் பாடினார்; அங்கிருந்து புறப்பட்டுச் சென்று சூழ்ந்த மதிலை யுடைய அழகிய பதியான திருவாழ்கொளி புத்தூரில் வந்து புகுந்தார்.

(வடதளி— வடக்குத் திக்கில் உள்ள கோயில். திரு ஓமாம்புலியூரில் பாடியது ''பூங்கொடி மடவாள்'' எனத் தொடங்கும் பதிகம். ஓமம்— வேள்வி. ஓமமாம் புலியூர் ஓமாம்புலியூர் ஆயிற்று.)

2150. சிறப்பு ஓங்கும் கோயிலை அடைந்து தேன் பொருந்திய கருங்குவளை மலர் போன்ற கரிய நிறம் வளர் வதற்கு இடமான கழுத்தையுடைய இறைவரின் திருவடி களை வணங்கிக் காண்பவராய் உலகம் புகழும் திருப்பதி கங்களைப் பாடியருளிய பிள்ளையார் நிறைந்த புகழைக் கொண்ட 'திருக்கடம்பூரை'யும் வணங்கினார்.

[திருவாழ்கொளி புத்தூர் பதிகம் 'பொடியுடை மார்பினர்' என்ற தொடக்கத்தைக் கொண்டதாகும்.

திருக்கடம்பூர்ப் பதிகம்' வானமர் திங்களும்" என்ற தொடக்கம் உடையதாம்.]

Koviloor Digital Library

2151 நம்பரை நலந்திகழ் நாரை யூரினிற்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடிநின்று
எம்பிரான் கவுணியர் தலைவர் ஏத்தினார்.

2152 அப்பதி பணிந்தருந் தமிழ்பு னைந்துதம்
மெய்ப்படு விருப்பொடு மேவு நாள்அரன்
பொற்பதி பலவும்முன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர்கருப் பறிய லூரினில்.

2153 பரமர்தந் திருக்கருப் பறிய லூரினைச்
சிரபுரச் சிறுவர்கை தொழுது செந்தமிழ்
உரைஇசை பாடிஅம் மருங்கின் உள்ளவாம்
சுரர்தொழும் பதிகளும் தொழுது பாடினார்.

2154 மண்ணுலகு செய்ததவப் பயனா யுள்ள
வள்ளலார் அப்பதிகள் வணங்கி ஏகி
எண்ணில்முர சிரங்கிஎழப் பணிலம் ஆர்ப்ப
இலங்கியகா ளஞ்சின்னம் எங்கும் ஊதக்
கண்வளர்மென் கரும்புமிடை கதிர்ச்செஞ் சாலி
கதலிகமு குடனோங்குங் கழனி நாட்டுத்
தெண்ணிலவு சூடியதம் பெருமான் வைகும்
திருப்பிரம புரஞ்சாரச் செல்லும்போது.

Koviloor Digital Library

2151. இறைவரை நன்மை விளங்கும் திருநாரை யூரில் கும்பிடும் விருப்புடன் சென்று சேர்ந்து, தொகை யாகச் சேர்ந்த சிவமணம் மிகுந்து விரிகின்ற மாலைகளான திருப்பதிகங்களைப் பாடிநின்று எம் தலைவரான கவுணியர் குலத்தவர் வணங்கினார்.

2152. அந்தத் தலத்தை வணங்கி அரிய தமிழான பதிகத்தைப் பாடித் தம் உண்மை கொண்ட விருப்புடன் அங்கு இருந்தார். அந்நாட்களில் இறைவரின் அழகிய பதிகள் பலவற்றையும் சென்று பணிந்து, பையையுடைய பாம்பைச் சூடிய இறைவர் வீற்றிருக்கும் திருக்கருப்பறிய லூர் வந்து சேர்ந்தார். (திருநாரையூரில் 'காம்பினை வென்ற' என்ற தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார். மற்றும் 'கடலிடை' என்ற தொடக்கமும் 'உரையினில்' என்ற தொடக்கமும் கொண்ட பதிகங்களை யும் அவர் பாடினார்.)

2153. சீகாழியில் தோன்றிய பிள்ளையார் சிவபெரு மானின் திருக்கருப்பறியலூரை வணங்கிச் செந்தமிழ்ப் பதிகத்தைப் பாடி அங்குப் பக்கத்தில் உள்ள தேவர் வணங்குகின்ற பிற தலங்களையும் வணங்கிப் பாடினார்.

[திருக்கருப்பறியலூரில் 'சுற்றமொடு பற்றவை" என்னும் தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார்.]

2154. இம்மண் உலகம் செய்த தவப்பயனால் அவதரித்த வள்ளலாரான பிள்ளையார் அந்தத் தலங்கள் பலவற்றையும் வணங்கி, அப்பால் சென்று, அளவற்ற முரசுகள் எழுந்து ஒலிக்கவும், சங்குகள் ஒலிக்கவும். விளங்கும் எக்காளங்களும் சின்னங்களும் எங்கும் இயம்பவும், கணுக்கள் வளரும் மென்மையான கரும்புகளும் நெருங்கிய கதிர்களையுடைய செந்நெல்லும், வாழைகளும் கமுகுகளும் ஒருங்கே ஓங்கும் வயல்கள் பொருந்திய சோழ நாட்டில், தெளிந்த பிறையைச் சூடிய தம் இறைவர் எழுந்தருளியுள்ள 'திருப் பிரமபுரம்' என்ற சீகாழியைச் சாரச் செல்லும் போது,

Koviloor Digital Library

2155 பிள்ளையார் எழுந்தருளக் கேட்ட செல்வப்
பிரமபுரத் தருமறையோர் பெருகு காதல்
உள்ளமகிழ் சிறந்தோங்கத் தோணி மேவும்
உமைபாகர் கழல்வணங்கி உவகை கூர
வெள்ளமறை ஒலிபெருகு மறுகு தோறும்
மிடைமகர தோரணங்கள் கதலிபூகம்
தெள்ளுபுனல் நிறைகுடங்கள் தீப தூபம்
செழுங்கொடிகள் நிரைந்தெதிர்கொள்
சிறப்பிற் செல்வார்.

2156 ஆரணங்கள் மதுரவொலி எழுந்து பொங்க
அரசிலையுந் தருப்பையும்பெய் தணிந்த வாசப்
பூரணகும் பங்கள்நிறை கரகம்ஏந்திப்
புதுமலரும் நறுந்துகளும் பொரியுந் தூவி
வாரணங்கு முலைஉமையாள் குழைத்த செம்பொன்
வள்ளத்தில் அமுதுண்ட வள்ள லாரைச்
சேரணங்கு மணிமுத்தின் சிவிகைமீது
செழுந்தரளக் குடைநிழற்கீழ்ச் சென்று
கண்டார்.

2157 கண்டபொழு தேகைகள் தலைமேற் கொண்டு
கண்களிப்ப மனங்களிப்பக் காதல் பொங்கித்
தொண்டர்களும் மறையவருஞ் சென்று சூழ்ந்து
சொல்லிறந்த மகிழ்ச்சியினால் துதித்தஓசை
எண்டிசையும் நிறைவித்தார் ஆடை வீசி
இருவிசும்பின் வெளிதூர்த்தார் ஏறு சீர்த்தி
வண்டமிழ்நா யகரும்இழிந் தெதிரே சென்று
வணங்கிஅவ ருடன்கூடி மகிழ்ந்து புக்கார்.

Koviloor Digital Library

2155. பிள்ளையார் தம் பதிக்கு வருகின்றார் என்பதைக் கேட்ட செல்வம் பொருந்திய பிரம புரத்தில் வாழ்கின்ற அந்தணர்கள் பெருங்காதலால் தம் உள்ளங்களில் மகிழ்ச்சி பெருகி எழுதலால் திருத்தோணியில் எழுந்தருளிய பெரிய நாயகியாரை ஒரு பாகத்தில் கொண்ட இறைவரின் திருவடிகளை வணங்கி, மகிழ்ச்சி மிக, பல வேதங்களின் ஒலி பெருகும் திரு வீதிகளில் எல்லாம் நெருங்கிய மகர தோரணங்கள், வாழை, பாக்கு, தெளிந்த நீர் உடைய குடங்கள், விளக்குகள், தூபம், செழுங் கொடிகள் என்னும் இவற்றை வரிசையாய் அமைத்து வரவேற்கும் சிறப்புகளை மிகுதியாய்ச் செய்து.

2156. அவ்வூரார் வேதங்களின் இனிய ஒலி எழுந்து பெருக, அரச இலையும் தருப்பையும் இட்டு அலங்காரம் செய்த மணமுடைய பூரண கும்பங்களையும் நிறைந்த கரகங்களையும் தாங்கி, புதிய மலர்களையும் மணச் சுண்ணத்தையும் பொரியையும் தூவிக் கச்சுப் பொருந்திய கொங்கைகளையுடைய உமையம்மையார் தந்த செம்பொன் கிண்ணத்தில் சிவஞானத்துடன் குழைந்த பால் அமுதத்தை உண்ட வள்ளலான பிள்ளையாரைச் சிறந்த முத்துச் சிவிகையின் மீது செழுமையான முத்துக் குடையின் கீழ்க் கண்டனர்

2157. பார்த்தவுடனே தலைகள் மீது கைகளைக் குவித்துக் கண்கள் களிப்படையவும் உள்ளம் மகிழவும் காதல் பெருகித் தொண்டர்களும் அந்தணர்களும் சென்று பிள்ளையாரைச் சூழ்ந்து சொல்லைக் கடந்த மகிழ்ச்சியால் துதித்த ஓசை எட்டுத் திக்குகளிலும் நிறையுமாறு செய்தார். தம் ஆடைகளை வீசி வானத்தைத் தூர்த்தனர். மேலும் மேலும் பெருகும் புகழையுடைய ஆளுடைய தமிழ்த்தலைவரான பிள்ளையாரும் சிவிகையினின்றும் கீழே இறங்கி அவர்கள் எதிரே போய் வணங்கி அவர்களுடன் கூடி மகிழ்ந்து நகரத்துள் புகுந்தார்.

Koviloor Digital Library

2158 திங்கள் அணி மணிமாடம் மிடைந்த வீதி
சென்ற ணைந்து தெய்வமறைக் கற்பின்மாதர்
மங்கலவாழ்த் திசைஇரண்டு மருங்கு மல்க
வானவர்நா யகர்கோயில் மருங்கு சார்ந்து
துங்க நிலைக் கோபுரத்தை இறைஞ்சிப் புக்குச்
சூழ்ந்துதிருத் தோணிமிசை மேவி னார்கள்
தங்கள்திரு முன்புதாழ்ந் தெழுந்து நின்று
தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார்.

2159 பரவிதிருப் பதிகஇசை பாடி நீடும்
பரன்கருணைத் திருவருளின் பரிசு போற்றி
விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள் கூப்பி
வீழ்ந்தெழுந்து புறம்போந்து வேத வாய்மைச்
சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும்போது
திருநீல கண்டயாழ்ப் பாணர் பின்னே
வர அவரை வளம்பெருகு மனையிற் போக
அருள் செய்து தந்திருமா ளிகையின் வந்தார்.

2160 மறையவர்கள் அடிபோற்றத் தந்தை யாரும்
மருங் கணைய மாளிகையில் அணையும் போதில்
நிறைகுடமும் மணிவிளக்கும் முதலா யுள்ள
நீதிமறைக் குலமகளிர் நெருங்கி ஏந்த
இறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென்
றின்றதா யார்சாத்தி இறைஞ்சி ஏத்த
முறைமையவர்க் கருள்செய்து மடத்திற் புக்கார்
முதல்வர்பால் மணிமுத்தின் சிவிகை
பெற்றார்.

Koviloor Digital Library

2158. சந்திரனைத் தாங்குமாறு உயர்ந்த அழகிய மாளிகைகள் நிறைந்த தெருவில் போய் அணைந்து, கடவுள் தன்மை கொண்ட மறைவழி வந்த கற்புடைய மங்கையர் முழக்கும் மங்கல வாழ்த்து இரு பக்கங்களிலும் நிறைய, இறைவரது பெரிய நிலைகளையுடைய கோபுரத்தை வணங்கிக், கொயிலுள் புகுந்து, வலம் வந்து, திருத்தாளம் பெற்றவரான பிள்ளையார், திருத்தோணியில் எழுந்தருளிய இறைவரின் திருமுன்பு வீழ்ந்து வணங்கி எழுந்து தமிழ் வேதமான பதிகத்தைப் பாடினார்.

2159. போற்றும் இசைபொருந்திய திருப்பதிகத்தைப் பாடிப் பெருங்கருணை செய்த திருவருளின் தன்மையைத் துதித்து, பொருந்திய மலர் போன்ற கண்கள் இன்ப நீரைச் சிந்தக் கைகளைத் தலைமேல் குவித்து, வீழ்ந்து வணங்கி வெளியே வந்து, வேத வாய்மை விளங்கும் சீகாழிப் பிள்ளை யார் சென்றார். அப்போது திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் பின்னே வர, அவரை வளம் பெருகும் அவரது இல்லத் துக்குப் போகும்படி செய்து தம் மாளிகையின் அருகில் வந்தார்.

2160. வேதியர்கள் தம் அடிகளை வணங்கத் தந்தை யாரும் தம் பக்கத்தில் அணையத் தம் திருமாளிகையை அடையும்போது, நீதி மறைக்குல மடந்தையர் நிறை குடத்தையும் அழகிய விளக்குகளையும் ஏந்தி நிற்க. (அவரைப் பெற்ற) தாயார் சிவபெருமானின் திருநீற்றுக் காப்பினை ஏந்தி முன்னேவந்து சாத்திப் பணிந்துபாராட்ட, முறைமைப் படி அவரவர்க்கு அருள் செய்து, முதல்வரிடம் மணிமுத்துச் சிவிகைபெற்றவரான பிள்ளையார் திருமடத்துள் புகுந்தார்

Koviloor Digital Library

2161 செல்வநெடு மாளிகையில் அமர்ந்து நாளும்
திருத்தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து
மல்குதிருப் பதிகங்கள் பலவும் பாடி
மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகு நாளில்
ஒல்லைமுறை உபநயனப் பருவம் எய்த
உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்றார்
தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத்
தோலொடுநூல் தாங்கினார் சுரர்கள் போற்ற.

2162 ஒருபிறப்பும் எய்தாமை உடையார் தம்மை
உலகியலின் உபநயன முறைமை யாகும்
இருபிறப்பின் நிலைமையினைச் சடங்கு காட்டி
எய்துவிக்கும் மறைமுனிவர் எதிரே நின்று
வருதிறத்தின் மறைநான்குந் தந்தோம் என்று
மந்திரங்கள் மொழிந்தவர்க்கு மதுரவாக்கால்
பொரு விறப்பு ஓதினார் புகலிவந்த
புண்ணியனார் எண்ணிறந்த புனித வேதம்.

2163 சுருதிஆ யிரம்ஓதி அங்க மான
தொல்லைகள் எடுத் தியம்பும் தோன்ற
லாரைப்
பரிதிஆ யிரகோடி விரிந்தால் என்னப்
பரஞ்சோதி அருள்பெற்ற பான்மை மேன்மை
கருதிஆ தரவோடும் வியப்புற் றேற்துங்
கலைமறையோர் கவுணியனார் தம்மைக்
கண்முன்
வருதியா னப்பொருளென் றிறைஞ்சித் தாமுன்
வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார்.

Koviloor Digital Library

2161. செல்வம் பெருகும் நீண்ட தம் திருமாளிகையில் இருந்து ஒவ்வொரு நாளும் திருத்தோணியில் எழுந்தருளிய வரைப் போய்ப் பணிந்து பொருந்திய பதிகங்கள் பல வற்றையும் பாடி மன மகிழ்ச்சியுடன் போற்றி வந்தார். அந்நாட்களில், விரைவாக முறைப்படி சேரும் உபநயனப் பருவம் வந்து சேர, உலகம் கடந்த சிவஞானத்தை அறியப் பெற்ற பிள்ளையார் தொன்று தொட்டுவரும் வேத விதி களின்படி உபநயனத்துக்குரிய சடங்குகளை அந்தணர்கள் செய்தனர். தேவர்கள் போற்றும்படி பிள்ளையார் தோலு டனே நூலையும் தாங்கிக் கொண்டார்.

(தோலொடு நூல் — இரண்டு அங்குலமாய்ப் பூணூல் அளவில் அமையச் செய்த கருமான் தோல்)

2162. எந்த ஒரு பிறவியிலும் வாராத இயல்புடைய பிள்ளையாரை உலகில் மற்றவர் இயல்பில் அவரை வைத்து, உபநயன முறையான இருபிறப்பின நிலையைச் சடங்கு களால் காட்டிப் பெறச் செய்கின்ற அந்தணர்கள், எதிரில் நின்று "வழி வழி வரும் தன்மையில் நான்கு வேதங்களையும் தந்தோம்" என்று உரிய மந்திரங்களைச் சொல்லும் அவர் களுக்குத் தம் இனிய வாக்கினால், சீகாழியில் அவதரித்த புண்ணியமே வடிவான பிள்ளையார், ஒப்பற்ற நிலையில் எண்ணற்ற புனித வேதங்களையும் ஓதினார்.

2163. பல வேதங்களையும் முன் சொன்னவாறு கூறி ஓதியதுடன் அவற்றின் அங்கமான பழைய கலைகளையும் எடுத்துக் கூறிய பெருமை வாய்ந்த பிள்ளையாரை, ஆயிரங் கோடிக் கதிரவர்கள் ஒருங்கே கூடி வந்து விரிந்தன போலப் பரஞ்சோதியினது திருவருளைப் பெற்ற பான்மையின் மேன் மையை எண்ணி, அன்பும் வியப்பும் கொண்டு துதிக்கும் அந்த அந்தணர்கள், கவுணியர் பெருமானான பிள்ளை யாரைத் 'தங்கள் கண்முன் வெளிப்பட்டு வரும் தூயானப் பொருளே ஆவார்' என்று எண்ணி வணங்கித் தாங்கள் முன்னே கொண்ட மறைகளில் ஏற்பட்ட தமக்குள்ள ஐயங் களைக் கேட்டுத் தெளிந்தனர்.

Koviloor Digital Library

2164 மந்திரங்க ளானஎலாம் அருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறும்ஐயந் தெளிய எல்லாம்
செழுமறையோர்க் கருளி அவர்தெருளும் ஆற்றால்
முந்தைமுதன் மந்திரங்கள் எல்லாந் தோன்றும்
முதலாகும் முதல்வனார் எழுத்தஞ்சு என்பார்
அந்தியினுள் மந்திரம்அஞ் செழுத்து மேஎன்
றஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்.

2165 அத்தகைமை பிள்ளையார் அருளிச் செய்ய
அந்தணர்கள் அருள்தலைமேற் கொண்டு தாழ்ந்து
சித்தமகிழ் வொடு சிறப்பத் தாமுந் தெய்வத்
திருத்தோணி அமர்ந்தாரைச் சென்று தாழ்ந்து
மெய்த்தஇசைப் பதிகங்கள் கொண்டு போற்றி
விரைமலர்த்தாள் மனங்கொண்டு மீண்டுபோந்து
பத்தருடன் இனிதமரும் பண்புகூடப்
பரமர்தாள் பணிந்தேத்திப் பயிலும் நாளில்.

2166 பந்தணை மெல்விர லாளும் பரமரும் பாய்விடை மீது
வந்துபொன் வள்ளத் தளித்த வரப்பில்ஞா னத்தமு துண்ட
செந்தமிழ் ஞானசம் பந்தர் திறங்கேட் டிறைஞ்சுதற் காக
அந்தணர் பூந்தராய் தன்னில் அணைந்தனர் நாவுக் கரசர்.

Koviloor Digital Library

2164. பிள்ளையார் வேத மந்திரங்கள் எல்லாவற்றையும் சொல்லியருளிப் பின், இவற்றுள் வேதத்தில் விதித்த வேள்விச் சடங்குகளில் வந்த அவர்களின் சிந்தையில் கூடிய ஐயங்களை எல்லாம் தெளியுமாறு அந்த அந்தணர்களுக்கு எடுத்துக் கூறினார். அதனுடன், அவர்களின் மனம் தெளியும்படியாய்ப் 'பழைய முதன்மை பெற்ற எல்லா மந்திரங்களும் தோன்றுதற்குக் காரணம் சிவபெருமானின் திருவைந்தெழுத்தேயாகும்' என உபதேசிப்பவராய், 'அந்தியில் ஓதும் மந்திரமாவது திருவைந்தெழுத்துமேயாகும்' என வரும் திருபஞ்சாட்சரத் திருப்பதிகத்தை அருள் செய்தார்.

[இங்குப் பாடியது ''துஞ்சலும் துஞ்ச'' எனத் தொடங்கும் பதிகமாகும்.]

2165. அவ்வாறான பதிகத்தைப் பிள்ளையார் பாடியருளவே, அம்மறையவர்கள் அந்த அருளிப் பாட்டினைச் சிரமேல் தாங்கி வணங்கி மனம் மகிழ்ந்தனர். பிள்ளையார் தாமும் தெய்வத் திருத்தோணியில் எழுந்தருளிய இறைவரைச் சென்று பணிந்து உண்மையுடைய இசையுடன் கூடிய திருப்பதிகங்களால் துதித்து அவரது மணம் கமழும் மலர் போன்ற திருவடிகளை உள்ளத்தில் வைத்து மீண்டு வெளியே வந்து அடியார்களுடன் இனிதாய் அமரும் தன்மை கூடுமாறு இறைவரின் திருவடிகளைப் பணிந்து போற்றி இருந்து வந்தார். அந்நாளில்,

2166. பந்தைப் பழகிய மென்மையான விரலையுடைய உமையம்மையாரும் இறைவரும் காளையூர்தியின் மீது எழுந்தருளி வெளிப்பட்டு வந்து பொற்கிண்ணத்தில் அளித்த எல்லையில்லாத ஞானப் பாலையுண்ட செந்தமிழ்த்தலைவரான திருஞான சம்பந்தரது திறங்களைக் கேட்டு, அவரை வணங்குதற்காக, அந்தணர்கள் சிறப்புடன் இருக்கும் சீகாழிப் பதியில் திருநாவுக்கரசு நாயனார் வந்தார்.

Koviloor Digital Library

2167 வாக்கின் பெருவிறல் மன்னர் வந்தணைந் தார்
எனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத் தடஞ்சூழ் புகலிப் பெருந்தகை
யாரும்
ஆக்கிய நல்வினைப் பேறென் றன்பர் குழாத்
தொடும் எய்தி
ஏற்கும் பெருவிருப் போடும் எதிர்கொளா எய்தும்
பொழுதில்.

2168 சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில்
அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும் கைஉழ வராப்
படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலி திரு
நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந்
தணைய.

2169 கண்ட கவுணியக் கன்றும் கருத்திற் பரவுமெய்க்
காதல்
தொண்டர் திருவேடம் நேரே தோன்றிய தென்று
தொழுதே
அண்டரும் போற்ற அணைந்தங் கரசும் எதிர்
வந் திறைஞ்ச
மண்டிய ஆர்வமும் பெருகமதுர மொழிஅருள்
செய்தார்.

2170 பேரிசை நாவுக் கரசைப் பிள்ளையார் கொண்டுடன்
போந்து
போர்விடை யார்திருத் தோணிப் பொற்கோயி
லுட்புகும் போதில்
ஆர்வம் பெருக அணையும் அவருடன்
கும்பிட் டருளால்
சீர்வளர் தொண்டரைக் கொண்டு திருமாளிகை
யினிற் சேர்ந்தார்

Koviloor Digital Library

2167. பேராற்றலையுடைய சொல்மன்னர் வந்துள்ளார் என்பதைக் கேட்டு நீர்ப் பூக்கள் மணம் கமழும் பொய்கைகள் சூழ்ந்த சீகாழியில் வந்தருளிய பெருந்தகையினரான பிள்ளையாரும் 'இது முன் நல்வினையினால் வந்த பேறாகும்' என்று மனத்துள் கொண்டு, அன்பர் கூட்டத்துடன் கூடி, அவரை வரவேற்கும் பெருவிருப்பத்துடனே எதிர்கொண்டு வரவேற்கச் சென்றபோது,

2168. உள்ளத்தில் இடையறாது பெருகும் அன்பும், திருமேனியில் அசைவும், கந்தையும் மிகையாகும் என்ற கருத்தும், கையில் உழவாரப் படையும், வெளிப்பட்டுப் பெருகி வழிகின்ற கண்ணீர் மழையும், திருமேனியில் விளங்கும் திருநீறுமாய், அந்தம் இல்லாத திருவேடத்தையுடைய திருநாவுக்கரசரும் எதிரே வந்தார்.

2169. அங்ஙனம் அவர் வருதலைப் பார்த்த ஞானசம்பந்தரும் ''உள்ளத்தில், பரவும் உண்மையன்பின் பெருக்குக்கிடமான தொண்டர் திருவேடம் நேரே வந்து தோன்றியது'' எனக் கொண்டு தொழுத படியே, தேவர்களும் துதிக்கும்படி அங்குச் சேர்ந்து, அப்போது நாவுக்கரசரும் எதிரே வந்து வணங்கக் கூர்ந்த ஆசை பெருக, அவருக்கு இனிய மொழிகளைக் கூறியருளினார்.

2170. மிக்க புகழையுடைய நாவுக்கரசைப் பிள்ளையார் உடன் வரவேற்றுக்கொண்டு சென்று காளையூர்தியையுடைய இறைவரின் திருத்தோணி என்ற அழகிய கோயிலுள் புகுப்போது ஆர்வம் மிகுந்ததால் அணையும் அவருடனே கூடி, இறைவரை வணங்கித், திருவருளால், சிறப்பு மிகச் செய்யும் திருத்தொண்டரான அரசைத் தம்முடன் அழைத்துக் கொண்டு தம் திருமாளிகைக்குச் சென்றார்.

Koviloor Digital Library

2171 அணையுந் திருத்தொண்டர் தம்மோ டாண்ட
அரசுக்கும் அன்பால்
இணையில் திருவமு தாக்கி இயல்பால் அமுது
செய் வித்துப்
புணரும் பெருகன்பு நண்பும் பொங்கிய காதலிற்
கும்பிட்டு
உணருஞ்சொன் மாலைகள் சாத்தி உடன்மகிழ்
வெய்தி உறைந்தார்.

2172 அந்நாள் சிலநாள்கள் செல்ல அருள்திரு நாவுக்
கரசர்
மின்னார் சடைஅண்ணல் எங்கும் மேவிடங்
கும்பிட வேண்டிப்
பொன்மார்பின் முந்நூல் புனைந்த புகலிப் பிரான்
இசை வோடும்
பின்னாக எய்த இறைஞ்சிப் பிரியாத நண்பொடும்
போந்தார்.

2173 வாக்கின் தனிமன்னர் ஏக மாறாத் திருவுளத்
தோடும்
பூக்கமழ் பண்ணைகள் சூழ்ந்த புகலியின் மீண்டும்
புகுந்து
தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி
வீற்றிருந் தாரைத்
தூக்கின் தமிழ்மாலை பாடித் தொழுதங் குறை
கின்ற நாளில்.

2174 செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க
ளான்மொழி மாற்றும்
வந்தசொற் சீர்மாலை மாற்றும் வழிமொழி
எல்லா மடக்குச்
சந்தவி யமகம் ஏக பாதந் தமிழ்இ ருக்குக்குறள்
சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு.

Koviloor Digital Library

2171. சேரும் திருத்தொண்டர்களுடன் ஆளுடைய அரசுக்கும் ஒப்பில்லாத உணவை ஏற்ற இயல்பால் ஆக்கு வித்து உண்ணச் செய்தருளிப், பொருந்தியதால் பெருகிய அன்பும் நட்பும் மேலும் அதிகரித்த காதலால் வணங்கிச் சிவ பெருமானை உணர்ச்சியிற் கண்டு சொல்லும் திருப்பதிகங் களைப் பாடி மகிழ்ச்சி பொருந்தி உடன் இருந்தனர்.

2172. அங்ஙனமான நாட்கள் சில சென்றன; செல்ல, திருவருள் பெற்ற திருநாவுக்கரசர் மின்னல் போல் ஒளி விடும் சடையுடைய இறைவர் வீற்றிருக்கும் எங்கும் பொருந்திக் கும்பிட விரும்பி அழகிய மார்பில் முப்புரிநூல் அணிந்த சீகாழிச் செம்மலான பிள்ளையாரின் சம்மதத் துடன் பின்னர் வந்து கூடும்படி நினைத்த வண்ணம் வணங்கிப் பிரிய இயலாத நட்புரிமையுடன் சென்றார்.

2173. ஒப்பில்லாத திருநாவுக்கரசர் செல்ல, மாறு பாடில்லாத திருவுள்ளத்துடன் மலர்கள் மணம் கமழும் வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியுள் பிள்ளையார் மீண்டு வந்து புகுந்து, நிறைந்த பெரிய வேதங்களின் மிகுதியின் வடிவாய்த் திருத்தோணியில் வீற்றிருக்கின்ற தோணியப் பரைத் தூக்குடைய இனிய தமிழ் மாலைகளைப் பாடி வணங்கிக் கொண்டு அங்கு இருந்து வரும் நாட்களில்,

2174. விகற்பச் செய்யுட்களாலான செந்தமிழ் மாலைகளாகத் 'திருமொழி மாற்று' என்ற பதிகமும், சொல்சீர் மாற்றி வந்த 'திருமாலை மாற்றுப் பதிகமும்', வழிமொழி 'திருவிராகப் பதிகமும்', எல்லா அடிகளிலும் எல்லாச்சீர்களும் மடங்கி வருகின்ற இய்மகமாகிய 'திரு ஏக பாதப் பதிகமும்', தமிழ் சிறந்த 'இருக்குக் குறள்' என்ற பதிகமும், ஆகிய இவற்றைப் பாடிச் சாத்தியதுடன், எம் தந்தைக்கு அருளிய 'எழு கூற்றிருக்கையும்', 'ஈரடி' என்ற திருப்பதிகமும் 'ஈரடிமேல் வைப்பு' என்ற திருப்பதிகமும்,

Koviloor Digital Library

2175 நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகுமி
ராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும்
பதிக
மூல இலக்கிய மாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினார் ஞானசம்
பந்தர்.

2176 இன்னிசை பாடின எல்லாம் யாழ்ப்பெரும்
பாணனார் தாமும்
மன்னும் இசைவடி வான மதங்கசூ ளாமணியாரும்
பன்னிய ஏழிசை பற்றிப் பாடப் பதிகங்கள் பாடிப்
பொன்னின் திருத்தா ளம்பெற்றார் புகலியிற்
போற்றி இருந்தார்.

2177 அங்கண் அமர்கின்ற நாளில் அருந்தமிழ் நாடெத்தி
னுள்ளும்
திங்கள் சடைஅண்ண லார்தம் திருப்பதி யாவை
யுங் கும்பிட்டு
எங்கும் தமிழ்மா லைபாடி ஏத்திஇங் கெய்துவன்
என்று
தங்குலத் தாதையா ரோடுந் தவமுனி வர்க்கருள்
செய்தார்.

2178 பெருகு விருப்புடன் நோக்கிப் பெற்ற குலத்தாதை
யாரும்
அருமையால் உம்மைப் பயந்த அதனாற் பிரிந்துறை
வாற்றேன்
இருமைக்கும் இன்பம் அளிக்கும் யாகமும்
யான்செய வேண்டும்
ஒருமையால் இன்னஞ் சிலநாள் உடன்எய்
துவேன்என் றுரைத்தார்.

Koviloor Digital Library

2175. 'நாலடிமேல் வைப்பு' என்ற திருப்பதிகமும் மேன்மையுடைய முடுகும் நடையில் அமைந்த 'திருவிராகம்' என்ற பதிகங்களும், சார்பு கொண்ட 'திருச் சக்கரமாற்று' முதலான திருப்பதிகங்களும் இவை மூல இலக்கியமாக உலகத்துக்கு வழிகாட்டியிருக்குமாறு எல்லாப் பொருள் கோள்களும் நிரம்பியிருக்கக் காணுமாறு உலகத்தில் உயரும் சீகாழி இறைவரைத் திருஞான சம்பந்தர் பாடியருளினார்.

2176. இனிய இசையில் முன் கூறியவாறு பாடிய எல்லாப் பதிகங்களையும் பெரும் யாழ்ப்பாணரும், பொருந்திய இசை ஓர் உருவு எடுத்தாற் போன்ற மதங்க சூளாமணியாரும், போற்றப்படும் ஏழிசைகளைப் பற்றிப் பாடத், திருப்பதிகங்களைப் பாடி இறைவரைத் துதித்துக் கொண்டு பொன் தாளம் பெற்ற பிள்ளையார் சீகாழியில் தங்கியிருந்தனர்.

2177. அத்தலத்தில் விருப்பத்துடன் எழுந்தருளி யிருக்கும் நாள்களில், 'அரிய தமிழ் நாட்டிலும்மற்றுமுள்ள நாடுகளிலும் திங்களை அணிந்த சடையையுடைய சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் எல்லா வற்றையும் போய்க் கும்பிட்டு எங்கும் தமிழ் மாலைத் திருப் பதிகங்களைப் பாடித் துதித்து இங்கு வந்து சேர்வேன்' எனத் தம் பெருமையுடைய தந்தையார் சிவபாத இருதய ருக்கும்தவ முனிவர்களுக்கும் கூறினார்.

2178. மேலும் மேலும் பெருகும் விருப்பத்தோடும் பிள்ளையாரைப் பார்த்து, அவரை ஈன்ற சிவபாத இருதயர், "அரிய தவம் செய்து அதன் பயனாக உம்மை ஈன்றெடுத் தேன். ஆதலால் உம்மைப் பிரிந்து இங்கிருப்பதைச் சகிக்க மாட்டேன். இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும் சிவ வேள்வியையும் யான் செய்தல் வேண்டும். ஆதலால் இன்னும் சில நாட்கள் உம்முடன் இருப்பேன்!" எனக் கூறினார்.

Koviloor Digital Library

2179 ஆண்டகை யாரும் இசைந்தங் கம்பொற்
றிருத்தோணி மேவும்
நீண்ட சடையார் அடிக்கீழ்ப் பணிவுற்று நீடருள்
பெற்றேற
ஈண்டு புகழ்த்தா தையார்பின் எய்திட
யாழ்ப்பாண ரோடும்
காண்டகு காழி தொழுது காதலி னாற்புறம்
போந்தார்.

2180 அத்திரு மூதூரின் உள்ளார் அமர்ந்துடன்
போதுவார் போத
மெய்த்தவர் அந்தணர் நீங்கா விடைகொண்டு
மீள்வார்கள் மீள
முத்தின் சிவிகைமேற் கொண்டு மொய்யொளித்
தாமம் நிரைத்த
நித்தில வெண்குடை மீது நிறைமதி போல்
நிழற்ற.

2181 சின்னந் தனிக்காளம் தாரை சிரபுரத் தாண்டகை
வந்தார்
என்னுந் தகைமை விளங்க ஏற்ற திருப்பெயர்
சாற்ற
முன்னெம் மருங்கு நிரந்த முரசுடைப் பல்லியம்
ஆர்ப்ப
மன்னுந் திருத்தொண்ட ரானார் வந்தெதிர்
கொண்டு வணங்க.

2182 சங்கநா தங்கள் ஒலிப்பத் தழங்குபொற் கோடு
முழங்க
மங்கல வாழ்த்துரை எங்கும் மல்க மறைமுன்
இயம்பத்
திங்களும் பாம்பும் அணிந்தார் திருப்பதி எங்கும்
முன்சென்று
பொங்கிய காதலிற் போற்றப் புகலிக் கவுணியர்
போந்தார்

Koviloor Digital Library

2179. ஆண் தகையாளரான சம்பந்தரும் அதற்குச் சம்மதம் தெரிவித்து, அங்கு அழகிய பொன்னார்ந்த திருத்தோணியில் எழுந்தருளிய நீண்ட சடையுடைய இறைவரின் திருவடிக் கீழ் விழுந்து வணங்கி நீடிய திருவருளைப் பெற்றுக்கொண்டு மிகுந்த புகழையுடைய தந்தையார் பின்தொடர்ந்து வர, திருநீலகண்ட யாழ்ப் பாணர் தம்முடனே வரக் காணத்தக்க சீகாழிப் பதியை வணங்கி நீங்காத பத்தியுடன் புறம் போந்தார்.

2180. அந்தப் பழைய ஊரில் உள்ளவர்களுள் உண்மைத் தவத்தவர்கள் உடன் வருவாராய்ப் பின் தொடர்ந்து செல்லவும், அந்தணர்கள் பிரியா விடை பெற்றுப் பதியில் மீண்டு செல்பவர்கள் மீளவும், முத்துச் சிவிகையின் மேல் பிள்ளையார் எழுந்தருளி, மொய்த்துக் கூடிய முத்து மாலைகளை வரிசையாய்க் கட்டிய வெண்மை யான முத்துக் குடையானது மேலே முழுச் சந்திரன் போல் கவிந்து நிழலைச் செய்யவும்.

2181. முத்துச் சின்னமும், ஒப்பில்லாத முத்துக் காளமும், முத்தால் ஆன த்தாரையும், "சீகாழியில் தோன்றிய ஆளுடைய பிள்ளையார் வந்தருளினார்" என்னும் தன்மையை உலகுக்கு விளங்கும்படி ஏற்றவாறு அவருடைய பற்பல பெயர்களையும் எடுத்துச் சொல்லி ஊதிப் பிடிக்கவும், திருமுன்பு எல்லாப் பக்கங்களிலும் வரிசையாய் முரசுகளும் மற்றும் பல இயங்களும் முழங்கவும், நிலைபெற்ற திருத்தொண்டர்கள் வந்து எதிர்கொண்டு வணங்கவும்,

2182. சங்கின் ஒலி முழங்கவும், விளங்கும் அழகிய கொம்புகள் ஒலிக்கவும், மங்கலமான வாழ்த்துரை எங்கும் பெருகவும், முன்னே வேதங்கள் முழங்கவும், பிறைச் சந்திரனையும் பாம்பையும் அணிந்த இறைவரின் திருத் தலங்கள் எங்கும் உள்ளவற்றில் போய் மேலும் மேலும் பெருகும் விருப்பத்துடன் துதிக்கச் சீகாழிக் கவுணிய குலத் தோன்றல் சென்றார்.

Koviloor Digital Library

2183 திருமறைச் சண்பைய ராளி சிவனார்திருக்
கண்ணார் கோயில்
பெருவிருப் பாலஅணைந் தேத்திப் பிஞ்ஞகர்
கோயில் பிறவும்
உருகிய அன்பால் இறைஞ்சி உயர்தமிழ்
மாலைகொண் டேத்தி
வருபுனற் பொன்னி வடபால் குடதிசை நோக்கி
வருவார்.

2184 போற்றிய காதல் பெருகப் புள்ளிருக் குந்திரு
வேளூர்
நாற்றடந் தோளுடை மூன்று நயனப் பிரான்
கோயில் நண்ணி
ஏற்றஅன் பெய்தவ ணங்கிஇருவர் புள்வேந்தர்
இறைஞ்சி
ஆற்றிய பூசனை சாற்றி அஞ்சொற் பதிகம்
அணிந்தார்.

2185 நீடு திருநின்றி யூரின் நிமலனார் நீள்கழல் ஏத்திக்
கூடிய காதலிற் போற்றிக் கும்பிட்டு வண்டமிழ்
கூறி
நாடுசீர் நீடூர் வணங்கி நம்பர் திருப்புன்கூர் நண்ணி
ஆடிய பாதம் இறைஞ்சி அருந்தமிழ் பாடி
அமர்ந்தார்.

2186 அங்குநின் றேகிஅப் பாங்கில் அரனார் மகிழ்கோ
யிலான
எங்கணுஞ் சென்று பணிந்தே ஏத்தி இமவான்
மடந்தை
பங்கர் உறைபழ மண்ணிப் படிக்கரைக்கோயில்
வணங்கித்
தங்கு தமிழ்மாலை சாத்தித் திருக்குறுக் கைப்பதி
சார்ந்தார்.

Koviloor Digital Library

2183. சீகாழி அந்தணரின் தலைவரான ஆளுடைய பிள்ளையார் இறைவர் எழுந்தருளியுள்ள திருக்கண்ணார் கோயில் என்னும் பதியைப் பெருகும் விருப்பத்துடன் அணைந்து, திருப்பதிகம் பாடித் துதித்து. இறைவரின் பதிகள் பிறவற்றையும் உருகும் அன்புடன் போய் வணங்கி, உயரும் தமிழ் மாலைகளாகிய தேவாரத் திருப்பதிகங்களைப் பாடித் துதித்து, வரும் நீரையுடைய காவிரியின் வடகரை யின் வழியாய் மேற்குத் திக்கு நோக்கி வருபவராய்,

(திருக்கண்ணார் கோயில் பதிகம் 'தண்ணார் திங்கள்' எனத் தொடங்கும் பதிகம்)

2184. போற்றும் விருப்பம் மேல்மேல் அதிகரிக்கத் 'திருப்புள்ளிருக்கு வேளூரில்' நான்கு பெருந்தோள்களை யுடைய முக்கண் பெருமான் வீற்றிருக்கும் கோயிலை அடைந்து, தக்க பேரன்பு பொருந்த வணங்கி, பறவையரசர் களான சம்பாதி சடாயு என்பவர்கள் வணங்கிச் செய்த வழிபாட்டின் பெருமையைப் பாராட்டிப் போற்றி அழகான சொற்களால் அமைந்த திருப்பதிகத்தை இறைவர்க்கு அணிந்தார்.

(புள்ளிருக்குவேளூர்ப் பதிகம் 'கள்ளார்ந்த' என்ற தொடக்கம் உடையதாகும்.)

2185. நிலைபெறும் திருநின்றவூரில் இறைவரின் நீண்ட திருவடிகளைத் துதித்து, மிக்க பக்தியுடன் வணங்கிக் கும்பிட்டு, வன்மையான திருப்பதிகத்தைப் பாடியருளி, நாளும் சிறப்புடைய திருநீறை வணங்கி, இறைவரின் திருப்புன்கூரை அடைந்து அருட்கூத்து இயற்றும் திருவடிகளை வணங்கி, அருந்தமிழ்ப் பதிகம் பாடி ஆங்கே விருப்பத்துடன் தங்கியிருந்தார்.

[திருநின்றவூரில் பாடியது 'சூலம்படை' என்ற தொடக்கம் கொண்ட பதிகமாகும்.]

[திருப்புன்கூர் பதிகம் 'முந்தி நின்ற' என்ற தொடக்கம் கொண்டதாகும்.]

2186. அந்தத் திருப்புன்கூரினின்றும் பிள்ளையார் புறப்பட்டுச் சென்று, அப்பக்கங்களில் இறைவர் வீற்றிருக் கும் கோயில்களில் எல்லாம் போய்ப் பணிந்து துதித்து, உமையம்மையாரின் பங்கரான சிவபெருமான் வீற்றிருக்கும் 'திருப்பழமண்ணிப் படிக்கரைக்' கோயிலை வணங்கி, நிலைக்கும் தமிழ் மாலை பாடித், 'திருக்குறுக்கைப்' பதியை அடைந்தார்.

Koviloor Digital Library

2187 திருக்குறுக் கைப்பதி மன்னித் திருவீரட் டானத்
தமர்ந்த
பொருப்புவில் லாளரை ஏத்திப் போந்தன்னி
யூர்சென்று போற்றிப்
பருக்கை வரைஉரித் தார்தம் பந்தண நல்லூர்
பணிந்து
விருப்புடன் பாடல் இசைத்தார் வேதம் தமிழால்
விரித்தார்.

2188 அப்பதி போற்றி அகல்வார் அரனார் திருமணஞ்
சேரி
செப்பருஞ் சீர்தொண்ட ரோடுஞ்சென்று
தொழுதிசைபாடி
எப்பொரு ளுந்தரும் ஈசர் எதிர்கொள்பா
டிப்பதி எய்தி
ஒப்பில் பதிகங்கள் பாடி ஓங்குவேள் விக்குடி
உற்றார்.

2189 செழுந்திரு வேள்விக் குடியில் திகழ்மண வாளநற்
கோலம்
பொழிந்த புனல்பொன்னி மேவும் புனிதத் துருத்தி
இரவில்
தழும்பிய தன்மையுங் கூடத் தண்டமிழ் மாலை
யிற் பாடிக்
கொழுந்துவெண் திங்கள் அணிந்தார் கோடி
காவிற்சென் றடைந்தார்.

Koviloor Digital Library

2187. 'திருக்குறுக்கை' என்ற தலத்தில் பொருந்தி அங்குள்ள திருவீரட்டானக் கோயிலில் விரும்பி எழுந்தருளிய மேருமலையை வில்லாய்க் கொண்ட இறைவரைத் துதித்துப் புறப்பட்டுச் சென்று 'திரு அன்னியூர்' என்ற தலத்தை வழிபட்டு, பெரிய கையையுடைய மலை போன்ற யானையை உரித்த சிவபெருமானின் 'திருப்பந்தணை நல்லூரைப்' பணிந்து வேதங்களைத் தமிழால் விரித்துச் சொன்ன பிள்ளையார் தமிழ்ப் பாமாலைகளைப் பாடினார்.

(அன்னியூர்ப்பதிகம் 'மன்னி யூரிறை' எனத் தொடங்குவதாகும். திருப்பந்தணை நல்லூர்ப் பதிகம் 'இடறினார் கூற்றை' எனத் தொடங்கும் பதிகமாகும்.)

2188. அந்தத் தலத்தைப் போற்றி மேலே செல்பவராய், இறைவரின் 'திருமணம்சேரியைச்' சொல்வதற்கரிய திருத்தொண்டர்களுடனே போய் வழிபட்டு, திருப்பதிகத்தைப் பாடி, எல்லாப் பொருள்களையும் தரும் இறைவரின் 'திருஎதிர்கொள்பாடி' என்ற பதியை அடைந்து, ஒப்பில்லாத திருப்பதிகங்களைப் பாடி உயர்ந்த 'வேள்விக் குடியை' அடைந்தார்.

2189. வளமுடைய 'திருவேள்விக் குடியில்' வீற்றிருக்கும் மணவாளத் தோற்றமானது பொய்யாமல் வருகின்ற நீர் வளம் கொண்ட தூய 'திருத்துருத்தியில்' பகலில் காணக் காட்டி, இரவிலே இவ்வேள்விக் குடியில் எழுந்தருளிய தன்மையையும் சேர்த்து, அறிவுறுத்திக் குளிர்ந்த தமிழ் மாலை பாடி, முளைக்கும் கொழுந்தைப் போன்ற வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடிய இறைவரின் 'திருக்கோடிக்கா' என்ற தலத்தைப் போய் அடைந்தார்.

(திருமணஞ் சேரியில் 'அயிலாரும்' என்ற தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார். திருஎதிர் கொள்பாடியில் பாடிய பதிகம் கிடைக்கவில்லை. திருத்துருத்தியில் 'ஓங்கிமே லுழிதரு' என்ற தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார்.)

Koviloor Digital Library

2190 திருக்கோடி காவில் அமர்ந்த தேவர் சிகாமணி
தன்னை
எருக்கோ டிதழியும் பாம்பும் இசைந்தணிந்
தானை வெள்ளேனப்
பருக்கோடு பூண்ட பிரானைப் பணிந்துசொன்
மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேருங்கஞ் சனூர்
கைதொழச் சென்றார்.

2191 கஞ்சனூர் ஆண்டதங் கோவைக் கண்ணுற்
றிறைஞ்சி முன்போந்து
மஞ்சணி மாமதில் சூழும் மாந்துறைவந்துவணங்கி
அஞ்சொல் தமிழ்மாலை சாத்தி அங்ககன் றன்பர்
முன்னாகச்
செஞ்சடை வேதியர் மன்னுந் திருமங்க லக்குடி
சேர்ந்தார்.

2192 வெங்கண் விடைமேல் வருவார் வியலூர்
அடிகளைப் போற்றித்
தங்கிய இன்னிசை கூடும தமிழ்ப்பதி கத்தொ
டை சாத்தி
அங்கண் அமர்வார்தம் முன்னே அருள்வே
டங்காட்டத் தொழுது
செங்கண்மா லுக்கரி யார்தந் திருந்துதே வன்குடி
சேர்ந்தார்.

2193 திருந்துதே வன்குடி மன்னுஞ் சிவபெருமான்
கோயில் எய்திப்
பொருந்திய காதலிற் புக்குப் போற்றிவ ணங்கிப்
புரிவார்
மருந்தொடு மந்திர மாகி மற்றும்இ வர்வேட
மாம் என்று
அருந்தமிழ் மாலைபு னைந்தார் அளவில்ஞா
னத்தமு துண்டார்.

Koviloor Digital Library

2190. திருக்கோடிக்கா என்ற திருப்பதியில் அமர்ந்த தேவர்களின் தலைவரான இறைவரை எருக்கு மலருடனே கொன்றை மலரையும் அணிந்தவரை, வெள்ளைப் பன்றியான திருமாலின் பருத்த கொம்பைப் பூண்ட பெருமானைப் பணிந்து சொல்மாலையான திருப்பதிகத்தைப் பாடிப் பிறவித் தன்மையை நீப்பவர்கள் அடைவதற்கு இடமான 'திருக்கஞ்சனூரை' வணங்குவதற்குப் போனார்.

(திருக்கோடிக்காவில் பாடியது ''இன்று நன்று'' என்னும் தொடக்கம் உடைய பதிகம்.)

2191. திருக்கஞ்சனூரில் ஆட்சி செய்கின்ற தம் இறைவரைக் கண்டு கும்பிட்டு மேலே போய் மேகம் தவழ்கின்ற மதில் சூழ்ந்த 'திருமாந்துறை' என்ற தலத்தில் போய் வணங்கிச் சொல் மாலை பாடி, அங்கிருந்து புறப்பட்டு அன்பர்கள் எதிர்கொள்ளச் சிவந்த சடையையுடைய அந்தணரான சிவபெருமான் நிலையாக வீற்றிருக்கின்ற 'திருமங்கலக் குடியை' அடைந்தார்.

2192. கொடிய கண்ணையுடைய காளை மீது எழுந்தருளும் 'திருவியலூர்' இறைவரை வணங்கித், தங்கிய இனிய இசையுடைய தமிழ்மாலை பாடி, அந்தத் தலத்தில் விரும்பி எழுந்தருளியுள்ள இறைவர், தம் முன்பு அருள் திருவேடம் நேரே காட்டத் தொழுது, திருமாலுக்கு அரியவரான இறைவரின் 'திருந்து தேவன்குடியைப்' போய் அடைந்தார்.

(திருவியலூர்ப் பதிகம் ''குரவம் கமழ்'' என்ற தொடக்கம் கொண்டதாகும்.)

2193. 'திருந்து தேவன் குடி' என்ற தலத்தில் நிலையாய் வீற்றிருக்கும் இறைவனின் கோயிலை அடைந்து, பொருந்திய காதலால் புகுந்து துதித்து வணங்கி நினைவாராகி, 'இவரது வேடம் மருந்தும் மந்திரமும் ஆகும்' என்று அளவில்லாத ஞானப்பாலையுண்டவராதலால் பிள்ளையார் அரிய தமிழ் மாலையைப் புனைந்தார்.

(இங்குப் பாடியது 'மருந்து வேண்டில்' என்னும் தொடக்கம் கொண்ட பதிகமாகும்.)

Koviloor Digital Library

2194 மொய்திகழ் சோலைஅம் மூதூர் முன்னகன்
றந்நெறி செல்வார்
செய்தரு சாலிக ரும்பு தெங்குலைபம் பூகத்திடை
போய்
மைதிகழ் கண்டர்தம் கோயில் மருங்குள்ள எல்
லாம் வணங்கி
எய்தினர் ஞானசம்பந்தர் இன்னம்பர் ஈசர்தம்
கோயில்.

2195 இன்னம்பர் மன்னும்பி ரானை இறைஞ்சி
இடைமடக்கான
பன்னுந் தமிழ்த்தொடை மாலைப் பாடல்பு
னைந்து பரவிப்
பொன்னங் கழலிணை போற்றிப் புறம்போந்
தணைந்து புகுத்தார்
மன்னுந் தடங்கரைப் பொன்னி வட குரங் காடு
துறையில்.

2196 வடகுரங் காடு துறையில் வாலியார் தாம்வழி
பட்ட
அடைவும் திருப்பதி கத்தில் அறியச் சிறப்பித்
தருளிப்
புடைகொண்டி றைஞ்சினர்போந்து புறத்துள்ள
தானங்கள் போற்றிப்
படைகொண்ட மூவிலை வேலார் பழனத்திருப்பதி
சார்ந்தார்.

2197 பழனத்து மேவிய முக்கட் பரமேட்டி யார்பயில்
கோயில்
உழைபுக் கிறைஞ்சிநின் றேத்தி உருகிய சிந்தைய
ராகி
விழைசொற் பதிகம் விளம்பி விருப்புடன் மேவி
அகல்வார்
அழனக்க பங்கய வாவி ஐயாறு சென்றடை
கின்றார்.

Koviloor Digital Library

2194. அரும்புகள் விளங்கும் சோலை சூழ்ந்த அந்த முதுமையுடைய ஊரினின்றுநீங்கி அவ்வழியில் செல்பவராகி, வயல்களில் விளையும் நெல்லும் கரும்பும் தென்னையும் பசிய கமுகும் என்ற இவற்றிடையே போய், நஞ்சு விளங்கும் கழுத்தையுடைய இறைவரின் கோயில்களுள் அப்பக்கங்களில் உள்ளவற்றையெல்லாம் வணங்கிக் கொண்டு திருஇன்னம்பர் இறைவரின் கோயிலைத் திருஞான சம்பந்தர் அடைந்தார்.

2195. திரு இன்னம்பரில் நிலைபெற்று வீற்றிருக்கும் இறைவனை வணங்கி இடைமடக்கான யாப்பால் அமைந்த 'திருமுக்கால்' என்ற இறைவரின் புகழைப் பரவும் திருப்பதிகத் தமிழ்ப்பாடல் மாலைகளைச் சாத்தி வணங்கி, இறைவரின் பொன்னடிகளைப் போற்றிப் புறப்பட்டுச் சென்று, நிலைபெற்ற பெரிய கரையையுடைய காவிரியின் வடகரையில் உள்ள வடகுரங்காடு துறையில் வந்து அணைந்தார்.

(திரு இன்னம்பரில் பாடியது 'எண்டிசை' எனத் தொடங்கும் பதிகம்.)

2196. வடகுரங்காடு துறையில் வந்து வாலி வழிபட்டுச் சரணமான வரலாற்றைத் திருப்பதிகத்தில் உலகம் அறியும்படி சிறப்பித்துப் பாடித் திருக்கோயிலை வலம் வந்து வணங்கிப் புறப்பட்டு, அதன் பக்கங்களில் உள்ள திருத்தலங்களையெல்லாம் வணங்கிய வண்ணம் மூவிலைச் சூலத்தைப் படையாய்க் கைக் கொண்ட இறைவர் எழுந்தருளிய 'திருப்பழனமான' திருத்தலத்தைச் சென்றடைந்தார்.

(வாலியார் — இராமாயணத்துள் பேசப்படும் வாலி.)

2197. திருப்பழனத்தில்வீற்றிருக்கும்மூன்று கண்களையுடைய சிவபெருமான் திருக்கோயிலுள் புகுந்து நின்று துதித்து, உருகிய உள்ளத்தையுடையவராகி, விருப்பத்தை அளிக்கும் தமிழ்ச் சொல் பதிகத்தைப்பாடி விருப்பத்துடன் அங்குத தங்கிருந்து, பின் அங்கிருந்தும் நீங்குவாராய்த் தீயைப் பழித்த தாமரை மலர்ந்த நீர்நிலைகளையுடைய திருவையாற்றை அடைபவராய்.

(திருப்பழனத்தில் பாடப்பட்ட பதிகம் 'வேதமோதி' என்ற தொடக்கம் உடையதாகும்.)

Koviloor Digital Library

2198 மாடநிரை மணிவீதித் திருவையாற் றினில்வாழு
மல்குதொண்டர்
நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து
நண்ணினார்என்
றாடலொடு பாடல்அறா அணிமூதூர் அடையஅலங்
காரஞ் செய்து
நீடுமனக் களிப்பினொடும் எதிர்கொள்ள நித்திலயா
னத்து நீங்கி.

2199 வந்தணைந்த திருத்தொண்டர் மருங்குவர
மான்ஏந்துகையர் தம்பால்
நந்திதிரு வருள்பெற்ற நன்னகரை முன்இறைஞ்சி
நண்ணும் போதில்
ஐந்துபுலன் நிலைகலங்கும் இடத்தஞ்சேல்
என்பார்தம் ஐயாறுஎன்று
புந்திநிறை செந்தமிழின் சந்தஇசை
போற்றிசைத்தார் புகலி வேந்தர்.

2200 மணிவீதி இடங்கடந்து மாலயனுக் கரியபிரான்
மன்னும் கோயில்
அணிநீடு கோபுரத்தை அணைந்திறைஞ்சி
உள்ளெய்தி அளவில் காதல்
தணியாத கருத்தினொடுந் தம்பெருமான்
கோயில்வலங் கொண்டு தாழ்ந்து
பணிசூடுமவர்முன்பு பணிந்து வீழ்ந் தெழுந்தன்பாற்
பரவுகின்றார்.

Koviloor Digital Library

2198. மாளிகைகளின் வரிசைகளையுடைய திருவை யாற்றில் வாழ்கின்ற அடியார்கள், ''உலகம் உய்யும் பொருட்டுச் சீகாழியில் தோன்றி ஞானமுது உண்ட பிள்ளையார் வந்தார்'' என்று மனத்தில் எண்ணி, ஆடலு டனே பாடல் நீங்காது நிறைந்த அழகிய அந்தப் பழவூரை முழுதும் அலங்காரம் செய்து, பெருகிய உள்ள மகிழ்வுடன் வரவேற்கும்போது, பிள்ளையார் முத்துச்சிவிகையினின்று இறங்கி வந்து,

2199. வந்து கூடிய தொண்டர்கள் தம் பக்கத்தில் சூழ்ந்து வர, மானை ஏந்திய கையையுடைய இறைவரி டத்தில் நந்தி பெருமான் அருளைப் பெற்ற அந்தத் தலத் தினை வணங்கி, முன் காலத்தில் 'அஞ்சாதே' என்று அபயம் உரைத்த இறைவரது திருவையாறு இதுவாகும் என்ற எண்ணத்துடன், மனம் நிறைந்து எழுந்த செந்தமிழினது சந்த இசைப்பதிகத்தால் வணங்கித் துதித்தார் சீகாழித் தலைவர்.

(திருவையாற்றை நெருங்கும் போதே பதிகத்தைப் பாடினார். ஐயாற்றுப் பதிகம் புலனைந்தும் பொறி கலங்கி' •கோடல் கோங்கங்குளிர்' என்ற தொடக்கங்கள் கொண் டது.)

2200. அழகிய தெருக்களின் இடத்தைக் கடந்து போய்த் திருமாலுக்கும் நான்முகனுக்கும் அறிதற்கு அரிய சிவபெருமான் நிலையாய் வீற்றிருக்கும் கோயிலின் அழகு நிலைத்த கோபுரத்தைச் சார்ந்து பணிந்து கோயிலுள் சேர்ந்து அளவில்லாத ஆசையானது பெருகித் தணியாத மனத்துடன் இறைவரின் திருக்கோயிலை வலமாய் வந்து பாம்பை அணிந்த அப்பெருமானின் திருமுன்பு வணங்கி நிலமுற விழுந்து எழுந்து அன்பால் துதிப்பவராய்,

Koviloor Digital Library

2201 கோடல்கோங் கங்குளிர்கூ விளம்என்னுந்
திருப்பதிகக் குலவு மாலை
நீடுபெருந் திருக்கூத்து நிறைந்ததிரு உள்ளத்து
நிலைமை தோன்ற
ஆடுமா றதுவல்லான் ஐயாற்றெம் ஐயனேஎன்று
நின்று
பாடினார் ஆடினார் பண்பினொடுங் கண்பொழிநீர்
பரந்து பாய.

2202 பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்து
பரவுதிருத்தொண்ட ரோடு
நிலவுதிருப் பதியதன்கண் நிகழுநாள் நிகரிலா
நெடுநீர்க் கங்கை
அலையுமதி முடியார் தம்பெரும்புலியூர் முதலான
அணைந்துபோற்றிக்
குலவுதமிழ்த் தொடைபுனைந்து மீண்டணைந்து
பெருகார்வங் கூருநாளில்.

2203 குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங்
கருள்பெற்றுக் குறிப்பி னோடும்
படருநெறி மேலணைவார் பரமர்திரு நெய்த்தானப்
பதியில் நண்ணி
அடையுமனம் உறவணங்கி அருந் தமிழ்மா
லைகள்பாடி அங்கு நின்றும்
புடைவளர்மென் கரும்பினொடு பூகமிடை மழபாடி
போற்றச் சென்றார்.

Koviloor Digital Library

2201 "கோடல் கோங்கம் குளிர் கூவிளம்" என்னும் திருப்பதிகமான சிறந்த சொல்மாலையை, நீடிய பெருந் திருக்கூத்தின் சிறப்பு நிறைவான தம் உள்ளத்தின் நிலைமை தோன்றும்படி 'ஆடுமாறு வல்லான் எம் ஐயாற்றெம் ஐயனே' என்ற கருத்தை முடிபாகக் கொண்ட பதிகத்தைப் பாடி, அன்புப் பண்புடனே விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் இடைவிடாமல் பரந்து பாய்ந்திடப் பாடினார்; ஆடினார்.

(இங்குப் பாடிய பதிகம் 'கோடல் கோங்கம்' என்னும், தொடக்கம் கொண்டதாகும்.)

2202. பல முறையும் வணங்கி எழுந்து வெளியே வந்து வணங்கும் திருத்தொண்டருடன் நிலைபெற்ற அந்தத் தலத்தில் தங்கியிருந்தார். அந்நாட்களில் ஒப்பில்லாத நெடிய நீரையுடைய கங்கை அலைதற்கு இடமான முடியில் பிறைச்சந்திரனைச் சூடிய இறைவரது 'பெரும்புலியூர்' முதலான பதிகளில் போய் அணைந்து துதித்துத் தமிழ் மாலைகளைப் பாடி மீண்டும் திருவையாற்றை அடைந்து, பெருகும் ஆசை மிக அங்கு இருந்து வரும் நாளில்,

2203. மேற்குத் திக்கில் செல்வதற்கு விடைபெறக் கும்பிட்டுத் திருவருளைப் பெற்று அங்ஙனம் பெற்ற அக் குறிப்பின் வழியே செல்கின்ற மேலை வழியில் அணைபவராய், இறைவரின் 'திருநெய்த்தானம்' என்ற தலத்தில் போய் அடையும் மனம் பொருந்த வணங்கி அரிய தமிழ் மாலைகளைப் பாடி, அங்கிருந்து பக்கங்களில் வளரும் கரும்புடன் பாக்கு நெருங்கியுள்ள 'திருமழபாடியை' வணங்கச் செல்லலானார்.

(திருப்பெரும்புலியூர்ப் பதிகம் 'பிறைவளர்' என்ற தொடக்கம் கொண்டது. திருநெய்த்தானப் பதிகம் 'மையாடிய கண்டன் மலை' என்ற தொடக்கம் கொண்டது.)

Koviloor Digital Library

2204 செங்கைமான் மறியார்தந் திருமழபா டிப்புறத்துச்
சேரச் செல்வார்
அங்கையார் அழல் என்னும் திருப்பதிகம்
எடுத்தருளி அணைந்த போழ்தில்
மங்கைவாழ் பாகத்தார் மழபாடி தலையினால்
வணங்கு வார்கள்
பொங்குமா தவமுடையார் எனத்தொழுது
போற்றிசைத்தே கோயில் புக்கார்.

2205 மழபாடி வயிரமணித் தூண் அமர்ந்து
மகிழ்கோயில் வலங்கொண் டெய்திச்
செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந்
தொழுந்து நின்று
தொழுதாடிப் பாடிநறுஞ் சொன்மாலைத்
தொடையணிந்து துதித்துப் போந்தே
ஒழியாத நேசமுடன் உடையவரைக் கும்பிட்டங்
குறைந்தார் சின்னாள்.

2206 அதன்மருங்கு கடந்தருளால் திருக்கானூர் பணிந்
தேத்தி ஆன்ற சைவ
முதன்முறையோர் அன்பிலா லந்துறையின்
முன்னவனைத் தொழுது போற்றிப்
பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார்
பயில்பதியும் பணிந்து பாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாந்
துறைஅணைந்தார் மணிநூல் மார்பர்.

Koviloor Digital Library

2204. சிவந்த கையில் மான் கன்றை ஏந்திய சிவ பெருமானின் திருமழபாடியின் வெளிப் பக்கத்தைச் சேரச் செல்பவரான சம்பந்தர் 'அங்கையாரழல்' எனத்தொடங்கும் திருப்பதிகத்தைத் தொடங்கி நெருங்கியபோது, உமை யம்மையார் வாழ்கின்ற ஒரு பாகத்தையடைய இறைவர் வீற்றிருக்கும் திருமழபாடியை வணங்குபவர்கள் மேன்மேலும் பெருகும் தவம் பெற்றவர்கள் எனப் பாடித் துதித்துத் தொழுதவண்ணமே கோயிலுள் புகுந்தார்.

(இங்குப் பாடியது 'அங்கை யாரழல்' என்ற தொடக்கம் உடைய பதிகம்.)

2205. அத்திருமழபாடி என்ற தலத்தில் அழகிய வயிரத்தூண் நாதர் விரும்பி மகிழ்ந்தருளும் கோயிலை வலமாய்ச் சுற்றி வந்து சேர்ந்து, செழுமையான மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிக் கீழே விழுந்து வணங்கி எழுந்து நின்று, தொழுதும் ஆடியும் பாடியும் நல்ல சொல்மாலைத் தொடை பாடித் துதித்தும் வெளியே வந்து இடையறாத அன்புடன் தம் தலைவரான இறைவரைக் கும்பிட்டு அந்தத் தலத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார் ஞானசம்பந்தர்.

(இங்குப் பாடியது 'களையும் வல்வினை' என்ற தொடக்கம் கொண்ட பதிகம்)

2206. அந்த மழபாடியின் பக்கத்தைக் கடந்து போய்த் திருக்கானூரைப் பணிந்து போற்றி, நெருங்கி நிறைந்த ஆதிசைவரின் திரு 'அன்பிலாலந்துறையில்' இறைவரை வணங்கிப் போற்றிப் பதங்கள் நிறைந்த செந் தமிழ்ப் பதிகத்தைப் பாடிச் சிவபெருமானின் பல பதிகளை யும் வணங்கிப் பாடல் பாடி, மதமான அருவி பாயும் மலை போன்ற யானையை உரித்த இறைவரின் 'வடகரை மாந் துறையை' அழகிய நூல் அணிந்த மார்பையுடைய சம்பந்தர் போய் அடைந்தார்.

(திருக்கானூரில் 'வானார் சோதி' எனத் தொடங்கும் பதிகம் பாடினார். திரு அன்பிலாலந்துறையில் 'கணை நீ டெரிமா' என்ற தொடக்கம் கொண்ட பதிகம் பாடினார்.)

Koviloor Digital Library

2207 சென்றுதிரு மாந்துறையில்திகழ்ந் துறையுந்
துறைநதி வாழ்சென்னி யார்தம்
முன்றில்பணிந் தணிநெடுமா ளிகைவலஞ்செய்
துள்புக்கு முன்பு தாழ்ந்து
துன்றுகதிர்ப் பரிதிமதி மருத்துக்கள் தொழுதுவழி
பாடு செய்ய
நின்றநிலை சிறப்பித்து நிறை தமிழின்
சொன்மாலை நிகழப் பாடி.

2208 அங்கணகன் றம்மருங்கில் அங்கணர்தம் பதிபிறவும்
அணைந்து போற்றிச்
செங்கமலப் பொதிஅவிழச் சேல்பாயும்
வயல்மதுவால் சேறு மாறாப்
பொங்கொலிநீர் மழநாட்டுப் பொன்னிவட
கரைமிசைப் போய்ப்புகலி வேந்தர்
நங்கள் பிரான் திருப்பாச்சி லாச்சிரா மம்பணிய
நண்ணும் போதில்.

2209 அந்நகரில் கொல்லிமழ வன்பயந்த அரும்பெறல்ஆர்
அமுத மென்சொற்
கன்னிஇள மடப்பிணையாம் காமருகோ
மளக்கொழுந்தின் கதிர்செய்மேனி
மன்னுபெரும் பிணியாகும் முயலகன்வந்
தணைவுறமெய் வருத்தம் எய்தித்
தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்தத்
தானும்மனந் தளர்வு கொள்வான்.

2210 மற்றுவே றொருபரிசால் தவிராமை மறிவளருங்
கையார் பாதம்
பற்றியே வருங்குலத்துப் பான்மையினான் ஆதலி
னால் பரிவு தீரப்
பொற்றொடியைக் கொடுவந்து போர்க் கோலச்
சேவகராய்ப் புரங்கள் மூன்றும்
செற்றவர்தங் கோயிலினுட் கொடுபுகுந்து
திருமுன்பே இட்டு வைத்தான்.

Koviloor Digital Library

2207. போய்த் திருமாந்துறையில் விளங்க வீற்றிருக்கின்ற, கங்கையாறு தங்கப் பெற்று வாழ்வு அடைந்த சடையையுடைய இறைவரின் திருமுற்றத்தைப் (பிள்ளையார்) வணங்கி, அழகிய நீண்ட திருமாளிகையை வலமாய் வந்து, உள்ளே சென்று, திரு முன்பு விழுந்து பணிந்து, நெருக்கமான கதிர்களையுடைய ஞாயிறும், சந்திரனும், தேவ மருத்துவர்களும் தொழுது வழிபட இறைவர் எழுந்தருளிய நிலையைப் பாராட்டி, நிறைவான செந்தமிழின் சொல்மாலையை நிலவி நிற்கும் படியாகப் பாடி,

(திருமாந்துறையில் பாடியது 'செம்பொனார் தரு' என்ற தொடக்கம் உடைய பதிகம்)

2208. அந்த இடத்தினின்றும் நீங்கிப் போய்ப் பக்கத்தில் உள்ள சிவபெருமானின் மற்றத் தலங்களையும் வணங்கினார்; செந்தாமரை மலர்களின் கட்டு அவிழச் சேல் மீன் பாயத் தேன் பொழிவதால் சேறு உலராத வயல்களை யுடைய, பொங்கும் ஒலி நீரையுடைய மழ நாட்டிலே, காவிரியின் வடகரை வழியாகப் போய்ச் சீகாழித் தலைவர் நம் இறைவரின் திருப்பாச்சிலாச் சிராமத்தைத் தொழுவதற்குச் சேரும் பொழுதில்,

2209. அந்நகரத்தில் கொல்லி மழவன் தான் பெற்றெடுத்த அரிய அமுதம் போன்ற மென்மையான சொல்லையுடைய கன்னியான இளமான் போன்ற அழகான இளங்கொழுந்தினுடைய ஒளி பொருந்திய பெரு மேனியிலே முயலகன் வந்து சார்ந்ததால் உடல் வருந்தித் தனது உறவினர் வருந்தத் தானும் உள்ளத் தளர்ச்சி அடைந்தவனாய்,

(முயலகன் — ஒரு பெரு நோய். அது வரப் பெற்றவர் உணர் வற்றும் வலிப்பு வரப் பெற்றும் வருந்துவர்).

2210. அதை வேறொரு வழியால் நீக்க மாட்டாமையால் மான் கன்று உடைய கையைக் கொண்ட சிவபெருமானின் திருவடி பற்றியே வழி வரும் மரபில் வந்த தன்மை கொண்டவனாதலால், துன்பம் நீங்கும் பொருட்டுப் பொன் வளையல் அணிந்த அந்தப் பெண்ணை அழைத்து வந்து, போர்க் கோலம் கொண்ட வீரராய்த் திரிபுரங்களையும் எரித்த இறைவரின் திருக் கோயிலில், அவரது திருமுன்பு இட்டு வைத்தான்.

Koviloor Digital Library

2211 அவ்வளவில் ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி அணுகஎய்தச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் திருஞான சம்பந்தன் வந்தான் என்றே
எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளத் தெழுந்த ஓசை
செவ்வுயிர்க்கும் அவன் கேளா மெல்லியலை விட்டெதிரே விரைந்து செல்வான்.

2212 மாநகரம் அலங்கரிமின் மகரதோ ரணம்நாட்டும் மணிநீர்வாசத்
தூநறும்பூ ரணகும்பம் சோதிமணிவிளக்கினொடு தூபம் ஏந்தும்
புனைஅணி பிறவுமெலாம் எழில்பெருக இயற்றும் எனஏவித் தானும்
வானவர்நா யகர்மகனார் வருமுன்பு தொழுதணைந்தான் மழவர் கோமான்.

2213 பிள்ளையார் எழுந்தருளப் பெற்றேன்என் றானந்தம்பெருகு காதல்
வெள்ளநீர் கண்பொழியத் திருமுத்தின் சிவிகையின்முன் வீழ்ந்த போது
வள்ளலார்எழுக எனமலர்வித்த திருவாக்கால் மலர்க்கை சென்னி
கொள்ளமகிழ்ந் துடன்சென்று குலப்பதியின் மணிவீதி கொண்டு புக்கான்.

Koviloor Digital Library

2211. அப்போது ஆளுடைய பிள்ளையார் அந்தத் தலத்துக்கு எழுந்தருளி அதன் அருகில் சேர்ந்தார். சேர, "செம்மை தரும் மெய்ஞ்ஞானத்தை உணர்ந்த திருஞான சம்பந்தர் வந்தார்" என எல்லா வுலகங்களும் துன்பம் நீங்குமாறு ஒலிக்கின்ற திருக்காளம் முதலான வாத்தியங் களினின்று எழுந்த ஓசையினைத் துன்பத்தால் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அந்தக் கொல்லி மழவன் கேட்டான். கேட்டு, மென்மையான இயலையுடைய அந்தப் பெண்ணை அங்கே விட்டுப் பிள்ளையாரை எதிர் கொண்டு விரைந்து போவானாய்,

(கொல்லி மழவன் — கொல்லி நாட்டுச் சிற்றரசன்)

2212. "பெரிய இந்த நகரத்தை அலங்கரியுங்கள்! மகரத் தோரணங்களைக் கட்டுங்கள்! மணிகளை இட்ட மணநீர் நிறைந்த நிறை குடங்களையும் ஒளியுடைய அழகிய விளக்குகளுடன் தூபங்களையும் ஏந்துங்கள்! இன்னும் மற்ற அணிகளையெல்லாம் பெருகச் செய்யுங்கள்!" என ஆணையிட்டு, அக்கொல்லி மழவன் தானும் தேவ தேவரான சிவபெருமானின் மகனார் திருமுன்பு தொழுதபடியே சேர்ந்தான்.

(உமையம்மையாரின் பால் உண்ட காரணத்தால் ஞான சம்பந்தர் சிவபெருமானின் 'மகன்' எனப்பட்டார்.)

2213. அந்தக் கொல்லி மழவன் "பிள்ளையார் எழுந் தருளும் பேறு பெற்றேன்!" என எண்ணி, மேலும் மேலும் பெருகும் அன்பினால் வெள்ளமாய்க் கண்கள் நீரைப் பொழிய முத்துச்சிவிகையின் முன்பு வீழ்ந்தான். அப்போது வள்ளலாரான பிள்ளையார் 'எழுக' என்ற திருவாக்கால் மலர்வித்தமையால், அவன் மலர்க்கைகளைத் தலைமேல் குவித்துக் கொண்டு எழுந்து அவருடனே போய்ப் பழமை யான அந்தப் பதியின் திருவீதி வழியே அழைத்துக் கொண்டு வந்து நகரத்துக்குள் புகுந்தான்.

Koviloor Digital Library

2214 மங்கலதூ ரியம்முழங்கு மணிவீதி கடந்துமதிச்
சடையார் கோயில்
பொங்குசுடர்க் கோபுரத்துக் கணித்தாசப்
புனைமுத்தின் சிவிகை நின்றும்
அங்கண்இழிந் தருளுமுறை இழிந்தருளி அணிவாயில்
பணிந்து புக்குத்
தங்கள்பிரான் கோயில்வலங் கொண்டுதிரு
முன்வணங்கச் சாருங்காலை.

2215 கன்னிஇளங் கொடியுணர்வு கழிந்துநிலன் சேர்ந்த
தனைக் கண்டு நோக்கி
என்இது என் றருள்செய்ய மழவன்தான்
எதிர்இறைஞ்சி அடியேன் பெற்ற
பொன் இவளை முயலகனாம் பொருவில்அருள்
பிணிபொருந்தப் புனிதர் கோயில்
முன் அணையக் கொணர்வித்தேன் இது புகுந்த படி
என்று மொழிந்து நின்றான்.

2216 அணிகிளர் தாரவன் சொன்ன மாற்றம்
அருளொடுங் கேட்டந் நிலையின் நின்றே
பணிவளர் செஞ்சடைப் பாசின் மேயபரம்
பொருளாயினா ரைப்பணிந்து
மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயல்
செய்வ தோஇவர் மாண்ப தென்று
தணிவில் பிணிதவிர்க் கும்பதிகத் தண்டமிழ்
பாடினார் சண்பைநாதர்.

2217 பன்னு தமிழ்மறை யாப்பதிகம் பாடித் திருக்கடைக்
காப்புச்சாத்தி
மன்னுங் கவுணியர் போற்றி நிற்க மழவன் பயந்த
மழலைமென் சொல்
கன்னி யுறுபிணி விட்டுநீங்கக் கதுபெனப் பார்மிசை
நின்றெழுந்து
பொன்னின் கொடி என ஒல்கிவந்து பொருவலித்
தாதை புடையணைந்தாள்

Koviloor Digital Library

2214. மங்கல ஒலியான வாத்தியங்கள் ஒலிக்கின்ற அந்தத் தெருவினைக் கடந்து சென்று, பிறைச்சந்திரனை அணிந்த சடையையுடைய இறைவரின் திருக் கோயிலின் பொங்கும் ஒளிவீசும் கோபுரத்துக்கு அருகில் அழகிய முத்துச் சிவிகையினின்றும் இறங்கிப் பிள்ளையார், அழகிய வாயிலை வணங்கி உள்ளே புகுந்து தம் இறைவரின் கோயிலை வலம் வந்து திருமுன்பு வணங்கச் சேரும்போது,

2215. (பிள்ளையார்) கன்னியான இளங்கொடி போன்ற ஒரு பெண் உணர்வின்றி நிலத்தில் கிடப்பதைப் பார்த்து 'இது என்ன?' எனக் கேட்டார். அதற்குக் கொல்லி மழவன் அவர் எதிரே வணங்கி '''அடியேன் பெற்ற பொன் போன்ற இந்தப் பெண்ணை ஒப்பில்லாத தீர்ப்பதற்கு அரிய 'முயலகன்' என்ற நோய் பற்றியதால் இறைவரின் திருக் கோயிலின் முன் சேருமாறு கொணர்ந்து இப்படிக் கிடத்தி யுள்ளேன்! இதுவே நிகழ்ந்தது!'' எனக் கூறி நின்றான்.

2216. சீகாழிப் பதித் தலைவரான பிள்ளையார் அக் கொல்லி மழவன் உரைத்ததை அருளுடன் கேட்டு, கேட்ட அந்நிலையிலே நின்றபடி பாம்பு வளர்வதற்கு இடமான சிவந்த சடையையுடைய திருப்பாச்சிலில் பொருந்தியுள்ள பரம் பொருளான இறைவரை வணங்கி, 'மணிவளர் கண்டரோ, மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பு' எனத் தொடங்கித் தீர்ப்பதற்கு அரிய அந் நோயைத் தீர்க்கும் திருப்பதிகமான குளிர்ந்த தமிழைப் பாடியருளினார்.

2217. புகழ்ந்து பேசப்படுகின்ற தமிழ் மறையான திருப்பதிகத்தைப் பாடி முடித்துத் திருக்கடைக் காப்பும் பாடிமுடித்து, நிலைபெற்ற கவுணியர் தலைவரான சம்பந்தர் துதித்து நின்றார். அப்போது மழவன் பெற்ற மழலையான மென்மையான சொல்லையுடைய அந்தக் கன்னி தன்னைப் பற்றிய நோய் நீங்கியதால், மிக விரைவாக நிலத்தினின்றும் எழுந்து பொற்கொடிபோல் ஒதுங்கி நடந்து வந்து, போர் வன்மை கொண்ட தந்தையின் பக்கத்தில் நின்றாள்.

Koviloor Digital Library

2218 வன்பிணி நீங்குமகளைக் கண்ட மழவன்பெருகு
மகிழ்ச்சி பொங்கத்
தன்தனிப் பாவையுந் தானுங் கூடச் சண்பையர்
காவலர் தாளில்வீழ
நின்ற அருமறைப் பிள்ளையாரும் நீரணிவேணி
நிமலர்பாதம்
ஒன்றிய சிந்தையுடன்ப ணிந்தார் உம்பர்
பிரான்திருத் தொண்டர் ஆர்த்தார்.

2219 நீடு திருவாச்சி ராமம் மன்னும் நேரிழை பாகத்தர்
தாள்வணங்கிக்
கூடும்அருளுடன் அங்கமர்ந்து கும்பிடுங்கொள்கை
மேற் கொண்டுபோந்தே
ஆடல் பயின்றார்பதி பிறவும் அணைந்து பணிந்தடி
போற்றி ஏகிச்
சேடர்கள் வாழுந் திருப்பைஞ் ஞீலிச்
சிவபெருமானை இறைஞ்சச் சென்றார்.

2220 பண்பயில் வண்டினம் பாடுஞ் சோலைப் பைஞ்ஞீலி
வாணர் கழல்பணிந்து
மண்பர வுந்தமிழ் மாலைபாடி வைகிவணங்கி
மகிழ்ந்து போந்து
திண்பெருந் தெய்வக் கயிலை யில்வாழ் சிவனார்
பதிபல சென்றிறைஞ்சிச்
சண்பை வளந்தரு நாடர் வந்து தடந்திரு
ஈங்கோய் மலையைச் சார்ந்தார்.

Koviloor Digital Library

2218. வன்மையுடைய முயலகன் என்ற நோய் நீங்கிய மகளைக் கண்ட மழவன் பெருகும் மகிழ்ச்சியானது மிக, தன்னுடைய ஒப்பில்லாத மகளும் தானும் சீகாழித் தலைவரான பிள்ளையாரின் காலில் விழுந்து வணங்கினர். அங்கு நின்ற பிள்ளையாரும் கங்கை நீரைத் தறித்த சடையுடைய குற்றமற்ற இறைவரின் திருவடிகளை ஒன்று பட்ட உள்ளத்துடன் பணிந்தார்; தேவதேவரான இறைவரின் அடியார்கள் ஆரவாரம் செய்தனர்.

(பிள்ளையார் பாடிய பதிகம், ''துணிவளர்'' எனத் தொடங்குவதாகும். பாச்சில் — ஆச்சிராமம் — பாச்சில் — ஊர்ப்பெயர். ஆச்சிராமம் — கோயில்.)

2219. நீடும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் நிலையாய் எழுந்தருளிய உமையம்மையை ஒரு பாகத்தில் உடைய இறைவரின் திருவடிகளை வணங்கிக் கூடும் அருளுடனே அங்கு விரும்பித் தங்கியிருந்தும், மேலும் வணங்கும் உள்ளக் குறிப்பினை மேற்கொண்டு சென்று, ஆடலில் மகிழ்வுடைய இறைவரின் தலங்கள் பிறவற்றையும் சேர்ந்து வணங்கித் திருவடிகளைத் துதித்து, மேலும் போய், அறிவால் சிறந்தவர் உறைகின்ற 'திருப்பைஞ்ஞீலிச்' சிவபெருமானை வணங்குவதற்காகச் சென்றார்.

2220. பண்களைப் பயிலும் வண்டினங்கள் பாடுவதற்கு இடமான சோலைகள் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலியின் இறைவரது திருவடிகளை வணங்கி, உலகத்தவர் துதிக்கும் தமிழ் மாலையான திருப்பதிகத்தைப் பாடி அந்தத் தலத்தில் தங்கி வணங்கி மகிழ்ந்து, மேலே சென்று, திண்ணிய பெரிய தெய்வத் தன்மை வாய்ந்த திருக்கயிலாய மலையில் வாழ்கின்ற சிவபெருமானின் பதிகள் பலவற்றையும் போய் வணங்கி, வளம் தருகின்ற சீகாழிப் பதிக்குத் தலைவரான பிள்ளையார் வந்து 'திருவீங்கோய்' மலையைச் சார்ந்தார்.

Koviloor Digital Library

2221 செங்கட் குறவரைத் தேவர் போற்றும் திகழ்திரு
ஈங்கோய் மலையில் மேவும்
கங்கைச் சடையார் கழல்பணிந்து கலந்த
இசைப்பதி கம்பு னைந்து
பொங்கர்ப் பொழில்சூழ் மலையும் மற்றும்
புறத்துள்ள தானங்கள் ளெல்லாம் போற்றிக்
கொங்கிற் குடபுலஞ் சென்ற ணைந்தார்கோதில்
மெய்ஞ் ஞானக் கொழுந்தனையார்.

2222 அண்டர்பிரான் ஆலயங்கள் அம்பருங்குள்
ளனபணிந்து
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங்
கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்கள்
தொழுதணைந்தார்
கொண்டல்பயில் நெடும்புரிசைக் கொடிமாடச்
செங்குன்றூர்.

2223 அந்நகரில் வாழ்வாரும் அடியவரும் மனமகிழ்ந்து
பன்னெடுந்தோ ரணமுதலாப் பயில்அணிகள்
பலஅமைத்து
முன்னுறவந் ததிர்கொண்டு பணிந்தேத்தி
மொய்கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார் சினவிடையார்
செழுங்கோயில்.

2224 தம்பெருமான் கோயிலினுள் எழுந்தருளித்
தமிழ்விரகர்
நம்பரவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க
இம்பரும்மே உம் பரும்மேத்த இன்னிசைவண்
டமிழ்பாடிக்
கும்பிடும்ஆ தரவுடன்அக் கோநகரில்
இனிதமர்ந்தார்.

Koviloor Digital Library

2221. ஆளுடைய பிள்ளையார், சிவந்த கண்களை யுடைய குறவரைத் தேவர்கள் வந்து வணங்குவதற்கு இடமான 'திருவீங்கோய்' மலையில் வீற்றிருக்கும் கங்கையைச் சடையில் கொண்ட சிவபெருமானைப் பணிந்தார்! இசையுடன் பொருந்திய திருப்பதிகத்தைப் பாடி மிக்க சோலை சூழ்ந்த மலையும் மற்றும் அயலில் உள்ள இடங்கள் எல்லாவற்றையும் வணங்கினார்; கொங்கு நாட்டின் மேல்பகுதியில், குற்றம் இல்லாத மெய்ஞ்ஞானக் கொழுந்தைப் போன்ற ஆளுடைய பிள்ளையார் போய்ச் சேர்ந்தார்.

(இங்குப் பாடியது 'வானத்துயர் தண்'' என்ற தொடக்கம் கொண்ட பதிகம்)

2222. தேவர்களின் தலைவரான சிவபெருமான் திருக்கோயில்கள் அந்தப் பக்கங்களில் உள்ளவற்றையெல்லாம் வணங்கிச் சென்று, தெளிவான அலைகளையுடைய நீர் கொண்ட காவிரியின தெற்குக் கரையில் உள்ள கொங்கு நாட்டில் வண்டுகள் அலைவதற்கு இடமான நீரையுடைய சடையார் மகிழ்ந்து வீற்றிருக்கும் தலங்களை வணங்கி, மேகம் வந்து பொருந்தும் நீண்ட மதிலையுடைய திருக்கொடி மாடச் செங்குன்றினை பிள்ளையார் போய் அடைந்தார்.

(செங்குன்று — திருச் செங்கோடு)

2223. அந்த நகரத்தில் வாழ்பவர்களும் சிவனடியார்களும் மகிழ்ந்து பல நீண்ட தோரணங்கள் முதலானவற்றை அலங்கரித்து, முன்னால் வந்து எதிர் கொண்டு வணங்கி ஏத்தி, கூடிய கைகள் தலைமீது பொருந்த ஏற்றி, சினமுடைய காளையூர்தியினரான இறைவர் எழுந்தருளிய கோயிலில் பிள்ளையாரை அழைத்துக் கொண்டு போயினர்.

2224. தமிழில் வல்ல பிள்ளையார், தம் இறைவர் கோயிலுள், அவரது திருமுன்பு தாழ்ந்து வணங்கி நன்மை பெறும்படி இம்மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் போற்ற இனிய இசையுடைய வல்லமையான தமிழ்ப் பதிகத்தைப் பாடினார். மேலும் கும்பிட வேண்டும் என்ற ஆசையால் அந்த நகரத்தில் இனிதாய்த் தங்கியிருந்தார்.

(இங்குப் பாடிய பதிகம், 'வெந்த வெண்ணீறணிந்து' என்ற தொடக்கம் கொண்டதாகும்.

Koviloor Digital Library

2225 அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார்
அமர்கோயில்
எப்பாலுஞ் சென்றேத்தித் திருநணா வினை
இறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண்
டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து
வைகினார்.

2226 ஆங்குடைய பிள்ளையார் அமர்ந்துறையும்
நாளின்கண்
தூங்குதுளி முகிற்குலங்கள் சுரந்துபெயல்
ஒழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம் வெயில்பெறா
விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும் பனிப்பருவம்
எய்தியதால்.

2227 அளிக்குலங்கள் சுளித்தகல அரவிந்த முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியற்கோத்த
பான்மைஎனத்
துளித்தலைமெல் அறுகுபனி தொடுத்தசையச்
சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய
குன்றுகளும்.

2228 மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும்
பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக்
குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரநிமிர்க்க மாட்டான் போல்
வ்சும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவும் அடங்குவதும் ஆகுமால்.

Koviloor Digital Library

2225. பிள்ளையார், அந்தப் பகுதியில் மேற்குத் திக்கில், கங்கையைத் தரித்த இறைவர் விரும்பி எழுந்தருளிய கோயில்களை எல்லா இடங்களிலும் போய் வணங்கி, 'திருநணா' என்ற பவாநித் திருத்தலத்தை வணங்கிப் பாம்பை அணிந்த இறைவரை வணங்கி, முன்னே தாம் தங்குதற்கு விரும்பிக் கொண்டுள்ள தலமான கொடி மாடச் செங்குன்றூரில் தங்கியிருந்தார்.

(இங்குப் பாடிய பதிகம் 'பந்தார் விரன் மடவாள்' என்னும் தொடக்கம் உடையதாகும். திருநணா — பவாநி.)

2226. அந்தத் தலத்தில் ஆளுடைய பிள்ளையார் விரும்பித் தங்கியிருந்த நாட்களில், பெய்யும் துளிகளை யுடைய மேகக்கூட்டங்கள் மழை பொய்த்த போது, பெருகிய ஒலியுடைய நீரால் சூழப்பட்ட உலகத்தில் எல்லாரும் வெயில் பெறாததனால் அந்த விருப்பம் மேலிடப் பக்கத்தில் உள்ள மலைகளும் குளிர்ச்சி அடையத்தக்க முன் பனிப் பருவம் வந்து சேர்ந்தது.

2227. வண்டின் கூட்டங்கள் வெறுப்புக் கொண்டு நீங்கிச் செல்ல, தாமரைகள் முகம் கருக, பளிங்கு மணியை மரகத மணியில் கோத்தது போல், மெல்லிய அறுகம் புல்லின் நுனியில் பனித் துளிகளைக் கோத்து அசைய, சூழ்ந்த பனியினால் நேர்ந்த குளிருக்கு ஆற்றாமல் உடைந்து குன்றுகளும் வெண்மையான போர்வை போர்த்ததுபோல் விளங்கின.

2228. மிக்க பனி செறிந்த குளிரையுடைய வாடைக் காற்று முழுதும் வீசும் காலமானதால், பறிக்கப்படும் தளிர்கள் தழைத்த மெல்லிய சோலைகளும் குளிர்ச்சி கொண்டு அலைய, குளிரால் ஒருபக்கம் ஒதுங்கிக் கொண்டு சுடும் கதிரையுடைய சூரியனும் தன் கதிர்களை நிமிர்ந்து விரிக்க மாட்டாதவனைப் போல் சிறிது வெயில் விரிப்பதும் சிறிது ஒடுக்குவதுமான நிலை உள்ளதாம்.

Koviloor Digital Library

2229 நீடியஅப் பதிகளெலாம் நிறைமாடத் திறைகள்
தொறும்
பேடையுடன் பவளக்கால் புறவொடுங்கப்
பித்திகையின்
தோடலர்மென் குழல்மடவார் துணைக்கலச
வெம்முலையுள்
ஆடவர்தம் பணைத்தோளும் மணிமார்பும்
அடங்குவன.

2230 அரிசனமும் குங்குமமும் அரைத்தமைப்பார்
அயலெல்லாம்
பரியஅகிற் குறைபிளந்து புகைப்பார்கள்
பாங்கெல்லாம்
எரியுமிழ்பேழ் வாய்த்தோணி இரும்பீர்ப்பார்
இடையெல்லாம்
விரிமலர்மென் புறவணிந்த மீப்புலத்து
வைப்பெல்லாம்.

2231 அந்நாளிற் கொடிமாடச் செங்குன்றூர்
அமர்ந்திருந்த
மெய்ஞ்ஞானப் பிள்ளையா ருடன்மேவும்
பரிசனங்கள்
பன்னாளும் அந்நாட்டிற் பயின்றதனால்
பனித்தகுளிர்
முன்னான பிணிவந்து மூள்வதுபோல் முடுகுதலும்.

2232 அந்நிலைமை ஆளுடைய பிள்ளையார்க்
கவர்களெலாம்
முன்னறிவித் திறைஞ்சுதலும் முதல்வனார்
அருள்தொழுதே
இந்நிலத்தின் இயல்பெனினும் நமக்கெய்தப்பெறா
என்று
சென்னிமதி அணிந்தாரைத் திருப்பதிகம்
பாடுவார்.

Koviloor Digital Library

2229. பழைமையால் நீடிய அந்தத் தலங்களில் எங்கும் வரிசையாக உள்ள மாடங்களின் வீட்டு இறப்புகள் தோறும் தம் பெட்டைகளுடன் பவளம் போன்ற கால்களை யுடைய புறாக்கள ஒடுங்கியிருக்கும்; சிறு சண்பக மலரின் இதழ்கள் விரிவதற்கு இடமான மென்மையான கூந்தலை யுடைய தம் பெண்களின் இணைக் கலசம் போன்ற கொங்கைகளினுள் ஆடவர்களின் பருத்த தோள்களும் அழகிய மார்புகளும் அடங்குவனவாம்.

2230. விரியும் மென்மையான மலர்களையுடைய குறிஞ்சிப் புறவுகளில் எங்கும், பக்கங்களிலும் மஞ்சளும் குங்குமமும் சேர அரைத்து வைப்பர்; பக்க இடங்கள் எங்கும் பெரிய அகில் துண்டுகளைப் பிளந்து புகை எழுப்பு வர்; இடை இடங்களில் தீயை உமிழ்கின்ற பெரிய வாயை உடைய தோணி வடிவில் அமைந்த இரும்புச் சட்டியைக் குளிர் காய்வதன் பொருட்டுத் தம் அருகில் இழுத்துக் கொள்வர்.

2331. அந்நாட்களில் கொடிமாடச் செங்குன்றூர் என்ற தலத்தில் தங்கியிருந்த பிள்ளையாருடன் உள்ள பரிவாரங்கள் பல நாட்கள் அங்குத் தங்கியிருந்ததால், நடுக்கம் கொள்வதற்குக் காரணமான குளிர் முன்னே காணும் மலைச்சுரம் வந்து மேல் அடர்வதைப் போல் வருத்தவே.

(மலைச்சுரம் — மலேரியா.)

2232. அந்த நிலைமையை அந்தப் பரிவாரங்கள் எல்லாம் பிள்ளையாரின் திருமுன்பு போந்து அவரிடம் கூறி வேண்டிக் கொள்ளவும், இறைவரின் திருவருளைத் தொழுது, 'இந்த நாட்டின் இயல்பே இது; ஆயினும் இதன் கொடுமைகள் நமக்கு வந்து சேர மாட்டா' என்ற கருத் துடன், சென்னியில் சந்திரனை அணிந்த இறைவரைத் திருப்பதிகம் பாடுபவராய்.

Koviloor Digital Library

2233 அவ்வினைக் கிவ்வினை என்றெடுத்து ஐயர்
அமுதுசெய்த
வெவ்விடம் முன்தடுத் தெம்மிடர் நீக்கிய
வெற்றியினால்
எவ்விடத் தும்அடி யார்இடர் காப்பது கண்டம்
என்றே
செய்வினை தீண்டா திருநீலகண்டம்
எனச்செப்பினார்.

2234 ஆய குறிப்பினில் ஆணை நிகழ அருளிச்செய்து
தூய பதிசுத் திருக்கடைக் காப்புத் தொடுத்தணிய
மேயஅப் பொற்பதி வாழ்பவர்க்கேஅன்றி மேவும்
அந்நாள்
தீய பனிப்பிணி அந்நா டடங்கவுந் தீர்ந்ததன்றே.

2235 அப்பதி யின்கண் அமர்ந்து சிலநாளில் அங்ககன்று
துப்புறம் வேணியர் தானம் பலவுந் தொழுதருளி
முப்புரி நூலுடன் தோலணி மார்பர்
முனிவரொடும்
செப்பருஞ் சீர்த்திருப் பாண்டிக் கொடுமுடி
சென்றணைந்தார்.

2236 பருவ மறாப்பொன்னி பாண்டிக் கொடுமுடி
யார்தப்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரிசுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல்
விடையவர்தம்
பொருவில்தா னம்பல போற்றிக் குணதிசைச்
போதுகின்றார்.

Koviloor Digital Library

2233. 'அவ்வினைக்கு இவ்வினை' என்று தொடங்கி, 'இறைவர் உண்ட கொடிய நஞ்சைத் தடுத்து எம் துன்பங்களையெல்லாம் வாராமல் காத்தது அவரது திருநீல கண்டமே ஆகும்' என்ற கருத்தினை வைத்துச் 'செய்வினை எம்மைத் தீண்டப் பெறா!' என்று திருநீல கண்டத்திடம் ஆணை என அருளினார்.

(இங்குப் பாடியது 'அவ்வினைக் கிவ்வினை' என்னும் தொடக்கம் கொண்ட பதிகமாகும்.)

2234. அத்தகைய அருட் குறிப்புடன் திரு ஆணை நிகழும்படி செய்து, தூய திருப்பதிகத்திற்குத் திருக்கலடைக் காப்பும் தொடுத்து அணிந்தருளவே, பொருந்திய அந்தத் தலத்தில் வாழ்பவர்க்கு மட்டுமின்றி அந்நாளில் அந்த நாடு முழுமையும், அப்போதே தூய பனிச்சுரமானது நீங்கியது,

2235. மான் தோலுடன் கூடிய முப்புரி நூல் அணிந்த மார்பையுடைய பிள்ளையார் அந்த நகரத்தில் விரும்பித் தங்கியிருந்து பின் சில நாட்களில் அங்கிருந்து நீங்கிச் சென்று, பவளம் போன்ற சிவந்த சடையையுடைய இறைவர் இடங்கள் பலவற்றையும் வணங்கி, சொல்வதற்கு அரிய சிறப்பையுடைய திருப்பாண்டிக் கொடு முடியை முனிவருடன் போய் அடைந்தார்.

2236. பருவம் தவறாத நீரையுடைய காவிரிக் கரையில் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடியில் இறைவர் திருவடிகளை வணங்கி வளம் உடைய தமிழ்ப் பதிகத்தைப் பாடிச் சாத்தி, ஒளி வீசும் மாடங்களையுடைய 'வெஞ்சமாக்கடல்' முதலாகச் சிவபெருமானின் ஒப்பற்ற இடங்கள் பலவற்றையும் வணங்கித் துதித்து, கிழக்குத் திக்கில் செல்பவராய்,

(இங்குப் பாடியது 'பெண்ணமர்' எனத் தொடங்கும் பதிகம்.)

Koviloor Digital Library

2237 செல்வக் கருவூர்த் திருவா னிலைக்கோயில்
சென்றிறைஞ்சி
நல்லிசை வண்டமிழ்ச் சொற்றொடை பாடிஅந்
நாடகன்று
மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கிவந்து
மல்குதிரைப்பொன்னித் தென்கரைத்
தானப்பலபணிவார்.

2238 பன்னெடுங் குன்றும் படர்பெருங் கானும்
பலபதியும்
அந்நிலைத் தானங்கள் ஆயின எல்லாம்
அமர்ந்திறைஞ்சி
மன்னு புகலியில் வைதிக வாய்மை மறையவனார்
பொன்னியல் வேணிப் புனிதர் பராய்த்துறை
யுட்புகுந்தார்.

2239 நீடும் பராய்த்துறை நெற்றித் தனிக்கண்ணர்
கோயில் நண்ணிக்
கூடுங் கருத்தொடு கும்பிட்டுக் கோதில் தமிழ்ச்
சொன் மாலை
பாடுங் கவுணியர் கண்பனி மாரி பரந்திழியச்
சூடுங் கரதலத் தஞ்சலி கோலித் தொழுதுநின்றார்.

2240 தொழுது புறம்பணைந் தங்குநின் றேகிச்
சுரர்பணிவுற்று
எழுதிரு வாலந் துறைதிருச் செந்துறை யேமுதலா
வழுவில்பல் கோயில் சென்று வணங்கி மகிழ்ந்தணை
வார்
செழுமலர்ச் சோலைத் திருக்கற் குடிமலை
சேரவந்தார்.

Koviloor Digital Library

2237. செல்வம் பொருந்திய கருவூரில் 'திருவானிலை' என்ற கோயிலில் சென்று வணங்கி, நல்ல இசையுடன் கூடிய வளமான தமிழ்ச் சொல் தொடையான திருப்பதிகத்தைப் பாடி, கொங்கு நாடான அதைவிட்டு அகன்று, பொருந்திய மாணிக்க மலை என்ற 'திருவாட் போக்கியினை' முதலில் வணங்கி, மேலே சென்று, பெருகும் அலைகளையுடைய காவிரியின் தென்கரைப் பதிகள் பலவற்றையும் வணங்குபவராய்,

(திருக்கருவூர்த் திருவானிலையில் பாடியது 'தொண்டெலாமலர்' எனத் தொடங்கும் பதிகமாகும்.)

2238. பல பெரிய குன்றுகளிலும் பரந்த பெரிய காடுகளிலும் பல பதிகளிலும் அங்கங்கும் இறைவர் நிலையாய் வீற்றிருக்கும் தானங்களான கோயில்களை எல்லாம் விருப்புடன் சென்று வணங்கி, நிலை பெற்ற சீகாழியில் தோன்றிய வேதவுண்மையை நிலை நாட்டும் மறையவரான பிள்ளையார், பொன் போன்ற சடையையுடைய தூயவரான சிவபெருமான் வீற்றிருக்கும் 'திருப்பராய்த்துறை' என்ற தலத்துள் புகுந்தார்.

2239. நீடும் திருப்பராய்த் துறை என்ற தலத்தில் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய இறைவரின் திருக்கோயிலை அடைந்து, ஒன்று பட்ட உள்ளத்துடன் வணங்கிக் குற்றம் இல்லாத தமிழ் மாலையைப் பாடுகின்ற கவுணியக் குலத்தலைவரான பிள்ளையார், கண்களினின்றும் நீர்மழை சொரியக் கைகளைத் தலை மீது அஞ்சலியாய்க் கூப்பித் தொழுது நின்றார்.

(திருப்பராய்த் துறைப்பதிகம் 'நீறு சேர்வதொர்' என்னும் தொடக்கம் கொண்டது.)

2240. வணங்கி வெளியே வந்து, அத்தலத்தினின்றும் நீங்கித் தேவர்கள் வணங்கி வந்து எழுகின்ற 'திருவாலந்துறை' முதலான குற்றம் அற்ற பல கோயில்களையும் வணங்கிமகிழ்வுடன் அணைபவரான சம்பந்தர், செழுமையுடையமலர்ச் சோலைகளையுடைய 'திருக்கற்குடி மலை'யைச்சேரச் சென்றார்.

Koviloor Digital Library

2241 சுற்குடி மாமலை மேலெழுந்த கனகக்
கொழுந்தினைக் கால் வளையப்
பொற்றிரள் மேருச் சிலைவளைத்த போர் விடை
யாளியைப் போற்றிசைத்து
நற்றமிழ் மாலை புனைந்தருளி ஞானசம் பந்தர்
புலன்கள் ஐந்தும்
செற்றவர் மூக்கீச் சரம்பணிந்து திருச்சிராப் பள்ளிச்
சிலம்பணைந்தார்.

2242 செம்மணி வாரி அருவி தூங்கும் சிராப்பள்ளி மேய
செழுஞ்சுடரைக்
கைம்மலை ஈருரி போர்வைசாத்துங் கண்ணுத
லாரைக் கழல்பணிந்து
மெய்ம்மகிழ் வெய்தி உளங் குளிர விளங்கிய
சொற்றமிழ் மாலைவேய்ந்து
மைம்மலர் கண்டர்தம் ஆனைக்காவை வணங்கும்
விருப்பொடு வந்தணைந்தார்.

2243 விண்ணவர் போற்றிசெய் ஆனைக்காவில் வெண்ணா
வல் மேவிய மெய்ப்பொருளை
நண்ணி இறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து நாற்கோட்டு
நாகம் பணிந்ததுவும்
அண்ணல் கோச்செங்கண் அரசன் செய்த அடிமையும்
அஞ்சொற் றொடையில் வைத்துப்
பண்ணுறு செந்தமிழ் மாலை பாடிப் பரவிநின்
றேத்தினர் பான்மையினால்.

Koviloor Digital Library

2241. பெரிய 'திருக்கற்குடி' மலையின் மீது வீற்றிருக்கும் பொற்கொழுந்தைப் போன்ற பொன் மேரு மலையை வளைத்த காளையூர்தியுடையவரைத் துதித்து, நல்ல தமிழ் மாலை சூட்டி, சம்பந்தர், ஐந்து புலன்களையும் அழித்தவரின் 'திருமூக்கீச் சரத்தினைப்' பணிந்து போய்த் 'திருச்சிராப்பள்ளி' மலையை அடைந்தார்.

(மூக்கீச்சரம் — உறையூர். திருக்கற்குடிப் பதிகம், 'வடந்திகழ் மென் முலை' என்னும் தொடக்கம் கொண்டது. திருமூக்கீச்சரப் பதிகம் 'சாந்தம் வெண்' என்ற தொடக்கம் கொண்டது.)

2242. செந்நிறமான மணிகளை வாரிக் கொண்டு அருவி பாய்வதற்கு இடமான 'திருச்சிராப்பள்ளி' மலையின் மேல் வீற்றிருக்கும் யானையின் தோலை உரித்து அதைப் போர்த்திக் கொண்ட நெற்றிக் கண்ணையுடைய இறைவரைத் திருவடிகளில் வணங்கி, உண்மையான மகிழ்ச்சியை அடைந்து, மனம் குளிர்ந்து விளங்கிய சொல் தமிழ் மாலையைப் புனைந்து கருமை விளங்கும் கழுத்தினையுடைய இறைவரின் 'திருவானைக் கா' என்ற தலத்தை வணங்கும் விருப்புடனே பிள்ளையார் வந்தார்.

(திருச்சிராப்பள்ளியில் பாடப்பட்ட பதிகம் 'நன்றுடையானை' என்ற தொடக்கம் உடைய பதிகம்.)

2243. அவர், தேவர்கள் வணங்கும் திருவானைக்கா என்னும் தலத்தில் வெண்ணாவல் மரத்தின் கீழ் மெய்ப் பொருளான இறைவரை அடைந்து வணங்கி எழுந்து, நான்கு கொம்புகளையுடைய வெள்ளை யானை பணிந்த இயல்பையும், பெருமையுடைய கோச்செங்கண் சோழ அரசர் செய்த அடிமைத் திறத்தையும், அழகிய சொற்றொடையில் வைத்துப் பண் பொருந்திய செந்தமிழ் மாலையான திருப்பதிகத்தைப் பாடி, துதித்து நின்ற பான்மையினால் போற்றினார்.

(இங்குப் பாடப்பட்டது 'மழையார் மிடறா' என்ற தொடக்கம் கொண்ட பதிகமாகும்.)

Koviloor Digital Library

2244 நாரணன் நான்முகன் காணாஉண்மை
வெண்ணாவல் உண்மை மயேந்திரமும்
சிரணி நீடு திருக்கயிலை செல்வத் திருவாரூர்
மேய பண்பும்
ஆரணத் துட்பொரு ளாயுனாரை ஆனைக்கா
வின்கட் புகழ்ந்து பாடி
ஏரணியும் பொழில் சூழ்ந்த சண்பை ஏந்தலார்
எல்லையில் இனபமுற்றார்.

2245 கைதொழு தேத்திப் புறத்தணைந்து காமர்
பதியதன் கட்சில நாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார் மன்னுந்
தவத்துறை வானவர்தாள்
எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே இன்தமிழ்
மாலைகொண் டேத்திப் போந்து
வைதிக மாமணி அம்மருங்கு மற்றுள்ளதானம்
வழுத்திச் செல்வார்.

2246 ஏறுயர்த் தார்திருப் பாற்றுறையும் எறும்பியூர்
மாமலை யேமுதலா
வேறு பதிகள் பலவும் போற்றி விரவுந் திருத்
தொண்டர்வந்துசூழ
ஈறில் புகழ்ச்சண்பை யாளியார் தாம்
எண்டிசை யோருந் தொழுதிறைஞ்ச
நீறணி செம்பவளப் பொருப்பின் நெடுங்கள
மாநகர் சென்று சேர்ந்த ார்

Koviloor Digital Library

2244. திருமாலும் நான்முகனும் காணாத உண்மை யுடையவரும் வெண்ணாவலிலும் மயேந்திரத்திலும் சிறப் புடைய திருக்கயிலையிலும் செல்வத் திருவாரூரிலும் எழுந் தருளிய பண்புடையவருமான வேதங்களின் உட்பொருளாய் உள்ள இறைவரைத் திருவானைக்கா என்ற பதியில் பாடி அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவ ரான பிள்ளையார் இன்பத்தை அடைந்தனர்.

2245. திருவானைக்காவில் வீற்றிருக்கும் இறை வனைக் கையால் தொழுது துதித்து வெளியே வந்து, அழகிய அந்தப் பதியில் சில நாட்கள் தங்கி வணங்கி மகிழ்ந்து மேல் செல்பவராய், நிலை பெற்ற 'தவத்துறை' (லால்குடி)யில் உள்ள இறைவரின் திருவடிகளை நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்று இனிய தமிழ் மாலை பாடித் துதித்துச் சென்று வைதிக நெறியின் மணி போன்ற அப்பிள்ளையார் அந்தப் பக்கத்தில் மற்றும் உள்ள தலங் களை வணங்கிச் செல்லலானார்.

2246. காளைக் கொடியை உடைய இறைவரின் 'திருப்பாற்றுறையும்' 'திருவெறும்பியூர் மாமலை'யும் முத லான பிற தலங்களை வணங்கி, பொருந்தும் தொண்டர் வந்து தம்மைப் பக்கத்தில் சூழ்ந்து கொள்ள, முடிவில்லாத புகழையுடைய சீகாழித் தலைவர் எண் திசையில் உள்ளவர் களும் தொழுது வணங்கத், திருநீற்றை அணிந்த செம்பவள மலை போன்ற சிவபெருமானின் 'திருநெடுங்களமாநகரத் தைப்' போய் அடைந்தார்.

(திரு+பால்+துறை — திருப்பாற்றுறை. மார்க்கண் டேயர் பூசைக்குப் பால் பெருகியதால் இப்பெயர். இங்குப் பாடியது 'காரார் கொன்றை' எனத் தொடங்கும் பதிகம்.)

Koviloor Digital Library

2247 நெடுங்களத் தாதியை அன்பால் நின்பால்நெஞ்சம்
செலாவகை நேர்விலக்கும்
இடும்பைகள் தீர்த்தருள் செய்வாய் என்னும்
இன்னிசை மாலைகொண் டேத்திஏகி
அடும்பணிச் செஞ்சடை யார்பதிகள் அணைந்து
பணிந்து நியமம் போற்றி
கடுங்கை வரைஉரித் தார்மகிழ்ந்த காட்டுப்பள்
ளிப்பதி கைதொழுவார்.

2248 சென்று திகழ்திருக் காட்டுப்பள்ளிச் செஞ்சடை
நம்பர்தங் கோயில்எய்தி
முன்றில் வலங்கொண் டிறைஞ்சிவீழ்ந்து
மொய்கழற் சேவடி கைதொழுவார்
கன்றணைஆவின் கருத்துவாய்ப்பக் கண்ணுத
லாரைமுன் போற்றிசெய்து
மன்றுள்நின் றாடல் மனத்துள் வைப்பார்
வாருமன்னும்முலை பாடிவாழ்ந்தார்.

2249 அங்கப் பதிநின் றெழுந்தருளி அணிதிரு வாலம்
பொழில் வணங்கிப்
பொங்கு புனற்பொன்னிப் பூந்துருத்திப்
பொய்யிலியாரைப் பணிந்து போற்றி
எங்கும் நிகழ்திருத் தொண்டர் குழாம்எதிர்
கொள்ள எப்பதி யுந்தொழுது
செங்கயல் பாய்வயல் ஓடைசூழ்ந்த திருக்கண்டி
யூர்தொழச் சென்றணைந்தார்.

Koviloor Digital Library

2247. திருநெடுங்களத்தில் வீற்றிருக்கின்ற ஆதிப்பரம் பொருளான, ''இறைவனை அன்பால் உம்மிடம் உள்ளம் செல்லாதபடி நேர்மையினின்றும் விலக்கும் இடும்பைகளை யெல்லாம் தீர்த்து அருள் செய்வீராக!'' என வேண்டிக் கொள்ளும் குறிப்பைக் கொண்ட இன்னிசைத் திருப்பதிகமான மாலையினால் துதித்து மேல் சென்று, கொல்லும் இயல்புடைய பாம்பைச் சூடிய சிவந்த சடையினரான சிவபெருமான் தலங்களை வணங்கித் 'திருநியமத்தைத்' துதித்து; வன்மையான துதிக்கையையுடைய யானையை உரித்த இறைவர் மகிழ்வுடன் வீற்றிருக்கும் 'திருக்காட்டுப் பள்ளி' என்னும் திருத்தலத்தைக் கை தொழுவாராய்,

2248. சென்று விளங்கும் திருக்காட்டுப் பள்ளியில் வீற்றிருக்கும் செஞ்சடையுடைய சிவபெருமானின் கோயிலை அடைந்து திரு முன்றிலை வலமாய் வந்து வணங்கி வீழ்ந்து எழுந்து, கழலை அணிந்த அடிகளை வணங்குவாராய்க் கன்றைச் சேர்ந்த பசுவின் கருத்தையுடைய அன்பு உள்ளத்தில் பொருந்த, நெற்றிக் கண்ணையுடைய இறைவரைத் திருமுன்பு நின்று வணங்கித் திருவம்பலத்துள் இருந்து அருட்கூத்தைத் தம் உள்ளத்தில் கொண்டு 'வாருமன்னு முலை' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி வாழ்வு பெற்றார்.

('திருநெடுங்களத்தில்' பாடப்பட்டது 'மறையுடையாய்' எனத் தொடங்கும் பதிகம். மேலைத் திருக்காட்டுப்பள்ளியில் பாடியது 'வாருமன் னும்முலை' எனத் தொடங்கும் பதிகம்.)

2249. பிள்ளையார், அங்கே அந்தப் பதியினின்று புறப்பட்டுச் சென்று அழகான திருஆலம் பொழிலினை வணங்கிப் பொங்கும் நீர்வளம் வாய்ந்த காவிரி நடுவில் உள்ள 'திருப்பூந்துருத்தி' என்ற பதியுள் வீற்றிருக்கும் 'பொய்யிலியப்பரைப்' பணிந்து துதித்து, எங்கும் உள்ள திருத்தொண்டர் கூட்டம் வந்து எதிர்கொண்டு வரவேற்று அழைத்துச் செல்ல, எல்லாவூர்களையும் வணங்கிப் போய்ச் செங்கயல்கள் பாய்வதற்கு இடமான வயல்களும் ஓடைகளும் சூழ்ந்த 'திருக்கண்டியூரை' வணங்குவதற்குப் போய்ச் சேர்ந்தார்.

Koviloor Digital Library

2250 கண்டியூர் வீரட்டர் கோயில்எய்திக் கலந்தடி
யாருடன் காதல் பொங்கக்
கொண்ட விருப்புடன் தாழ்ந்திறைஞ்சிக் குலவு
மகிழ்ச்சியின் கொள்கையினால்
தொண்டர் குழாத்தினை நோக்கி நின்று தொடுத்த
இசைத்தமிழ் மாலை தன்னில்
அண்டர் பிரான்தன் அருளின் வண்ணம் அடியார்
பெருமையிற் கேட்டருளி.

2251 வினவி எடுத்த திருப்பதிகம் மேவு திருக்கடைக்
காப்புத் தன்னில்
அனைய நினைவரி யோன்செயலை அடியாரைக்
கேட்டு மகிழ்ந்த தன்மை
புனைவுறு பாடலிற் போற்றிசெய்து போந்து
புகலிக் கவுணியனார்
துனைபுனற் பொன்னித் திரைவலங்கொள்
சோற்றுத் துறைதொழச் சென்றடைவார்.

2252 அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோம்என்று
ஒப்பில் வண்டமிழ் மாலை ஒருமையால்
செப்பி யேசென்று சேர்ந்தனர் சேர்விலார்
முப்புரஞ் செற்ற முன்னவர் கோயில்முன்.

2253 தொல்லை நீள்திருச் சோற்றுத் துறையுறை
செல்வர் கோயில் வலங்கொண்டு தேவர்கள்
அல்லல் தீர்க்கநஞ் சுண்ட பிரான்அடி
எல்லை யில்அன்பு கூர இறைஞ்சினார்.

2254 இறைஞ்சி ஏத்தி எழுந்துநின் றின்னிசை
நிறைந்த செந்தமிழ் பாடி நிலாவி அங்கு
உறைந்து வந்தடி யாருடன் எய்தினார்
சிறந்த சீர்த்திரு வேதி குடியினில்

Koviloor Digital Library

2250. திருக்கண்டியூரில் வீரட்டானரின் கோயிலை அவர் அடைந்து, கூடிய அடியாருடன் அன்பு மேலிட விருப்பத்துடன் கீழே விழுந்து வணங்கி, சேர்ந்த மகிழ்ச்சியினால் திருத்தொண்டர் குழாத்தினைப் பார்த்து நின்று, தாம் பாடிய இசைத் தமிழ் மாலையான திருப்பதிகத்தில் சிவபெருமானின் திருவருள் வண்ணங்கள் பலவற்றையும் அடியார் பெருமையில் வெளிப்படுத்தும் வகையால் வினவியருளி.

(கண்டியூரில் பாடிய பதிகம் 'வினவினே னறியாமை' எனத் தொடங்குவதாகும்).

2251. அங்ஙனம் 'வினவினேன்' எனத் தொடங்கிய திருப்பதிகத்தில் பொருந்திய கடைக் காப்பினில், நினைத்தற்கரிய சிவபெருமானின் அருட்செயலின் திறங்களை, அடியாரைக் கேட்டு மகிழ்ந்த இயல்பைக் கூறிய பாடலால் துதித்து, அப்பால் சென்று, சீகாழியில் கவுணியர் குலத்தில் வந்த அவர், விரைவாய்ச் செல்லும் நீரையுடைய காவிரியின் அலைகள் வலம் கொண்டு போகின்ற 'திருச்சோற்றுத் துறையினை'த் தொழச் செல்பவராய்,

(திருச்சோற்றுத் துறையில் பாடப்பட்டது 'செப்ப நெஞ்சே!' எனத் தொடங்கும் பதிகம்)

2252. 'அப்பரின் திருச் சோற்றுத் துறையைச் சென்று அடைவோம்' என்று முடியும் கருத்துடையதாய், ஒப்பில்லாத வன்மையுடைய தமிழ் மாலையை உள்ளத்தின் ஒருமைப்பாட்டுடன் பாடிச் சென்று பகைவரின் திரிபுரங்களை எரித்த முதல்வரின் கோயில் முன்பு பிள்ளையார் சேர்ந்தார்.

2253, பழமையுடைய நீண்ட திருச் சோற்றுத் துறையுள் எழுந்தருளிய அருட் செல்வரான சிவபெருமானின் கோயிலை வலம் வந்து வணங்கித், தேவர்களின் துன்பங்களைத் தீர்க்கும் பொருட்டு நஞ்சினை உண்ட பெருமானின் திருவடிகளை அளவற்ற அன்பு பெருக வணங்கினார்.

2254. வணங்கித் துதித்து எழுந்து நின்று இனிய பண்ணிசை நிறைந்த செந்தமிழ்ப் பதிகம் பாடிப் பொருந்தி, அந்தப் பதியிலே தங்கி, அடியாருடன் கூடிச் சிறந்த சீர்களைக் கொண்ட 'திருவேதிகுடியில்' வந்து சேர்ந்தார்.

Koviloor Digital Library

2255 வேத வேதியர் வேதி குடியினில்
நாதர் கோயில் அணைந்து நலந்திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்தெழுந்து
ஓதி னார்தமிழ் வேதத்தின் ஓங்கிசை.

2256 எழுது மாமறை யாம்பதி கத்திசை
முழுதும் பாடி முதல்வரைப் போற்றிமுன்
தொழுது போந்துவந் தெய்தினார் சோலைசூழ்
பழுதில் சீர்த்திரு வெண்ணிப் பதியினில்.

2257 வெண்ணி மேய விடையவர் கோயிலை
நண்ணி நாடிய காதலின் நாண்மதிக்
கண்ணி யார்தங் கழலிணை போற்றியே
பண்ணில் நீடும் பதிகமுன் பாடினார்.

2258 பாடி நின்ற பரவிப் பணிந்துபோய்
ஆடும் அங்கணர் கோயில்அங் குள்ளன
மாடு சென்று வணங்கி மகிழ்ந்தனர்
நீடு சண்பை நிறைபுகழ் வேதியர்.

2259 மொய்தருஞ் சோலைசூழ் முளரிமுள் ளடவிபோய்
மெய்தரும் பரிவிலான் வேள்வியைப் பாழ்படச்
செய்தசங் கரர்திருச் சக்கரப் பள்ளிமுன்பு
எய்தவந் தருளினார் இயல்இசைத் தலைவனார்.

Koviloor Digital Library

2255. மறைகளை ஓதும் மறையவர் வாழும் திருவேதி குடியில், முதல்வரின் கோயிலை அடைந்து, நன்மை விளங்கும் திருவடியான தாமரைகளை வணங்கி எழுந்து நின்று, தமிழால் வேதங்களினும் ஓங்கும் இசையையுடைய திருப்பதிகத்தைப் பாடினார்.

2256. எழுதுகின்ற பெருமறையான இசையுடைய திருப்பதிகத்தை முழுதும் பாடி இறைவரை வணங்கி, மேலே சென்று, பூஞ்சோலைகளால் சூழப்பட்ட குற்றம் அற்ற சிறப்பையுடைய 'திருவெண்ணி' என்னும் திருப்பதியை அடைந்தார்.

2257. திருவெண்ணிப் பதியில் பொருந்திய இடபத்தினையுடைய இறைவரின் திருக்கோயிலை அடைந்து உள்ளம் பொருந்திய அன்பால் புதிய பிறையைக் கண்ணியாய் அணிந்த இறைவரின் திருவடியைப் போற்றிப் பண்ணால் மிக்க திருப்பதிகத்தைப் பாடினார்.

(திருவெண்ணிப் பதிகம், 'சடையானை' எனத் தொடங்குவதாகும்.)

2258. பதிகம் பாடி நின்று துதித்து வணங்கி மேல் சென்று அருள் ஆடலை நிகழ்த்தும் இறைவர் வீற்றிருக்கும் அப்பக்கத்தில் உள்ளனவாகிய கோயில்களைச் சென்று வணங்கி, சீகாழியில் தோன்றிய நிறைந்த புகழையுடைய வேதியரான பிள்ளையார் மகிழ்ச்சி அடைந்தார்.

2259. நெருங்கிய சோலைகள் சூழ்ந்த தாமரைத் தண்டுகளின் முட்காடு என்னப்படுகின்ற பொய்கைகள் மிக்க மருத நிலத்தில் சென்று, உண்மை நிலையினைச் செய்யும் அன்பு இல்லாத தக்கனின் வேள்வியை அழியச் சங்காரம் செய்த சிவபெருமான் வீற்றிருக்கும் 'திருச்சக்கரப்பள்ளி' என்ற தலத்தின் முன்பு பொருந்த வந்து, இயல் இசை வல்ல பிள்ளையார் சேர்ந்தார்.

Koviloor Digital Library

2260 சக்கரப் பள்ளியார் தந்திருக் கோயிலுள்
புக்கருத் தியினுடன் புனைமலர்த் தாள்பணிந்து
அக்கரைப் பரமர்பால் அன்புறும் பரிவுகூர்
மிக்கசொற் றமிழினால் வேதமும் பாடினார்.

2261 தலைவர்தஞ் சக்கரப் பள்ளிதன் னிடையகன்று
அலைபுனற் பணைகளின் அருகுபோய் அருமறைப்
புலனுறுஞ் சிந்தையார் புள்ளமங் கைப்பதி
குலவும்ஆ லந்துறைக் கோயிலைக் குறுகினார்.

2262 மன்னும்அக் கோயில்சேர் மான்மறிக் கையர்தம்
பொன்னடித் தலம்உறப் புரிவொடுந் தொழுதெழுந்து
இன்னிசைத் தமிழ்புனைந் திறைவர்சே லூருடன்
பன்னுபா லைத்துறைப பதிபணிந் தேகினார்.

2263 காவின்மேல் முகிலெழுங் கமழ்நறும் புறவுபோய்
வாவிநீ டலவன்வாழ் பெடையுடன் மலர்நறும்
பூவின்மேல் விழைவுறும் புகலியார் தலைவனார்
சேவின்மேல் அண்ணலார் திருநலூர் நண்ணினார்.

Koviloor Digital Library

2260. திருச்சக்கரப் பள்ளியில் வீற்றிருக்கும் இறைவரின் கோயிலுள்ளே புகுந்து விருப்பத்துடன் புனைந்த மலர் மாலை போன்ற திருவடிகளை வணங்கி, எலும்பு மாலையைச் சூடிய அரையை உடைய இறைவரிடத்து அன்பு பொருந்தும் பரிவு மிகுவிக்கும் ஆற்றல் மிக்க சொற்களாலான தமிழால் நான்கு வேதப்பொருள்களையும் கொண்ட திருப்பதிகத்தையும் பாடி,

(திருச்சக்கரப்பள்ளிப் பதிகம் 'படையினார்' என்ற தொடக்கம் கொண்டதாகும். சக்கரவாகப் பறவை வழிபட்டதால் சக்கரப்பள்ளி எனப் பெயர் பெற்றது என்ப.)

2261. அரிய வேதத்தின் உள்பொருளான ஞானத்தைத் தம் அறிவில் நிரம்பப் பெற்ற பிள்ளையார், சிவபெருமானின் திருச்சக்கரப் பள்ளியினிடத்தை நீங்கி அலையும் நீர் பரந்த வயல்களின் பக்கமாகச் சென்று, 'திருப்புள்ள மங்கை' என்ற திருப்பதியில் விளங்கும் 'திருவாலந்துறை' எனப் பெயர் பெறும் கோயிலை அடைந்தார்.

2262. நிலை பெற்ற அந்தக் கோயிலில் எழுந்தருளிய மான்கன்றை ஏந்திய கையுடைய இறைவரின் பொற்பாதங்களைப் பொருந்திய அன்புடன் தொழுது, எழுந்து இனிய இசையையுடைய தமிழ்ப் பதிகத்தைப்பாடி இறைவர் வீற்றிருக்கின்ற 'திருச்சேலூர்' துதித்துச் சொல்லப் பெறும் 'திருப்பாலைத்துறை' என்ற பதியையும் வணங்கினார்.

(திருப்புள்ள மங்கை ஆலந்துறையில் பாடப்பட்டது, 'பாலுந்துறு திரளாயின' எனத் தொடங்கும் பதிகம். புள்ள மங்கை தலத்தின் பெயர்; ஆலந்துறை கோயில் பெயர்.)

2263. பொய்கையில் பொருந்திய ஆண் நண்டுகள் தம்முடன் வாழும் பெண் நண்டுகளுடன் மலரும் நல்ல மணமுடைய தாமரை மலரின் மேல் விரும்பி அமர்தற்கு இருப்பிடமான சீகாழித் தலைவரான பிள்ளையார் சோலைகளின் மேலே மேகங்கள் எழுகின்ற மணம் கமழும் நல்ல முல்லை நிலத்தின் வழியிலே போய்க் காளையூர்தியின் மேல் எழுந்தருளும் இறைவரின் 'திருநல்லூர்' அடைந்தார்.

Koviloor Digital Library

2264 மன்றலங் கழனிசூழ் திருநலூர் மறைவலோர்
துன்றுமங் கலவினைத் துழனியால் எதிர்கொளப்
பொன்தயங் கொளிமணிச் சிவிகையிற் பொலிவுறச்
சென்றணைந் தருளினார் சிரபுரச் செம்மலார்.

2265 நித்திலச் சிவிகைமேல் நின்றிழிந் தருளியே
மொய்த்தஅந் தணர்குழாம் முன்செலப் பின்செலும்
பத்தரும் பரிசனங் களுமுடன் பரவவே
அத்தர்தங் கோபுரந் தொழுதணைந் தருளினார்.

2266 வெள்ளிமால் வரையைநேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளையார் வலம்வரும் பொழுதினிற் பெருகுநீர்
வெள்ளஆ னந்தமெய் பொழியமேல் ஏறிநீர்
துள்ளுவார் சடையரைத் தொழுதுமுன் பரவுவார்.

2267 பரவுசொற் பதிகம்முன் பாடினார் பரிவுதான்
வரவயர்த் துருகுநேர் மனனுடன் புறம்அணைந்து
அரவுடைச் சடையர்பேர் அருள்பெரும் பெருமையால்
விரவுமப் ப திஅமர்ந் தருளியே மேவினார்.

2268 அன்ன தன்மையில் அப்பதி யினில் அமர்ந் தருளி
மின்னெ டுஞ்சடை விமலர்தாள் விருப்பொடு வணங்கிப்
பன்னும் இன்னிசைப் பதிகமும் பலமுறை பாடி
நன்னெ டுங்குல நான்மறை யவர்தொழ நயந்தார்.

Koviloor Digital Library

2264. பிள்ளையார், மணம் கமழும் அழகிய வயல்கள் சூழ்ந்த திருநல்லூர் வாழும் மறையில் வல்ல மறையவர்கள் நெருங்கிய மங்கலச் செயல்களின் நிறைவுடனே வரவேற்கப் பொன் ஒளி விளங்கும் ஒளியுடைய முத்துச் சிவிகையின் மீது அழகு விளங்கச் சென்று அடைந்தார்.

2265. முத்துப் பல்லக்கினின்றும் இழிந்து, கூட்டமான அந்தணர் குழுவினர் முன்னே செல்ல, பின்னே செல்கின்ற அடியவரும் பரிவாரங்களும் தம்முடன் கூடித் துதித்து வர, இறைவரின் கோபுரத்தை வணங்கிக் கோயிலுக்குள் புகுந்தார்.

2266. பிள்ளையார், மலையைப் போல விளங்கும் ஒளியையுடைய அக்கோயிலை வலம் வரும்போது ஆனந்தக் கண்ணீர் வழிந்து திருமேனி எங்கும் பொழிய, அம்மாடக் கோயிலின் மேல் ஏறிப் போய்க், கங்கை நீர் துள்ளுதல் பொருந்திய சடையையுடைய இறைவரை வணங்கித் திருமுன்பு நின்று துதிப்பவராய்,

2267. துதிக்கும் சொல்லால் ஆன பதிகத்தினைப் பாடியவராய் மிக்க அன்பு மேலிட்டதால் தம்மையும் மறந்து உருகும் நேர்மை பெற்ற உள்ளத்துடன் கோயில் புரத்தை அடைந்து பாம்புகளைப் பூண்ட சடையையுடைய இறைவரின் திருவருளைப் பெறும் பெருமையால் இறைவர் வீற்றிருக்கும் அந்தத் தலத்தில் விரும்பி வீற்றிருந்தார்.

(திருநல்லூரில் பாடியது 'வண்டிரிய விண்டமலர்' என்ற தொடக்கம் கொண்ட பதிகம்.)

2268. அவ்வாறு அந்தப் பதியில் தங்கி மின் போன்ற சடையுடைய இறைவரின் திருவடிகளை விருப்புடன் வணங்கிப் புகழ்ந்து சொல்லும் இனிய இசையுடன் கூடிய பதிகம் பல முறையும் பாடி, நல்ல நீண்ட மறையவர் வணங்கி நிற்க அங்குத் தங்கியிருந்தார்.

Koviloor Digital Library

2269 நீடும் அப்பதி நீங்குவார் நிகழ்திரு நல்லூர்
ஆடு வார்திரு அருள்பெற அகன்றுபோந் தங்கண்
மாடும் உள்ளன வணங்கியே பரவிவந் தணைந்தார்
தேடும் மாலயற் கரியவர் திருக்கரு காவூர்.

2270 வந்து பந்தர்மா தவிமணங் கமழ்கரு காவூர்ச்
சந்த மாமறை தந்தவர் கழலிணை தாழ்ந்தே
அந்தம் இல்லவர் வண்ணம்ஆ ரழல் வண்ணம் என்று
சிந்தை இன்புறப் பாடினார் செழுந்தமிழ்ப் பதிகம்.

2271 பதிக இன்னிசை பாடிப்போய்ப் பிறபதி பலவும்
நதிஅ ணிந்தவர் கோயில்கள் நண்ணியே வணங்கி
மதுர முத்தமிழ் வாசகர் அணைந்தனர் மன்றுள்
அதிர்சி லம்படி யார்மகிழ் அவளிவ ணல்லூர்.

2272 மன்னும் அப்பதி வானவர் போற்றவும் மகிழ்ந்த
தன்மை யார்பயில் கோயிலுள் தம்பரி சுடையார்
என்னும் நாமமும் நிகழ்ந்திட ஏத்திமுன் இறைஞ்சிப்
பன்னு சீர்ப்பதி பலவும்அப் பாற்சென்று பணிவார்.

2273 பழுதில் சீர்த்திருப் பரிதிநன் னியமும் பணிந்தங்கு
எழுது மாமறை யாம்பதி கத்திசை போற்றி
முழுதும் ஆனவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவி லார் திருப் பூவனூர் வணங்கிவந் தணைந்து.

Koviloor Digital Library

2269. நிலை பெறும் அந்தப் பதியினின்று நீங்குபவ ரான பிள்ளையார், விளங்கும் அந்தத் திருநல்லூரில் எழுந் தருளிய கூத்தாடும் இறைவரின் திருவருளைப் பெற்றதால் அதை விட்டுப் புறப்பட்டுச் சென்று, அவ்விடத்தும் பக்கத் திலும் உள்ள திருப்பதிகளை வணங்கிய வண்ணம் தம்மைத் தேடிய திருமாலுக்கும் நான்முகனுக்கும் அரியவரான இறைவரின் திருக்கருகாவூரில் வந்து சேர்ந்தார்.

2270. சேர்ந்து பந்தலில் படர்ந்து ஏறிய முல்லைகள் மணம் கமழ்கின்ற 'திருக்கருகாவூரில்' எழுந்தருளிய இசை யமைதியுடைய பெருமறைகளைத் தந்த இறைவரின் திருவடி களை வணங்கி, 'என்றும் அழியாமல் நித்தரான சிவபெரு மானின் வண்ணம் தீயின் வண்ணமாகும்' என்ற கருத்தும் முடிபும் உடையதாய்ச் செந்தமிழ்ப் பதிகத்தை உள்ளம் இன்பம் அடையப் பாடினார்.

(திருக்கருகாவூரில் பாடியது 'முத்தி லங்குமுறு' எனத் தொடங்கும் பதிகமாகும்.)

2271. பதிக இனிய இசையைப் பாடிச் சென்று பல பிற தலங்களிலும் கங்கையாற்றை அணிந்தவர் கோயில் களை அடைந்து வணங்கி, பொன்னம்பலத்தில் கூத்தாடு கின்ற ஒலிக்கும் சிலம்பினையுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற 'திரு அவளிவணல்லூரை' இனிய முத்தமிழும் பொருந்திய வாக்கையுடைய பிள்ளையார் அணைந்தார்.

2272. நிலைபெற்ற அத்தலத்தில் தேவர்களும் துதிக்க மகிழ்ந்து எழுந்தருளும் இயல்பு கொண்ட இறைவரின் கோயிலுக்குள் புகுந்து 'தம்பரிசு உடையார்' என்ற பெயரும் வெளிப்பட வைத்து, துதித்துத் திருமுன்பு வணங்கிச் சொல்லும் சிறப்புடைய பிற பதிகள் பலவற்றிலும் சென்று வணங்குபவராய்.

(திரு அவளிவணல்லூர்ப் பதிகம் 'கொம்பிரிய' என்னும் தொடக்கம் கொண்டதாகும்.)

2273. குற்றங்களைப் போக்கிடும் சிறப்புக் கொண்ட 'திருப்பரிதி நியமத்தை' வழிபட்டு, அங்கே எழுதும் மறை யான திருப்பதிகத்தைப் பாடித் துதித்து எல்லாமாய் இருக்கும் சிவபெருமானின் திருக்கோயிலை வணங்கி முறை மையினின்றும் தவறாத சிறப்புடைய 'திருப்பூவனூரை' வந்து சேர்ந்து, (திருப்பரிதி நியமத்தில் பாடியது 'விண் கொண்ட' என்ற தொடக்கம் உடைய பதிகம்.)

Koviloor Digital Library

2274 பொங்கு காதலிற் போற்றிஅங் கருளுடன் போந்து
பங்க யத்தடம் பணைப்பதி பலவும்முன் பணிந்தே
எங்கும் அன்பர்கள் ஏத்தொலி எடுக்கவந்
தணைந்தார்
அங்க ணர்க்கிடம் ஆகிய பழம்பதி ஆலூர்.

2275 பணியும் அப்பதிப் பசுபதீச் சரத்தினி திருந்த
மணியை உள்புக்கு வழிபடும் விருப்பினால்
வணங்கித்
தணிவில் காதலில் தண்டமிழ் மாலைகள் சாத்தி
அணிவி ளங்கிய திருநலூர் மீண்டும்வந்
தணைந்தார்.

2276 மறைவி ளங்கும்அப் பதியில் மணிகண்டர்
பொற்றாள்
நிறையும் அன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறைஅணிந்தவர் அருள்பெறப் பிரசமென்
மலர்வண்டு
அறைந றும்பொழில் திருவலஞ் சுழியில்வந்
தணைந்தார்.

2277 மதிபு னைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிரும் அன்பர்கள் முத்தமிழ் விரகர்தம் முன்வந்து
எதிர்கொள் போழ்தினில் இழிந்தவர் எதிர்செல
மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக்
கலந்தார்.

2278 கலந்த அன்பர்கள் தொழுதெழக் கவுணியர்
தலைவர்
அலர்ந்த செங்கம லக்கரங் குவித்துடன் அணைவார்
வலஞ்சு ழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொள் நீள்சுடர்க் கோபுரம் இறைஞ்சியுட்
புகுந்தார்.

Koviloor Digital Library

2274. வளரும் விருப்ப மிகுதியினால் துதித்து அந்த இடத்தினின்றும் நீங்கிப் போய், தாமரைகளையுடைய பெரிய வயல்கள் சூழ்ந்த பதிகள் பலவும் துதித்து, ஒலி பெருக வாழ்த்தி வந்து சிவபெருமான் அமரும் பழைய பதியான 'திருஆலூரினை' அடைந்தார்.

2275. சேர்ந்து விளங்கும் அந்தத் தலத்தில் பசுபதீச்சரக் கோயிலில் இனிதாக வீற்றிருந்த மணியான இறைவரைக் கோயிலுள் புகுந்து வழிபடும் விருப்பத்தினால் வணங்கிக் குறைவில்லாத அன்புடன் குவிர்ந்த தமிழ் மாலைகள் பாடிச் சாத்தி, அழகுடைய திருநல்லூரினை மீண்டும் வந்தடைந்தார்.

2276. வேதங்கள் விளங்குவதற்கு இடமான அந்தப் பதியில்மணிகண்டரான இறைவரின் பொன்னடிகளை நிறைவான அன்புடன் வணங்கிக் கொண்டு ஆளுடைய பிள்ளையார், பிறை சூடிய இறைவரின் நிலையான திருவருளைப் பெற்று உலகம் உய்வு பெறத் தேன் பொருந்திய பூக்களில் வண்டுகள் ஒலிக்கின்ற மணம் வீசும் சோலைகள் சூழ்ந்த 'திருவலஞ்சுழியில்' வந்து சேர்ந்தார்.

2277. பிறைச் சந்திரனைச்சூடிய இறைவர் திருவலஞ்சுழியில் வாழ்கின்ற பெருந்தவத்தின் முயற்சியுடைய அன்பர்கள் ஒன்றுகூடி முத்தமிழ் வல்லவரான பிள்ளையாரின் முன்வந்து எதிர்கொண்டு வரவேற்கும் போது, மதியை ஒளியுடைய வெண்மேகங்கள் சுற்றிச் சூழ்ந்தது போல் கூடினர்.

2278. வந்து கூடிய அன்பர்கள் கீழ் விழுந்து தொழுது எழுந்து நிற்கக் கவுணியர் தலைவரான பிள்ளையார், அன்று பூத்த செந்தாமரை போன்ற கைகளைப் கூப்பி அணைபவராய், திருவலஞ்சுழி இறைவர் மகிழ்ந்து எழுந்தருளிய கோயிலைப் போய்ச் சேர்ந்து பொன்னையுடைய நீண்ட சுடர் விட்டு விளங்கும் கோபுரத்தை வணங்கி உள்ளே புகுந்தார்.

Koviloor Digital Library

2279 மருவ லார்புரம் முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்டு
உருகும் அன்புடன் உச்சிமேல் அஞ்சலியினராய்த்
திருவ லஞ்சுழி உடையவர்சேவடித் தலத்தில்
பெருகும் ஆதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர்.

2280 ஞான போனகர் நம்பர்முன் தொழுதெழு விருப்பால்
ஆன காதலில் அங்கண ரவர்தமை வினவும்
ஊன மில்இசை யுடன்விளங் கியதிருப் பதிகம்
பான லார்மணி கண்டரைப் பாடினார் பரவி.

2281 புலன்கொள் இன்தமிழ் போற்றினர் புறத்தினில் அணைந்தே
இலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினில் இருந்து
நலங்கொள் காதலின் நாதர்தாள் நாள்தொறும் பரவி
வலஞ்சு ழிப்பெரு மான்தொண்டர் தம்முடன் மகிழ்ந்தார்.

2282 மகிழ்ந்த தன்தலை வாழும்அந் நாளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு துணைப்புனர் ஓரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையில் நிலவும்ஏழ் கடல்நீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்.

Koviloor Digital Library

2279. பகைவரின் மூன்று புரங்களை எரித்த இறைவரின் திருமுற்றத்தை வலமாகச் சுற்றி வந்து, உள்ளம் உருகிய அன்புடனே, தலையின் மேல் கைகுவித்து அஞ்சலி செய்பவராய்த், திருவலஞ்சுழி இறைவரின் திருவடிகளில் பெருகும் அன்புடனே பெரியவரான சம்பந்தர் பணிந்து எழுந்தார்.

2280. ஞானப்பாலையுண்ட பிள்ளையார் சிவபெருமானின் திருமுன்பு தொழுது எழும் விருப்பத்தினால் விளைந்த ஆசையினால் இறைவரை முன்னிலைப் படுத்தி, வினவுகின்ற கருத்தையுடைய, குற்றம் அற்ற இசைவுடனே விளங்கும் திருப்பதிகத்தை, குவளை மலர் போன்ற கண்டத்தையுடைய இறைவரைப் பாடித் துதித்தார்.

(இங்குப் பாடியது 'விண்டெ லாமல' எனத் தொடங்கும் பதிகம்.)

2281. ஞான உபதேசமாய் நன் மக்கள் உள்ளத்தில் கொள்ளும் இனிய, இசையைத், துதித்தவராய்க் கோயிலின் வெளியே வந்து சேர்ந்து, விளங்கும் நீரையுடைய காவிரி சூழ்ந்த அந்தப் பதியில் தங்கியிருந்து, நன்மை பொருந்திய அன்பினால் இறைவரின் திருவடிகளை நாள் தோறும் வணங்கித் திருவலஞ்சுழிப் பெருமானின் தொண்டர்களுடனே கூடி மகிழ்வுடன் இருந்து வந்தார்.

(இங்குப் பாடியது 'என்ன புண்ணியம்' 'பள்ளம தாய' எனத் தொடங்கும் பதிகங்கள்.)

2282. மகிழ்வுடன் அந்தப் பதியில் அவர் வாழ்ந்து வருகின்ற நாட்களில் வானத்தில் விளங்கிய கதிரவன், மிதுன ஓரையுள் சேர்ந்ததால் — பொருந்தும் ஏழ்கடலும் தன் நீர்மை குறையுமாறு சினத்துடன் வெம்மையான கதிர்களைப் பரப்புதலால்— முது வேனிற் பருவம் வந்தது.

Koviloor Digital Library

2283 தண்பு னற்குளிர் கால்நறுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்துணை நகைமணி முத்தணி நாளும்
உண்ப மாதுரி யச்சுவை உலகுளோர் விரும் ப.

2284 அறல்மலியுங் கான்யாற்றின் நீர்நசையால்
அணையுமான்
பெறல்அரிய புனல்என்று பேய்த்தேரின்
பின்தொடரும்
உறையுணவு கொள்ளும்புள் தேம்பவயல்
இரைதேடும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து
வதியுமால்.

2285 நீணிலைமா ளிகைமேலும் நிலாமுன்றின்
மருங்கினிலும்
வாணிழனர் சோலையிலும் மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார்
முலைத்தடத்தும்
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலந்
துறைவரால்.

2286 மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் தளிர்கோதிக்
கூவிஎழத்
துயிலொடுங்கா உயிர் அனைத்தும் துயில்பயிலச்
சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி
தரு நாளில்.

Koviloor Digital Library

2283. குளிர்ச்சியுடைய நீர்ச் சேர்க்கையினால் குளிர்ந்து வீசும் காற்றையும், மணம் உடைய சந்தனத்தையும், நன்மை பொருந்திய மணமுடைய பூக்களுள் பொதிந்த பனிநீரையும், வாழ்க்கைத் துணைவியான மனைவியையும், ஒளிவீசும் மணிகளாகிய முத்து மாலைகளையும், உண்ணக் கூடிய இன் சுவைப் பண்டங்களையும் உலகத்தவர் விரும்புமாறு வேனிற் காலம் முதிர்ந்தது.

2284. கரிய மணல் மிக்க காட்டினிடம் நீர் பெறும் விருப்பத்தால் சேர்ந்த மான் கூட்டம் (அங்கே நீரைப் பெறாததால்) பெறுவதற்கு அரிய நீர் என்று தோற்றம் காரணமாக மயங்கிக் கானல்நீரின் பின்னால் தொடர்ந்து செல்லும்; மழைத்துளிகளை உணவாகக் கொள்ளும் சாதகப் பறவை உணவு பெறாது வருந்தி வேறு உணவைத் தேடித் திரியும்; பறவைகள் சிறகுகளை விரித்துக் கொண்டு வெம்மை பொறுக்க இயலாது தாம் ஒடுங்குவதற்குத் தக்க குளிர்ந்த இடங்களில் தங்கும்.

2285. நீண்ட நிலைகளையுடைய மாளிகைகளின் மீதும், நிலா முற்றங்களின் பக்கங்களிலும், ஒளியுடைய நிழலைப் பரப்பும் சோலையிலும், மலர்ப் பொய்கைகளின் பக்கங்களிலும், முத்துக்களைக் கொண்ட பூங்குழலையுடைய மாதர்களின் கொங்கைத் தடங்களிலும், மக்கள் மகிழ்ந்துறைவர்.

2286. மயில் பறவைகள் ஒடுங்கவும், வண்டுகள் ஆடவும், தாமரை அரும்புகள் மலரவும், ஒடுங்காத சோலைகளின் மெல்லிய தளிரைக் கோதிக் குயில் கூவி எழவும், துயில் கொள்ளாத உயிர்கள் எல்லாம் துயில் கொள்ளவும். வானத்தில் விளங்கும் சுடரான சூரியன் தன் வெம்மையான கதிர்கள் ஒடுங்காமல் வெம்மை தருகின்ற முதுவேனில் விரியும் நாளில்,

Koviloor Digital Library

2287 சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
எண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை எய்துதற்கு
நண்புடைய அடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீள் மதிளாறை மேற்றளிசென் றெய்தினார்.

2288 திருவாறை மேற்றளியில் நிகழ்ந்திருந்த செந்தீயின்
உருவாளன் அடிவணங்கி உருகியஅன் பொடுபோற்றி
மருவாருங் குழல்மலையாள் வழிபாடு செய்யஅருள்
தருவார்தந் திருச்சத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார்.

2289 திருச்சத்தி முற்றத்திற் சென்றெய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிகள் ஆர்வமுறப் பணிந்தேத்திக்
கருச்சுற்றில் அடையாமற் கைதருவார் கழல்பாடி
விழுப்புற்றுத் திருப்பட்டீச் சரம்பணிய மேவுங்கால்.

2290 வெம்மைதரு வேனிலிடை வெயில்வெப்பந் தணிப்பதற்கு
மும்மைநிலைத் தமிழ்விரகர் முடிமீதே சிவபூதம்
தம்மைஅறி யாதபடி தண்தரளப் பந்தர்எடுத்து
எம்மைவிடுத் தருள்புரிந்தார் பட்டீசர் என்றியம்ப.

2291 அவ்வுரையும் மணிமுத்தின் பந்தரும்ஆ காயம்எழச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்
இவ்வினைதான் ஈசர்திரு வருளாகில் இசைவதெனை
மெய்விரவு .ாகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார்.

Koviloor Digital Library

2287. சீகாழிப் பதியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையார், சடையை மகுடமாகக் கொண்ட சிவபெருமானின் திருவலஞ்சுழி என்ற அந்தப் பதியினை எண்ணம் பெருகும்படி துதித்துப் பழையாறை என்ற பதியைச் சார்வதற்காக, நட்புடைய அடியவர்களுடன் போவதை விரும்பி, நடந்து சென்று, வான் அளாவிய நீண்டுயர்ந்த மதிலையுடைய திருப்பழையாறை மேற்றளியை அடைந்தார்.

2288. பிள்ளையார், பழையாறை மேற்றளியில் வீற்றிருக்கும் செந்தீ வண்ணரான இறைவரின் திருவடிகளை உருகிய அன்புடனே வணங்கித் துதித்து மணம் பொருந்திய கூந்தலையுடைய மலையரசன் மகள் வழிபட அருள் செய்த இறைவரின் 'திருச்சத்தி முற்றம்' என்ற பதியின் வெளிப் பக்கத்தைச் சேர்ந்தார்.

2289. 'திருச்சத்தி முற்றத்தில்' போயடைந்து திருமலை வல்லியார் அருச்சனை செய்து வழிபட்ட அழகிய திருவடிகளை ஆர்வத்துடனே வணங்கிப் பிறவிச் சுழலில் அகப்படாமல் கைதந்து ஈடேற்றுபவரான இறைவரின் திருவடிகளைப் பாடி, விருப்புக் கொண்டு 'திருப்பட்டீச்சரத்தை' வணங்கச் சென்ற போழ்து,

2290. வெப்பத்தை மிகுதியாய் அளிக்கும் முதுவேனில் வெயிலின் வெம்மையைத் தணித்து ஆற்றும் பொருட்டாய், முத்தமிழ் வல்லுநரான சம்பந்தரின திருமுடியின்மீது, தம்மை அறியாத வகையால் சிவபூதம் முத்துப் பந்தரை எடுத்துப் பிடித்துப், "பட்டீசர் எங்களை இதனுடன் சென்று தருமாறு உரைத்தருளினார்" எனக் கூற,

2291. அந்நச் சொற்களும் அழகிய முத்துப் பந்தரும் வானத்தில் எழுந்தனவாக, செம்மையான சிவஞானத்தை உணர்ந்த ஆளுடைய பிள்ளையார் "இச் செயல்தான் இறைவரின் திருவருளால் நமக்கு இசைவதாக!" என்று உள்ளத்தில் எண்ணி, மேனியில் மயிர்ப்புளகம் உண்டாக நிலத்தில் விழுந்து வணங்கினார்.

Koviloor Digital Library

2292 அதுபொழுதே அணிமுத்தின் பந்தரினை
அருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு பரிசனங்கள்
கைக்கொண்டார்
மதுரமொழி மறைத்தலைவர் மருங்கிமையோர்
பொழிவாசப்
புதுமலரால் அப்பந்தர் பூம்பந்த ரும்போலும்.

2293 தொண்டர்குழாம் ஆர்ப்பெடுப்பச் சுருதிகளின்
பெருந்துழனி
எண்டிசையும் நிறைந்தோங்க எழுந்தருளும்
பிள்ளையார்
வெண்டரளப் பந்தர்நிழல் மீதணையத்
திருமன்றில்
அண்டர்பிரான் எடுத்ததிரு வடிநீழல்என
அமர்ந்தார்.

2294 பாரின்மிசை அன்பருடன் வருகின்றார்
பன்னகத்தின்
ஆரம்அணிந் தவர்தந்த அருட்கருணைத்
திறம்போற்றி
ஈரமனங் களிதழைப்ப எதிர்கொள்ள முகமலர்ந்து
சேரவருந் தொண்டருடன் திருப்பட்டீச்
சரம்அணைந்தார்.

2295 சென் றணைந்து திருவாயிற் புறத்திறைஞ்சி
உள்புக்கு
வென் றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு
வெண்கோட்டுப்
பன்றிகிளைத் தறியாத பாததா மரைகண்டு
முன்தொழுதுவிழுந் தெழுந்துமொழி மாலை
போற்றிசைத்தார்.

Koviloor Digital Library

2292. அப்போதே பரிவாரங்கள் அழகிய முத்துப் பந்தரைத் திருவருள் சிறக்க ஒளிவீசும் அழகிய காம்புகளைக் கையில் பிடித்தன. இனிய மொழியையுடைய தமிழ் மறைத் தலைவரான பிள்ளையாரின் பக்கத்தில் தேவர்கள் பொழிந்த மணமுடைய தெய்வப் பூக்களால் அந்த முத்துப் பந்தர், பூம்பந்தர் போலவும் விளங்கியது.

2293. தொண்டர் கூட்டமானது ஆரவாரம் செய்ய வும், மறைகளின் பேரொலி எட்டுத் திக்குகளிலும் நிறைந்து ஓங்கி எழவும், எழுந்தருளி வருகின்ற பிள்ளையார், வெண்மையான முத்துப் பந்தரின் நிழலானது தம் முடியின் மீது நிழல் பரப்பிப் பொருந்தப் பெறுவதால், பொன்னம் பலத்தில் கூத்தப் பிரானின் தூக்கிய திருவடி நிழலில் அமர்ந்திருத்தலைப் போல் அமர்ந்திருந்தார்.

2294. நிலத்தின் மீது தொண்டர்களுடன் வருகின்ற பிள்ளையார், பாம்புகளான மாலையைச் சூடிய இறைவர் அளித்த கருணைத் திறத்தைப் போற்றிய வண்ணமே அன்பு நிறைந்த உள்ளம் களிப்புக் கொள்ள எதிர் கொள் ளும் பொருட்டு முகமலர்ந்து திருப்பட்டீச்சரத்தை வந்து சேர்ந்தார்.

(திருப்பட்டீச்சரப் பதிகம் 'பாடல் மறை' எனத் தொடங்குவதாகும்.)

2295. சென்று சேர்ந்து வாயிலின் வெளியில் வணங்கி, உள்ளே புகுந்து, வெற்றி பொருந்திய காளையை உடைய சிவபெருமானின் திருக் கோயிலை வலமாய் வந்து, வெள்ளைக் கொம்புடைய பன்றி உருவெடுத்த திருமால் நிலத்தைத் தோண்டியும் காண இயலாத திருவடித் தாமரைகளைக் கண்டு, திருமுன்பு வணங்கி நிலத்தில் விழுந்து எழுந்து சொல் மாலையால் துதித்தார்.

Koviloor Digital Library

2296 அருள்வெள்ளத் திறம்பரவி அளப்பரிய ஆனந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப் பேராத பெருங்காதல்
திருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
திருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார்.

2297 அப்பதியில் அமர்கின்ற ஆளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியில் சென்றிறைஞ்சி
ஒப்பரிய தமிழ்பாடி உடன்அமருந் தொண்டரொடு
எப்பொருளு மாய்நின்றார் இரும்பூளை எய்தினார்.

2298 தேவர்பிரான் அமர்ந்ததிரு இரும்பூளை சென்றெய்தக்
காவணநீள் தோரணங்கள் நாட்டியுடன் களிசிறப்பப்
பூவணமா லைகள்நாற்றிப் பூரணபொற் குடம்நிரைத்தங்கு
யாவர்களும் போற்றிசைப்பத் திருத்தொண்டர் எதிர்கொண்டார்.

2299 வண்டமிழின் மொழிவிரகர் மணிமுத்தின் சிவிகையினைத்
தொண்டர்குழாத் தெதிர்இழிந்தங் கவர்தொழத்தா முந்தொழுதே
அண்டர்பிரான் கோயிலினை அணைந்திறைஞ்சி முன்நின்று
பண்டரும்இன் னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடுவார்.

Koviloor Digital Library

2296. திருக்கருணைப் பெருக்கின திறத்தைத் துதித்து, அதனால் அளவிடற்கரிய ஆனந்த வெள்ளத்தில் திளைத்து, மாறாத பெருங்காதல் கொண்ட உள்ளத்துப் பரிவுடன் செம்பொன் மலையரசனின் மகளான உமையம்மையார் பொன் கிண்ணத்தில் தந்தருளிய ஞான அமுது உண்டருளிய பிள்ளையார் கோயில் புறத்தை அடைந்தார்.

2297. அந்தப் பதியில் விரும்பி எழுந்தருளிய ஆளுடைய பிள்ளையார் இயம்புதற்கரிய சிறப்புக் கொண்ட பழையாறை வடதளியில் சென்று வணங்கி, ஒப்பில்லாத தமிழ்ப்பதிகத்தைப் பாடித் தாம் உடனாய் விரும்பிய தொண்டர்களுடனே எல்லாப் பொருள்களுமாய் நின்ற சிவபெருமானின் 'திருவிரும்பூளையினை' அடைந்தார்.

திருவிரும்பூளை — திரு + இரும்பூளை; பூளை — என்பது ஒருவகைச் செடி. அது இத்தலத்தின் தலமரம். ஆதலால் இப்பெயர் கொண்டது.

2298. பிள்ளையார், தேவர்களின் தலைவரான சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் திருவிரும்பூளையினைப் போயடைய, பந்தல்களைத் தோரணங்களுடன் நிறுத்திக் கூடிய பெரு மகிழ்ச்சி ஓங்குதலால், மலர்களால் அமைந்த அழகிய பெரிய மாலைகளைத் தொங்கவிட்டு நிறை பொன் கும்பங்களை வரிசை பெற அமைத்து அனைவரும் துதிக்கத் தொண்டர்கள் அங்கு எதிர் கொண்டனர்.

2299. வளம் வாய்ந்த தேவாரத் தமிழின் இனிய மொழித் தலைவரான பிள்ளையார் அழகான முத்துச் சிவிகையினின்றும் தம்மை எதிர்கொண்டு வரவேற்ற தொண்டர் கூட்டத்தின் எதிரே இறங்கி, அவர்கள் தம்மை வணங்கும்போதே தாமும் அவர்களை வணங்கி, தேவர் தலைவரின் கோயிலை அடைந்து வணங்கி, திருமுன் நின்று பண்களை வெளிப்படுத்தும் இனிய இசையுடைய திருப்பதிகத்தால் பரம்பொருளான இறைவரைப் பாடுவாராய்.

Koviloor Digital Library

2300 நிகரிலா மேருவரை அணுவாக நீண்டானை
நுகர்கின்ற தொண்டர்தமக் கமுதாகி
நொய்யானைத்
தகவொன்ற அடியார்கள் தமைவினவித்
தமிழ்விரகர்
பகர்கின்ற அருமறையின் பொருள்விரியப்
பாடினார்.

2301 பாடும்அர தைப்பெரும் பாழியே முதலாகச்
சேடர்பயில் திருச்சேறை திருநாலூர் குடவாயில்
நாடியசீர் நறையூர்தென் திருப்புத்தூர்
நயந்திறைஞ்சி
நீடுதமிழ்த் தொடைபுனைந்தந் நெடுநகரில்
இனிதமர்ந்தார்.

2302 அங்கண்இனி தமருநாள் அடல்வெள்ளே
னத்துருவாய்ச்
செங்கண்நெடு மால்பணியுஞ் சிவபுரத்துச்
சென்றடைந்து
கங்கைசடைக் கரந்தவர்தங் கழல்வணங்கிக்
காதலினால்
பொங்குமிசைத் திருப்பதிகம் முன்னின்று
போற்றிசைத்தார்.

Koviloor Digital Library

2300. ஒப்பில்லாத பெரிய மேருமலையும் ஓர் அணு வாகுமாறு நீண்ட பெருமையுடையவராகியும் தன்னையே அனுபவிக்கின்ற தொண்டர்களுக்கு அமுதமாய் நொய்யவ ராகியும் நிற்கும் அந்தப் பரம் பொருளைத் தகுதி பொருந்த அடியாரை வினவும் தன்மையில், தமிழ் வல்லுநராகிய பிள்ளையார் சொல்லப்படுகின்ற அரிய வேதங்களின் உட் பொருள்கள் விரியுமாறு பாடினார்.

(திரு இரும்பூளையில் பாடியது 'சீரார்கழலே' எனத் தொடங்கும் பதிகம்.)

2301. பிள்ளையார், பாடப் பெறுகின்ற 'அரதைப் பெரும்பாழி' முதலாக அறிவுடையவர் பொருந்தியுள்ள 'திருச்சேறையும்' திருக்குட வாயிலும்' நாடிய சிறப்புடைய 'திருநறையூரும்' 'தென் திருப்புத்தூரும்' என்ற இப்பதி களை விருப்புடன் வழிபட்டு நீண்ட தமிழ் மாலைகளைப் பாடி அப்பெரிய நகரத்தில் இனிதே தங்கியிருந்தார்.

அரதைப் பெரும் பாழியில் 'பைத்தபாம் போடரை'' எனத் தொடங்கும் பதிகமும், திருச்சேறையில் 'முறியுறு' எனத் தொடங்கும் பதிகமும், திருநாலூர் மயானத்தில் 'பாலூரு' எனத் தொடங்கும் பதிகமும், திருக்குட வாயிலில் 'திகழுந் திருமா' கலைவாழு' எனத் தொடங்கும் பதிகங் களும் பிள்ளையாரால் பாடப் பெற்றன. திருநறையூர்ச் சித்தீச்சரத்தில் 'ஊருலாவு' 'பிறை கொள் சடையர்' 'நேரிய னாகு' என்ற பதிகங்களும், அரிசில் கரைப்புத்தூரில் 'மின்னும் சடைமேல்' என்ற பதிகமும் பாடப்பட்டன.

2302. அந்த அரிசில் கரைப் புத்தூரில் பிள்ளை நாயனார் தங்கியிருந்த போது வன்மையுடைய வெண்மை யான பன்றி வடிவைக் கொண்ட சிவந்த கண்ணையுடைய திருமால் வணங்கும் சிவபுரத்திலே போய்க், கங்கையைச் சடையில் அடக்கிய இறைவரின் திருவடிகளை வணங்கி மிக்க விருப்பத்தால் இசை பெருகும் திருப்பதிகங்களைத் திருமுன்பு நின்று பாடினார்.

(திருச்சிவபுரத்தில் பாடியது 'புவம் வளி' 'இன்குரலிசை 'கலைமலி' என்ற தொடக்கம் கொண்ட பதிகங்கள்.)

Koviloor Digital Library

2303 போற்றிசைத்துப் புனிதர்அருள் பெற்றுப்போந்
தெவ்வுருவும்
தோற்றுவித்த அயன்போற்றுந் தோணிபுரத்
தந்தணனார்
ஏற்றுமிசை ஏற்றுகந்த இறைவர்தமை ஏத்துதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு நண்ணினார்.

2304 தேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக்
கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்தருளத்
தூமறையின் ஒலிபெருகத் தூரியமங் கலம்முழங்கக்
கோமுறைமை எதிர்கொண்டு தம்பதியிட்
கொடுபுக்கார்.

2305 திருஞான சம்பந்தர் திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானை வண்டமிழின் திருப்பதிகம்
உருகாநின் றுளம்மகிழக் குடமூக்கை உவந்திருந்த
பெருமான்எம் இறைஎன்று பெருகிசையால்
பரவினார்.

2306 வந்தணைந்து திருக்கீழ்க்கோட் டத்திருந்த
வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்ட
ருடன்செல்வார்
அந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப
அவரோடும்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ்
சென்றடைந்தார்.

2307 பூமருவும் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயில்
தூமருவு மலர்க்கையால் தொழுதுவலங்
கொண்டணைந்து
காயர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து
கண்களித்தார்.

Koviloor Digital Library

2303. மேலே கூறியபடி போற்றி இறைவரின் திருவருளைப் பெற்று எல்லாவுயிர்களையும் பிறவியில் புகுத்தும் நான்முகன் வணங்கும் திருத்தோணிபுரத்தில் தோன்றிய பிள்ளையார், காளையின் மீது வருதலை விரும்பிய இறைவரைத் துதிப்பதற்காக நான்கு திசையில் உள்ளவரும் வணங்கும் திருக்குடமூக்கை அடைந்தார்.

2304. சீகாழியில் தோன்றிய சம்பந்தப் பெருமான் வரவும், தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த திருக்குடமூக்கினில் வாழ்கின்ற செல்வப் பெரு மறையோர் தூய மறையின் ஒலி பெருகவும், மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும், மன்னரை எதிர் கொள்ளும் முறையில், எதிர் கொண்டு தம் பதியினிடத்து அழைத்துச் சென்றனர்.

2305. திருக்குடமூக்கினைச் சேர வருபவரான திருஞான சம்பந்தர் தம் இறைவரை வண்மையுடைய தமிழ்ப் பதிகத்தால் உள்ளம் உருகி மகிழ 'திருக்குட மூக்கை உவந்து விரும்பி வீற்றிருந்த பெருமான் எம் இறைவர்' என்று பெருகிய இசையால் பாடினார்.

(இங்கு நாயனார் பாடியது 'அரவிரி' எனத் தொடங்கும் பதிகம்)

2306. மேலே கண்ட வண்ணம் துதித்து வந்து திருக்கீழ்க் கோட்டத்தில் வீற்றிருந்த இறைவரை மனம் மகிழ வணங்கித் தொண்டர் கூட்டத்துடன் செல்பவரான சம்பந்தர், அந்தணர்கள் சுற்றிலும் சூழ்ந்து துதிக்க, அவரோடும் கூடி, மணம் பொருந்திய பூஞ்சோலைகள் சூழ்ந்த திருக்காரோணத்தைப் போய் அடைந்தார்.

2307. மலர்கள் பொருந்திய கங்கை முதலான தூய தீர்த்தங்கள் மாமகத்தில் ஆடும் பொருட்டாக வந்து வழிபடுகின்ற பெருமையுடைய அக்கோயிலைத் தூய்மையான மலர் போன்ற கைகளால் தொழுது வலமாய் வந்து, மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த இறைவரின் திருவடிகளை வணங்கிக் கண்களிப்புக் கொண்டார்.

Koviloor Digital Library

2308 சண்ணாரும் அருமணியைக் காரோணத் தாரமுதை
நண்ணாதார் புரம்எரித்த நான்மறையின்
பொருளானைப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப்
பிறபதியும்
எண்ணார்ந்த சீரடியா ருடன்பணிவுற்
றெழுந்தருளி.

2309 திருநாகேச் சரத்தமர்ந்த செங்கனகத்
தனிக்குன்றைக்
கருநாகத் துரிபுனைந்த கண்ணுதலைச்
சென்றிறைஞ்சி
அருஞானச் செந்தமிழின் திருப்பதிகம்
அருள்செய்து
பெருஞான சம்பந்தர் பெருகார்வத் தின்புற்றார்.

2310 மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நாணாளும் பரவுவார் பிணிதீர்க்கும் நலம்போற்றிப்
பாவாறும் மணிவாயர் பரமர்திரு விடைமருதில்
பூநாறும் புனற்பொன்னித் தடங்கரைப்போய்ப்
புகுகின்றார்.

2311 ஓங்குதிருப் பதிகம்ஓ டேகலன்என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந்
தன்மையினால்
ஈங்கெனைஆ ளுடையபிரான் இடைமருதீ
தோஎன்று
பாங்குடைய இன்னிசையாற் பாடிஎழுந்
தருளினார்

Koviloor Digital Library

2308. பிள்ளையார், கண்ணில் பொருந்திய அரிய மணி போன்ற வரும், திருக்குடந்தைக் காரோணத்தில் எழுந்தருளிய அமுதம் போன்ற வரும், பகைவரின் மூன்று புரங்களை எரித்த நான்மறைகளின் பொருளாக விளங்கு பவருமான இறைவனை வணங்கிப் பண் பொருந்திய திருப் பதிகத்தைப் பாடிப் பணிந்து துதித்து, பிற தலங்களையும் போய் வணங்க எண்ணி, எண் நிறைந்த அடியார்களுடன் பணிந்து அங்கிருந்து மேலே சென்றார்.

(இங்குப் பாடியது 'வாரார் கொங்கை' என்னும் தொடக்கம் கொண்ட பதிகம்).

2309. திருஞான சம்பந்தர், திருநாகேச்சரத்தில் வீற்றிருக்கும் செம்பொன் மலை போன்ற கரிய யானையின் தோலைப் போர்த்துக் கொண்ட பெருமானை வணங்கி, அரிய ஞானம் விளங்கும் செந்தமிழின் இனிய திருப்பதிகத் தைப் பாடி அருள் செய்து பெருகும் அன்பு மிகுவதால் இன்பம் அடைந்திருந்தார்.

('பொன்னேர் தருமே' என்ற தொடக்கம் கொண்ட பதிகம் இங்குப் பாடியதாகும்.)

2310. ஆதிசேடன் வழிபட்ட தாமரை போன்ற அடி களை வணங்கி, நாள்தோறும் வணங்குபவர்களின் பிணி களைப் போக்கும் நன்மையினைத் துதித்து, ஞானப்பால முதின் மணம் கமழும் திருவாயினையுடைய பிள்ளையார், மலர்கள் மலர்ந்து மணம் வீசும் காவிரியின் வடகரை வழி யாகச் சென்று இறைவரின் 'திருவிடை மருதூரில்' புகுகின் றவர்,

2311. உயர்ந்த திருப்பதிகத்தை 'ஓடேகலன்' எனத் தொடங்கித் தாங்குதற்கரிய மகிழ்ச்சி மேன் மேலும் பெருகுதலால், 'இங்கு என்னை ஆளுடைய இறைவர் வீற்றிருக்கும் திருவிடை மருது இதுதானோ?' என்ற கருத்துடன் நல்ல இயல்புடைய இசை பொருந்தப் பாடி அந்தப் பதியினுள் புகுந்தார்.

(இங்குப் பாடியது 'ஓடேகலன்' என்ற தொடக்கம் கொண்ட பதிகமாகும்)

Koviloor Digital Library

2312 அடியவர்கள் எதிர்கொள்ள எழுந்தருளி
அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயில்
முன் இறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர்
நிரந்திழிய.

2313 பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடிஅமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோடு
அரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி
ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி
உறையுநாள்.

2314 மருங்குளநற் பதிகள்பல பணிந்துமா
நதிக்கஃரபோய்க்
குரங்காடு துறையணைந்து குழகனார்
குரைகழல்கள்
பெருங்காத லிற்பணிந்து பேணியஇன் னிசைபெருக
அருங்கலைநூல் திருப்பதிகம் அருள்செய்து
பரவினார்.

2315 அம்ம லர்த்தடம் பதிபணிந் தகன்றுபோந் தருகு
மைம்ம லர்க்களத் திறைவர்தங் கோயில்கள்
வணங்கி
நம்ம லத்துயர் தீர்க்க வந் தருளிய ஞானச்
செம்ம லார்திரு ஆவடு துறையினைச் சேர்ந்தார்.

2316 மூவ ருக்கறி வரும்பொரு ளாகிய மூலத்
தேவர் தந்திரு ஆவடு துறைத்திருத் தொண்டர்
பூவ லம்புதண் பொருபுனல் தடம்பணைப் புகலிக்
காவ லர்க்கெதிர் கொள்ளும்ஆ தரவுடன் கலந்தார்.

Koviloor Digital Library

2312. அந்தத் திருவிடை மருதூரில் உள்ள அடியவர் எதிர் கொள்ளப் போய் அந்தத் திருப்பதியினுள் சேர்ந்து முடிவில்லாத பரம்பொருளான இறைவரின் பெருங் கோயிலை முன்னே வணங்கி, நிலத்தின் மீது நடந்து வல மாகச் சுற்றி வந்து, திருமுன்பு அடைந்து, தரையில் விழுந்து அன்பு நிறைவதால் பொழியும் கண்ணீர் இடையறாது வழிய.

2313. இறைவரைத் துதிக்கின்ற பதிகம் பாடி விருப் பத்துடன் அந்தப் பதியில் தங்கியிருக்கும் சம்பந்தர் மேலும் பல பதிகங்களையும் பாடி, வெண்மையான பிறைச்சந்திர னுடன் பாம்பையும் சடையில் அணிந்த பெருமானின் திரு வடிகளைப் போற்றி வன்மை பெற்ற திருத்தொண்டருடன் இறைவரை வணங்கிப் போற்றி அன்பு மிகுதியால் அங்குத் தங்கியிருந்த காலத்தில்,

(திருவிடை மருதூரில் பிள்ளையார் மேலும் பாடிய பதிகங்கள் 'தோடொர்' 'மருந்தவன்' 'நடைமரு' 'விரிதரு' 'பொங்குநூல்' எனத் தொடக்கம் கொண்டவை.)

2314. பக்கத்தில் உள்ள பல பதிகளையும் வணங்கிக் காவிரிப் பெருங்கரை வழியே போய்த், 'திருக்குரங்காடு துறையினைச் சேர்ந்து, இறைவரின் ஒலிக்கும் கழல் பூண்ட திருவடிகளைப் பெருங்காதலால் வணங்கி, விரும்பிய இனிய இ ச பெருகவுள்ள அரிய கலை நூல்களின் பொருள்களை விரிக்கும் திருப்பதிகத்தைப்பாடி வணங்கினார்.

(தென்குரங்காடு துறைப்பதிகம் 'பரவக் கெடும்' என்ற தொடக்கம் கொண்டதாகும்.)

2315. தாமரை மலர்கள் நிறைந்த தடங்களைக் கொண்ட அந்தத் தலத்தை வணங்கிப் பின் அதை நீங்கிப் போய்ப் பக்கத்தில் திருநீலகண்டமுடைய இறைவரின் கோயில்களை வணங்கி, நம் பாசத்துன்பங்களை நீக்குவதற் கென்றே அவதரித்த ஞானச்செம்மல் சம்பந்தர் திருவாவடு துறையைச் சேர்ந்தார்.

2316. அயன் முதலான மூவர்க்கும் அறிவதற்கு அரிய மூலத் தேவரான சிவபெருமானின் திருவாவடுதுறையிலே வாழ்கின்ற தொண்டர்கள் மலர்களை வாரிக் கொண்டு பொங்கிவரும் குளிர்ந்த அலைகளையுடைய நீர் நிரம்பிய பொய்கைகளையும் வயல்களையும் உடைய சீகாழித் தலைவரான பிள்ளையாரை எதிர்கொள்ளுமாறு மிக்குப் பெருகும் அன்புடனே வந்து சேர்ந்தனர்.

Koviloor Digital Library

2317 வந்த ணைந்தவர் தொழாமுனம் மலர்புகழ்ச்
சண்பை
அந்த ணர்க்கெலாம் அருமறைப் பொருளென
வந்தார்
சந்த நித்திலச் சிவிகைநின் றிழிந்தெதிர் தாழ்ந்தே
சிந்தை இன்புற இறைவர்தங் கோயில்முன்
சென்றார்.

2318 நீடு கோபுரம் இறைஞ்சிஉள் புகுந்துநீள் நிலையான்
மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
ஆடும் ஆதியை ஆவடு துறையுள்ஆர் அமுதை
நாடு காதலிற் பணிந்தெழுந் தருந்தமிழ்
நவின்றார்.

2319 அன்பு நீடிய அருவிகண் பொழியும்ஆர் வத்தால்
முன்பு போற்றியே புறம்பணை முத்தமிழ் விரகர்
துன்பு போம்மனத் திருத்தொண்டர் தம்முடன்
தொழுதே
இன்பம் மேவிஅப் பதியினில் இனிதமர்ந் திருந்தார்.

23'0 மேவி அங்குறை நாளினில் வேள்விசெய் வதனுக்
காவ தாகிய காலம்வந் தணைவுற அணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையார்
தாமும்
போவ தற்கரும் பொருள்பெற எதிர்நின்று
புகன்றார்.

3321 தந்தை யார்மொழி கேட்டலும் புகலியார்
தலைவர்
முந்தை நாளிலே மொழிந்தமை நினைந்தருள்
முன்னி
அந்த மில்பொரு ளாவன ஆவடு துறையுள்
எந்தை யார்அடித் தலங்களன் றோ என எழுந்தார்.

Koviloor Digital Library

2317. அங்ஙனம் வந்த தொண்டர்கள் தம்மை வணங்குவதற்கு முன்னம் விரியும் புகழையுடைய சீகாழி அந்தணர்களுக்கெல்லாம் அரிய மறையின் பொருளாக உள்ளவர் இவர் என்று தியானப் பொருளாகக் கொள்ளும் படி தோன்றிய பிள்ளையார், அழகான முத்துச் சிவிகையி னின்றும் இறங்கி அவர்களின் எதிரில் வணங்கிப் பின் மனம் இன்பம் அடைய இறைவரின் திருக்கோயில் முன் சென்றார்.

2318. பிள்ளையார், நீண்ட கோபுரத்தை வணங்கி உள்ளே போய் நீண்ட வரிசையாக பக்கத்தில் சுற்றிலும் உள்ள மாளிகையை வலமாக வந்து வணங்கி, அருட்பெருங் கூத்தாடுகின்ற ஆதிமூர்த்தியும் திருவாவடுதுறையுள் எழுந் தருளியுள்ள நிறைந்த அமுதம் போன்றவருமான இறைவரை நாடும் பேரன்பினால் வணங்கி எழுந்து அரிய தமிழால் திருப்பதிகத்தைப் பாடினார்.

2319. அன்பால் பெருகிய கண்ணீர் அருவி போல் பொழிகின்ற ஆர்வத்தால் திருமுன்பு துதித்துப் பின்பு வெளியே வந்த பிள்ளையார், துன்பம் இல்லாத உள்ளம் கொண்ட தொண்டர்களுடன் தொழுது இன்பம் பொருந்தி அந்தத் தலத்தில் இனிதாய் விரும்பி வீற்றிருந்தார்.

2320. விரும்பி, அந்தத் தலத்தில் தங்கியிருக்கும் காலத்தில், வேள்வி செய்வதற்குரிய காலம் வந்து சேர, குற்றம் இல்லாத சீகாழியின் தலைவரான பிள்ளையாரிடம் வந்து தந்தையான சிவபாத இருதயரும் விடைபெற்றுச் சீகாழிக்குச் செல்லும் பொருட்டு வேள்விக்குரிய அப் பொருளைப் பெறுதல் வேண்டும் என்று எதிரில் நின்று கூறினார்.

2321. தம் தந்தையாரின் சொல்லைக் கேட்டதும் சீகாழித் தலைவரான பிள்ளையார், முன் நாளில் கூறியதை நினைவு கூர்ந்து, திருவருளை எண்ணி, "அந்தம் இல்லாத பொருளாய் உள்ளவை எம் இறைவரின் திருவடிகளே அல்லவோ?" என்று மனத்துள் எண்ணி எழுந்தார்.

(தந்தையார் முன்னம் உரைத்தது, "இருமைக்கும் இன்பம் அளிக்கும் வேள்வியை யான் செய்ய வேண்டும்" என்பதாகும்.)

Koviloor Digital Library

2322 சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயில்முன் பெய்தி
நின்று போற்றுவார் நீள்நிதி வேண்டினார்க் கீவது
ஒன்றும் மற்றிலேன் உன்னடி அல்லதொன்
றறியேன்
என்று பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்தார்.

2323 எடுத்த வண்டமிழ்ப் பதிகநா லடியின்மேல் இருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்தஇன்
னிசையினால் துதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலார் அடியிணை வழுத்தி
அடுத்த சிந்தையால் ஆதரித் தஞ்சலி அளித்தார்.

2324 நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய இறைவர்இன் அருளால்
அச்சி றப்பருள் பூதமுன் விரைந்தகல் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன்ஆ யிரக்கிழி ஒன்று.

2325 வைத்த பூதம்அங் கணைந்துமுன் நின்றுநல்
வாக்கால்
உய்த்த இக்கிழி பொன்னுல வாக்கிழி உமக்கு
நித்த னார்அருள் செய்ததென் றுரைக்கநேர்
தொழுதே
அத்தனார்திரு வருள்நினைந் தவனிமேற்
பணிந்தார்.

2326 பணிந்தெ ழுந்துகை தொழுதுமுன் பனிமலர்ப்
பீடத்து
அணைந்த ஆடகக் கிழிதலைக் கொண்டரு மறைகள்
துணிந்த வான்பொருள் தரும்பொருள்
தூயவாய்மையினால்
தணிந்த சிந்தைஅத் தந்தையார்க் களித்துரை
செய்வார்.

Koviloor Digital Library

2322. பிள்ளையார், தேவரின் தேவரான இறைவர் மகிழும் கோயிலில் சென்று, திருமுன்பு நின்று வணங்கு பவராகி, ''பெருஞ்செல்வம் வேண்டியவர்க்கு (தந்தை யார்க்கு) ஈவதற்கு என்னிடம் ஒரு பொருளும் இல்லை. பொருளாகும் உன் திருவடியன்றி வேறொன்றும் அறியேன்?'' என்று இறைவரின் பேரருளை வினவிய கருத்துடைய செந்தமிழ்ப் பதிகத்தைத் தொடர்ந்து பாடலானார்.

2323. தொடங்கி வளம் கொண்ட தமிழ்ப்பதிகத்தை நான்கடியின் மேலும் இரண்டு சீர்கள் தொடுத்த மேல் வைப்பாய்த் தொடர்பு பெற அமைத்த இனிய இசையினால் வணங்குபவராய். நிறையக் கொண்ட காதலால், வள்ளலா ரான இறைவரின் திருவடிகளைத் துதித்துப் பொருந்திய சிந்தையால் அன்புமிக்குக் கைகள் கூப்பித் தொழுதார்.

(இப்பதிகம் நாலடியின் மேல் வைப்பு என்ற பாவாகக் கொண்டது. விருத்தப்பா நான்கடியால் நிறைவுபெறும். அதன்மேல் இரண்டு அடிகள் தொடர்வது இப்பா. இவ் வகையில் பாடியது, 'இடரினும் தளரினும்' என்ற தொடக்கம் கொண்டதாகும்.)

2324. விரும்பி இனிய தமிழ் பாடிய ஞானசம்பந்தரின் விருப்பப்படியே முன்பு அருள்செய்த இறைவரின் திருவருளால் அந்தச் சிறப்பை அருளும் சிவபூதம் விரைவில் வந்து, இடம் அகன்ற பலிபீடத்தின் உச்சிமேல், ஆயிரம் பசும்பொன் கொண்ட முடிப்பு ஒன்றை வைத்தது.

2325. அங்ஙனம் வைத்த அந்தப் பூதம் அங்குப் பிள்ளையார் முன் நின்று நல்ல வாக்கினால் பிள்ளையாரை நோக்கி, ''வைத்த இம் முடிப்பு பொன்னைக் கொண்ட தாகும். இங்கு எடுக்க எடுக்கக் குறையாத செல்வம். இறைவர் உமக்கு அருள் செய்தது இது?'' என்று உரைத்தது. உரைக்க, பிள்ளையார் இறைவரை நேராகத் தொழுது அத்தனாரின் திருவருளினை நினைந்து நிலத்தில் விழுந்து வணங்கினார்.

2326. வணங்கி எழுந்து கைகூப்பித் தொழுது முன்னால் பலிபீடத்தில் வைக்கப்பட்ட பொன் முடிப்பை எடுத்துத் தலைமீது கொண்டு, அரிய மறைகளால் துணிய நின்ற பெரும் பொருளான இறைவர் அளித்த அந்தப் பொருளைத் தூய வாய்மையால் தணிந்த மனமுடைய தந்தையாருக்குத் தந்து சொல்லலானார்.

Koviloor Digital Library

2327 ஆதி மாமறை விதியினால் ஆறுசூழ் வேணி
நாத னாரைமுன் னாகவே புரியநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழு மலத்து
வேத வேதியர் அனைவருஞ் செய்யவும் மிகுமால்.

2328 என்று கூறிஅங் கவர்தமை விடுத்தபின் அவரும்
நன்றும் இன்புறு மனத்தொடும் புகலிமேல் நண்ண
வென்றி ஞானசம் பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்றல் ஆவடு துறையினில் மகிழ்ந்தினி திருந்தார்.

2329 அண்ண லார்திரு ஆவடு துறைஅமர்ந் தாரை
உண்ணி லாவிய காதலி னாற்பணிந் துறைந்து
மண்ணெ லாம்உய வந்தவர் போந்துவார்
சடைமேல்
தெண்ணி லாஅணி லார்திருக் கோழம்பஞ்
சேர்ந்தார்.

2330 கொன்றை வார்சடை முடியரைக் கோழம்பத்
திறைஞ்சி
என்றும் நீடிய இன்னிசைப் பதிகம்முன் இயம்பி
மன்று ளார்மகிழ் வைகல்மா டக்கோயில் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர்.

2331 வைகல் நீடுமா டக்கோயில் மன்னிய மருந்தைக்
கைகள் அஞ்சலி கொண்டுதாழ்ந் தெழுந்துகண்
அருவி
செய்ய இன்னிசைச் செந்தமிழ் மாலைகள்
மொழிந்து
நையும் உள்ளத்த ராய்த்திரு நல்லத்தில் நண்ணி.

Koviloor Digital Library

2327. ''பழைய பெரியமறைகளில் விதித்த முறைமைப் படி கங்கையை முடித்த சடையையுடைய முழுமுதற் பொருளான சிவபெருமானையே முதலாக உட்கொண்டு செய்கின்ற நல்ல சிவ வேள்வியைத் தீமை நீங்கி இன்பம் அடையும் பொருட்டு நீவிர் செய்திடவும் சீகாழியில் உள்ள வேதியர் எல்லாமும் செய்திடவும் குறைவில்லாமல் மிகும்.''

2328. என்று இங்ஙனம் பிள்ளையார் சொல்லி, அங்குத் தம் தந்தையாரை அனுப்பிய பின்பு, அந்தச் சிவபாத இருதயரும் பெரிதும் இன்பம் பெற்றுச் சீகாழியை நோக்கிச் சென்றார். செல்ல, வெற்றியுடைய திருஞான சம்பந்தரும் விருப்புடனே வணங்கி மணம் மிகுந்த திருவாவடுதுறையில் மகிழ்வுடன் இனிதாய் அமர்ந்திருந் தார்.

2329. திருவாவடுதுறையில் விரும்பி வீற்றிருந்த இறைவரை உள்ளத்தினுள் நிறைந்த காதலால் வணங்கி அங்குத் தங்கி, உலகம் எல்லாம் உய்யும் பொருட்டுத் தோன்றிய பிள்ளையார் போய் நீண்ட சடையில் தெளிந்த பிறைச் சந்திரனைச் சூடுபவரின் திருக்கோழம்பத்தினைச் சேர்ந்தார்.

2330, கொன்றைமலர் மாலையைச் சூடிய நீண்ட சடையை உடைய இறைவரைத் திருக்கோழம்பத்தில் வணங்கி என்றும் அழியாது நீடித்திருக்கும் இன்னிசை யுடைய திருப்பதிகத்தைத் திருமுன்பு நின்று பாடி, பொன்னம்பலம் உடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் 'திருவைகல் மாடக் கோயிலின்' பக்கத்தில் முத்திச் செல்வம் வளர்வதற்கு இடமான சீகாழித் தலைவர் போய் அடைந்தார்.

(இங்குப் பாடியது 'நீற்றானை' எனத் தொடங்கும் பதிகம்.)

2331. வைகலில் நீண்ட மாடக் கோயிலில் பொருந்திய பெருமருந்தான இறைவரைக் கைகளைக் கூப்பி விழுந்து வணங்கி எழுந்து கண்ணினின்றும் நீர் அருவியாய்ச் சொரிய இனிய இசையையுடைய செந்தமிழ மாலைகளால் துதித்து உருகி வருந்தும் மனத்தை உடையவராகித் 'திரு நல்லம்' என்ற தலத்தை அடைந்து,

Koviloor Digital Library

2332 நிலவு மாளிகைத் திருநல்லம் நீடுமா மணியை
இலகு சேவடி இறைஞ்சிஇன் தமிழ்கொடு துதித்துப்
பலவும் ஈசர்தந் திருப்பதி பணிந்துசெல் பவர்தாம்
அலைபு னல்திரு வழுந்தூர்மா டக்கோயில்
அடைந்தார்.

2333 மன்னு மாமடம் மகிழ்ந்தவான் பொருளினை
வணங்கிப்
பன்னு பாடலிற் பதிகஇன் னிசைகொடு பரவிப்
பொன்னி மாநதிக் கரையினில் மீண்டும்போந்
தணைந்து
சொன்ன வாறறி வார்தமைத் துருத்தியில்
தொழுதார்.

2334 திரைத்த டப்புனற் பொன்னிசூழ் திருத்துருத்
தியினில்
வரைத்த லைப்பசும் பொன்எனும் வண்தமிழ்ப்
பதிகம்
உரைத்து மெய்யுறப் பணிந்துபோந் துலவும்அந்
நதியின்
கரைக்கண் மூவலூர்க் கண்ணுத லார்கழல்
பணிந்தார்.

2335 மூவ லூர்உறை முதல்வரைப் பரவிய மொழியால்
மேவு காதலில் ஏத்தியே விருப்பொடும் போந்து
பூவ லம்புதண் புனற்பணைப் புகலியர் தலைவர்
வாவி சூழ்திரு மயிலாடு துறையினில் வந்தார்.

Koviloor Digital Library

2332, நிலைத்த மாளிகைகளைக் கொண்ட 'திருநல்லம்' எழுந்தருளிய இறைவரின் விளங்கும் திருவடிகளை வணங்கி இனிய தமிழ் மாலை பாடி, இறைவரது திருப்பதிகள் பலவும் வணங்கிச் செல்லும் பிள்ளையார் அலைகளையுடைய நீர் சூழ்ந்த 'திரு அழுந்தூர்' மாடக் கோயிலைப் போயடைந்தார்.

(திருவைகல் மாடக் கோயிலில் பாடியது 'துளமதியுடைமறி' என்ற தொடக்கம் கொண்ட பதிகம். திருநல்லத்தில் பாடியது 'கல்லானிழல்' என்ற தொடக்கம் உடைய பதிகம்).

2333. நிலையான மாடம் என்று திருப்பாட்டினுள் குறிக்கப் பெற்ற கோயிலில் மகிழ்ந்து வீற்றிருக்கின்ற பெரும் பொருளான இறைவரைத் துதித்து ஏத்தும் திருப்பதிகத்தைப் பண்ணுடன் பாடி வணங்கி, காவிரிக் கரையில் மீளவும் வந்து சேர்ந்து சொன்னவாறு அறிவாவரைத் திருத்துருத்தியில் பிள்ளையார் வணங்கினார்.

(திருவழுந்தூரில் பாடியது 'தொழுமாறு' என்னும் தொடக்கமுடைய பதிகம்)

2334. அலைகளையுடைய காவிரி நீர் சூழ்ந்த திருத்துருத்தியில் வரைத்தலைப் பசும் பொன் எனத் தொடங்கும் வளமையுடைய திருப் பதிகத்தைப் பாடி, உடல் நிலம் பொருந்தப் பணிந்து சென்று, உலவுகின்ற அந்தக் காவிரி ஆற்றின் கரையில் திருமூவலூரில் இறைவரை வணங்கினார்.

('வரைத்தலைப் பசும்பொன்' என்பது பதிகத் தொடக்கம்)

2335. மூவலூரில் வீற்றிருக்கும் இறைவரைத் துதிக்கின்ற சொற்களாலே பொருந்திய ஆசையுடன் போற்றி நின்று, விருப்புடன் போய் மலர்களை அலம்பி வரும் குளிர் நீரையுடைய வயல்கள் சூழ்ந்த சீகாழியில் வாழ்பவரின் தலைவரான சம்பந்தர் பொய்கைகள் சூழ்ந்த 'மயிலாடுதுறைக்கு' வந்தார்.

Koviloor Digital Library

2336 மல்கு தண்டலை மயிலாடு துறையினில் மருவும்
செல்வ வேதியர் தொண்டரோ டெதிர்கொளச்
சென்று
கொல்லை மான்மறிக் கையரைக் கோயில்புக்
கிறைஞ்சி
எல்லை இல்லதோர் இன்பம்முன் பெருகிட
எழுந்தார்.

2337 உள்ளம் இன்புற உணர்வுறும் பரிவுகொண் டுருகி
வெள்ளந் தாங்கிய சடையரை விளங்கு சொற்
பதிகத்
தெள்ளும் இன்னிசைத் திளைப்பொடும் புறந்தணைந்
தருளி
வள்ள லார்மற்ற வளப்பதி மருவுதல் மகிழ்ந்தார்.

2338 அத்தி ருப்பதி அகன்றுபோய் அணிகிளர் சூலக்
கைத்த லம்படை வீரம்செம் பொன்பள்ளி கருதி
மெய்த்த காதலில் விளநகர் விடையவர் பாதம்
பத்தர் தம்முடன் பணிந்திசைப் பதிகம்முன்
பகர்ந்தார்.

Koviloor Digital Library

2336. மிக்க பூஞ்சோலைகள் சூழ்ந்த மயிலாடு துறையில் திருவுடை அந்தணர்கள் தொண்டர்களுடன் கூடி எதிர் கொண்டு வர வேற்கப் புகுந்து, கொல்லையில் வாழும் மான்கன்றைக் கையில் உடையவரைக் கோயிலுள் புகுந்து வணங்கி, அளவில்லாத ஒப்பற்ற மகிழ்ச்சி முன்னே பெருக அதை மேற்கொண்டு எழுந்தார்.

2337. வள்ளன்மையுடைய பிள்ளையார் உள்ளமானது இன்பம் அடைய அவ்வுணர்ச்சியுடன் கூடிய அன்பு மிகுதியால் உருகி, கங்கை வெள்ளத்தையுடைய சடையினரான இறைவரை விளங்கும் சொல் பதிகமான தெளிந்த இனிய இசையுடன் கூடிய திளைப்புடன் வெளியே வந்து அந்த வளமுடைய பதியில் பொருந்தி மகிழ்ந்து இருந்தார்.

(மயிலாடுதுறைப் பதிகங்கள் "ஏனவெயி" "ஒளிரிளம்" எனத் தொடங்குவனவாகும்.)

2338. அந்தத் தலத்தினின்று நீங்கிச் சென்று அழகு விளங்கும் சூலப்படையைக் கையில் கொண்ட வீரரான இறைவரின் 'திருச்செம்பொன் பள்ளியை' எண்ணிச் சென்று பணிந்து, மெய்த்த இயல்புடைய பெரு விருப்பால் 'திருவிளநகரில்' எழுந்தருளிய விடையையுடைய இறைவரின் திருவடிகளை அடியார்களுடனே கூடிப் பணிந்து இசையுடைய திருப்பதிகத்தினைத் திருமுன்பு பாடினார்.

(திருச்செம்பொன் பள்ளியில் "மருவார்" எனத் தொடங்கும் பதிகமும், திருவிளநகரில் 'ஒளிரிளம் பிறை' என்ற பதிகமும் அவரால் பாடப்பட்டன.)

Koviloor Digital Library

2339 பாடும் அப்பதி பணிந்துபோய்ப் பறியலூர் மேவும்
தோடு லாமலர் இதழியும் தும்பையும் அடம்பும்
காடு கொண்டசெஞ் சடைமுடிக் கடவுளர் கருது
நீடு வீரட்டம் பணிந்தனர் நிறைமறை வேந்தர்.

2340 பரமர் தந்திருப்பறியலூர் வீரட்டம் பரவி
விரவு காதலின் வேலையின் கரையினை மேவி
அரவ ணிந்தவர் பதிபல அணைந்துமுன் வணங்கிச்
சிரபு ரத்தவர் திருத்தொண்டர் எதிர்கொளச்
செல்வார்.

2341 அடியவர்கள் களிசிறப்புத் திருவேட்டக்
குகுபணிந்தங் கலைவாய்ப் போகிக்
கடிகமழும் மலர்ப்பழனக் கழனிநாட் டகன்பதிகள்
கலந்து நீங்கிக்
கொடிமதில்சூழ் தருமபுரங் குறுகினார்
‡குண்டர்சாக் கியர்தங் கொள்கை
படிஅறியப் பழுதென்றே மொழிந்துய்யும்
நெறிகாட்டும் பவள வாயார்.

○

Koviloor Digital Library

2339. நிறைவான வேதத்தலைவரான பிள்ளையார் முன் சொன்னபடி திருப்பதிகம் பாடிய திருவிளநகர் என்ற அப்பதியை வணங்கிச் சென்று, 'திருப்பறியலூரில்' வீற்றிருக்கும் இதழ்களையுடைய கொன்றையும் தும்பையும் அடம்ப மலரும் அணிந்த சிவந்த சடையையுடைய சிவ பெருமான் விரும்பி வீற்றிருக்கும் திருவீரட்டானத்தை அடைந்து வணங்கினார்.

2340. சிவபெருமானின் திருப்பறியலூர் வீரட்டத்தைப் பணிந்து, பொருந்திய அன்பால் அங்கு நின்றும் கடலின் கரையை அடைந்து பாம்பை அணிந்த இறைவரின் பல தலங்களையும் சேர்ந்து வணங்கிச் சீகாழித் தலைவரான பிள்ளையார் அங்கங்கும் தொண்டர் வந்து வரவேற்கச் செல்பவராய்.

(திருப்பறியலூர் பதிகம் 'கருத்தன்' எனத் தொடக்கம் கொண்டதாகும்.)

2341. தொண்டர்கள் மிகவும் மகிழ்ச்சி அடையத் திருவேட்டக் குடியைச் சென்று வணங்கி, மணம் கமழும் பூக்களையுடைய வயல்கள் நிறைந்த சோழநாட்டின் பெரும் பதிகளை அடைந்து உள்ளம் பொருந்த வணங்கி, அவற்றை நீங்கிச் சமண சாக்கியர்களின் கொள்கைகள் குற்றம் உள்ளவை' என்து உலகம் அறிய எடுத்துக் காட்டி, உய்யும் நெறியைக் காட்டும் பவள வாயையுடைய பிள்ளையார் கொடிகள் கட்டப்பட்ட தருமபுரத்தை அடைந்தார்.

(திருவேட்டக்குடி, பதிகம்' 'வண்டிரைக்கு' என்ற தொடக்கம் கொண்டதாகும்,)

○

Koviloor Digital Library

பாட்டு முதற் குறிப்பகராதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

★ ★ ★

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17677